Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

# பரஞ்சோதி முனிவர் அருளிய
# திருவிளையாடற் புராணம்
# (திருவாலவாய் மான்மியம்)
## 3. திருவாலவாய்க் காண்டம் (படலம் 49-65)

tiruviLaiyATaR purANam
of paranjcOti munivar : canto 3
In tamil script, unicode/utf-8 format

Acknowledgements:
Our Sincere thanks go to the Ms. Kalaivani Ganesan of Singapore for her help in the preparation of this etext for Saivam.org and
Mr. S. Ganesan for providing an electronic version of this work for inclusion as part of Project Madurai collections.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2015.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

# பரஞ்சோதி முனிவர் அருளிய
# திருவிளையாடற் புராணம்
## (திருவாலவாய் மான்மியம்)
## 3. திருவாலவாய்க் காண்டம் (படலம் 49-65)

**உள்ளடக்கம்**

மூன்றாவது - திருவாலவாய்க் காண்டம்


| | |
|---|---|
| 49. திருவாலவாயான படலம் | (2322- 2349 ) |
| 50. சுந்தரப் பேரம்பெய்த படலம் | (2350 - 2393) |
| 51. சங்கப் பலகை கொடுத்த படலம் | (2394 -2432 ) |
| 52. தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம் | (2433- 2539 ) |
| 53. கீரனைக் கரையேற்றிய படலம் | (2540 -2566 ) |
| 54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் | (2567 - 2596 ) |
| 55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம் | (2597 -2610 ) |
| 56. இடைக் காடன் பிணக்குத் தீர்த்த படலம் | (2611- 2648 ) |
| 57. வலை வீசின படலம் | (2649 - 2712 ) |
| 58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் | (2713 - 2798 ) |
| 59. நரி பரியாக்கிய படலம் | (2799 -2925 ) |
| 60. பரி நரியாக்கி வைகை அழைத்த படலம் | ( 2926- 2991 ) |
| 61. மண் சுமந்த படலம் சுபம் | (2992- 3105 ) |
| 62. பாண்டியன் சுரம் தீர்த்த படலம் | (3106 -3173 ) |
| 63. சமணரைக் கழுவேற்றிய படலம் | (3174 -3255 ) |
| 64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் | (3256 - 3310) |
| 65. அருச்சனைப் படலம் | (3311-3363 ) |


--------------------

### 49. திருவாலவாயான படலம் (2322 - 2349)

பாய் உடையார் விடுத்த பழி அழல் வழுதி உடல் குளிப்பப்
பதிகம் ஓதும்
சேய் உடையார் அணைந் திளைக்கும் செவியுடையார்
அளவு இறந்த திசைகள் எட்டும்
தோய் உடையார் பொன் இதழித் தொடையுடையார் விட
அரவும் சுற்றும் ஆல
வாய் உடையார் புகழ் பாடப் பெறு வேமேல் வேண்டுவது

இம் மனித யாக்கை. 2322

வேதன் நெடு மால் ஆதி விண் நாடர் மண் நாடர் விரத
யோகர்
மாதவர் யாவரும் காண மணி முறுவல் சிறிது அரும்பி
மாடக் கூடல்
நாதன் இரு திருக் கரம் தொட்டு அம்மியின் மேல்
வைத்தகையான் நாட்டச் செல்வி
பாதமலர் எழுபிறவிக் கடல் நீந்தும் புணை என்பர் பற்று
இலாதோர். 2323

ஓலவாய் மறைகள் தேறா ஒருவன் தன் உலகம் தன்னைச்
சேலவாய் உழலும் நாரைக்கு அருளிய செயல் ஈது அம்ம
நீலவாய் மணி நேர் கண்ட நெடிய நான் மாடக் கூடல்
ஆலவாய் ஆகச் செய்த அருள் திறம் எடுத்துச் சொல்வாம். 2324

சித்திர மேரு வென்ற திரண்ட தோள் சுகுணன் பின்பு
சித்திர விரதன் சித்ர பூடணன் திண்தேர் வல்ல
சித்திர துவசன் வென்றிச் சித்திர வருமன் வன் தோள்
சித்திர சேனன் சீர்சால் சித்ர விக்கிரமன் என் போன். 2325

மணி கெழு தேரி இராச மார்த்தாண்டன் இராச சூடா
மணி அணி முடி இராச சார்த்தூல வழுதி சிந்தா
மணி நிகர் துவிசராச குலோத்தமன் மடங்கா வென்றி
மணிதிகழ் பொலம் பூண் ஆய் அயோதனப் பிரவீணன் மன்னோ. 2326

இயம்பரும் திறலி ராச குஞ்சரன் பரவி ராச
பயங்கரன் கைக்கும் பைந்தார் உக்கிர சேனன் பாரைச்
சயம் கெழு தோள் மேல் ஏந்து சத்துரும் சஞ்சயன் வீமத்தேர்
வயம் கெழு மன்னன் வீம பராக்கிரம வழுதி மாதோ. 2327

பெய் வளை விந்தை சேர்ந்த பிரதாப மார்த்தாண்டப் பேர்த்
தெவ்வடு சிலையான் தேர் விக்கிரம கஞ்சுகன் தேரார் போர்த்
வெளவிய சமர கோலாகலன் எனும் வாகை வேலான்
அவ்வியம் அவித்த சிந்தை அதுல விக்கிரமன் என்போன். 2328

எழில் புனை அதுல கீர்த்தி என இருபத்திரண்டு
வழி வழி மைந்தர் ஆகி வையகம் காத்த வேந்தர்
பழி தவிர் அதுல கீர்த்தி பாண்டியன் தன்பால் இன்பம்

பொழிதர உதித்த கீர்த்தி பூடணன் புரக்கும் நாளில். 2329

கரும் கடல் ஏழும் காவல் கரை கடந்து ஆர்த்துப் பொங்கி
ஒருங்கு எழுந்து உறுத்துச் சீறி உம்பரோடு இம்பர் எட்டுப்
பொரும் கட கரியும் எட்டுப் பொன் னெடும் கிரியும் நேமிப்
பெருங் கடி வரையும் பேரப் பிரளயம் கோத்தது அன்றே. 2330

அப்பெரும் சலதி வெள்ளத்து அழிந்தன அழி விலாத
எப்பெரும் பொழிலும் ஏழு திபமும் இவற்றுள் தங்கி
நிற்பன செல்வ ஆன திணைகளும் நீண்ட சென்னி
பர்ப்பத வகையும் ஈறு பட்டன ஆக அம் கண். 2331

தேன் இழி குதலைத் தீம் சொல் சேல் நெடும் கண்ணி கோயில்
வன் இழி விமானம் பொன் தாமரை விளையாட்டின் வந்த
கான் இழி இடபக் குன்றம் கரிவரை நாகக் குன்றம்
ஆன் இழி வரை வராக வரை முதல் அழிவு இலாத. 2332

வெள்ளநீர் வறப்ப ஆதி வேதியன் ஞாலம் முன்போல்
உள்ளவாறு உதிப்ப நல்கி உம்பரோடு இம்பர் ஏனைப்
புள்ளடு விலங்கு நல்கிக் கதிர் உடல் புத்தேள் மூவர்
தள்ளரு மரபின் முன் போல் தமிழ் வேந்தர் தமையும் தந்தான். 2333

அங்கியை மதி மரபு எனும் ஆழியுள்
தங்கிய கலை எண் நான்கு இரட்டி தன்னொடும்
பொங்கிய நிலா மதி போலத் தோன்றினான்
வங்கிய சேகர வழுதி மன்னனே. 2334

தாள் அணி கழலினான் தங்கள் நாயகன்
கோள் அணி புரிசை சூழ் கோயில் சூழ ஓர்
வாள் அணி கடி நகர் சிறிது வைக வைத்து
ஆள் அரி யேறு என அவனி காக்கும் நாள். 2335

செய்யகோன் மனு வழி செலுத்து நீர்மையால்
பொய் கெழு கலிப்பகை புறம் தந்து ஓடத்தன்
வையகம் பல்வளம் சுரப்ப வைகலும்
மெய் கெழு மன்பதை மிக்காஅல் அரோ. 2336

பல்கு உறு மானுடப் பரப்பு எலாம் ஒருங்கு

கல் குற விடங்குறைவாக வாய் மதுப்
பில்குறு தாரினான் பிறை முடித்தவன்
மல்குறு கோயிலின் மருங்கர் எய்தினான். 2337

கறை அணி கண்டனைத் தாழ்ந்து கை தொழுது
இறையவ நின் அருள் வலியின் இந்நிலப்
பொறையது ஆற்று வேற்கு ஈண்டு இப்போது ஒரு
குறையது உண்டாயினது என்று கூறுவான். 2338

இத்தனை மாக்களும் இருக்கத் தக்கதாப்
பத்தனம் காணவிப் பதிக்கண் ஆதியே
வைத்து அறை செய்திடும் வரம்பு காண்கிலேன்
அத்தம் அற்று அதனை இன்று அறியக் காட்டு என்றான். 2339

நுண்ணிய பொருளினும் நுண்ணிது ஆயவர்
விண் இழி விமான நின்று எழுந்து மீனவன்
திண்ணிய அன்பினுக்கு எளிய சித்தராய்ப்
புண்ணிய அருட் கடல் ஆகிப் போதுவார். 2340

பாம்பினால் கடி சூத்திரம் கோவணம் பசும் தாள்
பாம்பினால் புரிநூல் சன்ன வீரம் வெம் பகு வாய்ப்
பாம்பினால் குழை குண்டலம் பாத கிண் கிணி நாண்
பாம்பினால் கர கங்கணம் பரித்தனர் வந்தார். 2341

வந்த யோகர் மா மண்டப மருங்கு நின்று அம்கைப்
பந்த ஆலவாய் அரவினைப் பார்த்து நீ இவனுக்குக்
இந்த மாநகர் எல்லையை அளந்து காட்டு என்றார்
அந்த வாள் அரா அடிபணிந்து அடிகளை வேண்டும். 2342

பெரும் இந் நகர் அடியனேன் பெயரினால் விளங்கக்
கருணை செய்தி என்று இரந்திடக் கருணை அம் கடலும்
அருள் நயந்து நேர்ந்து அனையதே ஆகெனப் பணித்தான்
உருகெழும் சின உரகமும் மெல் எனச் செல்லா. 2343

கீழ்த் திசைத் தலைச் சென்று தன் கேழ் கிளர் வாலை
நீட்டி மா நகர் வலம் பட நிலம் படிந்து உடலைக்
கோட்டி வாலை வாய் வைத்து வேல் கொற்றவற்கு எல்லை
காட்டி மீண்டு அரன் கங்கணம் ஆனது கரத்தில். 2344

சித்தர் தம் சின கரத்து எழுந்து அருளினார் செழியன்
பைத்த ஆலவாய் கோலிய படி சுவர் எடுத்துச்
சுத்த நேமிமால் வரையினைத் தொட்டு அகழ்ந்து எடுத்து
வைத்தது ஆம் என வகுத்தனன் மஞ்சு சூழ் இஞ்சி. 2345

தென் திசைப் பரங் குன்றமும் வடதிசை இடபக்
குன்றமும் குடக் கேடக நகரமும் குணபால்
பொன்றல் அம் கிழித்து எழு பொழில் பூவண நகரும்
என்று நால் பெரு வாயில் கட்கு எல்லையாய் வகுத்தான். 2346

அனைய நீள் மதில் ஆலவாய் மதில் என அறைவர்
நனைய வார் பொழில் நகரமும் ஆலவாய் நாமம்
புனையல் ஆயது எப்போதும் அப் பொன்னகர் தன்னைக்
கனைய வார் கழல் காலினான் பண்டு போல் கண்டான். 2347

கொடிகள் நீள் மதில் மண்டபம் கோபுரம் வீதி
கடி கொள் பும் பொழில் இன்னவும் புதியவாக் கண்டு
நெடிய கோளகை கிரீடம் வாள் நிழல் மணியால் செய்து
அடிகள் சாத்திய கலன்களும் வேறு வேறு அமைத்தான். 2348

பல்வகைப் பெரும் குடிகளின் பரப்பு எலாம் நிரப்பிச்
செல்வ வானவர் புரந்தரன் புரத்தினும் சிறப்ப
மல்லன் மா நகர் பெருவளம் துளும் பிட வளர்த்தான்
தொல்லை நாள் குலசேகரன் போல் வரு தோன்றல். 2349

திருவாலவாயான படலம் சுபம்

----------------------

## 50. சுந்தரப் பேரம்பெய்த படலம் (2350 -2393 )

அம் கணர் உரகம் அணிந்து அருள் வடிவம் அடைந்து
அரசு அகம் மகிழக்
கங்கண விட அரவம் கொடு கடி நகர் கண்டு அருண்
முறை இதுவாம்
சங்கு அணி குழையினர் பஞ்சவன் வழிபடு தம் பெயர்
எழுதிய கூர்
வெம் கணை கொடு வன் படை முடுகிய வென்றியை

இனி மொழிவாம். 2350

வெம் கயல் நீள் கொடி வங்கிய சேகரன் வெண்குடை
நீழலின் வாய்
வங்கம் உலாவிய தெண் கடல் ஞாலம் அடைந்து ஐயுள்
மாசு அறு சீர்ச்
செம் கமல ஆலய மங்கையும் வாலிய திண் பதும அலயம்
மேல்
நங்கையும் ஓவற மங்கல மான நயம் பெற வாழ்வு உறு
நாள். 2351

வேழ மறப்படை சூழ எதிர்த்தவர் வீறு கொடுத்து அடியில்
தாழ அடர்த்தி கல் வாகை தொடுத்து அலர் தார் புனை விக்கிரமச்
சோழன் மதிக்குல நாயகனைப் பொரு சூள் கருதிக் தொலையா
ஆழ் கடலுக்கு இணை ஆம் அனிகத் தொடு மாட அமருக்கு எழுவான். 2352

கயபதி காய்சின நரபதி பாய் துரகத பதியே முதலா
வயமிகு தோள் வட திசையின் நராதிபர் வலி கெழு சேனையினோடு
இயம் இடி ஏரி இமிழ் இசை என வாய்விட விரதம் ஏறி நடாய்ப்
பயன் மலி காவிரி நதி அருகே உறை பதி கொடு மேயினன் ஆல். 2353

சிலைத்து எழு செம்பியன் வெம் படை மள்ளர் செயிர்த்து
மதிக் கடவுள்
குலத்தவன் நாட்டில் இருந்து எழில் ஆன் நிரை கொண்டு
குறும்பு செய்து
மலர்த்தம் ஏரி உடைத்து நகர்க்கு வரும் பல பண்டமும்
ஆறு 2354
அலைத்து முடுக்கி நடுக்கம் விளைத்து அமர்க்கு அடி
இட்டனர் ஆல்.

மாறன் அறிந்து இனி என் செய்தும் நேரியன் வன்
படையோ அளவு இன்று
ஏறி எதிர்ந்து அமர் ஆடல் எனக்கு அரிது இக் குறையைப்
பிறையோடு
ஆறு அணி பூரண சுந்தரன் எந்தை அடித்தல முன்
குருகாக்
கூறி இரந்து வரம் பெறுகென் இறை கோயில் அடைந்தனன்
ஆல். 2355

அடைந்து பணிந்து அருள் நாயகனே அடியேனொடு
விக்கிரமன்
தொடர்ந்து அமர் ஆடல் அயல் புல மன்னர்
தொகையொடு பாசறை வாய்ப்
படர்ந்து இறை கொண்டனனே பொர ஒத்த பதாதி எனக்கு
இலையே
மிடைந்து வரும் படை மிக்க விடத்து அரண் வேறு
உளதோ இறைவா. 2356

என்னை இனிச் செயும் ஆறு என மாறன் இரந்து
மொழிந்திடலும்
முன்னவன் வான் இடை நின்று அசரீரி மொழிந்து
அருள்வான் முதல் நீ
அன்னவனோடு அமர் ஆடு பின் நாமும் அடைந்து
உதவித் துணையாய்
நின்னது வாகை எனப் பொருகின்றனன் நீ இனி அஞ்சல்
என. 2357

சிந்தை களித்து இரு கண் துளித்து இரு செம்கை குவித்து இறைவன்
அந்தி மதிச்சடை அந்தணனைத் தொழுது அன்று புறப்பட முன்
வந்தனன் ஒற்றுவன் அந்தி வரைக்கயல் வந்தது விக்கிரமன்
வெம் தறு கண் படை என்று அரசற்கு விளம்பினன் அப்பொழுதே. 2358

அரசனின் இயம் பல அதிர வலம்புரி அலற வலங்கு உளை
மான்
இரதம் அணைந்திட விசை கொடு சிந்தை பினிட வலவன்
கடவப்
புரசை நெடும் கரி திரை எறியும் கடல் பொரு
பரிவிண்தொடு தேர்
விரைசெய் நறும் தொடை விருதர் கணம் புடைவிரவ
நடந்தனன் ஆல். 2359

அளந்து சூழ் திரு ஆலவாய் மதில் இன்புறத் தக
ஆழிபோல்
வளைந்த சோழ நெடும் படைக்கு எதிர் வஞ்சி வேய்ந்து
எழு பஞ்சவன்
கிளர்ந்த சேனை அதிர்ந்து கிட்டின கிட்டி அவ் இரு
படைஞரும்
களம் சிறந்திட வஞ்சினம் கொடு கை வகுத்து அமர்
செய்வர் ஆல். 2360

சையம் ஒத்து எழு தேரினாரொடு சையம் ஒத்து எழு தேரரும்
மையன் மைக்கரி வீர ரோடு எதிர் மையன் மைக்கரி வீரரும்
கொய்யுளைப் பரி வயவரோடு இகல் கொய்யுளைப் பரி வயவரும்
கை அழல் படை வீசி மின் விடு கார் எனப் பொருவார் அரோ. 2361

முடங்கு வெம் சிலை வில்லவ ரோடு முடங்க வெம் சிலை வில்லரும்
விடங்கலுழ்ந்திடு வேலரோடு விடம் கலுழ்ந்திடும் வேலரும்
இடம்கை தோல் வல வாளரோடு இடங்கை தோல் வல வாளரும்
மடங்கல் ஏறு மடங்கல் ஏறு மலைப் பது என்ன மலைப்பர் ஆல். 2362

அரவினன் நில அம்புயம் பொறை ஆற்று மீனவன் ஆற்றல் கூர்
புரவியின் நிரை வையம் மேல் கொடு போந்த நேரியர் வேந்தன் நேர்
விரவி மின்னிய முரசு இயம்ப மிடைந்து வெம்சமர் ஆடு மாறி
இரவி தன்னொடு மதியவன் பொர ஏகினான் நிகர் ஆகும் ஆல். 2363

துள்ளு மா ஒலி தான யாரு துளும்பும் மா ஒலி தூண்டு தேர்
தெள்ளு மா ஒலி படையொடும் படை தாக்கும் மா ஒலி பொருநர் ஆர்த்து
தெள்ளு மா ஒலி மள்ளர் பைம் கழல் ஏங்கு மா ஒலி வீங்கி அந்
தெள்ளு மா ஒலி வேறு பாடு திரிந்து கல் எனல் ஆயதே. 2364

துடித்த வாள் அரவு என்ன வீசிய தூங்கு கையின வீங்கு
நீர்
குடித்த காரொடு கார் மலைந்திடும் கொள்கை போல
உடன்று உடன்று
இடித்த ஆயின அசனி ஏறு இன் இருப்பு உலக்கை எடுத்து
எறிந்து
அடித்த சோரி யொடு ஆவி சோர விழுந்த வெம் சின
ஆனையே. 2365

எய்த வாளி விலக்குவார் பிறிது எய்யும் வாளிதம் மார்பு தோள்
செய்த போது அவர் ஆண்மை கண்டு சிரித்து வென்றி வியப்பரால்
வைத வா வடி வேல் எறிந்திட வருவதைக் குறி வழியினால்
கொய்த தார் மற வாள் எறிந்து குறைத்து வேறு படுத்துவார். 2366

பின்னிடாது இருபடையும் ஒத்து அமர் ஆடும் எல்லை
பெரும் படைச்
சென்னி தன் துணை ஆன உத்தர தேய மன்னவர்
படையொடும்

துன்னி ஞாலம் முடிக்கு நாள் எழு சூறை தள்ள அதிர்ந்து
எழும்
வன்னி என்ன உடன்று எதிர்ந்தனன் வழுதி சேனை
உடைந்ததே. 2367

மின்னல் அங்கு இலை வாளடும் சிலை வில் இழந்தனர் வீரரே
பன்னல் அம் புனை தேரொடும் கரி பரி இழந்தனர் பாகரே
தென்னவன் பொருவலி இழந்தனன் என்று செம்பியன் வாகையும்
தன்னது என்று தருக்கு மேல் கொடு சங்கு எடுத்து முழக்கினான். 2368

அந்த வேலையின் முன் அரும் தமது அருள் எனக்குளிர் கடிபுனல்
பந்தர் நீழல் அளித்தும் ஓடை படுத்தியும் பகை சாயவே
வந்த வேடர் அவ்வண்ணமே ஒரு மான வேட அரசாய் வலம்
சிந்த ஆகுலம் மூழ்கு மீனவன் சேனை காவலர் ஆயினார். 2369

குன்ற வில் வேடன் சாபம் குழைவித்துச் சுந்தரேசன்
என்ற தன் நாமம் தீட்டி இட்ட கூர்ங் கணைகள் தூண்டி
வென்றனம் என்று வாகை மிலைந்து வெண்சங்கம் ஆர்த்து
நின்றவன் சேனைமீது நெறி படச் செலுத்தா நின்றான். 2370

அம் முனை வாளி ஒவ் ஒன்று அடல் புனை நூற்று நூறு
தெம் முனைவீரர் தம்மைச் செகுத்து உயிர் உண்ண நோக்கி
இம்முனை வாளி ஒன்றுக்கு இத்துணை வலியாது என்னா
வெம் முனை மற வேல் சென்னி வியந்து அனுமானம் எய்தா. 2371

அன்ன கூர் வாளி தன்னைக் கொணர்க என அதனை வாசித்து
இன்னது சுந்தரேசன் என வரைந்திருப்பது ஈது
தென்னவற்கு ஆலவாயன் துணை செய்த செயல் என்று அஞ்சிப்
பொன்னி நாடு உடையான் மீண்டு போகுவான் போகுவானை. 2372

செருத்துணை ஆகி வந்த உத்தர தேயத்து உள்ளார்
துருக்கர் ஒட்டியர் வேறு உள்ளார் யாவரும் சூழ்ந்து நில் என்று
உருத்தனர் வைது நீ போர்க்கு உடைந்தனை போதி ஈது உன்
கருத்து எனின் ஆண்மை யாவர் கண்ணது உன் மானம் என்னாம். 2373

செல்லலை வருதி என்னாச் செயிர்த்து எழுந்து இடியின் ஆர்த்துக்
கல் எழு அனைய திண்தோள் கௌரியன் மடைமேல் சென்று
வில் இற வலித்து வாங்கி வேறு வேறு ஆகி நின்று

சொல்லினும் கடிய வாளி தொடுத்தனர் விடுத்தார் தூர்த்தார். 2374

வடுத்தவா மருமச் செம்புண் மற மகனாகி நின்ற
கடுத்தவா மிடற்று முக்கண் கண்ணுதல் சாமி தான் முன்
எடுத்தவா அக வில் என்ன இரும் சிலை வாளி ஒன்று
தொடுத்த ஆடவர் தாம் விட்ட சுடு சரம் தொலைத்துப் பின்னும். 2375

பத்து அம்பு தொடுத்து நூற்றுப் பத்து மான் தேரைச்
சாய்த்தான்
பத்து அம்பு தொடுத்து நூற்று பத்து வெம் களிற்றை
மாய்த்தான்
பத்து அம்பு தொடுத்து நூற்றுப் பத்து வாம் பரியைக்
கொன்றான்
பத்து அம்பு தொடுத்து நூற்றுப் பத்து மானுடரை
வென்றான். 2376

நூறு அம்பு தொடுத்து நூற்று நூறு வெம் பரிமேல் எய்தான்
நூறு அம்பு தொடுத்து நூற்று நூறு வெம் கரிமேல் பெய்தான்
நூறு அம்பு தொடுத்து நூற்று நூறு தேர் சிதைய விட்டான்
நூறு அம்பு தொடுத்து நூற்று நூறு சேவகரை அட்டான். 2377

ஆயிரம் வாளியான் நூறு ஆயிரம் பரியைக் கொன்றான்
ஆயிரம் வாளியான் நூறு ஆயிரம் கரியை வென்றான்
ஆயிரம் வாளியான் நூறு ஆயிரம் தேரைச் சாய்த்தான்
ஆயிரம் வாளியான் நூறு ஆயிரம் பேரைத் தேய்த்தான். 2378

தடிந்தன தோளும் தாளும் தகர்ந்தன சென்னி மண்ணில்
படிந்தன மடிந்தோர் யாக்கை பரிந்தன தும்பைத் தாமம்
மடிந்தன மையல் யானை மாண்டன தாண்டும் பாய்மான்
ஒடிந்தன கொடிஞ்சி மான் தேர் ஒதுங்கின ஒழிந்த சேனை. 2379

ஆவி முன் ஏகத் தாமும் அருக்க மண்டலத்து ஆரு ஏகத்
தாவுவ என்ன ஆடும் தலை பல சிலைவாள் பட்டுக்
கூவிளி எழுத்து விழும் குறைத்தலை ஆடப் பாதிச்
சாவு உடல் நின்று கைகள் கொட்டுவ தாளம் என்ன. 2380

தறை விழத் தனது சென்னி வீட்டினர் தம்மை நின்ற
குறை உடல் கை வேல் குத்தி நூக்குவ குரவை பாடி
எறி பது தலைகள் வாய்மென்று எயிறது கறித்து வீழ்ந்து

கருவின மார்பம் தட்டி நிற்பன கவந்தயாக்கை. 2381

ஒரு வழிப் பட்டு வீழும் இருதலை ஒன்றற்கு ஒன்று
மருவிய கேண்மைத்து ஆகி வால் எயிறு இலங்க நக்குப்
பிரிவு அற வந்தாய் நீயும் என்று எதிர் பேசிப் பேசிப்
பரிவு உற மொழிந்து மோந்து பாடி நின்று ஆடல் செய்த. 2382

மாக வாறு இயங்கு சேனம் வல் இருட் குவை இன் அன்ன
காகம் வன் கழுகு வெம்போர்க் களன் இடை அவிந்து வீழ்ந்தோர்
ஆகம் மேல் சிறகு ஆதிக் கொண்டு அசைவன வேடை நீக்கப்
பாகம் நின்று ஆல வட்டம் பணிப்பன போன்ற அன்றே. 2383

வெள்ளமாச் சோரி ஈர்ப்ப மிதக்கின்ற தேர்கள் வெம்பேய்ப்
பிள்ளைகள் மூழ்கிக் கீழ் போய் மறித்து என வீழ்வ
தெள்ளுநீர்க் கடலின் மீதூர் சிதைக்கல நிரையும் தாக்கித்
துள்ளி மற்று அவற்றைச் சாய்க்கும் சுறவமும் போன்ற அன்றே. 2384

கத்தி நின்று ஒருபால் ஈர்ப்பக் கருங் கொடி சேனம் துண்டம்
கொத்தி நின்று ஒருபால் ஈர்ப்பக் குட வயிற்று அழல் கண் பூதப்
பத்தி நின்று ஒருபால் ஈர்ப்பப் பட்டவர் ஆகம் கூளி
பொத்தி நின்று ஒருபால் ஈர்ப்ப அம் பொறி போல மன்னோ. 2385

துடுவை வான் முறம் கால் தள்ளும் துணைச் செவி அரிசி கோட்டின்
உடுவை நேர் மணியின் குப்பை உரல் அடி உலக்கை திண்கோ
அடுகலம் கடம் திச் சோரி மத்தக அடுப்பு என்று யானைப்
படுகளம் விசயச் செல்வி அடுமடைப் பள்ளி மானும். 2386

பிணத்தினைக் கோலி புண் நீர் ஆற்றினை பெருக்கி
உண் பேய்க்
கணத்தினை உதைத்து நூக்கிக் கரை உடைத்து ஒருவன்
பூதம்
நிணத்தொடும் வரும் அந் நீத்தம் நேர் பட விருந்து
கையால்
அணைத்து வாய் மடுக்கும் வைகை அருந்திய பூதம்
என்ன. 2387

புரத்தினுள் உயர்ந்த கூடல் புண்ணியன் எழுதி எய்த
சரத்தினுள் அவிந்தார் சென்னிக்கு உற்றுழிச் சார்வாய் வந்த
அரத்தினை அறுக்கும் வை வேல் அயல் புல வேந்தர் நச்சு

மரத்தினை அடுத்து சந்துங் கதழ் எரி மடுத்தது என்ன. 2388

மாசு அறு காட்சியான் தன் வாளியால் அவிந்தோர் தம்மை
மூசு வண்டு என்னச் சூழ்ந்து மொய்த்தன பைத்த கூளி
காய் சினச் சேனம் காகம் கழுகு இனம் பற்றி ஈர்த்துப்
பூசல் இட்டு ஒன்றோடு ஒன்று போர் செய்வான் தொடங்கிற்று அம்ம. 2389

வெம்சின மறக்கோன் நம்பி விடுகணை வெள்ளத்து ஆழ்ந்து
வஞ்சினம் உரு தன் சேனை மடிந்தது கண்டு மாழாந்து
எஞ்சின படையும் சூழ ஏதிலார் நகையும் சூழத்
துஞ்சின மறமும் சூழச் சோழனும் உடைந்து போனான். 2390

வில்லொடு மேகம் அன்ன வெம்சிலை வேட வேந்தன்
மல்லொடு பயின்ற தென்னவன் மலர் முகச் செவ்வி நோக்கி
அல்லொடு மதி வந்தது என்ன அருள் நகை சிறிது பூத்துச்
செல்லொடு பகை போல் கொண்ட திரு உரு மறைந்து போனான். 2391

பாடுவாய் அளி தேன் ஊட்டும் பைந்தொடைச் செழியன் வென்றிக்
கோடுவாய் வைத்திட்டு ஆர்த்துக் குஞ்சர முகட்டில் ஏறித்
தோடுவாய் கிழிக்கும் கண்ணார் மங்கலம் துவன்றி ஏந்த
நீடுவார் திரை நீர் வேலி நீள் மதி நகரில் புக்கான். 2392

சிலைவில் சேவகம் செய்து வாகை வாங்கித் திரு அளித்த
சேவகற்குச் சிறந்த பூசை
நிலை நித்தாய் மணிப் பொலம் பூண் இறு விச் சாத்தி
நிழல் விரிக்கும் வெயில் மணியான் நெடிய மேரு
மலைவில் தான் என்ன வரிச் சிலையும் நாமம் நாமம்
வரைந்த கடும் கூர்ங் கணையும் வனைந்து சாத்தி
அலைவித்து ஆழ் கடல் உலகுக் அகலச் செங்கோல்
அறம் பெருக்கும் வங்கிய சேகரன் ஆம் அண்ணல். 2393

சுந்தரப் பேரம்பெய்த படலம் சுபம்

------------------

## 51. சங்கப் பலகை கொடுத்த படலம் (2394 - 2432)

வேடு உரு ஆகி மேரு வில்லி தன் நாமக் கோல் எய்து
ஆடு அமர் ஆடித் தென்னன் அடுபகை துரந்த வண்ணம்
பாடினம் சங்கத்தார்க்குப் பகை தந்து அவரோடு ஒப்பக்
கூடி முத் தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை சொல்வாம். 2394

வங்கிய சேகரன் கோல் வாழும் நாள் மேலோர் வைகல்
கங்கை அம் துறை சூழ் கன்னிக் கடிமதில் காசி தன்னில்
பங்கயசூ முளரிப் புத்தேள் பத்து வாம் பரிமா வேள்வி
புங்கவர் மகிழ்ச்சி தூங்க மறை வழி போற்றிச் செய்தான். 2395

நிரப்பிய வழி நாள் நவ் நீர் ஆடுவான் நீண்ட வீணை
நரப்பிசை வாணி சாவித்திரி எனும் நங்கை வேத
வரப்பிசை மநு ஆம் ஆயத்திரி எனும் மடவா ரோடும்
பரப்பிசைக் கங்கை நோக்கிப் படருவான் எல்லை. 2396

நானவார் குழலினாரம் மூவருள் நாவின் செல்வி
வான ஆறு இயங்கும் விஞ்சை மாதராள் ஒருத்தி பாடும்
கானவாறு உள்ளம் போக்கி நின்றனள் கமலயோனி
ஆனவால் அறிவன் ஏகி அந் நதிக் கரையைச் சேர்ந்தான். 2397

நாமகள் வரவு தாழ்ப்ப நங்கையர் இருவரோடும்
தாமரைக் கிழவன் மூழ்கித் தடம் கரை ஏறும் எல்லைப்
பாமகள் குறுகி என்னை அன்றி நீ படிந்த வாறு என்
ஆம் என வெகுண்டாள் கேட்ட அம்பயத்து அண்ணல் சொல்வான். 2398

குற்றம் நின் மேலது ஆக நம்மை நீ கோபம் கொள்வது
எற்று என வினைய தீங்கை எண்ணறு மாக்கள் தோற்றம்
உன் தனை ஒழித்தி என்னா உரைத்தனன் சாபம் ஏற்கும்
பொன் தொடி மடந்தை அஞ்சிப் புலம்பு கொண்டு அவலம் பூண்டாள். 2399

ஊன் இடர் அகன்றோய் உன் ஆருயிர்த் துணை ஆவேன்இந்த
மானிட யோனிப் பட்டு மயங்கு கோ என்ன வண்டு
தேனிடை அழுந்தி வேதம் செப்பும் வெண் கமலச் செல்வி
தாள் இடர் அகல நோக்கிச் சதுர் முகத் தலைவன் சாற்றும். 2400

முகிழ்தரு முலை நின் மெய்யா முதல் எழுத்து ஐம் பத் தொன்றில்

திகழ்தரு ஆகார் ஆதி ஹாகாரம் ஈறாச் செப்பிச்
புகழ் தரு நாற்பத்து எட்டு நாற்பத்து எண் புலவர் ஆகி
அகழ் தரு கடல்சூழ் ஞாலத்து அவதரித்து இடுவாக. 2401

அத் தகு வருணம் எல்லாம் ஏறி நின்று அவற்றின்
மெய்த்தகு தன்மை எய்தி வேறு வேறு இயக்கம் தோன்ற
உய்த்திடும் அகாரத்திற்கு முதன்மையாய் ஒழுகும் நாதர்
முத்தமிழ் ஆலவாய் எம் முதல்வர் அம் முறையான் மன்னோ. 2402

தாம் ஒரு புலவர் ஆகித் திரு உருத் தரித்துச் சங்க
மாமணிப் பீடத்து ஏரி வைகியே நாற்பத்து ஒன்பது
ஆம் அவர் ஆகி உண்ணி நின்று அவர் அவர்க்கு அறிவு தோன்றி
ஏமுறப் புலமை காப்பார் என்றனன் கமலப் புத்தேள். 240"

அக்கரம் நாற்பத்து எட்டும் அவ்வழி வேறு வேறு
மக்களாய்ப் பிறந்து பல் மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்க ஆரியமும் ஏனைச் சொல் பதினெட்டும் ஆய்ந்து
தக்க தென் கலை நுண் தேர்ச்சிப் புலமையில் தலைமை சார்ந்தார். 2404

கழுமணி வயிரம் வேந்த கலன் பல அன்றிக் கண்டிக்
கொழுமணிக் கலனும் பூணும் குளிர்நிலா நிற்று மெய்யர்
வழுவறத் தெரிந்த செம் சொல் மாலையால் அன்றி ஆய்ந்த
செழு மலர் மாலையானும் சிவ அர்ச்சனை செய்யும் நீரார். 2405

புலம் தொறும் போகிப் போகிப் புலமையால் வென்று வென்று
மலர்ந்த தண் பொருனை நீத்த வளம் கெழு நாட்டில் வந்து
நிலம் தரு திருவின் ஆன்ற நிறை நிதிச் செழியன் செம் கோல்
நலம் தரு மதுரை நோக்கி நண்ணுவார் நண்ணும் எல்லை. 2406

பல பல கலைமாண் தேர்ச்சிப் பனுவலின் பயனாய் நின்ற
அற்புத மூர்த்தி எந்தை ஆலவாய் அடிகள் அங்கு ஓர்
கற்பமை கேள்வி சான்ற கல்வியின் செல்வர் ஆகிச்
சொற்பதம் கடந்த பாதம் இரு நிலம் தோய வந்தார். 2407

அவ் இடை வருகின்றாரை நோக்கி நீர் யாரை நீவிர்
எவ்விடை நின்றும் போது கின்றனிர் என்ன அன்னார்
வெவ்விடை அனையீர் யாங்கள் விஞ்சையர் அடைந்தோர் பாவம்
வௌவிடு பொருனை நாட்டின் வருகின்றேம் என்ன லோடும். 2408

தனி வரு புலவர் நீவிர் தண் தமிழ் ஆலவாய் எம்
நனி வரு கருணை மூர்த்தி கனைகழல் இறைஞ்சல் வேண்டும்
இனி வருகென்ன நீரே எங்களுக்கு அளவு இல் கோடி
துனி வரு வினைகள் தீர்க்கும் சுந்தரக் கடவுள் என்றார். 2409

மறையினால் ஒழுகும் பன்மாண் கலைகள் போல் மாண்ட
கேள்வித்
துறையின் ஆறு ஒழுகும் சான்றோர் சூழ மீண்டு ஏகிக்
கூடல்
கறையினார் கண்டத்தாரைப் பணிவித்துக் கரந்தார்
ஒற்றைப்
பிறையினார் மகுடத் தோற்றத்தார் அறிஞராய் வந்த
பெம்மான். 2410

விம்மிதம் அடைந்து சான்றோர் விண் இழி விமானம் மேய
செம்மலை வேறு வேறு செய்யுளால் பரவி ஏத்திக்
கைம் மலை உரியினார் தம் கால் தொழுது இறைஞ்சி மீண்டு
கொய்ம் மலர் வாகைச் செவ்வேல் செழியனைக் குறுகிக் கண்டார். 2411

மறவலி நேமிச் செம்கோல் மன்னவன் வந்த சான்றோர்
அறமலி கேள்வி நோக்கி அவைக்களக் கிழமை நோக்கித்
திறமலி ஒழுக்கம் நோக்கிச் சீரியர் போலும் என்னா
நிறை மலி உவகை பூத்த நெஞ்சினான் இதனைச் செய்தான். 2412

திங்கள் அம் கண்ணி வேய்ந்த செக்கர் அம் சடில நாதன்
மங்கலம் பெருகு கோயில் வட குட புலத்தின் மாடு ஓர்
சங்க மண்டபம் உண்டாக்கித் தகைமை சால் சிறப்பு நல்கி
அங்கு அமர்ந்து இருத்திர் என்ன இருத்தினான் அறிஞர் தம்மை. 2413

வண் தமிழ் நாவினார்க்கு மன்னவன் வரிசை நல்கக்
கண்டு உளம் புழுங்கி முன்னைப் புலவர் அக் கழகத் தோரை
மண்டினர் மூண்டு மூண்டு வாது செய் ஆற்றன் முட்டிப்
பண்டைய புலனும் தோற்றுப் படர் உழந்து எய்த்துப் போனார். 2414

இனையர் போல் வந்து வந்து மறுபுலத்து இருக்கும் கேள்வி
வினைஞரும் மதம் மேல் கொண்டு வினாய் வினாய் வாதம் செய்து
மனவலி இளைப்ப வென்று வைகுவோர் ஒன்றை வேண்டிப்
புனை இழை பாக நீங்காப் புலவர் முன் நண்ணினாரே. 2415

முந்து நூல் மொழிந்தார் தம்மை முறைமையால் வணங்கி எம்மை
வந்து வந்து எவரும் வாதம் செய்கின்றார் வரிசையாக
அந்தம் இல் புலமை தூக்கி அளப்பதாம் எம் மனோர்க்குத்
தந்து அருள் செய்தி சங்கப் பலகை ஒன்று என்று தாழ்ந்தார். 2416

பாடிய பாணற்கு அன்று வலியவே பலகை இட்டார்
பாடிய புலவர் வேண்டில் பலகை தந்து அருளார் கொல்லோ
பாடிய புலவர் ஆகும் படி ஒரு படிவம் கொண்டு
பாடிய புலவர் காணத் தோன்றினார் பலகை யோடும். 2417

சதுரமாய் அளவின் இரண்டு சாண் அதிப் பலகை அம்ம
மதியினும் வாலிது ஆகும் மந்திர வலியது ஆகும்
முதிய நும் போல் வார்க்கு எல்லாம் முழம் வளர்ந்து இருக்கை நல்கும்
இது நுமக்கு அளவு கோலாய் இருக்கும் என்று இயம்பி ஈந்தார். 2418

நாமகள் உருவாய் வந்த நாவலர் தமக்கு வெள்ளைத்
தாமரை அமளி தன்னைப் பலகையாத் தருவது என்னக்
காமனை முனிந்தார் நல்கக் கைக் கொடு களிறு தாங்கும்
மாமணிக் கோயில் தன்னை வளைந்து தம் கழகம் புக்கார். 2419

நாறு பூம் தாமம் நாற்றி நறும் பனி தோய்ந்த சாந்தச்
சேறு வெண் மலர் வெண் தூசு செழும் புகை தீபம் ஆதி
வேறு பல் வகையால் பூசை வினை முடித்து இறைஞ்சிக் கீரன்
ஏறினான் கபிலனோடு பரணனும் ஏறினானே. 2420

இரும் கலை வல்லோர் எல்லாம் இம் முறை ஏறி ஏறி
ஒருங்கு இனிது இருந்தார் யார்க்கும் ஒத்து இடம் கொடுத்து நாதன்
தரும் சிறு பகை ஒன்றே தன் உரை செய்வோர்க்கு எல்லாம்
சுருங்கி நின்று அகலம் காட்டி தோன்று நூல் போன்றது அன்றே. 2421

மேதகு சான்றோர் நூலின் விளை பொருள் விளங்கத் தம்மில்
ஏதுவும் எடுத்துக் காட்டும் எழுவகை மதமும் கூறும்
போதவை தௌ¤ந்த கிள்ளை பூவையே புறம்பு போந்து
வாது செய்வார்கள் வந்தான் மறுத்து நேர் நிறுத்து மன்னோ. 2422

ஆய ஆறு எண் புலவரும் ஆய்ந்து உணர்
பாய கேள்விப் பயன் பெற மாட்சியால்

தூய பாடல் தொடங்கினர் செய்து கொண்டு
ஏய வாரு இருந்தார் அந்த எல்லை வாய். 2423

பலரும் செய்த பனுவலும் மாண் பொருள்
மலரும் செல்வமும் சொல்லின் வளமையும்
குலவும் செய்யுள் குறிப்பும் ஒத்து ஒன்றியே
தலை மயங்கிக் கிடந்த அத் தன்மையால். 2424

வேறு பாடு அறியாது வியந்து நீர்
கூறு பாடல் இது என்றும் கோது இல் என
தேறு பாடல் இது என்றும் செஞ் செவே
மாறு பாடு கொண்டார் சங்க வாணரே. 2425

மருளு மாறு மயக்கு அற வான் பொருள்
தெருளு மாறும் செயவல்ல கள்வர் சொல்
பொருளும் ஆம் மதுரேசர் புலவர் முன்
அருளும் நாவலராய் வந்து தோன்றினார். 2426

வந்த நாவலர் வந்திக்கும் நாவலர்
சிந்தை ஆகுலம் செய்ய மயக்குறும்
பந்த யாப்பைக் கொணர்க எனப் பாவலர்
எந்தை ஈங்கு இவை என்று முன் இட்டனர். 2427

தூய சொல்லும் பொருளின் தொடர்ச்சியும்
ஆய நாவலர் அவ் அவர் தம் முது
ஆய பாடல் வகை தெரிந்து அவ் அவர்க்கு
ஏயவே எடுத்து ஈந்தனர் என்பவே. 2428

வாங்கு சங்கப் புலவர் மனம் களித்து
ஈங்கு நீர் எமரோடு ஒருத்தராய்
ஓங்கி வாழ்திர் என்று ஒல் எனத் தங்களைத்
தாங்கு செம் பொன் தவிசில் இருத்தினார். 2429

பொன்னின் பீடிகை என்னும் பொன் ஆரமேல்
துன்னு நாவலர் சூழ் மணி ஆகவே
மன்னினார் நடு நாயக மாமணி
என்ன வீற்றிருந்தார் மது ரேசரே. 2430

நதி அணிந்தவர் தம் மொடு நாற்பத்து ஒன்
பதின்மர் என்னப் படும் புலவோர் எலாம்
முதிய வான் தமிழ் பின்னு முறை முறை
மதி விளங்கத் தொடுத்து அவண் வாழும் நாள். 2431

வங்கிய சேகரன் வங்கிய சூடா மணி தன்னைப்
பொங்கி தேசார் முடி புனை வித்துப் புவி நல்கி
இங்கு இயல் பாச வினைப் பகை சாய இருந்து ஆங்கே
சங்கு இயல் வார் குழையான் அடி ஒன்றிய சார்பு உற்றான். 2432

சங்கப் பலகை கொடுத்த படலம் சுபம்

-----------------

## 52. தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம் (2433-2539 )

சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகு பீடம்
அற் குவை கண்டத்து அண்ணல் அளித்தது அறைந்தேம்ஆல்
தற்குவை தந்தால் உய்குவல் என்னும் தருமிக்குப்
பொற் குவை நல்கும் வண்ணம் எடுத்துப் புகல்கிற்பாம். 2433

மன்னவர் மன்னன் வங்கிய சூடா மணி மாறன்
தென்னவர் ஆகித் திகிரி உருட்டும் தென்கூடல்
முன்னவர் அன்னம் கண்டு அறியாத முடிக்கு ஏற்றப்
பன் மலர் நல்கு நந்தனம் வைக்கும் பணி பூண்டான். 2434

மாதவி பாதிரி தாதகி கூவிளம் மந்தாரம்
தாது அவிழ் மல்லிகை முல்லை இலஞ்சி தடம் கோங்கம்
வீதவழ் கொன்றை கரந்தை செழுங்கரம் வீரம் தண்
போது அவிழ் நந்தி செருந்தி குருந்தம் புன்னாகம். 2435

முண்டகம் மென்கடி நீலம் முதல் பல முப்போதும்
எண் திசையும் கமழும் படி நந்தன மெங்கும் தேன்
உண்டு இசை வண்டு படிந்து முரன்றிட உண்டாக்கி
வண்டு இமிர் சண்பக நந்தனமும் தனி வைத்தான் ஆல். 2436

பொய்த்திடு நுண் இடை மங்கல மங்கையர் பொன் பூண்டார்
ஒத்து எழு சண்பகம் மொய்த்து அரும்பு உடைந்து எங்கும்
வைத்திடு நந்தன வாசம் விழுங்கி மணம் கான்று

பைத்து மலர்ந்தன கண்டு மகிழ்ந்து பரித்தேரான். 2437

செருக்கிய வண்டு விழா மலர் கொய்து தெரிந்து ஆய்ந்து
செருக்கிய இண்டை நிரைத் தொடை தொங்கல் நெடும் தாமம்
மருக்கிளர் கண்ணி தொடுத்து அணிவித்து வணங்கு ஆரூர்
கருக்கிய கண் நுதலார் திருமேனி கவின் செய்தான். 2438

அன்ன வியன் பொழில் மா மதுரேசர் அடித்தாழ் வோன்
பொன் அவிர் சண்பக மாலை புனைந்த புதுக் கோலந்
தன்னை வியந்து இவர் சண்பக சுந்தரர் தாம் என்னா
முன்னர் இறைஞ்சினன் நிம்பம் அணிந்த முடித் தென்னன். 2439

அன்னது ஒர் நாமம் பெற்றனர் இன்று மணிக் கூடல்
முன்னவர் அந்தத் தாமம் அவர்க்கு முடிக்கு ஏற்றும்
இன்னது ஓர் நீரார் சண்பக மாறன் என்ற பேர்
மன்னி விளங்கினன் வங்கிய சூடா மணிதானும். 2440

சண்பக மாறன் சண்பக சுந்தரர் தம் மாடே
நண்பக மாறா நல் பணி செய்யும் நல் நாளில்
பண்பகர் சொல்லார் தம் புடை மாரன் படுபோர் மூண்டு
எண்பக வெய்யவான் ஆகிய வந்தது அன்று இளவேனில். 2441

மனிதர் வெம் கோடை தீர்க்கும் வசந்த மென் காலும் வேறு
துனிதவிர் இளம் கால் வேண்டும் சோலையும் சோலை வேண்டும்
புனித நீர்த் தடமும் வேறு புது மலர் ஓடை வேண்டும்
பனி தரு மதியும் வேறு பால் மதி வேண்டும் காலம். 2442

அண்ட வான்தரு மேல் சீறிச் சிவந்து எழுந்தாங்குத் தேமாத்
தண் தளிர் ஈன்று வானம் தைவர நிவந்த காசு
கொண்டு இடை அழுத்திச் செய்த குழை அணி மகளிர் போல
வண்டு இறை கொள்ளப் பூத்து மலர்ந்தன செருந்தி எல்லாம். 2443

செம்கதிர் மேனியான் போல் அவிழ்ந்தன செழும் பலாசம்
மங்குல் ஊர் செல்வன் போல மலர்ந்தன காஞ்சித் திங்கள்
புங்கவன் போலப் பூத்த பூம் சினை மர அம் செங்கை
அம் கதிர் ஆழியான் போல் அலர்ந்தன விரிந்த காய. 2444

தரை கிழித்து எழுநீர் வைகைத் தடம் கரை எக்கர் அல்குல்

அரமே கலை சூழ்ந்து என்ன அலர்ந்து தாது உகுப்ப ஞாழல்
மரகதம் தழைத்து வெண் முத்து அரும்பிப் பொன் மலர்ந்து வாங்கும்
திரை கடல் பவளக்காடு செய்வன கன்னிப் புன்னை. 2445

ஊடினார் போல வெம்பி இலை உதிர்ந்து உயிர் அன்னாரைக்
கூடினார் போல எங்கும் குழை வரத் தழைத்து நீங்கி
வாடினார் போலக் கண்ணீர் வார மெய் பசந்து மையல்
நீடினார் அலர் போல் பூத்து நெருங்கின மரங்கள் எல்லாம். 2446

விழைதரு காதலார் தாம் மெலிவுற மெலிந்து நெஞ்சம்
குழைவுறக் குழைந்து நிற்கும் கோதிலாக் கற்பினார் போல்
மழை அறும் கோடை தீப்பமரம் தலை வாட வாடித்
தழைவுறத் தழைத்து நின்ற தழீஇய பைங் கொடிகள் எல்லாம். 2447

சேட்டிகைத் தென் காற்று தள்ளத் தெள் மதுச் சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்று பூம் கொம்பர் ஆடல்
நாட்டியப் புலவன் ஆட்ட நகை முகம் வெயர்வை சிந்தப்
பாட்டிசைத்து ஆடா நின்ற பாவைமார் போன்ற அன்றே. 2448

மலர்ந்த செவ் அந்திப் போதும் வகுளமும் முதிர்ந்து வாடி
உலர்ந்து மொய்த்து அளி தேன் நக்க கிடப்பன உள்ளமிக்க
குலம் தரு நல்லோர் செல்வம் குன்றினும் தம்பால் இல்லென்று
அலந்தவர்க்கு உயிரை மாறி யாயினும் கொடுப்பர் அன்றோ. 2449

நாறிய தண் அம் தேமா நறும் தளிர் கோதிக் கூவி
ஊறிய காமப் பேட்டை உருக்குவ குயில் மென் சேவல்
வீறிய செம்கோல் வேந்தன் வெளிப்படத் தேயம் காவல்
மாறிய வேந்தன் போல ஒடுங்கின மயில்கள் எல்லம்/ 2450

பொங்கரின் நுழைந்து வாவி புகுந்து பங்கயம் துழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கு அலர் மணம் கூட்டு உண்டு குளிர்ந்து மெல் என்று தென்றல்
அங்கு அங்கே கலைகள் தேரும் அறிவன் போல் இயங்கும் அன்றே. 2451

தாமரை களாஞ்சி தாங்கத் தண் குயின் முழவம் ஏங்க
மா மருது அமரும் கிள்ளை மங்கலம் இயம்பத் தும்பி
காமரம் இசைப்ப முள் வாய்க் கைதை வாள் எடுப்ப வேனில்
கோமகன் மகுடம் சூடி இருப்பது அக் குளிர் பூம் சோலை. 2452

கலையினால் நிறைந்த இந்து காந்த மண்டபத்தும் செய்த
மலையினும் எழுது மாட மருங்கினும் நெருங்கு சோலைத்
தலையினும் கமல வாவித் தடத்தினும் தண் முத்து ஆரம்
முலையினும் அன்றிக் கோடை முடிவிடம் காணார் மைந்தர். 3

நிலம் தரு திருவின் ஆன்ற நிழல் மணி மாடக் கூடல்
வலந்தரு தடம் தோள் மைந்தர் வானமும் வீழும் போக
நலம் தரு மகளிரோடு நாக நாடவர் தம் செல்வப்
பொலம் தரு அனைய காட்சிப் பூம் பொழில் நுகர் வான் போவார். 2454

மாத் தாண் மதமான் எருத்தின் மடங்கல் எனச் செல்வாரும்
பூத்தார் ஒலிவாம் பரிமேல் புகர் மா எனப் போவாரும்
பார்த்தார் பரிதி என வாம் பரித்தேர் உகைத்து ஊர்வாரும்
தேத்தார் உளர் வண்டு அலம்பச் சிலம்பின் நடக்கின்றாரும். 2455

நீலப் பிடிமேல் பிடிப்போன் நெறிக் கொள்வாரும் தரள
மாலைச் சிவிகை மிசை வெண் மலராள் எனச் செல்வாரும்
ஆலைக் கரும்பன் துணை போல் அணித்தார்ப் பரியூர்வாரும்
கோலத் தடக்கை பற்றிக் கொழுநருடன் போவாரும். 2456

சுருப்புக் கமழ் தேம் கண்ணித் தொடுபைங் கழல் ஆடவரும்
கருப்புச் சிலை மன்னவனால் கருவிப் படை அன்னவரும்
விருப்புற்று எறிநீர் வையை வெள்ளைத் தரளம் தெள்ளிப்
பொருப்பில் குவிக்கும் புளினம் புறம் சூழ் சோலை புகுவார். 2457

கூந்தல் பிடியும் பரியும் ஊர் வார் கொழுநர் தடம் தோள்
ஏந்தச் சயமாது என்னத் தழுவா இழிந்து பொழில் வாய்ப்
பூந் தொத்து அலர் பொன் கொடி தாது உகு மாறு என்னப் புனைந்த
சாந்தக் கலவை புகப் போய் வனமங்கையர் போல் சார்ந்தார். 2458

ஏமா சல மென் முலையார் நடை ஓவியமே என்னப்
பூ மாதவி சேர்வாரும் புன்னை நிழல் சேர்வாரும்
தேமா நிழல் சேர்வாரும் செருந்தி நிழல் சேர்வாரும்
காமாயுத சாலைகள் போல் கைதை நிழல் சேர்வாரும். 2459

கோடும் பிறை வாண் நுதலார் குழலைக் கருவிக் கார்
என்று

ஆதும் தோகை அவர் கண் நோக்கிக் கணை என்று
அஞ்சி
ஒடும் கொடியின் அன்னார் உரு மாந்தளிர் என்று
அயில் வான்
நாடும் குயில் அன்னவர் பண் இசைக் கேட்டு ஒதுங்கி
நாணும். 2460

நீடும் தரங்கம் இரங்கு நிறைநீர் நிலையே அன்றிப்
பாடும் சுரும்பு உண் கழுநீர் பைந்தாள் குமுதம் பதுமம்
கோடும் பூத்த என்னக் கொடியேர் இடையார் குழையும்
தோடும் கிடந்த வதனத் தொகையால் பொலிவ சோலை. 2461

பிடிகள் என்ன நடந்தார் உடன் போய்க் கொழுநர் பெரும் தண்
கொடிகள் மிடைந்த வில்லில் இயக்கர் போலக் குறுகிக்
கடி கொள் பனிநீர் தௌ¤த்து வேடை தணித்தும் கன்றும்
அடிகள் பிடித்தும் சேடியவர் கைக்கு உதவி ஆவார். 2462

மைவார் தடம் கண் மடவார் வளைப்பர் கொம்பின் மலரைக்
கொய்வார் குமிழ் போந்து உயிர்ப்பார் குழையும் செவியும் குழலும்
பெய்வார் மகிழ்ச்சி செய்வார் பேரா மையல் கூர
எய்வார் கணைபோல் தைப்பக் கொழுநர் மார் பத்து எறிவார். 2463

முத்து ஏர் நகையார் வளைப்ப முகை விண்டு அலர் பூங் கொம்பர்ப்
புத்தேள் வண்டும் பெடையும் புலம்பிக் குழலில் புகுந்து
தெத்தே எனப் பாண் செய்து தீந்தேன் அருந்தும் துணையோடு
ஒத்து ஏழ் இசை பாதிக் கள் உண்ணும் பாணர் ஒத்தே. 2464

இம்பர் வீடு அளிக்கும் தெய்வ மகளிரே என்பார் கூற்றம்
வம்பல மெய்யே போலும் வளைக்கையார் வளைப்பத் தாழ்ந்து
கம்பம் உற்று அடிப் பூச் சிந்தி மலர் முகம் கண்ணீர் சோரக்
கொம்பரும் பணிந்தது என்றால் உலகியல் கூறல் பாற்றோ. 2465

மைக் கணாள் ஒருத்தி எட்டா நிமிர் கொம்பை வளைக்கும் தோறும்
கைக்கு நேர் படாமை வாடும் கடிமலர்க் கொடிபோல் நிற்பத்
தைக்கும் பூம் கணை வேள் அன்ன ஒருமகன் தலைபட்டு என்னை
எய்க்கின்றாய் தோள் மேல் ஏறிப் பறி என ஏந்தி நின்றான். 2466

தையலாள் ஒருத்தி எட்டா மலர்க் கொம்பைத் தளிர்க்கை நீட்டி

ஐய நுண் மருங்குல் நோவ வருந்தலும் ஆற்றாக் கேள்வன்
ஒய் யென இதுவும் என்னை யூடிய மகளிர் ரேயோ
கொய் என வளைத்து நின்றான் கண் முத்தம் கொழிப்ப நின்றாள். 2467

மைக்குழல் ஒருத்தி காதில் வட்டப் பொன் ஒலை யூடே
திக் கயம் அனையான் கொய்த செருந்திப்பூச் செருகி நோக்கி
இக் குழை அழகிது என்றான் இடும் எம் கைக்கு இடுதி என்னா
அக் குழை யோடும் வீசி அன்பனுக்கு அலக்கண் செய்தாள். 2468

மயில் இளம் பெடை அன்னாள் ஓர் மாதர் மாங் குடம்பைசெல்லும்
குயில் இளம் பெடை தன் ஆவிச் சேவலைக் கூவ நோக்கி
அயில் இளம் களிறு அன்னானைக் கடைக் கணித்து அளியும் தேனும்
பயில் இளம் சோலை மாடு ஓர் மாதவிப் பந்தர் சேர்ந்தாள். 2469

பாசி இழை ஒருத்தி ஆற்றாப் புலவியாள் பைந்தாரான் முன்
பூசு அகில் வாசம் காலில் போக்கியும் புனைபூண் காஞ்சி
ஓசையைச் செவியில் உய்த்தும் கலவியின் உருவம் தீட்டும்
தூசினை உடுத்தும் போர்த்தும் தூது விட்டவள் போல் நின்றாள். 2470

வாய்ந்த நாள் மலர் கொய்து ஈவான் மெய்யில் அம் மலர்த்
தேம் தாது
சாந்த மான் மதம் போல் சிந்திக் கிடப்ப ஓர் தையல்
யாரைத்
தோய்ந்த சாந்து என்றாள் உள்ளத்து உன்னையும் சுமந்து
கொய்த
ஆய்ந்த சண்பகத் தாது என்றான் நெய் சொரி அழலின்
நின்றாள். 2471

பிணி அவிழ் கோதையாள் ஓர் பேதை தன் பதி தன் ஊடல்
தணிய வந்து அடியில் வீழத் தன்னிழல் அனையான் சென்னி
மணி இடைக் கண்டு கங்கை மணாளனை ஒப்பீர் எம்மைப்
பணிவது என் என்று நக்குப் பரிவு மேல் பரிவு செய்தாள். 2472

மதுகை வாள் ஒருவன் அங்கு ஓர் மங்கை தன் வடிவை
நோக்கிப்
பதுமமே அடிகை காந்தள் பயோதரம் கோங்கு காவிப்
புது மலர் விழிவாய் ஆம்பல் போது நும் மூரல்
ஒப்பபோது
அதனை வாய் திறந்து காட்டிப் போமின் என்று

அடுத்து நின்றான். 2473

விடைத் தனி ஏறு அன்னான் ஓர் விடலை ஓர் வேற்
கண்ணாள்முன்
கிடைத்து நும் இடத்து என் நெஞ்சம் கெட்டு வந்து
ஒளித்தது அல்குல்
தடத் திடை ஒளித்ததேயோ தனத்திடை ஒளித்ததோ
பூம்
படத்தினைத் திறந்து காட்டிப் போ கெனப் பற்றிச்
சென்றான். 2474

மாந்தளிர் அடியார் சாய்ப்ப வளைந்த பூம் சினை வண்டு அன்னார்
கூந்தலில் கிடந்த செம்மல் கோதை மேல் வீழ்ந்த கற்பின்
ஏந்திழை அவரை நீத்துப் பலர் நுகர்ந்து எச்சில் ஆக்கும்
பூந்தொடியவரைத் துய்க்கும் பேதையர் போன்ற தன்றே. 2475

புல்லி மைந்தர் பொருள் கவர்ந்தார் என
வல்லி அன்ன மடந்தையர் கொய்தலின்
அல்லி நாண்மலர் அற்றபின் கைப் பொருள்
இல்லி என்ன விளைத்தன கா எலாம். 2476

மை உண் கண்ணியர் மைந்தரோடு அம்மலர்
கொய்யும் செல்வ நுகர்ந்து கொழுங்கணும்
மெய்யும் தோயில் கொழுநரின் வேற்றுமை
செய்யும் பொய்கை திளைப்பச் சென்றாரரோ. 2477

அன்ன மன்னவர் ஆடும் கயம் தலை
நன்னர் நீல நளினம் குமுதம் என்று
இன்ன அன்றி எழில் முல்லை சண்பகம்
பொன் அம் கோங்கமும் பூத்தது போன்றதே. 2478

குரவ ஓதியர் கயம் தலை குறுகுமுன் கயலும்
அரவும் ஆமையும் அலவனும் அன்ன அமும் அகன்ற
பருவரால் களும் இரிந்தன பகைஞர் மேல் இட்டு
வருவரேல் எதிர் நிற்பரோ வலி இழந்தவரே. 2479

பண் எனும் சொலார் குடை தொறும் பல் மலர் வீழ்ந்த
தண் எனும் திரை அலை தொறும் நிரை நிரை தாக்கல்
கண்ணும் நீலமும் முகங்களும் கமலமும் வாயும்

வண்ண ஆம்பலும் தத்தம்மின் மலைவன அனைய. 2480

குழை பாசியின் விரிந்திட மகிழ்ந்து நீர் குடையும்
மாழை உண் கணார் கொங்கையும் முகங்களும் மருங்கர்
சூழ் அரும் பொடு மலர்ந்த செந்தாமரைத் தொகுதி
ஆழ் தரங்க நீர் இடைக் கிடந்து அலைவன அனைய. 2481

தூய நீர் குடைந்து ஏரும் தன் துணைவியைத் துணைவன்
வாயும் கண்களும் வேறு உற்ற வண்ணம் கண்டு என் கண்
ஏய இன்னுயிர் அனையவள் எங்கு உளாள் என்றான்
காயும் வேல் கணாள் முலை குளிப் பாட்டினாள் கண்ணீர். 2482

மங்கை நல்லவள் ஒருத்தி நீர் ஆடுவான் மகிழ் நன்
அங்கை பற்றினள் ஏகுவாள் அவன் குடைந்து ஏறும்
பங்கயக் கணாள் ஒருத்தியைப் பார்த்தலும் சீசீ
எங்கை எச்சில் நீர் ஆடலேன் எனக் கரை நின்றாள். 2483

வனைந்த பைங் கழலான் புனல் ஆடலின் மார்பின்
நனைந்த குங்குமத் தலை எறி நளின மொட்டு அழுந்தப்
புனைந்த கொங்கையால் வடுப் படப் பொறித்தவள் யார் என்று
இனைந்து அழுகினாள் நெய் சொரி எரி என ஒருத்தி. 2484

வீழ்ந்த காதலன் செய்த தீங்கு ஆகிய வேலால்
போழ்ந்த நெஞ்சினாள் புலவி நோய் பொறாள் அவன் காண
ஆழ்ந்த நீர் இடை அமிழ்த்து வாள் போன்று அயர்ந்து அயலே
தாழ்ந்த அன்னத்தை நோக்கிக் கை தா என இரந்தாள். 2485

கரும்பு போல் மொழியாள் ஒரு காரிகை வதனம்
சுரும்பு சூழ் கமலங்களுள் கமலமாய்த் தோன்ற
விரும்பு காதலன் ஐயுற்று மெலிந்தனன் மெல்ல
அரும்பு முல்லை கண்டு ஐயத்தின் நீங்கிச் சென்று அணைந்தான். 2486

களித்த காதலன் மொக்குள் வாய்த் தன் நிழல் கண்டு
தெள¤த்து வாள் நகை செய்ய மாற்றாள் என்று சீறித்
தளிர்க்கை நீட்டினாள் கண்டிடல் தடவினள் சலத்துள்
ஒளித்தியோ எனா உதைத்தனள் பேதை மாது ஒருத்தி. 2487

நாறு சுண்ணம் மென் கலவையும் நானமும் தம்மின்

மாரி வீசி நின்று ஆடுவார் மாலை தாழ் அகலத்து
ஊறு பாடு அற வந்து அந்தரத்து அளிகவர்ந்து உண்ப
ஆறு செல்பவர் பொருள் வெளவும் ஆரட்டரே போல. 2488

கொய்யும் நீலமும் கமலமும் கொண்டு கொண்ட நங்கன்
எய்யும் வாளியின் எறிவரால் எறிந்திடு மலரைக்
கையினால் புடைத்து எறிந்தவர் கதிமுகம் படக்கண்டு
ஐது வாள் நகை செய்து அக மகிழ்ச்சியுள் ஆழ்வார். 2489

வாச மென் பனி நீரோடு சுண்ணமும் வாரி
வீசுவார் இளம் பிடியொடு வேழ மா நிரை போல்
காசு உலாந் தொடி வில்லிடக் கைகளால் அள்ளிப்
பூசு சாந்து அவை அழிந்திடப் புனித நீர் இறைப்பார். 2490

அப் பெரும் புனல் தடம் குடைந்து ஆடுவார் ஆயத்து
ஒப்ப அரும் தனி ஒருமகள் ஒருவன் தன் முகத்துத்
துப்பை வென்ற செம் துவர் இதழ்ச் செய்ய வாய்த் தூநீர்
கொப்பளித்தனள் ஆம்ப அம் தேன் எனக் குடித்தான். 2491

ஆழம் அவ்விடைச் செல்லலை நில் என அடுத்தோர்
வேழ மன்னவன் விலக்குவான் போல் ஒரு வேல் கண்
ஏழை தன்னைக்கையால் வளைத்து ஏந்தி வண்டு அறை தார்
சூழு மார் பணைத்து இரதி தோள் தோய்ந்தவன் ஒத்தான். 2492

மாசுஇல் நானமும் சூடிய மாலையும் மெய்யில்
பூசு சாந்தமும் ஆரமும் பொய்கைக்குக் கொடுத்து
வாச மெய்யினில் அம்புய வசமும் மயங்க
ஆசை மைந்தரோடு இளையவர் அகன் கரை அடைவார். 2493

தையலார் சிலர் நனைந்த நுண் தானையுள் பொதிந்த
மெய் எலாம் வெளிப் படக் கரை ஏறுவான் வெள்கி
ஐய தா பொலம் துகில் என அன்பரைக் கூய்க் கண்
செய்ய மாயனைக் கேட்கும் ஆய்ச் சிறுமியர் ஒத்தார். 2494

உலத்தை வென்ற தோள் ஆடவர் உச்சிமேல் பொறித்த
அலத்து அகத்தொடு குங்குமம் அனைந்து செம் புனலாய்
மலர்த் தடம் குடைந்து அவர்க்கு நீராஞ்சன வட்டக்
கலத்தை ஒத்தன சுற்றி நின்றார் ஒத்த கடிக்கா. 2495

பட்டும் பல் நிறக் கலிங்கமும் பன் மணிக் கலனும்
கொட்டும் சாந்தமும் நானமும் குங்குமச் சேறும்
கட்டும் தாமமும் தமது கட்டழகு எலாம் கவர
மட்டு உண் கோதையர் ஆடவர் மனம் எலாம் கவர்ந்தார். 2496

காவியும் கமலப் போதும் கள் ஒழுகு ஆம்பல் போதும்
வாவியுள் பூத்த போல வாடி உள் பூப்ப நோக்கி
ஏய் இரண்டு அன்ன கண்களால் அனங்கனை ஏவல் கொள்ளும்
பூவிரி பொலம் கொம்பு அன்னார் புது மது நுகரப் புக்கார். 2497

பொன்னினும் வெள்ளியானும் பளிங்கினும் புலவன் செய்த
நன்னிறக் கலத்தில் கூர் வாள் நட்டு என ஆக்கிச் சேடி
மின் அனார் அளித்த தேறல் சிறு துளி விரலில் தெள்ளித்
துன்னி வீழ் களி வண்டு ஒச்சி தெண்டை அம் கனிவாய் வைப்பார். 2498

வள்ளத்து வாள் போல் வாக்கு மதுக் குடம் தன்பால் பெய்த
கொள்ளைத் தேன் மதுவைக் கொள்ளைக் கொள வந்த வள்ளம் ஈது என்று
உள்ளத்து வெகுண்டு வை வாள் ஊன்றி மார் பிடப்பது ஒத்த
கள்ளைச் சூழ் காளை வண்டு செருச் செயல் காண்பது ஒத்த. 2499

தணியல் உண்டு உள்ளம் சோரும் ஒருமள் தன் இயல்உண்பான்
பிணி அவிழ் கோதையாள் ஒர் பெண் மகள் கலத்தில் வாக்கும்
துணிமதுத் தாரை தன்னை வாள் எனத் துணிந்து பேதாய்
திணிகதிர் வாளால் வள்ளம் சிதைத்தியோ என்று நக்காள். 2500

மலர் தொறும் சிறு தேன் நக்கித் திரிவண்டு மடவார் தம்கைத்
தலம் எடுத்து ஓச்ச ஓடா தழி இத் தடம் சாடி மொய்ப்ப
இலம் எனப் பல்லோர் மாட்டும் இரந்து இரந்து தன்மை நீங்கா
அலமரும் வறியோர் வைத்த நிதி கண்டு அகல்வரே யோ. 2501

உண்டவள் ஒருத்தி கள்வாய் உதிக்கும் தன் முகமும் கண்ணும்
கண்டு தாமரைகள் வேலை முளைத்தக் கள்ளை ஆர
மொண்டு உணாப் பேதைத் தும்பி அம்மது முளரி வார் தேன்
நுண் துளி செறிவது என்னா நொடித்துக் கை புடைத்து நக்காள். 2502

மங்கையாள் ஒருத்தி தான் உண்டு எஞ்சிய மதுவுள்
தோன்றும்

திங்களை நோக்கி என்னைப் பிரிவின்கண் தீயாய்ச்
சுட்டாய்
இங்கு வந்து அகப் பட்டாயே இனி விடேன் கிடத்தி
என்னா
அங்கு ஒரு வள்ளம் கொண்டு சேமித்தாள் அருந்தல்
செய்யாள். 2503

வெவ்விய நறவம் உண்ட விளங்கு இழை ஒருத்தி கையில்
கௌவிய வாடி தன்னில் கரும் கயல் நெடும் கண் சேப்பும்
கொவ்வை வாய் விளர்ப்பு நோக்கி என் நலம் கூட்டு உண்டு ஏகும்
ஔவிய மனத்தான் யார் என்று அயர்கின்றாள் அயலார் எள்ள. 2504

ஒருத்தி கள் உண்கின்றாள் தன் உருவம் அந் நறவுள் தோன்ற
ஒருத்தி என்னுடன் வந்து உண்பாள் காண் என உண்ட தோழி
ஒருத்தி வந்து என் செய்வாள் தன் உருவமும் நோக்கிப் பேதாய்
ஒருத்தியோ இருவர் என்றாள் எச்சில் என்று உகுத்து நக்காள். 2505

சாடி உண் நறவம் உண்டாள் தன் உரு வேறு பாட்டை
ஆடியுள் நோக்கி நானோ அல்லனோ எனைத்தான் கைக்கொண்டு
ஓடினர் பிறரும் உண்டோ உயிர் அன்னான் வந்து இங்கு என்னைத்
தேடி என் செய்கேன் என்னைத் தேடித்தா சேடி என்றாள். 2506

களித்தவள் ஒருத்தி நின்ற வாடியுள் கணவன்றன் பின்
ஒளித்தவன் உருவும் தானு நேர் பட உருத்து நோக்கித்
துளித்த கண்ணீர் ஆகி ஏது இலாள் தோய் தோய்ந்து இன்பம்
குளித்தனை இருத்தியோ என்று உதைத்தனள் கோபம் மூண்டாள். 2507

இளம் புளிந்தயிர் விராய இன் சுவை பொதிந்த சோறு
வளம் பட விருத்தினோடும் அருந்துவார் வசந்த வீணை
களம் படும் எழாலினோடும் கைவிரல் நடாத்திக் காமன்
உளம் புகுந்து அலைப்ப வெண்ணெய்ப் பாவை போல் உருகிச் சோர்வார். 2508

இவ் இள வேனில் காலத்து இன்னுயிர்த் துணைவி யோடும்
செவ்விய செங்கோன் நேமிச் செண்பக மாறன் ஓர் நாள்
கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்
வெவ்விய வேடை நீப்பான் இருந்தனன் வேறு வைகி. 2509

மாந்தளிர் ஈன்று கோங்கு வண்டள அரும்பித் தண்தேன்
காந்தள் செம் கமலம் ஆம்பல் சண்பகம் கழுநீர் புத்துச்

சாய்ந்த மென் கொடியும் தானும் தனி இடத்து இருப்பான் நேரே
வாய்ந்த ஓர் நாற்றம் தோன்ற அசைந்தது வசந்தத் தென்றல். 2510

வெவ்விய வேலான் வீசும் வாச மோந்து ஈது வேறு
திவ்விய வாசம் ஆக இருந்தது தென்றல் காவில்
வெளவிய வாசம் அன்று காலுக்கும் வாசம் இல்லை
எவ்வியல் வாச மேயோ இது என எண்ணம் கொள்வான். 2511

திரும்பித்தன் தேவி தன்னை நோக்கினான் தேவி ஐம்பால்
இரும்பித்தை வாசம் ஆகி இருந்தது கண்டில் வாசம்
சுரும்பிற்கும் தெரியாது என்னாச் சூழ்ந்து இறும் பூது கொண்டீ
தரும்பிதைக் இயல்போ செய்கையோ என ஐயம் கொண்டாள். 2512

ஐயுறு கருத்தை யாவராயினும் அறிந்து பாடல்
செய்யுநர் அவர்க்கே இன்ன ஆயிரம் செம்பொன் என்றக்
கையுறை வேலான் ஈந்த பொன் கிழி கைக் கொண்டு ஏகி
மெய் உணர் புலவர் முன்னாத் தூக்கினார் வினைசெய் மாக்கள். 2513

வங்கத்தார் பொருள் போல் வேறு வகை அமை கேள்வி நோக்கிச்
சங்கத்தார் எல்லாம் தம்மில் தனித்தனி தேர்ந்து தேர்ந்து
துங்கத் தார் வேம்பன் உள்ளம் சூழ் பொருள் துழாவி உற்ற
பங்கத்தார் ஆகி எய்த்துப் படருறு மனத்தர் ஆனார். 2514

அந்த வேலையில் ஆதி சைவரில்
வந்த மாணவன் மணம் செய் வேட்கையான்
முந்தை ஆச்சிம முயலும் பெற்றியான்
தந்தை தாய் இலான் தருமி என்று உளான். 2515

ஒருவன் நான் முகத்து ஒருவன் மார்பு உறை
திருவன் நாடரும் தேவனாலும் உரு
அருவ நாலகன் தானைத் தன் கலி
வெருவ நாடி முன் வீழ்ந்து வேண்டுவான். 2516

தந்தை தாய் இலேன் தனியன் ஆகிய
மைந்தனேன் புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய் செயும் செல்ல தீர்ப்பதற்கு
எந்தையே இது பதம் என்று ஏத்தியே. 2517

நெடிய வேத நூல் நிறைய ஆகமம்
முடிய ஓதிய முறையினில் நிற்கு எனும்
வடி இல் இல்லற வாழ்க்கை இன்றி நின்
அடி அருச் சனைக்கு அருகன் ஆவனோ. 2518

ஐய யாவையும் அறிதியே கொலாம்
வையை நாடவன் மனக் கருத்து உணர்ந்து
உய்ய ஓர் கவி உரைத்து எனக்கு அருள்
செய்ய வேண்டும் என்று இரந்து செப்பினான். 2519

தென்னவன் குல தெய்வம் ஆகிய
மன்னர் கொங்கு தேர் வாழ்க்கை இன் தமிழ்
சொல் நலம் பெறச் சொல்லி நல்கினார்
இன்னல் தீர்ந்து அவன் இறைஞ்சி வாங்கினான். 2520

பொன் தனிச்சடைப் புவன நாயகன்
சொற்ற பாடல் கைக் கொண்டு தொல் நிதி
பெற்று எடுத்தவன் போன்று பீடு உறக்
கற்ற நாவலர் கழகம் நண்ணினான். 2521

கல்வியாளர் தம் கையில் நீட்டினான்
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளும் தூக்கியே
நல்ல நல்ல என்று உவகை நண்ணினார். 2522

அளக்கு இல் கேள்வியார் அரசன் முன்பு போய்
விளக்கி அக்கவி விளம்பினார் கடன்
உள்ளக் கருத்து நேர் ஒத்தலால் சிரம்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான். 2523

உணர்ந்த கேள்வியார் இரரோடு ஒல்லை போய்ப்
புணர்ந்த ஆயிரம் பொன்னும் இன் தமிழ்
கொணர்ந்த வேதியன் கொள்க இன்று என
மணந்த தாரினான் மகிழ்ந்து நல்கினான். 2524

வேந்தன் ஏவலால் விபுதர் தம் ஒடும்
போந்து மீண்டு அவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொன் கிழி அறுக்கும் நம்பியை

நேர்ந்து கீரன் நில் என விலக்கினான். 2525

குற்றம் இக் கவிக்கு என்று கூறலும்
கற்றிலான் நெடும் காலம் வெம் பசி
உற்றவன் கலத்து உண்ணும் எல்லை கைப்
பற்ற வாடினான் பண்பு பற்றினான். 2526

உலர்ந்த நெஞ்சு கொண்டு ஒதுங்கி நாயகன்
நலம் தரும் கழல் நண்ணினான் அவன்
மலர்ந்தபாடல் கொண்டு அறிஞர் வைகிடத்து
அலர்ந்த சிந்தை கொண்டு அடைந்த மைந்தனே. 2527

செய்யுள் கொண்டு போய்த் திருமுன் வைத்து உளப்
பையுள் கொண்ட அப் பனவன் என்னை நீ
மையுள் கண்ட இவ் வழுவுப் பாடலைக்
கையுள் நல்கினாய் கதி இலேற்கு எனா. 2528

வறுமை நோய் பிணிப்பப் பல் நாள் வழிபடு அடியேன் நின்பால்
பெறு பொருள் இழந்தேன் என்று பேசில் என் யார்க்கும் மேலாம்
கறை கெழு மிடற்றோய் நின்றன் கவிக்குக் குற்றம் சில் வாழ்நாள் சிற்
அறிவு உடைப் புலவர் சொன்னால் யார் உனை மதிக்க வல்லார். 2529

எந்தை இவ் விகழ்ச்சி நின்னது அல்லதை எனக்கு யாது என்னாச்
சிந்தை நோய் உழந்து சைவச் சிறுவன் இன்று இரங்க யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப் பனுவலும் பயனும் ஆன
சுந்தர விடங்கன் ஆங்கு ஓர் புலவனாய்த் தோற்றம் செய்தான். 2530

கண்டிகை மதாணி ஆழி கதிர்முடி வயிரம் வேய்ந்த
குண்டலம் குடி கொண்டு அகத்து அழகு எலாம் கொள்ளைக் கொள்ளத்
தண் தமிழ் மூன்றும் வல்லோன் தான் எனக் குறி இட்டு ஆங்கே
புண்டர நுதலில் பூத்துப் பொய் இருள் கிழித்துத் தள்ள. 2531

விரிகதிர்ப் படாத்திற் போர்த்த மெய்ப் பையுள் அடங்கிப் பக்கத்து
எரி மணிக் கடகத்திண் தோள் இளையவர் அடப்பையோடும்
குருமணிக் களாஞ்சி அம் பொன் கோடிகம் தாங்க முத்தால்
புரிமதிக் குடைக் கீழ்ப் பொன் கால் கவரி பால் புரண்டு துள்ள. 2532

சொல் வரம்பு இகந்த பாதம் என்பது தோன்ற வேத

நல்ல பாதுகையாய்ச் சூட நவின்றன கற்றுப் பாட
வல்லவர் மறையின் ஆறு மனு முதல் கலை போல் பின்பு
செல்ல நூல் ஆய்ந்தோர் வைகும் திருந்து அவைக் களத்தைச் சேர்ந்தான். 2533

ஆரவை குறுகி நேர் நின்று அங்கு இருந்தவரை நோக்கி
யாரை நங் கவிக்குக் குற்றம் இயம்பினார் என்னா முன்னம்
கீரன் அஞ்சாது நானே கிளத்தினேன் என்றான் நின்ற
சீரணி புலவன் குற்றம் யாது எனத் தேராக் கீரன். 2534

சொல் குற்றம் இன்று வேறு பொருள் குற்றம் என்றான் தூய
பொன் குற்ற வேணி அண்ணல் பொருள் குற்றம் என்னை என்றான்
தன் குற்றம் வருவது ஓரான் புனைமல்ர்ச் சார்பால் அன்றி
அல் குற்ற குழற்கு நாற்றம் இல்லையே என்றான் ஐயன். 2535

பங்கய முக மென் கொங்கைப் பதுமினி குழலோ என்ன
அங்கு அதும் அனைத்தே என்றான் ஆலவாய் உடையான் தெய்வ
மங்கையர் குழலோ என்ன அன்னதும் மந்தாரத்தின்
கொங்கலர் அளைந்து நாரும் கொள்கையால் செய்கைத்து என்றான். 2536

பரவி நீ வழிபட்டு ஏத்தும் பரம் சுடர் திருக்காளத்தி
அரவு நீர்ச் சடையார் பாகத்து அமர்ந்த ஞானப் பூங்கோதை
இரவி நீர்ங் குழலும் அற்றோ என அஃதும் அற்றே என்னா
வெருவிலான் சலமே உற்றச் சாதித்தான் விளைவு நோக்கான். 2537

கற்றை வார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான் உம் பரார் பதி போல் ஆகம்
முற்று நீர் கண் ஆனாலும் மொழிந்த நும் பாடல் குற்றம்
குற்றமே என்றான் தன் பால் ஆகிய குற்றம் தேரான். 2538

தேய்ந்த நாள் மதிக் கண்ணியான் நுதல் விழிச் செம் தீப்
பாய்ந்த வெம்மையில் பொறாது பொன் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய் விழுந்து ஆய்ந்தனன் அவனைக்
காய்ந்த நாவலன் இம் எனத் திரு உருக் கரந்தான். 2539

சங்கப் பலகை கொடுத்த படலம் சுபம்

------------------

## 53. கீரனைக் கரையேற்றிய படலம் (2540 -2566 )

மாரனைப் பொடி கண்டவர் அந்தண மைந்தனுக்கு
ஆர நல் கனகக் கிழி ஈந்தது அறைந்தனம்
ஏர் அனத்திரள் சூழ் மலர் ஓடை இடத்தினும்
கீரனைக் கரை ஏற்றிய வாறு கிளத்துவாம். 2540

தாழ்ந்த வேணியன் நெற்றி முளைத்த அழல் கணால்
போழ்ந்த நாவலன் ஆடக பங்கயப் போய்கைவாய்
வீழ்ந்து அரும் படர் வேலையில் வீழ்ந்தனன் விம்முறச்
சூழ்ந்த நாவலர் கண்டு போறாது துளங்குவார். 2541

ஏன்ற வேந்தன் இலாக்குடி ஈட்டமும் மின் கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்ற நானம் இலாதவர் கல்வியும் ஆனதே
சான்ற கீரன் இலாத அவை கூடிய சங்கமே. 2542

ஐய சொல் பொருள் தன் வடிவானவர் ஆலவாய்
மை தழைத்த மிடற்றினார் தம்மொடும் வாது தான்
செய்த இப்பிழையோ பெரிது எப்படி தீருமோ
உய்வது அற்பதமே என யாவரும் உன்னினார். 2543

எய்தி வெள்ளி மலை பெயர்த்தானும் இறுத்த தன்
கையில் வீணைத் தொட்டு இன்னிசை பாடக் கனிந்தவன்
செய்த தீங்கு பொறுத்ததும் அன்றித் திண் தேரோடும்
மொய் கொள் வாளும் கொடுத்தனன் புண்ணிய மூர்த்தியே. 2544

யாவராலும் அகற்ற அரிது இப்பிழை யாவர்க்கும்
தேவர் ஆம் அவரே திரு உள்ளம் திரும்பினால்
போவதே இதுவே துணிபு என்று புகன்று போய்ப்
பாவலோர் பரன் தாள் நிழலில் பணிந்து ஏத்துவார். 2545

திருத்தனே சரணம் சரணம் மறைச் சென்னி மேல்
நிருத்தனே சரணம் சரணம் நிறை வேத நூல்
அருத்தனே சரணம் சரணம் திரு ஆலவாய்
ஒருத்தனே சரணம் சரணங்கள் உனக்கு நாம். 2546

பாயும் மால் விடை மேல் வருவோய் பல் உயிர்க்கு எலாம்

தாயும் தந்தையும் ஆகும் நின் தண் அளி தாமரைக்கு
ஏயும் மாதவன் போல் அல்ல தீய இயற்றினார்க்கு
ஆயும் இன்பமும் துன்பமும் ஆக்குவது ஆதலால். 2547

அத்த கற்ற செருக்கின் அறிவழி கீரனின்
வித்தகக் கவியைப் பழுது என்ற விதண்டையான்
மத்தகக் கண் விழித்து வெதுப்பின் மலர்ந்த பொன்
முத்தகக் கமலத்து இடை வீழ முடுக்கினாய். 2548

இருள் நிறைந்த மிடற்று அடிகேள் இனி இப்பிழை
கருணை செய்து பொறுத்து அருள் என்று கபிலனும்
பரணனும் முதல் ஆகிய பாவலர் யாவரும்
சரணம் என்று விழுந்து இரந்தார் அடி சாரவே. 2549

அக்கீர வேலை ஆலம் அயின்ற எம் கருணை வள்ளல்
இக்கீர மழலைத் தீம் சொல் இறைவியோடு எழுந்து போந்து
நக்கீரன் கிடந்த செம் பொன் இனப் பூந் தடத்து ஞாங்கர்ப்
புக்கீர மதுரத் தீம் சொல் புலவர் தம் குழாத்துள் நின்றான். 2550

அனல் கணான் நோக்கினான் பின் அருள் கணால் நோக்க வாழ்ந்த
புனல் கணே கிடந்த கீரன் பொறி புலன் கரணம் எல்லாம்
கனல் கணார் தமவே யாகக் கருணை மா கடலில் ஆழ்ந்து
வினைக் கணே எடுத்த யாக்கை வேறு இல் அன்பு உருவம் ஆனான். 2551

போதையார் உலகம் ஈன்ற புனிதையார் பரஞானப் பூம்
கோதையார் குழற்குத் தீங்கு கூறிய கொடிய நாவின்
தீதை யார் பொறுப்பரேயோ அவர் அன்றித் திருக்காளத்திக்
காதையார் குழையினாரைக் காளத்தி கயிலை என்னா. 2552

எடுத்த சொல் மாறி மாறி இசைய நேரிசை வெண்பாவால்
தொடுத்த அந்தாதி சாத்தத் துணைச் செவி மடுத்து நேர் வந்து
அடுத்தவன் கையைப் பற்றி அகன் கரை ஏற்றினார் தாள்
கொடுத்து எழு பிறவி வேலைக் கொடுகரை ஏற்ற வல்லார். 2553

கை தந்து கரையேறிட்ட கருணை அம் கடலைத் தாழ்ந்து
மை தந்த கயல் கணாளை வந்தித்துத் தீங்கு நன்கு
செய் தந்தோர்க்கு இகலும் அன்பும் செய்தமை பொருளாச் செய்யுள்
பெய் தந்து பாடுகின்றான் பிரான் அருள் நாடுகின்றான். 2554

அறன் இலான் இழைத்த வேள்வி அழித்த பேர் ஆண்மை
போற்றி
மறன் இலாச் சண்டிக்கு ஈந்த மாண் பெரும் கருணை
போற்றி
கறுவி வீழ் கூற்றைக் காய்ந்த கனைகழல் கமலம்
போற்றி
சிறுவனுக்கு அழியா வாழ் நாள் அளித்து அருள் செய்தி
போற்றி. 2555

சலந்தரன் உடலம் கீண்ட சக்கரப் படையாய் போற்றி
வலம் தரும் அதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய் போற்றி
அலர்ந்த செம் கமலப் புத்தேள் நடுச் சிரம் அரிந்தாய் போற்றி
சிலந்தியை மகுடம் சூட்டி அரசு அருள் செல்வம் போற்றி. 2556

திரிபுரம் பொரிய நக்க சேவகம் போற்றி மூவர்க்கு
அருளிய தலைமை போற்றி அனங்கனை ஆகம் தீய
எரி இடு நயனம் போற்றி இரதி வந்து இரப்ப மீளக்
கரியவன் மகனுக்கு ஆவி உதவிய கருணை போற்றி. 2557

நகைத்தட வந்த வந்த நகுசிரம் திருகி வாங்கிச்
சிகைத்திரு முடிமேல் வைத்த திண் திறல் போற்றி கோயில்
அகத்து அவி சுடரைத் தூண்டும் எலிக்கு அரசாள மூன்று
சகத்தையும் அளித்த தேவர் தம்பிரான் சரணம் போற்றி. 2558

பொருப்பு அகழ்ந்து எடுத்தோன் சென்னி புயம் இற மிதித்தாய் போற்றி
இருக்கு இசைத்து அவனே பாட இரங்கி வாள் கொடுத்தாய் போற்றி
தருக்கொடும் இருவர் தேடக் அழல் பிழம்பு ஆனாய் போற்றி
செருக்கு விட்டு அவரே பூசை செய்ய நேர் நின்றாய் போற்றி. 2559

பரும் கை மால் யானை ஏனம் பாய் புலி அரிமான் மீனம்
இரும் குறள் ஆமை கொண்ட இகல் வலி கடந்தாய் போற்றி
குரங்கு பாம்பு எறும்பு நாரை கோழி ஆண் அலவன் தேரை
கருங்குரீஇ கழுகின் அன்புக்கு இரங்கிய கருணை போற்றி. 2560

சாலநான் இழைத்த தீங்குக்கு என்னையும் தண்டம் செய்த
கோலமே போற்றி பொல்லாக் கொடியனேன் தொடுத்த புன் சொல்
மாலை கேட்டு என்னை ஆண்ட மலைமகள் மணாள போற்றி
ஆலவாய் அடிகள் போற்றி அம்மை நின் அடிகள் போற்றி. 2561

ஆவல் அலந்தனே அடியனேற்கு அருளல் என்னாக்
கோவமும் பிரசாதமும் குறித்து உரை பனுவல்
பா அலங்கலால் பரனையும் பங்கில் அம் கயல் கண்
பூவை தன்னையும் முறை முறை போற்றி என்று ஏத்தா. 2562

தேவ தேவனானப் பின் பெரும் தேவ பாணியொடும்
தாவில் ஏழ் இசை ஏழுகூற்று இருக்கையும் சாத்திப்
பூவர் சேவடி சென்னி மேல் பூப்ப வீழ்ந்து எழுந்தான்
பாவலோர்களும் தனித்தனி துதித்தனர் பணிந்தார். 2563

துதித்த கீரனுக்கு இன்னருள் சுரந்து நீ முன் போல்
மதித்த நாவலர் குழாத்து இடை வதி என மறைநூல்
உதித்த நாவினார் கருணை செய்து உருக்கரந்து அயன் சேய்
விதித்த கோயில் புக்கு அமர்ந்தனர் விளங்கு இழையோடும். 2564

கற்ற கீரனும் கலைஞரும் கழக மண்டபத்தில்
உற்ற ஆடகக் கிழி அறுத்து அந்தணற்கு உதவி
கொற்ற வேந்தனும் வரிசைகள் சில செயக் கொடுப்பித்து
அற்றம் நீங்கிய கல்வியின் செல்வராய் அமர்ந்தார். 2565

சம்பக மாறன் என்னும் தமிழ்நர்தம் பெருமான் கூடல்
அம்பகல் நுதலினானை அங்கயல் கண்ணி னாளை
வம் பக நிறைந்த செந்தா மரை அடி வந்து தாழ்ந்து
நம்பக நிறைந்த அன்பால் பல் பணி நடாத்தி வைகும். 2566

கீரனைக் கரையேற்றிய படலம் சுபம்

------------------------

## 54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் (2567 -2596)

கொன்றை அம் தெரியல் வேய்ந்த கூடல் எம் பெருமான் செம்பொன்
மன்றல் அம் கமலத்து ஆழ்ந்து வழிபடு நாவலோனை
அன்று அகன் கரை ஏறிட்ட அருள் உரை செய்தேம் இப்பால்
தென் தமிழ் அனையான் தேறத் தெருட்டிய திறனும் சொல்வாம். 2567

முன்பு நான் மடக் கூடல் முழு முதல் ஆணையால் போய்
இன்புற அறிஞர் ஈட்டத்து எய்தி ஆங்கு உறையும் கீரன்
வன்புறு கோட்டம் தீர்ந்து மதுரை எம் பெருமான் தாளில்
அன்பு உறு மனத்தன் ஆகி ஆய்ந்து மற்று இதனைச் செய்வான். 2568

கட்டு அவிழ் கடுக்கை அண்ணல் கண்ணினால் அவிந்த காளை
மட்டு அவிழ் மலரோனாலும் மாயவனாலும் காக்கப்
பட்டவன் அல்லன் நல் நுதல் விழிப்படு தீ நம்மைச்
சுட்ட போது உருப்பம் தீர்த்துக் காத்தது இச் சுவணக் கஞ்சம். 2569

இப் பெரும் தடமே எம்மை எம்மையும் காப்பது என்னாக்
கப்பிலா மனத்தான் மூன்று காலமும் மூழ்கி மூழ்கி
அப்பனை ஆலவாய் எம் அடிகளை அடியார் சேம
வைப்பினை இறைஞ்சி நித்தம் வழிபடும் நியமம் பூண்டான். 2570

மையறு மனத்தான் வந்து வழிபடு நியமம் நோக்கிப்
பை அரவாரம் பூண்ட பரஞ்சுடர் மாடக் கூடல்
ஐயனும் அணியன் ஆகி அகம் மகிழ்ந்து அவனுக்கு ஒன்று
செய்ய நல் கருணை பூத்து திரு உளத்து இதனைத் தேர்வான். 2571

இலக்கணம் இவனுக்கு இன்னும் தௌ¤கில இதனால் ஆய்ந்த
நலத்த சொல் வழூச் சொல் என்பது அறிகிலன் அவை தீர் கேள்விப்
புலத்தவர் யாரைக் கொண்டு போதித்து இவனுக்கு என்னா
மலைத் தனு வளைத்த முக்கண் மன்னவன் உன்னும் எல்லை. 2572

பங்கயச் செங்கை கூப்பிப் பாலின் நேர் மொழியாள் சொல்வாள்
அங்கணா அம்கை நெல்லிக் கனி என அனைத்தும் கண்ட
புங்கவா நினது சங்கைக்கு உத்தரம் புகல வல்லார்
எங்குளர் ஏனும் என் நெஞ்சு உதிப்பது ஒன்று இசைப்பேன் ஐயா. 2573

பண்டு ஒரு வைகல் வெள்ளிப் பனிவரை இடத்து உன் பாங்கர்ப்

புண் தவழ் குலிசக் கோமான் பூ மகன் மாயப் புத்தேள்
அண்டரும் சனகன் ஆதி இருந்தவர் பிறரும் ஈண்டிக்
கொண்டனர் இருந்தார் இந்தக் குவலயம் பொறாது மாதோ. 2574

தாழ்ந்தது வடகீழ் எல்லை உயர்ந்தது தென் மேற்கு எல்லை
சூழ்ந்தது கண்டு வானோர் தொழுது உனைப் பரவி ஐய
ஊழ்ந்திடும் அரவம் பூண்டோய் ஒருவன் நின் ஒப்பான் அங்கே
வாழ்ந்திட விடுத்தால் இந்த வையம் நேர் நிற்கும் என்றார். 2575

பைத்தலை புரட்டு முந்நீர்ப் பெளவம் உண்டவனே எம்மை
ஒத்தவன் அனையான் வாழ்க்கைக்கு உரியளாகிய உலோபா
முத்திரை இமவான் பெற்ற முகிழ் முலைக் கொடி ஒப்பாள் என்று
இத்திரு முனியை நோக்கி ஆயிடை விடுத்தாய் அன்றே. 2576

விடை கொடு போவான் ஒன்றை வேண்டினான் ஏகும் தேயம்
தொடை பெறு தமிழ் நாடு என்று சொல்லுப வந்த நாட்டின்
இடை பயில் மனித்தர் எல்லாம் இன் தமிழ் ஆய்ந்து கேள்வி
உடையவர் என்ப கேட்டார்க்கு உத்தரம் உரைத்தல் வேண்டும். 2577

சித்தம் மாசு அகல அந்தச் செம் தமிழ் இயல் நூல் தன்னை
அத்தனே அருளிச் செய்தி என்றனன் அனையான் தேற
வைத்தனை முதல் நூல் தன்னை மற்று அது தெள¤ந்த பின்னும்
நித்தனும் அடியேன் என்று நின் அடி காண்பேன் என்றான். 2578

கடம்பமா வனத்தில் எம்மைக் கண்டனை இறைஞ்சி
உள்ளத்து
திடம் பெற யாது வேட்டாய் அவை எலாம் எம்பால்
பெற்றுத்
திடம் பெற மலயத்து எய்தி இருக்க என விடுத்தாய்
சென்று
குடம் பெறு முனியும் அங்கே இருக்கின்றான்
கொடியினோடும். 2579

இனையது உன் திரு உள்ளத்துக்கு இசைந்ததேல் இவற்குக் கேள்வி
அனைய மாதவனைக் கூவி உணர்த்தென வணங்கு கூற
இனைய நாண் இகழ்ச்சி எல்லா மறந்திடாது இன்று சொன்னாய்
அனையதே செய்தும் என்னா அறிவனை நினைத்தான் ஐயன். 2580

உடைய நாயகன் திருவுளம் உணர்ந்தனன் முடிமேல்
அடைய அஞ்சலி முகிழ்த்தனன் அரும் தவ விமானத்து
இடை புகுந்தனன் பன்னியோடு எழுந்தனன் அகல்வான்
நடையன் ஆகி வந்து அடைந்தனன் நற்றமிழ் முனிவன். 2581

இயங்கு மாதவத் தேரினும் பன்னியோடு இழிந்து
புயங்கன் ஆலயம் புகுந்து நாற்புயம் புடை கிளைத்துத்
தயங்கு செம் பவளா சலம் தன்னையும் அதன்பால்
வயங்கும் இந்திர நீலமால் வரையையும் பணியா. 2582

பெருகும் அன்பு உளம் துளும்ப மெய் ஆனந்தம் பெருக
அருகு இருந்தனன் ஆவயில் கீரனும் அம் பொன்
முருகு அவிழ்ந்த தாமரை படிந்து இறைவனை முன்போல்
உருகு அன்பினால் இறைஞ்சுவான் ஒல்லை வந்து அடைந்தான். 2583

இருந்த மாதவச் செல்வனை எதிர் வர நோக்கி
அருந்த வாவிற்கு இயல் தமிழ் அமைந்தில எம்பால்
தெரிந்த நீ அதை அரி தபத் தெருட்டு எனப் பிணியும்
மருந்தும் ஆகிய பெருந்தகை செய்யவாய் மலர்ந்தான். 2584

வெள்ளை மாமதிப் பிளவு அணி வேணி அம் கருணை
வள்ளலார் பணி சிரத் தினு மனத்தினும் தாங்கிப்
பள்ளம் ஏழையும் பருகினோன் பணியும் நக்கீரன்
உள்ளம் மாசு அற வியாகரணத்தினை உரைக்கும். 2585

இருவகைப் புற உரை தழீஇ எழுமதமொடு நால்
பொருளடும் புணர்ந்து ஐ இரு குற்றமும் போக்கி
ஒரு விலை இரண்டு அழகொடு முத்தி எண் நான்கும்
மருவு ஆதி நூலினைத் தொகை வகை விரி முறையால். 2586

கருத்துக் கண் அழி ஆதிய காண்டிகை யானும்
விருத்தியான் நூல் கிடைப் பொரு துளக்கற விளக்கித்
தெரித்து உரைத்தனன் உரைத்திடு திறம் கண்டு நூலின்
அருத்த மே வடிவு ஆகிய ஆதி ஆசிரியன். 2587

தருக்கு இன்பமும் கருணையுந் தழைய மா தவனைக்
திருக்கரங் களான் மகிழ்ச்சியுள் திளைத்திடத் தடவிப்
பெருக்க வேண்டிய பேறு எலாம் பீடுற நல்கி

இருக்கையில் செல விடுத்தனன் ஆலவாய் இறைவன். 2588

பொன்னாளடும் குறு முனி விடை கொடு போன
பின்னை ஆர் உயிர்க் கிழத்தி தன் பிரானை நேர் நோக்கி
என்னை நீ இவற்கு உணர்த்திடாது இத் தவப் பொதியின்
மன்னனால் உணர்த்தியது என மதுரை நாயகனும். 2589

தன்னை நித்தலும் வழிபடும் தகுதியோர் சாலப்
பொன் அளிப்பவர் தொடுத்த மற்சரம் இலாப் புனிதர்
சொன்னசொல் கடவாதவர் துகள் தவிர் நெஞ்சத்து
இன்னவர்க்கு நூல் கொளுத்துவது அறன் என இசைப்ப. 2590

இவன் மடுத்த மற்சரத்தினால் யாம் உணர்த்தாது அத்
தவனை விட்டு உணர்த்தினம் எனச் சாற்றினான் கேட்டுக்
கவலை விட்டு அக மகிழ்ச்சி கொண்டு இருந்தனள் கதிர் கால்
நவ மணிக்கலம் பூத்தது ஓர் கொடி புரை நங்கை. 2591

கற்ற கீரனும் பின்பு தான் முன் செய்த கவிகண்
முற்றும் ஆய்ந்து சொல் வழுக்களும் வழா நிலை முடிபும்
உற்று நோக்கினான் அறிவின்றி முழுதொரும் உணர்ந்தோன்
சொற்ற பாடலில் பொருள் வழுச் சொல்லினேன் என்னா. 2592

மறையின் அந்தமும் தொடாத தாள் நிலம் தொட வந்த
நிறை பரம் சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன்
சிறிய கேள்வியோர் கழியவும் செருக்கு உடையோர் என்று
அறிஞர் கூறிய பழம் சொல் என் அளவிற்றே அம்ம. 2593

அட்ட மூர்த்தி தன் திருவடிக்கு அடியனேன் பிழைக்கப்
பட்ட தீங்கினால் எனை அவன் நுதல் விழிப் படுதீச்
சுட்டது அன்றி என் நெஞ்சமும் சுடுவதே என்று என்று
உட்டதும்பிய விழுமநோய் உவரியுள் ஆழ்ந்தான். 2594

மகவை ஈன்ற தாய் கைத்திடு மருந்து வாய் மடுத்துப்
பகைபடும் பிணி அகற்றிடும் பான்மைபோல் என்னை
இகல் இழைத்து அறிவுறுத்தினாற்கு ஏழையேன் செய்யத்
தகுவது யாது என வரம்பிலா மகிழ்சியுள் தாழ்ந்தான். 2595

மாதவன் தனக்கு ஆலவாய் மன்னவன் அருளால்

போதகம் செய்த நூலினைப் புலவரே னோர்க்கும்
ஆதரம் செயக் கொளுத்தி இட்டு இருந்தனன் அமலன்
பாத பங்கயம் மூழ்கிய பத்திமைக் கீரன். 2596

கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் சுபம்

---------------------

## 55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம் (2597 -2610 )

காமனைப் பொடியாக் கண்ட கண் நுதல் தென் நூல் கீர
நாம நல் புலவற்கு ஈந்த நலம் இது பொலம் பூம் கொன்றைத்
தாமனச் சங்கத்து உள்ளார் தலை தடுமாற்றம் தேற
ஊமனைக் கொண்டு பாடல் உணர்த்திய ஒழுக்கம் சொல்வாம். 2597

அந்தம் இல் கேள்வி ஓர் எண் அறுவரும் வேறு வேறு
செந்தமிழ் செய்து தம்மில் செருக்குறு பெருமை கூறித்
தந்தமின் மாறாய்த் தத்தந் தராதரம் அளக்க வல்ல
முந்தை நூல் மொழிந்த ஆசான் முன்னர் வந்து எய்தினாரே. 2598

தொழுதனர் அடிகள் யாங்கள் தொடுத்த இப் பாடல் தம் முள்
விழுமிதும் தீதும் தூக்கி வேறுபாடு அளந்து காட்டிப்
பழுதறுத்து ஐயம் தீரப் பணிக்க எனப் பணிந்தார் கேட்டு
முழுது ஒருங்கு உணர்ந்த வேத முதல்வனாம் முக்கண் மூர்த்தி. 2599

இருவரும் துருவ நீண்ட எரி அழல் தூணில் தோன்றும்
உரு என அறிவான் அந்த உண்மையால் உலகுக்கு எல்லாம்
கரு என முளைத்த மூல இலிங்கத் துணின்றும் காண்டற்கு
அரிய தோர் புலவனாகித் தோன்றி ஒன்று அருளிச் செய்வான். 2600

இம் மா நகர் உள்ளான் ஒரு வணிகன் தனபதி என்று
அம் மா நிதிக் கிழவோன் மனை குண சாலினி அனையார்
தம் மாதவப் பொருட்டால் வெளிற்று அறிவாளரைத் தழுவும்
பொய் மாசு அறவினன் போல அவதரித்தான் ஒரு புத்தேள். 2601

ஓயா விறல் மதனுக்கு இணை ஒப்பான் அவன் ஊமச்
சேய் ஆம் அவன் இடை நீர் உரை செய்யுள் கவி எல்லாம்
போய் ஆடுமின் அனையானது புந்திக்கு இசைந்தால் நன்று
யாவரும் மதிக்கும் தமிழ் அதுவே என அறைந்தான். 2602

வன் தாள் மழ விடையாய் அவன் மணி வாணிகன் ஊமன்
என்றால் அவன் கேட்டு எங்கன் இப்பாடலின் கிடக்கும்
நன்று ஆனவும் தீது ஆனவும் நயந்து ஆய்ந்து அதன் தன்மை
குன்றா வகை அறைவான் என மன்று ஆடிய கூத்தன். 2603

மல்லார் தடம் புய வாணிக மைந்த தனக்கு இசையக்
சொல் ஆழமும் பொருள் ஆழமும் கண்டான் முடி துளக்காக்
கல்லார் புயம் புளகித்து உளம் தூங்குவன் கலகம்
எல்லாம் அகன்றிடும் உங்களுக்கு என்று ஆலயம் சென்றான். 2604

பின் பாவலர் எலாம் பெரு வணிகக் குல மணியை
அன்பால் அழைத்து ஏகித் தமது அவையத்து இடை இருந்தா
நன் பால் மலர் நறும் சாந்து கொண்டு அருச்சித்தனார் நயந்தே
முன்பால் இருந்து அரும் தீம் தமிழ் மொழிந்தார் அவை கேளா. 2605

மகிழ்ந்தான் சிலர் சொல் ஆட்சியை மகிழ்ந்தான் சிலர்
பொருளை
இகழ்ந்தான் சிலர் சொல் வைப்பினை இகழ்ந்தான் சிலர்
பொருளைப்
புகழ்ந்தான் சிலர் சொல் இன்பமும் பொருள் இன்பமும்
ஒருங்கே
திகழ்ந்தான் சிலர் சொல் திண்மையும் பொருள் திண்மையும்
தேர்ந்தே. 2606

இத் தன்மையன் ஆகிக் கலை வல்லோர் தமிழ் எல்லாம்
சித்தம் கொடு தெருட்டும் சிறு வணிகன் தெருள் கீரன்
முத் தண் தமிழ் கபிலன் தமிழ் பரணன் தமிழ் மூன்றும்
அத் தன் மையன் அறியும் தொறும் அறியும் தொறும் எல்லாம். 2607

நுழைந்தான் பொருள் தொறும் சொல் தொறும் நுண் தீம்
சுவை உண்டே
தழைந்தான் உடல் புலன் ஐந்தினும் தனித்தான் சிரம்
பனித்தான்
குழைந்தான் விழிவிழி வேலையுள் குளித்தான் தனை
அளித்தான்
விழைந்தான் புரி தவப் பேற்றினை விளைத்தான் களி
திளைத்தான். 2608

பல் காசொடு கடலில் படு பவளம் சுடர் தரளம்
எல்லாம் நிறுத்து அளப்பான் என இயல் வணிகக் குமரன்
சொல் ஆழமும் பொருள் ஆழமும் துலை நா எனத் தூக்க
நல்லாறு அறி புலவோர்களும் நட்டார் இகல் விட்டார். 2609

உலகினுட் பெருகி அந்த ஒண் தமிழ் மூன்றும் பாடல்
திலகமாய்ச் சிறந்த வாய்ந்த தெய்வ நாவலரும் தங்கள்
கலகமா நவையில் தீர்ந்து காசு அறு பனுவல் ஆய்ந்து
புலம் மிகு கோட்டி செய்து பொலிந்தனர் இருந்தார் போலும். 2610

கத்தார் கலகம் தீர்த்த படலம் சுபம்

---------------------

## 56. இடைக் காடன் பிணக்குத் தீர்த்த படலம் (2611-2648 )

குடைக்காடன் பசிக்கு அன்னக் குழி அருத்தி வேட்கை
அறக் கொடுத்த கங்கைச்
சடைக் காடன் புலவர் இகம் தணிவித்த முறை இது மேல்
தன்னைப் பாடும்
தொடைக் காடன் பகன் திகழ்ந்த தென்னவனை முனிந்து
தன்னைத் தொழுது போன
இடைக் காடன் உடன் போய்ப் பின்பு எழுந்து அருளிப்
பிணக்கு அறுத்த இயல்பு சொல்வாம். 2611

இந்திரன் தன் பழி துரத்தி அரசு அளித்துப் பின்பு கதி
இன்பம் ஈந்த
சுந்தரன் பொன் அடிக்கு அன்பு தொடுத்து நறும்
சண்பகத்தார் தொடுத்துச் சாத்தி
வந்தனை செய் திருத்தொண்டின் வழிக்கு ஏற்பச் சண்பகப்
பூமாற வேந்தன்
அந்தர சூட மணியாம் சிவ புரத்து நிறை செல்வம்
அடைந்தான் இப்பால். 2612

ஆற்றல் மிகு பிரதப சூரியன் வங்கிசத்துவன் அளவு இல்
சீர்த்தி
சாற்ற அரிய இரிபும மருத்தனன் சோழ வங்கி சாந்தகன்
தான் வென்றி
மாற்ற அரிய புகழ்ச் சேர வங்கி சாந்தகன் பாண்டி வங்கி
கேசன்

தோற்றம் உறு பரித்தேர் வங்கிச் சிரோமணி பாண்டீச் சுரன்
தான் மன்னோ. 2613

துணிவுடைய குலத்துவசன் வங்கிச பூடண மாறன்
சோம சூடா
மணிகுல சூடா மணியே இராச சூடா மணியே மாற்றார்
போற்றிப்
பணிய வரும் பூப சூடா மணியே குலேச பாண்டியனே
என்னக்
கணிதம் உறு பதினைவர் வழி வழி வந்து உதித்து நிலம்
காவல் பூண்டோர். 2614

அத்தகைய பாண்டியருள் குலேச பாண்டியன் என்னும்
அரசன் தோள் மேல்
வைத்தவன் இத்தலம் புரபோன் இலக்கணமும் இலக்கியமும்
வரம்பு கண்டோன்
எத்தகைய பெருநூலும் எல்லை கண்டோன் ஆதலினால்
இவனுக்கு ஏற
முத்தமிழோர் பயில் சங்கம் இடங்கொடுத்தது அனைய மணி
முழவுத் தோளான். 2615

கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது
உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்
காட்டுப் புலவன் தென் சொல்
மொழிந்து அரசன் தனைக் காண்டும் எனத் தொடுத்த
பனுவலோடு மூரித் தீம் தேன்
வழிந்து ஒழுகு தாரனைக் கண்டு தொடுத்து உரைப்
பனுவல் வாசித்தான் ஆல். 2616

வழுக்காத சொல் சுவையும் பொருள் சுவையும் பகிர்ந்து
அருந்த வல்லோன் உள்ளத்து
அழுக்காற்றால் சிரம் துளக்கான் அகம் மகிழ்ச்சி சிறிது
முகத்து அலர்ந்து காட்டான்
எழுக்காயும் திணி தோளான் ஒன்றும் உரையான் வாளா
இருந்தான் ஆய்ந்த
குழுக்காதன் நண்புடையான் தனை மானம் புறம் தள்ளக்
கோயில் புக்கான். 2617

சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே

தன்னைச் சார்ந்தோர்
நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார்
வேம்பன்
பொன் நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன்
என்று புகலக் கேட்டுச்
சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தான் சிறிது
முடி துளக்கான் ஆகி. 2618

பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க்கு அகம்
மகிழ்ந்தோர் பயனும் நல்கா
விரிவாய தடம் கடலே நெடும் கழியே அடும் கான
விலங்கே புள்ளே
பொரிவாய பராரை மரநிரையே வான் தொடு குடுமிப்
பொருப்பே வெம்பும்
எரிவாய கொடும் சுரமே என இவற்று ஓர் அஃறிணை
ஒத்து இருந்தான் எந்தாய். 2619

என்னை இகழ்தனனோ சொல் வடிவாய் நின்னிடம் பிரியா
இமையப் பாவை
தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன்
என் தனக்கு ஆகியது என்னா
முன்னை மொழிந்து இடைக் காடன் தணியாத முனி ஈர்ப்ப
முந்திச் சென்றான்
அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப
அருளின் மூர்த்தி. 2620

போன இடைக் காடனுக்கும் கபிலனுக்கும் அகத்து உவகை
பொலியும் ஆற்றான்
ஞான மயம் ஆகிய தன் இலிங்க உரு மறைத்து உமையா
நங்கை யோடும்
வானவர் தம் பிரான் எழுந்து புறம் போய் தன் கோயிலின்
நேர் வடபால் வைகை
ஆன நதித் தென்பால் ஓர் ஆலம் கண்டு அங்கண் இனிது
அமர்ந்தான் மன்னோ. 2621

சங்கவான் தமிழ்த் தெய்வப் புலவரோடும் உடன் எழுந்து
சைல வேந்தன்
மங்கை நாயகன் போன வழிபோய் அங்கு இருந்தார் அவ்
வழி நாள் வைகல்
கங்குல்வாய் புலரவரும் வை கறையில் பள்ளி உணர்
காலாத்து எய்தி

அங்கண் நாயகன் அடியார் சேவிப்பார் இலிங்க உரு
அங்குக் காணார். 2622

என்ன அதிசயமோ ஈது என்று அயிர்த்தார் இரங்கினார்
இதனை ஓடி
மன்னவனுக்கு அறிவிப்பான் வேண்டும் எனப் புறப்பட்டு
வருவார் ஆவி
அன்னவரைப் பிரிந்து உறையும் அணங்கு அனையார்
எனவும் மலர் அணங்கு நீத்த
பொன் அவிர் தாமரை எனவும் புலம்பு அடைந்து பொலிவு
அழிந்த புரமும் கண்டார். 2623

அரசன் இடை புகுந்து உள்ளம் நடு நடுங்கி நா உணங்கி
அரசே யாம் ஒன்று
உரை செய அஞ்சுதும் உங்கள் நாயகனைத் திருப்பள்ளி
உணர்ச்சி நோக்கி
மரை மலர் சேவடி பணியப் புகுந்தனம் இன்று ஆங்கு
அவன் தன் வடிவம் காணேம்
புரமும் நனி புலம் படைந்தது என்று அழல் வேல் எனச்
செவியில் புகுதலோடும். 2624

வழுதி அரியணையிலிருந்து அடி இற வீழ் பழுமரம் போல்
மண்மேல் யாக்கை
பழுது உற வீழ்ந்து உயிர் ஒடுங்க அறிவு ஓடுங்கி மண்
பாவை படிந்து ஆங்கு ஒல்லைப்
பொழு கிடந்து அறிவு சிறிது இயங்க எழுந்து அஞ்சலிக்
கைப் போது கூப்பி
அழுது இரு கண்ணீர் வெள்ளத்து ஆழ்ந்து அடியேன் என்
பிழைத்தேன் அண்ணா அண்ணால். 2625

கொலையினை ஓர் அவுணர் புரம் நோடி வரையில்
பொடியாகக் குனித்த மேருச்
சிலையினையோ பழைய சிவ புரத்தினையோ அருவி மணி
தெறிக்கும் வெள்ளி
மலையினையோ தம்மை மறந்து உனை நினைப்பார்
மனத்தினையோ வாழ்த்தும் வேதத்
தலையினையோ எங்கு உற்றாய் எங்கு உற்றாய் என்று
என்று தளரும் எல்லை. 2626

சிலர் வந்து மன்னா ஓர் அதிசயம் கண்டனம் வைகைத்

தென் சாராக
அலர் வந்தோன் படைத்த நாள் முதல் ஒரு காலமும்
கண்டது அன்று கேள்வித்
தலை வந்த புலவரொடு ஆலவய் உடைய பிரான் தானே
செம்பொன்
மலைவந்த வல்லியொடும் வந்து இறை கொண்டு உறை
கின்றான் மாதோ என்றார். 2627

அவ்வுரை தன் செவி நுழைந்து புகுந்து ஈர்ப்ப எழுந்து
அரசன் அச்சத்து ஆழ்ந்து
தெவ்வர் முடித் தொகை இடறும் கழல் காலான் அடந்து
ஏகிச் செழுநீர் வைகை
கௌவை நெடும் திரைக் கரத்தால் கடிமலர் தூய உய்ப்ப
பணியத் தென் கரைமேல் வந்து
மௌவல் இள முகை மூரல் மாதி னொடும் இருக்கின்ற
மணியைக் கண்டான். 2628

படர்ந்து பணிந்து அன்பு உகுக்கும் கண்ணீர் சோர்ந்து
ஆனந்தப் பௌவத்து ஆழ்ந்து
கிடந்து எழுந்து நாக்குழறித் தடுமாறி நின்று இதனைக்
கிளக்கும் வேதம்
தொடர்ந்து அறியா அடி சிவப்ப நகர்ப் புலம்ப உலகு
ஈன்ற தோகை யோடு இங்கு
அடைந்து அருளும் காரணம் என் அடியேனால் பிழை
உளதோ ஐயா ஐயா. 2629

அல்லதை என்று அமரால் என் பகைஞரால் கள்வரால்
அரிய கானத்து
எல்லை விலங்கு ஆதிகளால் இடையூறு இன் தமிழ்
நாட்டில் எய்திற்றலோ
தொல்லை மறையவர் ஒழுக்கம் குன்றினரோ தவம்
தருமம் சுருங்கிற்றாலோ
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன்
எந்தாய் எந்தாய். 2630

கள் ஏறு கடுக்கை நறும் சடையானே போற்றி பெரும்
கருணை போற்றி
வெள்ஏறு கொடி உயர்த்த விடையானே போற்றி அருள்
விகிர்தா போற்றி
புள் ஏறு கொடி உயர்த்த புனிதன் அயன் அன்று தேறாத
புனிதா போற்றி

வள் ஏறு சிறு குழவி மதி நுதல் அம் கயல் கண்ணி
மணாள போற்றி. 2631

பாத மலர் இணை போற்றி பன்னிரண்டு கையானைப்
பயந்தாய் போற்றி
வேத முடி கடந்த பர ஞானத்தில் ஆனந்த விளைவே
போற்றி
போத வடிவாய் நால்வர்க்கு அசைவிறந்து நிறைந்த பரம்
பொருளே போற்றி
மாதவள நீறு அணிந்த மன்னா அம் கயல் கண்ணி
மணாள போற்றி. 2632

பொக்கம் உடையார் செய்யும் பூசை தவம் கண்டு நகும்
புராண போற்றி
தக்கன் மகம் பொடி ஆகத் திருப் புருவம் நெரித்த
கொடும் தழலே போற்றி
செக்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத் திகிரி அருள்
செல்வா போற்றி
மைக் குவளை அனைய மணிகண்ட அம் கயல் கண்ணி
மணாள போற்றி. 2633

தென்னவன் இன்ன வண்ணம் ஏத்தினான் செம் பொன் கூடல்
மன்னவன் கேட்டா ஆகாய வாணியால் வைகை நாட
உன்னது சோத்த நாம் கேட்டு உவந்தனம் இனிய தாயிற்று
இன்னம் ஒன்று உளது கேட்டி என்றனன் அருளிச் செய்வான். 2634

இயம்ப அரும் பதிகள் தம்முள் ஆலவாய் ஏற்றம் ஈங்குச்
சயம்புவாய் அனந்தம் உள்ள தானவர் இயக்கர் சித்தர்
வயம் புரி அரக்கர் வானோர் முனிவரர் மனிதர் உள்ளார்
நயம் பெற விதியால் கண்ட நம் குறி அனந்தம் உண்டு ஆல். 2635

அக் குறிகளின் மேம் பட்ட குறி அறுபத்து நான்காம்
இக் குறிகளின் மேம் பட்ட குறிகள் எட்டு இனைய எட்டுத்
திக்கு உறை வானோர் பூசை செய்தன அவற்றில் யாம் வந்து
புக்கு உறை குறி நம் தோழன் பூசித்த குறிய தாகும். 2636

அறைந்தவித் தெய்வத்து ஆன அனைத்தும் ஓர் ஊழிக் காலத்து
இறந்த நம் தோழன் கண்ட இலிங்கமாம் அதனால் இங்கே
உறைந்தனம் உறைதலாலே உத்தர ஆலவாய் ஆய்ச்

சிறந்திடத் தகுவது இன்று முதல் இந்தத் தெய்வத் தானம். 2637

ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போ தேனும்
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா. 2638

பெண்ணினைப் பாகம் கொண்ட பெரும் தகைப் பரம யோகி
விண் இடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான்இறைஞ்சி னானே. 2639

அடி பணிந்து ஏத்தினானை அருள் சுரந்து அசையு மின்னுக்
கொடி அணி மனையில் போக்கிக் கோமன வல்லியோடும்
உடன் உறை புலவரோடு ஒல்லை தன் கோயில் புக்கான்
வட திரு ஆல வாயில் வந்து வீற்று இருந்த வள்ளல். 2640

மின் மதிச் சடையினான்பின் அடைந்து போய் விடை கொண்டு ஏகும்
மன்னவன் தன்னைப் பாடி வந்தவன் தன்னை மாட்சித்
தன்மை சால் சங்க வாணர் தம் மொடும் கொடுபோய் என்றும்
பொன்மகள் காணி கொண்ட புரிசை சூழ் கோயில் புக்கான். 2641

விதி முறை கதலி பூகம் கவரி வால் விதானம் தீபம்
புதிய தார் நிறை நீர்க் கும்பம் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம் பொன் சேக்கை மேல் கற்றோர் சூழ
மதி புனை காடன் தன்னை மங்கல அணி செய்து ஏற்றி. 2642

சிங்கமான் சுமந்த பொன் அம் சேக்கை மேல் இருந்து வெள்ளைக்
கொங்கு அவிழ் தாமம் தூசு குளிர் மணி ஆரம் தாங்கி
மங்கல முழவம் ஆர்ப்ப மறையவர் ஆக்கம் கூற
நங்கையர் பல்லாண்டு ஏத்த நல் மொழிப் பனுவல் கேட்டு. 2643

அறிவுடைக் காடனுக்கும் அருமை மாண் புலமை யோர்க்கும்
முறைமையால் ஆரம் தூசு முகிழ் முலைக் கொடியின் அன்னார்
நிறை நிதி வேழம் பாய்மான் விளை நிலம் நிரம்ப நல்கி
அறை கழல் காலில் பின்னே ஏழடி நடந்து இதனை வேண்டும். 2644

புண்ணியப் புலவீர் யான் இப்போது இடைக் காடனார்க்குப்

பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க என பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா. 2645

இன்னமும் ஆலவாய் எம் இறைவன் கருணை நோக்கால்
பன்னரும் புகழ்மை குன்றாப் பாக்கியம் உனக்கு உண்டாக
என்ன நல் வாக்கம் கூறி ஏகினார் ஆக அந்தத்
தென்னவன் குலேசன் செய்த தவம் உருத் திரிந்தால் என்ன. 2646

எரி மருத்து அவனி முன்னா எண் வகை மூர்த்தி அன்பு
புரி மருத்துவனைச் சூழ்ந்த பொரு பழி துடைத்தோன் சோதி
விரிமருத்து உடல் வான் திங்கள் மிலைந்தவன் அருளின் வந்தான்
அரி மருத்தனன் ஆம் தென்னன் அரிக் குருளை அன்னான். 2647

பரிசிலைப் புலவருக்கு அருள் குலேசன் பல பகல் கழீஇத்
திரி மருப்பு இரலை வெம் மழு எடுத்தவன் மதிச்
சென்னிமேல்
வரிசிலைப் படை பொறித்தவன் எனப் பெறு வர
மைந்தனாம்
அரி மருத் தனன் இடத்து அவனி வைத்து அரன் அடி
எய்தினான். 2648

இடைக் காடன் பிணக்குத் தீர்த்த படலம் சுபம்

------------------

## 57. வலை வீசின படலம் (2649 -2712 )

மின் திரித்து அன்ன வேணி வேதியன் இடைக்காடன் பின்
சென்று மீண்டனை யான் கொண்ட பிணக்கினைத் தீர்த்த வண்ணம்
இன்று உரை செய்து முந்நீர் எறிவலை வீசி ஞாழன்
மன்றல் அம் குழலினாளை மணந்து மீள் வண்ணம் சொல்வாம். 2649

அந்தம் இல் அழகன் கூடல் ஆலவாய் அமர்ந்த நீல
சுந்தரன் உலகம் ஈன்ற கன்னிஅம் கயல் கண்ணாள் ஆம்
கொந்து அவிழ் அலங்கல் கூந்தல் கொடிக்கு வேறு இடத்து வைகி
மந்தணம் ஆன வேத மறைப் பொருள் உணர்த்தும் மாதோ. 2650

நாதனின் அருளால் கூறு நான் மறைப் பொருளை எல்லாம்

யாது காரணத்தான் மன்னோ அறிகிலை எம் பிராட்டி
ஆதரம் அடைந்தாள் போலக் கவலையும் சிறிது தோன்ற
ஆதரம் இலள் ஆய்க் கேட்டாள் அஃது அறிந்த அமலச் சோதி. 2651

அரா முகம் அனைய அல்குல் அணங்கினை நோக்கி ஏனை
இரா முகம் அனைய உள்ளத்து ஏழைமார் போல எம்பால்
பரா முகை ஆகி வேதப் பயன் ஒருப் படாது கேட்டாய்
குரா முகை அவிழ்ந்த கோதாய் உற்ற இக்குற்றம் தன்னால். 2652

விரதமும் அறனும் இன்றி மீன் படுத்து இழிஞர் ஆன
பரதவர் மகளா கென்று பணித்தனன் பணித்தலோடும்
அரதன ஆரம்தாழ்ந்த வார மென் முலையாள் அஞ்சி
வரத நிற் பிரிந்து வாழ வல்லனோ என்று தாழ்ந்தாள். 2653

வீங்கு நீர்ச் சடையான் நீங்கு மெல்லியல் பரிவு நோக்கி
வாங்கு நீர்க் கானல் வாழ்க்கை வலைஞர் கோன் மகளாய்வைகி
ஆங்கு நீர் வளர் நாள் யாம் போந்து அரும் கதி முடித்தும் என்னாத்
தேங்கு நீர் அமுது அன்னாளைச் செல விடுத்து இருந்தான் இப்பால். 2654

அன்னது தெரிந்து நால்வாய் ஐங்கரக் கடவுள் தாதை
முன்னர் வந்து இதனால் அன்றோ மூண்டது இச் செய்தி எல்லாம்
என்ன ஈர்ங் கவளம் போல் ஆங்கு இருந்த புத்தகங்கள் எல்லாம்
தன் நெடும் கரத்தால் வாரி எறிந்தனன் சலதி மீது ஆல். 2655

வரை பக எறிந்த கூர்வேல் மைந்தனும் தந்தை கையில்
உரை பெறு போத நுலை ஒல் எனப் பறித்து வல்லே
திரை புக எறிந்தான் ஆகச் செல்வ நான் மாடக் கூடல்
நரை விடை உடைய நாதன் நந்தியை வெகுண்டு நோக்கா. 2656

அடுத்து நாம் இருக்கும் செவ்வி அறிந்திடாது இவரை வாயில்
விடுத்து நீ இருந்தாய் தீங்கு விளைந்தது உன் தனக்கும் இந்தத்
தொடுத்த தீங்கு ஒழிய இன்று ஓர் சுற உரு ஆகி வையம்
உடுத்த காரோத நீர் புக்கு உழல்க எனப் பணித்தான் மன்னோ. 2657

வெரு வரு செலவின் வேழ முகத்தனை விதித்த சாபப்

பெருவலி தன்னைச் சாரும் பெற்றியால் சாபம் கூறான்
அருவரை நெஞ்சு போழ்ந்த வள் இலை வடிவேல் செம் கை
முருகனை வணிகர் தம்மின் மூங்கை யாகு என்றன் இப்பால். 2658

நாயகன் ஏவலாலே நாயகி வலைஞர் மாதர்
ஆயது நந்திப் புத்தேள் அடுசுற ஆகி முந்நீர்
மேயதும் கருணை வள்ளல் மீன் படுத்து அணங்கை வேட்டுப்
போயதும் அவட்குக் கேள்வி புகன்றது முறையில் சொல்வாம். 2659

சூழும் வார் திரை வையை அம் துறை கெழு நாட்டுள்
கீழையார் கலி முகத்தது நெய்தல் அம் கீழ் நீர்
ஆழ நீள் கரும் கழி அகழ் வளைந்து கார் அளைந்த
தாழை மூது எயில் உடுத்தது ஓர் தண் துறைப் பாக்கம். 2660

முடங்கு முள் இலையார் புதைந்து எதிர் எதிர் மொய்த்து
நுடங்கு கைதை போதொடு வளி நூக்க நின்று அசைவ
மடங்கு மெய்யராய்க் கையிரும் கேட்க வட்டத்து
அடங்கி வாள் பனித்து ஆடம் அரற்றுவார் அனைய. 2661

புலவு மீன் உணக்கு ஓசையும் புட்கள் ஓப்பு இசையும்
விலை பகர்ந்திடும் அமலையும் மீன் கொள் கம்பலையும்
வலை எறிந்திடும் அரவமும் வாங்கும் மா அரவமும்
அலை எறிந்திடும் பரவை வாய் அடைப்பன மாதோ. 2662

வாட்டு நுண் இடை நுளைச்சியர் வண்டல் அம் பாவைக்
கூட்டுகின்ற சோறு அருகு இருந்து உடைந்த பூம் கைதை
பூட்டுகின்றன நித்திலம் பொரு கடல் தரங்கம்
சூட்டுகின்றன கடிமலர் சூழல் சூழ் ஞாழல். 2663

நிறைந்த தெண் கடல் ஆதி நீள் நெறி இடைச் செல்வோர்க்கு
அறம் தெரிந்த போல் பொதிந்த சோறு அவிழ்ப்பன தாழை
சிறந்த முத்தொடு பசும் பொனும் பவளமும் திரட்டிப்
புறம் தெரிந்திடக் கொடுப்பன மலர்ந்த பூம் புன்னை. 2664

கொன்று மீன் பகர் பரதவர் குரம்பைகள் தோறும்
சென்று தாவி மேல் படர்வன திரை படு பவளம்
மன்றல் வார் குழல் நுளைச்சியர் மனையின் மீன் உணக்கும்
முன்றில் சீப்பன கடல் இடு முழு மணிக் குப்பை. 2665

கூற்றம் போன்ற கண் நுளைச்சியர் குமுத வாய் திறந்து
மாற்றம் போக்கினர் பகர் தரும் கயற்கு நேர் மாறாம்
தோற்றம் போக்கு அவர் விழித் துணைகள் அக் கயல்மீன்
நாற்றம் போக்குவது அவர் குழல் நறு மலர்க் கைதை. 2666

அலர்ந்த வெண் திரைக் கருங் கழிக் கிடங்கரின் அரும்பர்
குலைந்து அழிந்து தேன் துளும்பிய குமுதமே அல்ல
கலந்து அரும் கடல் எறி கருங்கால் பனம் கள்வாய்
மலர்ந்து அருந்திய குமுதம் மொய்ப்பன வண்டு. 2667

ஆய பட்டினத்து ஒருவன் மேல் ஆற்றிய தவத்தால்
தூய வானவர் தம்மினும் தூயனாய்ச் சிறிது
தீய தீவினைச் செய்தியால் ஆற்றி திண் திமில் வாணர்
மேய சாதியில் பிறந்துளான் மேம்படும் அனையான். 2668

செடிய கார் உடல் பரதவர் திண் திமில் நடத்தா
நெடிய ஆழியில் படுத்த மீன் திறை கொடு நிறைக்கும்
கடிய வாயிலோன் அவர்க்கு எலாம் காவலோன் ஏற்றுக்
கொடிய வானவன் அடிக்கு மெய் அன்பு சால் குணத்தோன். 2669

மகவு இலாமையல் ஆற்ற நால் மறுமை யோடு இம்மைப்
புகல் இலான் என வருந்துவான் ஒரு பகல் போது
தகவு சால் பெரும் கிளை யொடும் சலதி மீன் படுப்பான்
அகல வார் கலிக்கு ஏகுவான் அதன் கரை ஒருசார். 2670

தக்க மேரு மலைமகனோடு அடையில் தவத்தான்
மிக்க மீனவன் வேள்வியில் விரும்பிய மகவாய்ப்
புக்க நாயகி தன்பதி ஆணையால் புலவு
தொக்க மீன் விலை வலைஞன் மேல் தவப் பயன் துரப்ப. 2671

இச்சையால் அவன் அன்பினுக்கு இரங்குவாள் போலச்
செச்சை வாய் திறந்து அழுது ஒரு திரு மகவு ஆகி
நெய்ச்ச பாசிலைப் புன்னை நல் நீழலில் கிடந்தாள்
மைச்ச கார் உடல் கொடும் தொழில் வலைஞர் கோன் கண்டான். 2672

கார் கொல் நீர்த் திருமாது கொல் கரந்து நீர் உறையும்
வார் கொள் பூண் முலை மடந்தை கொல் வனத் துறை வாழ்க்கைத்

தார் கொள் பூம் குழல் அணங்கு கொல் தடங்கணும் இமைப்ப
ஆர் கொலோ மகவு ஆகி ஈண்டு இருந்தனள் என்னா. 2673

பிள்ளை இன்மை யெற்கு இரங்கி எம் பிரான் தமிழ்க் கூடல்
வள்ளல் நல்கிய மகவு இதுவே என வலத்தோள்
துள்ள அன்பு கூர் தொடுத்து திருத் தோள் உறப் புல்லித்
தள்ளரும் தகைக் கற்பினாள் தனது கைக் கொடுத்தான். 2674

பிறவி அந்தகன் தெரிந்து கண் பெற்றெனக் கழிந்த
வறியன் நீள் நிதி பெற்றென வாங்கினாள் வலைஞர்
எறியும் வேலையின் ஆர்த்தனர் கை எறிந்து இரட்டிக்
குறிய வாள் நகை வலைச்சியர் குழறினார் குரவை. 2675

பிழை இல் கற்பு உடை மனைவியும் பெறாது பெற்று எடுத்த
குழவியைத்தடம் கொங்கையும் கண்களும் குளிரத்
தழுவி முத்தம் இட்டு உச்சி மோந்து அன்பு உளம் ததும்ப
அழகிது ஆகிய மணி விளக்காம் என வளர்ப்பாள். 2676

புலவு மீன் விலைப் பசும் பொனால் செய்த பல் பூணும்
இலகு ஆரமும் பாசியும் காசி இடை இட்டுக்
குலவு கோவையும் சங்கமும் குலத்தினுக்கு இசைய
அலகு இலாதபேர் அழகினுக்கு அழகு செய்து அணிந்தாள். 2677

தொண்டை வாய் வலைச் சிறுமியர் தொகையொடும் துறை போய்
வண்டல் ஆடியும் நித்தில மாமணி கொழித்தும்
கண்டன் ஞாழல் சூழ் கானல் அம் கடி மலர் கொய்தும்
கொண்டல் ஓதி பின் தாழ்தரக் குரை கடல் குளித்தும். 2678

தளர்ந்த பைங்கொடி மருங்குலும் தன் உயிர்த் தலைவன்
அளந்த வைகலும் குறை பட அவனிடத்து ஆர்வம்
கிளர்ந்த அன்பு ஒண் கொங்கையும் கிளர நாள் சிறிதில்
வளர்ந்து வைகினாள் வைகளும் உயிர் எலாம் வளர்ப்பாள். 2679

ஆலவாய் உடை நாயகன் ஏவிய வாறே
மாலை தாழ் இள மதிச் சடை மகுடமும் கரங்கள்
நாலும் ஆகிய வடிவு உடை நந்தியும் சுறவக்
கோலம் ஆகி வெண் திரைக் கடல் குளித்து இருந்தான். 2680

குன்று எறிந்த வேல் குழகனும் கரி முகக் கோவும்
அன்று எறிந்த தந்திரம் எலாம் சிரமிசை அடக்காக்
கன்று எறிந்தவன் அறிவரும் கழல் மனத்து அடக்கா
நின்று எறிந்த கல் மத்து என உழக்கிடா நிற்கும். 2681

கிட்டும் தோணியைப் படகினைக் கிழிபட விசை போய்த்
தட்டும் சோங்கினை மேலிடு சரக் கொடும் கவிழ
முட்டும் சீறி மேல் வரும் பல சுற வெலாம் முடுக்கி
வெட்டும் கோடு கோத்து ஏனைய மீன் எலாம் வீசும். 2682

தரங்க வாரி நீர் கலக்கலால் தந்திரம் கொடு மேல்
இரங்குவான் புலவோர்க்கு அமுது ஈகையால் எண்ணார்
புரங்கண் மூன்றையும் பொடித்தவன் ஆணையால் புனலில்
கரங்கள் நான்கையும் கரந்த மீன் மந்தரம் கடுக்கும். 2683

தள்ளு நீர்த்திரை போய் நுளைச் சேரிகள் சாய்ப்பத்
துள்ளு நீர் குடித்து எழு மழை சூல் இறப் பாயும்
முள்ளு நீர் மருப்பு உடைய மீன் மொய் கலம் அந்தத்
தெள்ளு நீர்த் துறை நடையற இன்னணம் திரியும். 2684

எற்றித்தால் எனத் துறை மகன் யாம் இது பிடிக்கும்
பெற்றி யாது எனக் கிளையொடும் பெருவலைப் பாசம்
பற்றி ஆழி ஊர் படகு கைத் தெறிந்தனன் படகைச்
சுற்றி வாய் கிழித்து எயிற்று இறப் பாய்ந்தது சுறவம். 2685

பட உடைப்ப ஓர் தோணி மேல் பாய்ந்து அத் தோணி
விடவுறத் தெறித்து எறிந்திட விசைத்து ஒரு சோங்கின்
இடை புகுந்து நீள் வலை எறிந்து இங்ஙனம் வெவ்வேறு
உடல் புகுந்து உழல் உயிர் எனப் பரதனும் உழல்வான். 2686

முன்னர் வீசினால் பின்னுற முளைத்து எழும் முயன்று
பின்னர் வீசினால் முன்னுற பெயர்த்து எழும் வலத்தில்
உன்னி வீசினால் இடம் பட உருத்து எழும் இடத்தின்
மன்னி வீசினால் வலத்து எழும் மகர வேறது தான். 2687

எறி வலைப் படு அகம் மலர்ந்து ஈர்ப்பவன் உள்ளம்
மறு தலைப் பட வலையினும் வழீஇப் பொருள் ஆசை
நெறி மலர்க் குழல் நல்லவர் நினை வென நினைவுற்று

அறிபவர்க்கு அறிதாம் பரம் பொருள் என அகலும். 2688

ஏவலாளரோடு இன்னவாறு இன்ன மீன் படுத்தற்கு
ஆவதாம் தொழில் இயற்றவும் அகப் படாது ஆக
யாவரே இது படுப்பவர் என்று இரும் கானல்
காவலாளனும் பரதரும் கலங்கஞர் உழந்தார். 2689

சங்கு அலம்பு தண் துறை கெழு நாடன் இச் சலதித்
துங்க மந்தரம் எனக் கிடந்து அலமரும் சுறவை
இங்கு அணைந்து எவன் பிடிப்பவன் அவன் யான் ஈன்ற
மங்கை மங்கலக் கிழான் என மனம் வலித்து இருந்தான். 2690

நந்தி நாதனும் இனையனாய் அம் கயல் நாட்டத்து
இந்து வாண் நுதலாளும் அங்கு அனையளாய் இருப்பத்
தந்தி நால் இரண்டு ஏந்திய தபனிய விமானத்து
உந்து நீர்ச் சடையார் மணம் உன்னினார் மன்னோ. 2691

உயர்ந்த சாதியும் தம்மினும் இழிந்த என்று உன்னிக்
கயந்த நெஞ்சுடை வலைக்குலக் கன்னியை வேட்பான்
வியந்து கேட்பது எவ்வாறு அவர் வெறுக்குமுன் அவருக்கு
இயைந்த மீன் வலை உரு எடுத்து ஏகுதும் என்னா. 2692

கருகிருள் முகந்தால் அன்ன கச்சினன் கச்சோடு ஆர்த்த
சுரிகையன் தோள்மேல் இட்ட துகிலின் குஞ்சி சூட்டும்
முருகு கொப்பளிக்கும் நெய்தல் கண்ணியன் மூத்த வானோர்
இருவரும் மறையும் தேடி இளைப்ப ஓர் வலைஞன் ஆனான். 2693

முழுது உலகு ஈன்ற சேல் கண் முதல்வியை அருள் இலார் போல்
இழி தொழில் வலை மாதாகச் சபித்தவாறு என்னே என்றும்
பழி படு சாபம் ஏறார் பரதராய் வரவும் வேண்டிற்று
அழகிது நன்று நன்று எம் ஆலவாய் அடிகள் செய்கை. 2694

தன் பெரும் கணத்து உளான் ஓர் தலைவனும் சலதி வாணன்
என்பது தோன்ற வேடம் எடுத்து எறி வலை தோள் இட்டு
என் புற மலைப்பக் காவி மீன் இடு குடம்பை தாங்கிப்
பின்புற நடந்து செல்லப் பெருந்துறைப் பாக்கம் புக்கான். 2695

கழித்தலைக் கண்டற் காடும் கைதை அம் கானும் நெய்தல்

சுழித்தலைக் கிடங்கும் நீத்துச் சுஃறெனும் தோட்டுப் பெண்ணை
வழித்தலை சுமந்து வார் கள் வார்ப்ப வாய் அங்காந்து ஆம்பல்
குழித்தலை மலர் பூம் கானல் கொடு வலைச் சேரி சேர்ந்தான். 2696

பெருந்தகை அமுது அன்னாளைப் பெறாது பெற்று எடுப்பான் நோற்ற
அருந்தவ வலைஞர் வேந்தன் அதிசயம் அகத்துள் தோன்ற
வரும்தகை உடைய காளை வலை மகன் வரவு நோக்கித்
திருந்து அழகு உடைய நம்பி யாரை நீ செப்புக என்றான். 2697

சந்த நால் மறைகள் தேறாத் தனி ஒரு வடிவாய்த் தோன்றி
வந்த மீன் கொலைஞன் கூறு மதுரையில் வலைஞர்க்கு எல்லாம்
தந்தை போல் சிறந்து உளான் ஓர் தனி வலை உழவன் நல்ல
மைந்தன் யான் படைத்து காத்துத் துடைக்கவும் வல்லன் ஆவேன். 2698

அல்லது வான் மீன் எல்லாம் அகப்பட வலை கொண்டு ஓச்ச
வல்லவன் ஆவேன் என்ன மற்று இவன் வலைஞன் கோலம்
புல்லிய மகன் கொல் முன்னம் புகன்ற சொல் ஒன்றில் இப்போது
சொல்லியது ஒன்று இரண்டும் சோதனை காண்டும் என்னா. 2699

தொண்டு உறை மனத்துக் கானல் துறைமுகம் அஃதேல் இந்தத்
தண் துறை இடத்து ஓர் வன்மீன் தழல் எனக் கரந்து சீற்றம்
கொண்டு உறைகின்ற ஐய குறித்தது பிடித்தியேல் என்
வண்டு உறை  கோதை மாதை மணம் செய்து தருவேன்  என்றான். 2700

சிங்க ஏறு அனையான் காலில் செல் நடைப் படகில் பாய்ந்து
சங்கு எறி தரங்கம் தட்பத் தடம் கடல் கிழித்துப் போகிக்
கிங்கரன் ஆன காளை வரை எனக் கிளைத்த தோள் மேல்
தொங்கலில் கிடந்து ஞான்ற தொகு மணி வலையை வாங்கி. 2701

செவ்விதின் நோக்கி ஆகம் திருக நின்று எறிந்தான் பக்கம்
கௌவிய மணிவில் வீச இசை ஒலி கறாங்கிப் பாயப்
பை விரித்து உயிர்த்து நாகம் விழுங்க வாய்ப் பட்ட மீன் போல்
வெவ் வினைச் சுறவேறு ஐயன் விடு வலைப் பட்டது அன்றே. 2702

மாசு அறு கேளிர் அன்பின் வலைப் படும் வலைஞர் கோன் தாய்
வீசிய வலையில் பட்ட மீனினைச் சுருக்கி வாங்கிக்
காசு எறி தரங்க முந்நீர்க் கரை இடை இட்டான் கள் வாய்
முசு தேன் என்ன ஆர்த்து மொய்த்தன் பரதச் சாதி. 2703

கிளையும் நம் கோனும் வீசு வலைஞராய்க் கிளர் தோள்
ஆற்றல்
விளைவொடு முயன்று பல் நாள் வினை செயப் படாத
மீன் இவ்
இளையவன் ஒருவன் தானே ஒரு விசை எறிந்தான்
ஈத்தான்
அளிய நம் குலத்தோர் தெய்வ மகன் இவன் ஆகும்
என்றார். 2704

கைதை சூழ் துறைவன் ஓகை கை மிகப் பம்பை ஏங்க
நொய்து எனும் நுசுப்பில் கள்வாய் நுளைச்சியர் குரவை தூங்கப்
பைதழை பகுவாய்க் கச்சைப் பரதவன் கலங்கன் ஞாழல்
செய்த பூம் கோதை மாதைத் திருமணம் புணர்த்தினானே. 2705

அந்நிலை வதுவைக் கோலம் ஆயின மருகனாரும்
மின் நிலை வேல் கணாளும் விண் இடை விடை மேல் கொண்டு
தன் நிலை வடிவாய்த் தோன்றத் தடம் கரை மீனம் தானும்
நல்நிலை வடிவே போன்று நந்தியாய் முந்தித் தோன்ற. 2706

கொற்ற வெள் விடை மேல் காட்சி கொடுத்தவர் கருணை நாட்டம்
பெற்றலின் மேலைச் சார்பால் பிணித்த இப் பிறவி யாக்கைச்
சிற்றறிவு ஒழிந்து முந்நீர்ச் சேர்ப்பன் நல் அறிவு தோன்றப்
பொன் தனு மேரு வீரன் பூம் கழல் அடிக்கீழ்த் தாழ்ந்தான். 2707

இரக்கம் இல் இழிந்த யாக்கை எடுத்து உழல் ஏழை ஏனைப்
புரக்க இன்று என்போல் வந்த புண்ணிய வடிவம் போற்றி
அறக்கு எறி பவளச் செவ்வாய் அணங்கினை மணந்து என் பாசம்
கரக்க வெள் விடை மேல் நின்ற கருணையே போற்றி என்றான். 2708

அகவிலான் பரவி நின்ற அன்பனை நோக்கிப் பல் நாள்
மகவு இலா வருத்தம் நோக்கி உமை நாம் மகளாத் தந்து
தகவினான் மணந்தேம் நீ இத் தரணியில் தனதன் என்ன
நகவிலாப் போகம் மூழ்கி நம் உலகு அடைவாய் என்ன. 2709

பெண்ணினை வதுவைக்கு ஈந்த பெருந்துறைச் சேர்ப்பற்கு அன்று
தண் அளி சுரந்து நல்கித் தருமமால் விடைமேல் தோன்றி
விண் இடை நின்றான் சென்றான் வேத்திரப் படையா னோடும்
உள் நிறை அன்பரோடு உத்தர கோச மங்கை. 2710

அங்கு இருந்த அநாதி மூர்த்தி ஆதி நால் மறைகள் ஏத்தும்
கொங்கு இரும் கமலச் செவ்விக் குரை கழல் வணங்கிக் கேட்பப்
பங்கு இருந்து அவட்கு வேதப் பயன் எலாம் திரட்டி முந்நீர்ப்
பொங்கு இரும் சுதை போல் அட்டிப் புகட்டினான் செவிகள் ஆர. 2711

அவ்வேலை அன்புடையார் அறு பதினாயிரவர்
அவர்க்கும் அளித்துப் பாச
வெவ்வேலை கடப்பித்து வீடாத பரானந்த வீடு நல்கி
மைவ் வேலை அனைய விழி அம் கயல் கண்
நங்கையொடு மதுரை சார்ந்தான்
இவ் வேலை நிலம் புரக்க முடி கவித்துப் பாண்டியன்
என்று இருந்த மூர்த்தி. 2712

வலை வீசின படலம் சுபம்

-----------------

## 58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் (2713 - 2798)

கலைவீசு மதிச் சடையோன் கடல் துறைவன் தலைச் சென்று
வலைவீசி அவன் பாச வலை வீசும் பரிசு இது மேல்
அலை வீசும் புனல் வாதவூரரை வந்து அவிச்சை வலி
நிலை வீசிப் பணி கொண்ட நெறி அறிந்த படி மொழிவாம். 2713

தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி வழங்குநர் போல
அடுத்த வயல் குளம் நிரப்பி அறம் பெருக்கி அவனி எலாம்
உடுத்த கடல் ஒருவர்க்கும் உதவாத உவரி என
மடுத்து அறியாப் புனல் வைகைக் கரை உளது வாதவூர். 2714

விழவு அறா நகர் எங்கும் விருந்து அறா மனை எங்கும்
மழ அறா மகிழ் எங்கும் மறை அறா கிடாஇ எங்கும்
முழவு அறா அரங்கு எங்கும் முகில் அறா பொழில் எங்கும்
உழவு அறா வயல் எங்கும் உடம்பு அறா உயிர் என்ன. 2715

ஆய வளம் பதியதனில் அமாத்தியரில் அரு மறையின்
தூய சிவ ஆகம நெறியின் துறை விளங்க வஞ்சனையான்
மாயன் இடும் புத்த இருள் உடைந்தோட வந்து ஒருவர்
சேய இளம் பரிதி எனச் சிவன் அருளால் அவதரித்தார். 2716

பேர் வாத ஊரர் எனப் பெற்றுத் தம் பிறங்கு மறைச்
சார்வாய நூல் வழியால் சடங்கு எல்லாம் நிலை வெய்தி
நீர்வாய இளமதி போல் நிரம்புவார் வேத முதல்
பார்வாய் எண் எண் கலையும் பதினாறு ஆண்டினில் பயின்றார். 2717

இத்தகை யோர் நிகழ் செய்தி அறிந்தவர் சென்று இயம்ப அரி
மர்த்தன பாண்டியன் கேட்டு வரவழைத்து மற்று அவரைச்
சித்தம் மகிழ் வரிசையினால் சிறப்பு அளித்துத் தன் கோயில்
வித்தக நல் மதி அமைச்சின் தொழில் பூட்டி மேம் படுத்தான். 2718

செற்றம் மிகும் கருவிகளின் திறல் நூலும் மனு வேந்தன்
சொற்ற பெரும் தொல் நூலும் துளக்கம் அற விளக்கம் உறக்
கற்று அறிந்தோர் ஆதலினால் காவலற்குக் கண் போன்ற
முற்றும் உணர்ந்த அமைச்சரினும் முதல் அமைச்சராய் நிகழ்வார். 2719

புல்லாதார் முரண் அடக்கிப் பொருள் கவர் வார் என்பது எவன்
செல்லாத பல் வேறு தீபத்துச் செம் கோன்மை
வல்லாரும் தத்தமதேத்து அரிய பொருள் வரவிடுத்து
நல்லாராய் ஒப்புரவு நட்பு அடைய நடக்கின்றார். 2720

அண்ணல் அரிமருத்தனனுக்கு அடல் வாதவூர் அமைச்சர்
கண்ணும் இடும் கவசமும் போல் காரியம் செய்து ஒழுகுவார்
தண் அளி செய்து அவனி எலாம் தம் கிளைபோல் குளிர் தூங்க
வண்ண மதிக் குடை நிழற்றி முறை செய்து வாழும் நாள். 2721

மெய்ம்மை ஆம் பொருள் விவேக மும் வேறு பாடு ஆய
பொய்ம்மை ஆம் பொருள் விவேகமும் புந்தியுள் தோன்ற
இம்மை ஆசையும் மறுமையில் ஆசையும் இகந்து
செம்மை ஆகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார். 2722

புத்தர் ஆதியோர் புறவுரை நெறிகளும் பொய்யா
நித்த வேத நூல் தழுவிய அகவுரை நெறியும்
சித்தம் மாசு அறுத்து அரன் அருள் தௌ¤வியாது அதனான்
மித்தை ஆணவத் தொடக்கு அறாதில்லை ஆம் வீடும். 2723

பத்தி செய்து அரன் அருள் பெரும் பத்தருக்கு அன்றி
முத்தி எய்தரிது என மறை மொழிவது அப் பொது நூல்

சத்தியாப் பொருள் தெள¤வு எலாம் சத்திநி பாதர்க்கு
உய்த்து உணர்த்துவது ஆகமம் என்பர் மெய் உணர்ந்தோர். 2724

வேத ஆகமச் சென்னியில் விளை பொருள் அப் பேதம்
பேதம் ஆகிய பிணக்கு அறுத்து இருள் பிணி அவிழ்த்து
நாதன் ஆகிய தன்னையும் என்னையும் நல்கும்
போதன் ஆகிய குருபரன் வருவது எப்பொழுது ஆல். 2725

கரவு இலாத பேர் அன்பினுக்கு எளிவரும் கருணைக்
குரவனார் அருள் அன்றி இக் கொடிய வெம் பாசம்
புரை இல் கேள்வியால் கடப்பது புணையினால் அன்றி
உரவு நீர்க்கடல் கரம் கொடு நீந்துவது ஒக்கும். 2726

என்று அவ் வாதவூர் மறையவர் இன்ப வீடு எய்தக்
துன்றும் ஆசையால் தொடக்கு உண்டு சுருதி ஆகம நூல்
ஒன்று கேள்வியோர் வருந்தொறும் உணர்ந்தவர் இடைத் தாம்
சென்று காண் தொறும் அளவளாய்த் தேர்குவர் ஆனார். 2727

எண்ணிலார் இடத்து அளந்து அளந்து அறிபொருள் எல்லாம்
உண்ணி நீர் விடாய்க்கு உவரி நீர் உண்டவர் ஒப்ப
அண்ணலார் அகத்து அமைஉறாது அரசனுக்கு உயிரும்
கண்ணுமாய் அமைச்சு உரிமையும் கை விடாது இயல்வார். 2728

கள்ளக் காதலன் இடத்து அன்பு கலந்து வைத்து ஒழுகும்
உள்ளக் காரிகை மடந்தை போலும் உம்பரைக் காப்பான்
பள்ளக் காரி உண்டவனிடத்து உள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவலன் இடைப் புறத் தொழிலும் உட்கொண்டார். 2729

இன்ன செய்கையின் ஒழுகுவார் ஒரு பொழுது ஏகித்
தென்னர் தம்பிரான் அவை இடைச் சென்று எதிர் நின்றார்
அன்னபோது அடு பரி நிரை காப்பவர் அரசன்
முன்னர் வந்து தாழ்ந்து ஒரு சிறை நின்று அது மொழிவார். 2730

மறம் தவாத வேல் வலவ நம் வயப் பரி வெள்ளத்து
இறந்தவாம் பரி போக நின்று எஞ்சிய எல்லாம்
நிறைந்த நோயவும் நெடிது மூப்பு அடையவும் அன்றிச்
சிறந்தவாம் பரி ஒன்று இலை தேர்ந்திடின் என்றார். 2731

மன்றல் வேம்பனும் வாதவூர் வள்ளலை நோக்கி
இன்று நீர் நமது அறை திறந்து இருநிதி எடுத்துச்
சென்று வேலை அம் துறையில் வந்து இறங்குவ தெரிந்து
வென்றி வாம் பரி கொடு வரப் போம் என்று விடுத்தான். 2732

உள்ளம் வேறுபட்டு அமைச்சியல் நெறியில் நின்று ஒழுகும்
வள்ளலார் நிதியறை திறந்து அரும் பெறல் வயமான்
கொள்ள வேண்டிய பொருள் எலாம் கொண்டு தாழ் இறுக்கி
வெள்ளை மா மதி வேந்தனை விடை கொடு போவார். 2733

எடுத்த பொன் சுமை ஒட்டகத்து இட்டு முன் ஏக
விடுத்து விண் தொடு திண் திமில் விடையவன் கோயில்
அடுத்த விழ்ந்த பொன் அம்புயத் தடம் படிந்து அனைய
மடுத் தடம் கரைச் சித்தி ஐங்கரத்தனை வணங்கா. 2734

கருணை நாயகி அம் கயல் கண்ணி எம் பிராட்டி
அருண நாள் மலர்ச் செய்ய சீற் அடித்தலம் இறைஞ்சி
வருணனார் பெரு வயிற்று நோய் வலி கெடுத்து ஆண்ட
தருண நாள் மதிச் சடை உடை அடிகள் முன் தாழா. 2735

ஒன்று வேண்டும் இப் பொருள் எலாம் உனக்கும் ஐயம் பொறியும்
வென்று வேண்டும் நின் அன்பர்க்கும் ஆக்குக வெள்ளி
மன்று வேண்டி நின்று ஆடிய வள்ளல் என் குறை ஈது
என்று வேண்டிய நின்று ஏத்துவார்க்கு இறைவனின் அருள் போல். 2736

ஆதி சைவன் ஆம் அருச்சகன் ஒருவன் நேர் அணைந்து
பூதி ஈந்தனன் நமக்கு இது போல் இலை நிமித்தம்
ஈது நல் நெறிக்கு ஏது என்று இரு கை ஏற்று அணிந்து
வேத நாதனை இறைஞ்சினார் விடை கொடு மீண்டார். 2737

இன்னியம் அதிர்ந்தன எழுந்தன பதாதி
துன்னிய இணைக்கவரி துள்ளின துகில் கால்
பொன் இயல் மதிக் குடை நிழன்றன பொலம் கொள்
மின்னிய மணிச் சிவிகை மேல் கொடு நடந்தார். 2738

மற்று இவர் வழிப்படு முன் மாறி நடம் ஆடும்
வெற்றி விடையார் இவர் வினைத் தொகையின் ஒப்பும்
பற்றிய இருட்டு மல பக்குவமும் நோக்கா

உற்று அடிமை கொண்டு பணி கொண்டு அருள உன்னா. 2739

சந்த மறை தீண்ட அரிய தம் கருணையால் ஓர்
அந்தணர் குலக் குரவன் ஆகி அடி நீங்கா
மைந்தர் பலர் தம்மொடு பெருந்துறையில் வந்தோர்
கொந்து அலர் நெருங்கிய குருந்து அடி இருந்தார். 2740

பெரும் கடல் அனீகமொடு போய்ப் புற அடுத்த
இரும் கடம் அளப்பு இல கடந்து எழு பிறப்பு ஆம்
கரும் கடல் கடக்க வருவார் கருணை வெள்ளப்
பெருங்கடல் நிறைந்து உறை பெரும் துறை அடைந்தார். 2741

அடுத்திட அடுத்திட அகத்து உவகை வெள்ளம்
மடுத்திட முகிழ்த்த கைம் மலர் கமலம் உச்சி
தொடுத்திட விழிப்புனல் துளித்திட வினைக்கே
விடுத்திடும் மனத்து அருள் விளைந்திட நடந்தார். 2742

2743. பித்து இது எனப் பிறர் நகைக்க வரு நாலாம்
சத்தி பதியத் தமது சத்து அறிவு தன்னைப்
பொத்திய மலத்தினும் வெரீஇச் சுமை பொறுத்தோன்
ஒத்து இழி பிணிப்பு உறு ஒருத்தனையும் ஒத்தார். 2743

நெருப்பில் இடு வெண்ணெய் என நெஞ்சு உருக என்னை
உருக்கும் இதனால் எனை ஒளித்த மல ஆற்றால்
கருக்கும் அவன் ஆகி எனை ஆள் கருணை வெள்ளம்
இருக்கும் இடனே இனிது என எண்ணி நகர் புக்கார். 2744

காய் இலை அடைந்த கழு முட் படை வலத்தார்
கோயிலை அடைந்து குளிர் வான் புனல் குடைந்து
வாயிலை அடைந்து உடலம் மண் உற விழுந்து
வேயிலை அடைந்தவரை மெய்ப் புகழ் வழுத்தா. 2745

ஆலய மருங்கு வலமாக வருவார் முன்
மூல மறை ஓதி முடியாத பொருள் தன்னைச்
சீல முனிவோர் தெள¤ய மோனவழி தேற்றும்
கோல முறைகின்ற ஒர் குருந்தை எதிர் கண்டார். 2746

வேத நூல் ஒரு மருங்கினும் மெய்வழிச் சைவப்

போத நூல் ஒரு மருங்கினும் புராணத்துட் கிடந்த
கீத நூல் ஒரு மருங்கினும் கிளை கெழு சமய
போத நூல் ஒரு மருங்கினும் வாய்விட்டுப் பிறங்க. 2747

சுருதி கூறிய அறம் முதல் நான்கும் அத் தொல் நூல்
அரியது ஆம் கதிக்கு ஏது என்று ஆகமம் காட்டும்
சரியை ஆதி நால் பதமும் தலை தெரிந்து உணர்ந்த
பெரிய மாணவர் கழகமும் வினா விடை பேச. 2748

சரியை வல்ல மெய்த் தொண்டரும் சம்புவுக்கு இனிய
கிரியை செய்யும் நல் மைந்தரும் கிளர் சிவ யோகம்
தெரியும் சாதகக் கேளிரும் தேசிகத் தன்மை
புரியும் போதகச் செல்வரும் அளவு இலர் பொலிய. 2749

ஒழிந்த நோன்பினர் ஆடலர் பாடலர் உலகம்
பழித்த செய்கையர் அழுகையர் நகையினர் பாசம்
கழித்த கண்ணினால் அரன் உருக் கண்டு கொண்டு உலகில்
விழித்த கண் குருடாத் திரி வீரரும் பலர் ஆல். 2750

கரவு இல் உள்ளம் ஆம் விசும்பு இடைக் காசு அற விளங்கும்
பரசிலா சுடர்க்கு உதயம் ஈறு இன்மையால் பகலும்
இரவு நேர் படக் கண்டிலர் இயன்று செய் நித்த
விரதம் ஆதி னோன்பு இழந்து உறை விஞ்சையர் பலர் ஆல். 2751

உடையும் கோவணம் உண்டியும் கைப்பலி உறவு என்று
அடையும் கேளிரும் அரன் அடியார் கண்டிகலன் கண்
படையும் பாரிடம் ஆயினும் பகல் இரா முதல் ஈறு
இடை இன்று ஆம் இடத்து உறங்குவது இஃது அவர் வாழ்க்கை. 2752

இத்தகைப் பல தொண்டர் தம் குழத்து இடையால் அம்
ஒத்த பைங் குருந்து அடியினில் யோக ஆசனத்தில்
புத்தகத்து எழுதிய சிவஞான மெய்ப் போதம்
கைத்தலம் தரித்து இருப்பது ஓர் கருணையைக் கண்டார். 2753

மன்றுள் ஆடிய ஆனந்த வடிவமும் வடவால்
ஒன்றி நால்வருக்கு அசைவு அற உணர்த்திய உருவும்
இன்று நாயினேற்கு எளிவந்த இவ் உரு என்னா
அன்று நாயகன் குறிப்பு உளத்து உணர்த்திட அறிந்தார். 2754

முன்பு அணிந்தனர் அணிந்தனர் அஞ்சலி முடிமேல்
என்பு நெக்கிட உருகினர் இனியார் எளி வந்து
அன்பு எனும் வலைப் பட்டவர் அருள் வலைப் பட்டார்
துன்ப வெம் பவ வலை அறுத்திட வந்த தொண்டர். 2755

காலமும் கனாக் காட்சியும் நிமித்தமும் கடிந்தார்
சீல மாணவர் செவ்வி தேர் தேசிகன் என்ன
மூல ஆகமம் ஓதினான் முறுக்கு அவிழ் கழுநீர்
மாலை சாந்து அணிந்து அடியின் மேல் வன் கழல் வீக்கி. 2756

அண்ணல் வேதியர் ஒழுக்கமும் அன்பும் கண்டு யாக்கை
உள் நிலா உயிர் பொருள் புனலுடன் கவர்ந்து உள்ளக்
கண் இலான் மலம் கழீஇப் பத கமலமும் சூட்டி
வண்ண மாமலர்ச் செம்கரம் சென்னி மேல் வையா. 2757

சூக்கம் ஆகும் ஐந்து எழுத்தினில் சுற்றிய பாச
வீக்க நீக்கி மெய் ஆனந்தம் விளை நிலத்து உய்த்துப்
போக்கு மீட்சியுள் புறம்பு இலாப் பூரண வடிவம்
ஆக்கினான் ஒரு தீபகம் போல் வரும் அண்ணல். 2758

பார்த்த பார்வையால் இரும்பு உண்ட நீர் எனப் பருகும்
தீர்த்தன் தன்மையும் குருமொழி செய்ததும் தம்மைப்
போர்த்த பாசமும் தம்மையும் மறந்து மெய்ப் போத
மூர்த்தியாய் ஒன்றும் அறிந்திலர் வாதவூர் முனிவர். 2759

தேனும் பாலும் தீம் கன்னலும் அமுதும் ஆய் தித்தித்து
ஊனும் உள்ளம் உருக்க உள் ஒளி உணர்ந்து இன்பம்
ஆனவாறு தேக்கிப் புறம் கசிவது ஒத்து அழியா
ஞான வாணி வந்து இறுத்தனள் அன்பர் தம் நாவில். 2760

தொழுத கையினர் துளங்கிய முடியினர் துளும்ப
அழுத கண்ணினர் பொடிப்புறும் யாக்கையர் நாக்குத்
தழு தழுத்தவன் புரையினர் தமை இழந்து அழல் வாய்
இழுதை அன்ன மெய்யினர் பணிந்து ஏத்துவார் ஆனார். 2761

பழுது இலாத சொல் மணியினைப் பத்தி செய்து அன்பு
முழுதும் ஆகிய வடத்தினான் முறை தொடுத்து அலங்கல்

அழுது சாத்தும் மெய் அன்பருக்கு அகம் மகிழ்ந்து ஐயர்
வழு இலாத பேர் மாணிக்க வாசகன் என்றார். 2762

பாட்டிற்கு இன்புறு குருபரன் பாதம் மேல் கண்ணீர்
ஆட்டிச் சொல் மலர் அணிந்து தற் போத இன் அமுதை
ஊட்டித் தற்பர ஞானம் ஆம் ஓம வெம் கனலை
மூட்டிச் சம்புவின் பூசை மேல் முயற்சியர் ஆனார். 2763

ஆசை வெம் பவ வாசனை அற்று மாணிக்க
வாசகப் பிரான் தேசிகன் மாணவர் ஓதும்
ஓசை ஆகம உபநிடத பொருள் எலாம் கேட்டு
நேசம் அங்கு வைத்து இருந்தனர் அது கண்டு நிருத்தன். 2764

தித்திக்கும் மணி வார்த்தை இன்னம் சின்னாள் திருச்
செவியில் அருந்தவும் கைச் செம் பொன் எல்லாம்
பத்திப் பேர் அன்பு அளித்துக் கவர்ந்து வேண்டும் பணி
கொடு பாண்டியனை இவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது முடித்திடவும்
திருவுள்ளம் உன்னம் எய்தி
எத்தித் தொண்டரைக் கருமம் சிறிது உண்டு இங்கே
இருத்தி என உருக்கரந்தான் அடிய ரோடும். 2765

கனவில் வரும் காட்சி எனக் கருணை மூர்த்தி காட்டி
மறைத்தலும் அன்பர் கலக்கத்து ஆழ்ந்து
நனவு கொல்லோ கனவு கொல்லோ இன்று நாதன்
ஞமலிக்குத் தவிசு இட்ட நலம் போல் என்னை
நினைவரிய திருமேனி காட்டி ஆண்டு நீத்ததை என்று
ஐயுற்று நெஞ்சம் தேறி
இன அடியாருடன் கூட்டாது ஏகினாயோ என்னையும் என்
வினையையும் இங்கு இருத்தி எந்தாய். 2766

வஞ்ச வினைக் கொள் கலனாம் உடலைத் தீவாய்
மடுக்கிலேன் வரை உருண்டு மாய்ப் பேன் அல்லேன்
நஞ்சு ஒழுகு வாளாலும் குறைப்பேன் அல்லேன் ஆதனே
அதுவும் நினது உடைமை என்றே
அஞ்சினேன் தனேயும் அழியாது ஆவி ஐயனே நினைப்
பிரிந்து ஆற்ற கில்லேன்
என் செய்கோ எந்தாயோ எந்தாயோ என்று இரங்கினார்
புரண்டு அழுதார் இனைய சொல்வார். 2767

வறியவனாம் ஒரு பிறவிக் குருடன் கையில் வந்த பெரு
விலை மணி போல் மழலை தேறாச்
சிறியவனாம் ஒரு மதலை கையில் கொண்ட செம் பொன்
மணி வள்ளம் போல் தேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை எளிவந்து ஆண்ட அருமை
அறியேன் துன்பத்து அழுவத்து ஆழாப்
பிறிவறியா அன்பரொடு அகன்றாய் கல்லாப் பேதையேன்
குறை அலது எம்பிரானால் என்னே. 2768

மண் ஆதி ஆறு ஆறு மனம் துழாவித் தடு மாறிப்
புண் ஆகி எனைக் காணாது உழல் கின்றேனைப் போத அருள்
கண்ணால் அவை முழுதும் கரைய நோக்கி யான் யான் என்று
எண்ணா எனைத் தந்தாய் எங்கு உற்றாயோ என் தாயோ. 2769

வான் ஆதி ஐந்து முதல் வகுத்த ஓசை முதல் ஐந்தும்
ஆனாதி அங்கு மனம் ஆதி நான்கும் வழி அடைப்பத்
தேன் ஆதி அறு சுவையும் கழிய ஊறும் தெள் அமுதம்
யான் ஆர நல்கினையால் எங்கு உற்றாயோ என் தாயே. 2770

மாசாய் மறைக்கும் மல வலியும் நானும் வேறு இன்றி
ஆசா விகார மலம் ஆயினேனைப் பொருள் படுத்திப்
பேசாத இன்பு உருவின் ஒடு என்னைப் பின் வைத்த
ஈசா எனை இங்கு இட்டு எங்கு உற்றாயோ என்தாயே. 2771

என்று வாய் திறந்து அரற்றினார் இரங்கினார் புனிற்றுக்
கன்று நீங்கிய ஆன் எனக் கரைந்த நெஞ்சினராய்ச்
சென்று கோபுர வாயிலின் புறம்பு போய்த் திரண்டு
நின்ற காவலன் தமர்களை நேர்ந்தனர் நோக்கா. 2772

துங்க வாரியில் கடும் பரித் தொகை எலாம் ஆடித்
திங்களின் தலைவரும் என முன்பு போய்த் தென்னர்
புங்கவன் தனக்கு உணர்த்துமின் போம் என விடுத்தார்
அம் கண் நாயகன் பெருந்துறை நாயகன் அன்பர். 2773

புரசை மா வயப் புரவிதேர் பொருநர் போய்ப் பொறி வண்டு
இரை செய்தார் முடி வேந்தன் முன் இறைஞ்சினார் உள்ளது
உரை செய்தார் அது கேட்டு ஒன்றும் உரைத்திலன் இருந்தான்
நிரை செய்து தார்ப் பரி வரவினை நோக்கிய நிருபன். 2774

வள்ளல் வாதவூர் முனிகளும் மன்னவன் பரிமாக்
கொள்ள நல்கிய பொருள் எலாம் குருந்தில் வந்து ஆண்ட
பிள்ளை வாண் மதிச் சடை முடிப் பெருந்துறை மறையோர்க்கு
உள்ள ஆதரம் பெருக முன் வேண்டியாங்கு உய்ப்பார். 2775

சிறந்த பூசைக்கும் திருவிழாச் சிறப்புக்கும் செல்வம்
நிறைந்த ஆலயத் திருப்பணித் திறத்துக்கும் நிரப்பி
அறந்த வாத பேர் அன்பர்க்கும் செலுத்தி அத்தலத்தே
உறைந்த தவாவற இன்னணம் ஒழுகு நாள் கழிப்பார். 2776

எல்லை கூறிய குளிர் மதி அடுக்கம் வந்து எய்த
வல்லல் யானையான் இன்னமும் வயப்பரி வந்தது
இல்லையால் இது என் என ஓலையும் எழுதிச்
செல்ல உய்த்தனன் வாதவூர் அமைச்சர் திருமுன். 2777

மன்னவன் திரு முகம் கண்டு முறைமையால் வாங்கி
அன்ன வாசகம் தெரிந்து கொண்டு ஆதி ஈது இல்லா
முன்னவன் திரு அருள் கடல் மூழ்கிய முனிவர்
என்னை வேறு இனிச் செய்யுமாறு என்று நின்று அயர்வார். 2778

சிந்தை ஆகிய செறுவினுள் சிவ முதல் ஓங்கப்
பந்த பாசம் வேர் அறக் களைந்து அருள் புனல் பாய்ச்சி
அந்தம் ஆதியின்று ஆகிய ஆனந்த போகம்
தந்த தேசிக உழவன் தன் கோயிலைச் சார்ந்தார். 2779

என் நாயகனே பொன் நாடர் ஏறே ஏறு கொடி உயர்த்த
மன்னா தென்னா பெருந்துறை எம் மணியேவழுதி பொருள் எல்லாம்
நின் ஆலயத்து நின் அடியார் இடத்தும் செலுத்தும் நெறி அளித்தாய்
பின் நான் அவனுக்கு என் கொண்டு பரிமாச் செலுத்தப் பெறுமாறே. 2780

என்னா இறைஞ்சி எழுந்து ஏத்தி இரந்தார் எதிரே பெருந்
துறையின்
மின்னார் சடைமேல் பிழைமுடித் தோன் விசும்பின் நிறைந்த
திருவாக் கான்
மன்னா அவற்குப் பரி எல்லாம் வரும் என்று ஓலை விடுதி
எனச்
சொன்னான் அது கேட்டு அகத்து உவகை துளும்பி வரிந்து
சுருள் விடுத்தார். 2781

அந்த ஓலைப் பாசுரமும் அறையக் கேட்டு நின்று ஆங்கு ஓர்
சிந்தை ஆனா மகிழ் சிறப்ப இருந்தான் புரவித் தேரோடும்
வந்த ஆதிச் செம் கதிரோன் மறைந்தான் அவனால் வையம் எல்லாம்
வெந்த வேடை தணிப்பான் போல் முளைத்தான் ஆதி வெம் கதிரோன். 2782

அன்று துயிலும் வாதவூர் அடிகள் கனவில் சுடர் வெள்ளி
மன்று கிழவர் குருந்து அடியில் வடிவம் காட்டி எழுந்து அருளி
வென்றி வேந்தன் மனம் கவரும் விசயப் பரி கொண்டு அணைகின்றேம்
இன்று நீ முன் ஏகுதி என்று அருளிச் செய்ய எழுந்திருந்தார். 2783

கனவின் இடத்தும் தேவர்க்கும் காண்டற்கு அரிய
கருணை உரு
நனவின் இடத்தும் கனவு இடத்தும் எளிதே அன்றோ
நமக்கு என்ன
நினைவின் இடைக் கொண்டு இருக்கின்றார் நிருத்தானந்தச்
சுடர் உள்ளத்து
தின இருளைத் தின்று எழுவது என எழுந்தான் இரவி
இரவு ஒதுங்க. 2784

எழுந்தார் உடைய பெருந்துறையார் இருந்தாள் பணிந்தார்
இனி இப் பிறப்பில்
அழுந்தார் வழிக் கொண்டார் அடைந்தார் அகன்றார்
நெறிகள் அவிர் திங்கள்
கொழுந்தார் சடையார் விடையார் தென் கூடல் அடைந்தார்
பாடு அளி வண்டு
உழும் தார் வேந்தன் பொன் கோயில் உற்றார் காணப்
பெற்றார் ஆல். 2785

மன்னர் பெருமான் எதிர் வந்த மறையோர் பெருமான்
வழிபாடு
முன்னர் முறையால் செய்து ஒழுகி முன்னே நிற்ப முகம்
நோக்கித்
தென்னர் பெருமான் எவ்வளவு செம் பொன்கொடுபோய்
எவ்வளவு
நன்னர் இவுளி கொண்டது எனக் கேட்டான் கேட்ட நால்
மறையோர். 2786

பொன்னும் அளவோ விலை கொண்ட புரவித்
தொகையும் அனைத்து அவைதாம்

பின்னர் வரக் கண்டு அருளுதி எம் பெருமான் இதனால் துரங்க பதி
என்னும் நாமம் பெறுதி மதி என்றார் என்ற மந்திரர்க்குத்
தென்னன் சிறந்த வரிசை வளம் செய்து விடுப்பச் செல்கின்றார். 2787

பொன் அம் கமலத் தடம் படிந்து புழைக்கை மதமா முகக் கடவுள்
தன்னம் கமல சரண் இறைஞ்சித் தனியே முளைத்த சிவக் கொழுந்தை
மின் அம் கயல் கண் கொடி மருங்கில் விளைந்த தேனை முகந்து உண்டு
முன்னம் கருத்து மொழி உடம்பு மூன்றும் அன் பாய்த் தோன்றினார். 2788

மன்னே என்னை ஆட்கொண்ட மணியே வெள்ளி மன்று
ஆடும்
அன்னே அடியேன் வேண்டியவாறு அரசன் ஈந்த நிதி
எல்லாம்
முன்னே கொண்டு என் பணி கொண்டாய் முனியாது
அரசன் நனி மகிழ
என்னே புரவி வரும் வண்ணம் என்று வேண்டி
நின்றிடலும். 2789

மெய் அன்பு உடையாய் அஞ்சலை நீ வேட்ட வண்ணம்
விண் இரவி
வையம் பரிக்கும் பரி அனைய வயமாக் கொண்டு
வருதும் என
ஐயன் திருவாக்கு அகல் விசும்பு ஆறு எழுந்தது ஆக
அது கேட்டுப்
பொய் அன்பு பகன்றார் சிவன் கருணை போற்றி
மனையில் போயினார். 2790

கடி மனை அடைந்த எல்லை வாதவூர்க் காவலோரை
மடிமையில் சுற்றத் தோரும் கேளிரும் மாண்ட காதல்
அடிமை உள்ளாரும் ஏதில் ஆளரும் பிறரும் ஈண்டி
இடி மழை வாய் விட்டு என்னப் புந்திகள் இனைய சொல்வார். 2791

மந்திரக் கிழமை பூண்டு மன்னவர் கருமம் செய்வ
அந்தணர்க்கு அறனே அல்ல அமைச்சியல் அறத்து நின்றால்
வெம் திறல் அரசர்க்கு ஏற்ற செய்வதே வேண்டும் என்னத்
தந்திரம் அது நூல் வல்லோர் சாற்றுவார் அன்றோ ஐயா. 2792

அரைசியல் அமைச்சு நீதி ஆய்ந்த நுங்கட்கு நாங்கள்
உரை செய்வது எவன் நீர் செய்வது ஒன்று நன்று ஆவது இல்லை

விரை செறி தாராற்கு இன்று வெம்பரி வருவது ஆக
வரையறை செய்தீர் நாளை என சொல் வல்லீர் ஐயா. 2793

தழுவிய கிளைஞர் நட்டோர் சார் உளோர் தக்க சான்றோர்
குழுவினைக் காக்க வேண்டும் குறிப்பு இலீர் போலும் நீவிர்
ஒழுகு உறு செயலினாலே உம் செயல் உமக்கே சால
அழகு இது போலும் என்னக் கழறினார் அது கேட்டு ஐயன். 2794

சுற்றமும் தொடர்பும் நீத்தேம் துன்பமும் இன்பும் அற்றேம்
வெற்று உடல் மானம் தீர்ந்தேம் வெறுக்கை மேல் வெறுக்கை வைத்தேம்
செற்றமும் செருக்கும் காய்ந்தேம் தீவினை இரண்டும் தீர்ந்தேம்
கற்றைவார் சடையான் கோலம் காட்டி ஆட் கொண்ட அன்றே. 2795

தந்தை தாய் குரவன் ஆசான் சங்கரன் நிராசை பெண்டிர்
மைந்தர் பால் உயிரும் சுற்றம் மாசிலா ஈசன் அன்பர்
அந்தம் இல் பிறவி ஏழும் அடு பகை என்பது தேர்ந்தோம்
எந்தையார் கருணை காட்டி எம்மை ஆட் கொண்ட 2796
அன்றே.

ஊர் எலாம் அட்ட சோறு நம்மதே உவரி சூழ்ந்த
பார் எலாம் பாயல் துன்னல் கோவணம் பரிக்கும் ஆடை
சீர் எலாம் சிறந்த சாந்தம் தெய்வ நீறு அணிபூண் கண்டி
நீர் எலாம் சுமந்த வேணி நிருத்தன ஆட் கொண்ட அன்றே. 2797

இறக்கினும் இன்றே இறக்குக என்று இருக்கினும் இருக்குக
வேந்தன்
ஒறுக்கினும் ஒறுக்க உவகையும் உடனே ஊட்டினும் ஊட்டுக
வானில்
சிறக்கினும் சிறக்க கொடிய தீ நரகம் சேரினும் சேருக
சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தால் மாற்றுவார்
யார் என மறுத்தார். 2798

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் சுபம்

----------------------

## 59. நரி பரியாக்கிய படலம் (2799 -2925)

அரிகணை தொடுத்து வேழம் அட்டவன் செழியன் வாயில்
தெரி கலை அமைச்சர் ஏற்றைச் தேசிக வடிவத்து தீண்டி
வரிகழல் சூட்டி ஆண்ட வண்ணம் இவ் வண்ணம் ஐயன்
நரிகளைப் பரிகள் ஆக்கி நடத்திய வாறும் சொல்வாம். 2799

சுற்றம் ஆம் பாச நீவித் துகள் அறுத்து இருந்தார் தம்மை
மற்றை நாள் அழைத்து வேந்தன் வந்தில போலும் இன்னம்
கொற்றவாம் பரிகள் என்னக் குறுமதி முடித்தான் அன்பர்
இற்றை நாண் முதனான் மூன்றில் ஈண்டுவ இறைவா என்னா. 2800

சிந்துர நுதன் மால் யானைச் செல்வப் பரிக்கு வேறு
மந்துறை அகன்ற ஆக வகுக்க சூழ் தண்ணீர் ஊட்ட
நந்து உறை தடங்கள் வேறு தொடுக நீள் நகரம் எங்கும்
இந்து உறை மாடம் எல்லாம் அழகு செய்திடுக என்றார். 2801

காவலன் கருமம் செய்வோர் கந்துகப் பந்தி ஆற்றி
ஓவற நகரம் எங்கும் ஒளி பெற அழகு செய்யத்
தாவு தெண் கடல் ஏழ் கண்ட சகரர் போல் வைகல் மூன்றில்
வாவியும் குளனும் தொட்டார் மண் தொடுகருவி மாக்கள். 2802

வரையறை செய்த மூன்று வைகளும் கழிந்த பின்னாள்
கரையறு பரிமா வீண்டக் கண்டிலம் இன்னம் என்னா
விரையறை வண்டார் தண்டார் வேம்பனும் விளித்து வந்த
உரையறை நாவினாரை ஒறுப்பவன் ஒத்துச் சீறா. 2803

என் இவன் பரிமா கொண்டது என்று அவை வருவது என்னாத்
தன் எதிர் நின்ற வஞ்சத் தறுகணார் சிலரை நோக்கிக்
கொன்னும் இக் கள்வன் தன்னைக் கொண்டு போய் தண்டம் செய்து எம்
பொன் எலாம் மறுவு கொண்டு வாங்குமின் போமின் என்றான். 2804

கல் திணி தோளான் சீற்றம் கண்டு எதிர் நில்லாது அஞ்சிச்
சுற்றிய பாசம் போலத் தொடர்ந்து கொண்டு ஏகி மன்னர்
எற்று இனி வகைதான் பொன்னுக்கு இயம்பும் என்று எதிர்த்துச் சீறிச்
செற்றம் இல் சிந்தையார் மேல் செறிந்த கல் ஏற்றினாரே. 2805

பொன் நெடும் சயிலம் கோட்டிப் புரம் பொடி படுத்த வீரர்
சொல் நெடும் தாளை உள்கி நின்றனர் சுமந்த பாரம்
அந் நெடும் தகையார் தாங்கி ஆற்றினார் அடைந்த அன்பன்

தன் நெடும் பாரம் எல்லாம் தாங்குவார் அவரே அன்றோ. 2806

சிலை அது பொறை தோற்றாது சிவன் அடி நிழலில் நின்றார்
நிலை அது நோக்கி மாய நெறி இது போலும் என்னாக்
கொலை அது அஞ்சா வஞ்சர் கொடும் சினம் திருகி வேதத்து
தலை அது தெரிந்தார் கையும் தாள்களும் கிட்டி ஆர்த்தார். 2807

அக் கொடும் தொழிலும் அஞ்சாது இருந்தனர் அரனை
உள்கி
இக் கொடும் தொழிலினார் தாம் இனி நனி ஒறுப்பர்
என்னாப்
புக்கு அது காண்டற்கு உள்ளம் பொறான் என இரவிப்
புத்தேள்
மிக்க தன் ஒளி கண் மாழ்கி விரிகடல் அழுவத்து
ஆழ்ந்தான். 2808

சுந்தர விடங்கர் அன்பர் சூழ் துயர் அகற்ற நேரே
வந்து எழு காட்சி போல வந்தது செக்கர் வானம்
இந்தவர் மார்பம் தூங்கும் ஏன வெண் கோடு போன்ற
அந்தர உடுக்கள் எல்லாம் அயன் தலை மாலை ஒத்த. 2809

சுழிபடு பிறவித் துன்பத்து தொடு கடல் அழுவத்து ஆழ்ந்து
கழிபடு தனையும் காப்பான் கண் நுதல் மூர்த்தி பாதம்
வழிபடும் அவரைத் தேரான் வன் சிறை படுத்த தென்னன்
பழி படு புகழ் போல் எங்கும் பரந்தது கங்குல் ஈட்டம். 2810

கங்குல் வந்து இறுத்த லோடும் அரும் சிறை அறையில் போக்கிச்
சங்கிலி நிகளம் பூட்டித் தவத்தினைச் சிறை இட்டு என்னச்
செம் கனல் சிதற நோக்கும் சினம் கெழு காவலாளர்
மங்குலின் இருண்ட கண்டர் தொண்டரை மறுக்கம் செய்தார். 2811

மிடைந்தவர் தண்டம் செய்ய வெம் சிறை வெள்ளத்து ஆழ்ந்து
கிடந்தவர் கிடந்தோன் பூ மேல் இருந்தவன் தேடக் கீழ் மேல்
நடந்தவர் செம் பொன் பாத நகை மலர் புணையாய்ப் பற்றிக்
கடந்தனர் துன்ப வேலை புலர்ந்தது கங்குல் வேலை. 2812

அந்தம் இல் அழகன் தன்னை அம் கயல் கண்ணியோடும்
சுந்தர அமளிப் பள்ளி உணர்த்துவான் தொண்டர் சூழ
வந்தனை செய்யும் ஆர்ப்பும் மங்கல சங்கம் ஆர்ப்பும்

பந்த நால் மறையின் ஆர்ப்பும் பருகினார் செவிகள் ஆர. 2813

போதவா நந்தச் சோதி புனித மெய்த் தொண்டர்க்கு ஆக
நாதம் ஆம் முரசம் ஆர்ப்ப நரிப் பரி வயவர் சூழ
வேத வாம் பரிமேல் கொண்டு வீதியில் வரவு காணும்
காதலன் போலத் தேர் மேல் கதிரவன் உதயம் செய்தான். 2814

கயல் நெடும் கண்ணியோடும் கட்டு அவிழ் கடிப் பூம் சேக்கைத்
துயில் உணர்ந்து இருந்த சோம சுந்தரக் கருணை வெள்ளம்
பயில் நெடும் சிகரம் நோக்கிப் பங்கயச் செம்கை கூப்பி
நயன பங்கயம் நீர் சோர நாதனைப் பாடல் உற்றார். 2815

எந்தாய் அனைத்து உலகும் ஈன்றாய் எத் தேவர்க்கும்
தந்தாய் செழும் குவளைத் தாராய் பெரும் துறையில்
வந்தாய் மதுரைத் திரு ஆலவாய் உறையும்
சிந்தா மணியே சிறியேற்கு இரங்காயோ. 2816

மூவா முதலாய் முது மறையாய் அம் மறையும்
தாவாத சோதித் தனி ஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திரு ஆல்வாய் உறையும்
ஆவார் கொடி யாய் அடியேற்கு இரங்காயோ. 2817

முன்னா முது பொருட்கு முன்னா முது பொருளாய்ப்
பின் ஆம் புதுமைக்கும் பின் ஆகும் பேர் ஒளியாய்த்
தென்னா மதுரைத் திரு ஆலவாய் உறையும்
என் நாயகனே எளியேற்கு இரங்காயோ. 2818

மண்ணாய்ப் புனலாய்க் கனலய் வளி ஆகி
விண்ணாய் இரு சுடராய் இத்தனையும் வேறு ஆகிப்
பண்ணாய் இசையாய்ப் பனுவலாய் எங்கண்ணும்
கண் ஆனாய் என்று கண் காணவாறு என் கொலோ. 2819

பொங்கும் சின மடங்கல் போன்று உறுத்து வெம் கூற்றம்
அங்கும் புரியா வரும் துன்பத்து ஆழ்ந்து நான்
மங்கும் பதி அறிந்தும் வந்து அஞ்சல் என்கிலை ஆல்
எங்கும் செவி உடையாய் கேளாயோ என் உரையே. 2820

பூட்டி அருள் பாசம் இரு பாதம் பொறித்து உடலில்

கூட்டி அடியாருள் அகப்படுத்து ஆட் கொண்டு அருமை
காட்டியவோ இன்று என்னைக் கைவிட்டாய் வெய்யர் எனை
ஆட்டி ஒறுக்கு இடத்து ஆர் ஏன்று கொள்வாரே. 2821

ஊரார் உனைச் சிரிப்பது ஓராய் என்று உன் அடிமைக்
காராய் அடியேன் அயர்வேன் அஃது அறிந்து
வாராய் அரசன் தமர் இழைக்கும் வன் கண் நோய்
பாராய் உன் தன்மை இதுவோ பரமேட்டி. 2822

என்று இரங்குவோர் இரங்கு ஒலி இளம் சிறார் அழுகை
சென்று தாயார் தம் செவித் துளை நுழைந்து எனச் செல்லக்
குன்று இரும் சிலை கோட்டிய கூடல் நாயகன் கேட்டு
அன்று வன் சிறை நீக்குவான் திரு உளத்து அமைத்தான். 2823

நந்தி ஆதி ஆம் பெரும் கண நாதரை விளித்தான்
வந்து யாவரும் பணிந்தனர் மன்னவற்கு இன்று
முந்தி ஆவணி மூலநாள் வந்தது முனிவு
சிந்தியா முனம் பரி எலாம் செலுத்துவான் வேண்டும். 2824

யாவரும் புனத்து இயங்கு குறு நரி எலாம் ஈட்டித்
தாவரும் பரி ஆக்கி அத் தாம் பரி நடாத்தும்
சேவகம் செய்வோர் ஆகி முன் செல்லும் முன் யாமும்
பாவகம் பட வருதும் அப்படியே எனப் பணித்தான். 2825

ஏக நாயகன் ஆணை பூண்டு எழு கணத்தவரும்
நாக நாடரும் வியப்பு உற நரி எலாம் திரட்டி
வேக வாம் பரி ஆக்கி அவ் வெம் பரி நடாத்தும்
பாகர் ஆயினார் அவர் வரும் பரிசு அது பகர்வாம். 2826

தூக்கி ஆர்த்த செம் பட்டினர் சுரிகையர் தொடு தோல்
வீக்கு காலினர் இருப்பு உடல் காப்பினர் வெருளின்
நோக்கு பார்வையர் புண்டர நுதலினர் அடியில்
தாக்கி ஆர்ப்பு எழு நகையினர் அழன்று எழு சினத்தோர். 2827

வட்டத் தோல் வரி புறம் கிடந்து அசைய வை வடிவாள்
தொட்ட கையினர் சிலர் நெடும் தேமரம் சுழல
விட்ட கையினர் சிலர் வெரிநிடை நெடுக விசிகப்
புட்டில் வீக்கி வில் தூக்கிய புயத்தினர் சிலர் ஆல். 2828

செம் படாம் செய்த போர்வையர் சிலர் பசும் படத்தான்
மொய்ம்பு வீக்கிய கவயத்தார் சிலர் கரு முகில் போல்
அம்புயம் புதை காப்பினர் சிலர் சிலர் அவிரும்
பைம் பொன் வாள் நிறப் படாம் செய்குப் பாயத்தார் சிலரால். 2829

பிச்ச ஒண் குடையார் பலர் கவரிபால் பிறங்கத்
தைச்ச தண் குடையார் பலர் சல்லி சூழ் நாற்றி
வைச்ச வண்குடையார் பலர் வாண் நிலா முத்தம்
மொய்ச்ச வெண் குடையார் பலர் மொய்ம் பினர் இவருள். 2830

தருமம் ஆதி நால் பொருள் எனும் தாளது ஞான
கரும காண்டம் ஆம் செவியது காட்சியைக் கடந்த
ஒருமை ஆம் பரம பரமாம் உணர்வு எனும் கண்ணது
அருமை ஆம் விதி முகத்தது நிடேத வால் அதுவால். 2831

தந்திரங்களால் புறவணி தரித்தது விரிந்த
மந்திரங்களால் சதங்கை தார் மணிச் சிலம்பு அணிந்த
அந்தரம் சுழல் சேமனும் அருக்கனும் மிதிக்கும்
சுந்தரப் பதம் பொறை கொளத் தூங்கு இரு புடைத்தால். 2832

மாண்ட தாரகப் பிரமம் ஆம் கலினம் வாய் கிழியப்
பூண்ட தாற் புறச் சமயம் ஆம் பொரு படை முரிய
மூண்டு பேர் எதிர் விளைத்திகன் முடிப்பது முளரி
ஆண்ட கோமுகம் அந்துரை ஆகம் மேவியதால். 2833

அண்ட கோடிகள் அனைத்தும் ஓர் பிண்டமா அடுக்கி
உண்ட நீரதா முதுகின் மேல் உப நிடக் கலனை
கொண்ட வாலிய வைதிகப் புரவி மேல் கொண்டான்
தொண்டர் பாச வன் தொடர் அவிழ்த்திட வரும் சோதி. 2834

ஆன மந்திரக் கிழார் பொருட்டு அன்றியும் வென்றி
மீனவன் பிறப்பு அறுக்கவும் வார் கழல் வீக்கி
வான நாயகன் ஏந்திய மறையுறை கழித்த
ஞான வாள் புற இருளையும் நக்கி வாள் எறிப்ப. 2835

சாய்ந்த கொண்டையும் திரு முடிச் சாத்தும் வாள் வயிரம்
வேய்ந்த கண்டியும் தொடிகளும் குழைகளும் வினையைக்

காய்ந்த புண்டர நுதலும் வெண் கலிங்கமும் காப்பும்
ஆய்ந்த தொண்டர் தம் அகம் பிரியாது அழகு எறிப்ப. 2836

பிறக்கும் ஆசையோர் மறந்தும் இங்கு அணுகன் மின்பிறப்பை
மறக்கும் ஆசையோர் இம் என வம்மின் அன்பரை வேந்து
ஒறுக்கும் நோய் களை வான் என ஒருவனும் பிறவி
அறுக்க வந்தனன் என்ப போல் பரிச் சிலம்பு அலம்ப. 2837

கங்கையைச் சடை முடியின் மேல் கரந்தனை அவள்போல்
எங்கள் தம்மையும் கரந்திடு என்று இரந்து காவேரி
துங்கபத்திரை ஆதி ஆம் நதிகளும் சூழப்
பொங்க வீழ்வ போல் ஒலியலும் கவரியும் புரள. 2838

வாவி நாறிய வால் இதழ்த் தாமரை மலரோன்
நாவிநாள் உமை நாயகன் நால் மறை பரியா
மேவினான் எனத் தான் ஒரு வெண் குடை ஆகிப்
பாவினால் என முடியின் மேல் பால் நிலாக் கால. 2839

முறையின் ஓதிய புராணம் மூ ஆறு நா மொழியும்
இறைவன் ஆம் இவன் படைத்து அளித்து அழிப்பவன் இவனே
மறை எலாம் முறையிடு பரம் பொருள் என வாய் விட்டு
அறையு மாறுபோல் இயங்கள் ஈர் ஒன்பதும் ஆர்ப்ப. 2840

மிடைந்த மாயவாம் பரித்திரள் மேல் திசை நோக்கி
நடந்த நாயகன் நான் மறைப் புரவியும் நாப்பண்
அடைந்ததால் எழும் தூளிகள் அண்டமும் திசையும்
படர்ந்த போம் வழி யாது என மயங்கினான் பரிதி. 2841

பள்ளம் ஆக்குவ திடரினைப் பள்ளத்தை மேடு
கொள்ள ஆக்குவ பார் எலாம் விலாழி கொப்பளித்து
வெள்ளம் ஆக்குவ துளியால் வெள்ளத்தை வெறிதாய்
உள்ளது ஆக்குவ புள்ளுவ உருக் கொண்ட பரிமா. 2842

கொய்யுளைப் பரி எழுந்த தூள் கோப்ப வான் கங்கை
வையை ஒத்த ஏழ் பசும் பரி செம்பரி மாவாச்
செய்தது ஒத்தது சிந்துரம் திசைக் கய முகத்துப்
பெய்தது ஒத்தது ஆல் ஒத்தது பெரும் பகல் மாலை. 2843

விளம்பு கின்ற அச் சம்பு வெம் பரித்திரள் மிதிக்கும்
குளம்பு கிண்டிய எழுந்த தூள் குன்று இறகு அரிந்தோன்
வளம் புகுந்து அடைவார் குர வழி புரி வேள்விக்
களம் புகைந்து எழு தோற்றமே அல்லது கடாதால். 2844

மட்புலம் திசை வான் புதை பூழியுள் மறைந்து
கொட் புறும் பரி சதங்கை தார் ஒலியினும் குளிர் வான்
பெட்புறும் குரல் ஒலியினும் செவியினில் பிறிது
கட் புலங்களால் கண்டிலர் வழி வரக் கண்டோர். 2845

தரங்கம் எறி முத்திவை விலாழி அல தார்மா
இரங்கும் ஒலி அல்ல திரை ஓங்கு ஒலி இன்ன
துரங்கம் அல மற்று இவை சுரர்க்கு அரசன் இன்றும்
புரம் கொல விடுத்திட வரும் புணரி என்பார். 2846

இம்பர் உலகு உள்ள வல பண்டினைய பாய்மா
உம்பர் உலகு ஆளி பரியே கொல் அது ஒன்றே
வெம் பரிதி வெம் பரிகொல் ஏழ் அவைகள் ஏழும்
பைம் பரிகள் யா இனைய பாய் பரிகள் என் பார். 2847

வெம் பணிகளைப் பொர வெகுண்டு எழுவதே யோ
பைம் புனல் உடுத்த முது பார் முதுகு கீறும்
உம்பர் உலகைப் பொர உருத்து எழுவதே யோ
அம்பர முகட்டள வடிக்கும் அழுத்தும். 2848

உத்தர திசைப் புரவி தெற்கு அடையுமாறும்
அத்தகைய தெற்கு உள வடக்கு அடையு மாறும்
அத்தகை குடக் கொடு குணக்கு அடையு மாறும்
சித்தர் விளையாடலின் வெளிப் படுதல் செய்யா. 2849

மறை மரபு சாலவரும் வன்னி இவை பொன்னித்
துறைவன் உளமும் சுடும் இரும் பனை தொடுக்கும்
அறைவன் உளமும் சுடும் அமைச்சரை ஒறுக்கும்
இறைவழுதி உள்ளமும் இனிச் சுடுவது என்பார். 2850

முந்தை ஒரு மந்திரி பொருட்டு அரசன் முன்னா
அந்தம் இல் அனீக மொடு அரும் பரியில் வந்து ஆங்கு
இந்தமறை மந்திரி இடும்பை தணிவிப்பான்

வந்தனர் கொல் இப் பரி வரும் பொருநர் என்பார். 2851

காமன் இவனே கொல் அறு கல் உழு கடப்பந்
தாமன் இவனே கொல் பொரு தாரகனை வென்றோன்
மாமன் இவனே கொல் மலை வன் சிறகு அரிந்த
நாமன் இவனே கொல் என நாரியர் அயிர்த்தார். 2852

அடுத்திடுவர் கண் நிறைய அண்ணல் அழகு எல்லாம்
மடுத்திடுவர் கை வளையை மாலை விலை என்னக்
கொடுத்திடுவர் மாலைகள் கொடுத்திடுதி அன்றேல்
எடுத்திடுதி எங்கள் வளை எங்கள் கையில் என்பார். 2853

ஏந்தல் முடி மாலை மலர் சிந்தின எடுத்துக்
கூந்தலில் மிலைந்து மதன் வாகை மலர் கொள்வார்
சாந்து அனைய சிந்தின தனம் தடவி அண்ணல்
தோய்ந்து அளவு இலா மகிழ் துளும் பினவர் ஆவார். 2854

பொட்டு அழகன் மார்பில் இடு போர்வை கவசப் பேர்
இட்டது மெய் நம் உயிர் தடுத்தமையின் என்பார்
கட்டழகன் மாலையது கண்ணி என ஓதப்
பட்டது மெய் நம் உயிர் படுத்தமையின் என்பார். 2855

இச்சையால் வடிவு எடுப்பவன் இந்திர சால
விச்சை காட்டுவான் எனப் பரி வீரனில் உலகைப்
பிச்சது ஏற்றிட மயக்கியும் காமனில் பெரிது
நச்சு மாதரை மயக்கியும் இங்ஙனம் நடந்தான். 2856

தாவு கந்துகம் இந்தியம் ஒத்தன சயமா
வாவு திண் கண மள்ளர் கண் மனங்களை ஒத்தார்
மேவி அம் மனந் தொறும் இடை விடாது நின்று இயக்கும்
ஆவி ஒத்தது நடு வரும் அரு மறைப் பரியே. 2857

துன்னும் இன்னிய முழக்கமும் துரகத ஒலியும்
அன்ன வீரர் வாய் அரவமும் திசை செவிடு அடைப்பக்
கன்னி மா மதில் சூழ் கடி நகர்க் கரைக் காதம்
என்ன எய்தினான் மறைப் பரிப் பாகன் அவ் எல்லை. 2858

கண்டவர் கடிது ஓடிக் கடி நகர் குறுகிக் கார்

விண் தவழ் மணி மாடத்து அடு சிறை மிடைகின்ற
கொண்டலின் அனையார் முன் குறுகினர் மலர் செவ்வி
முண்டக வதனத்தார் முகிழ் நகையினர் சொல்வார். 2859

மன்னவன் நெறி கோட மந்திரர் அடல் ஏறே
பன்னிற எழு முந்நீர்ப் பரவைகள் வருமா போல்
துன்னின வருகின்ற துரகதம் உள எல்லாம்
பொன் எயில் மணிவாயில் புகுவன இது போதில். 2860

ஒல்லையில் அது மன்னற்கு உரையுமின் என மேரு
வில்லவன் அருள் பெற்ற வேதியர் பெருமான் போய்ச்
செல்லது தளை இட்ட திரு மகன் அருகு எய்தி
மல் அணி திணி தோளாய் வருவன பரி என்றார். 2861

மருத்து என வருகின்ற மாக் கடல் என மன்னன்
திருத்தணி கடகப் பூண் தெரித்திட உடல் வீங்கிப்
பெருத்து எழு மகிழ் தூங்கிப் பெருவிலை மணி ஆரம்
அருத்தி கொள் கலை நல்கி அமைச்சரை மகிழ்வித்தான். 2862

ஏந்து அரி அணை நீங்கி எழுதிய தலை வாயில்
போந்து அருகு ஒளிர் மாடம் புகுந்து அரி அணை மேவிக்
காந்தளின் விரல் நல்லார் கவரிகள் புடை வீச
ஆய்ந்தவர் புறம் சூழ வரு பரி வரவேற்பான். 2863

பரன் அருள் விளையாடல் காட்டிய பரி வெள்ளம்
வருவன சிறு காலம் தாழ்த்தலும் மதி வேந்தர்
புரவலன் மனம் வெள்கிப் பொய் இது என உள்கி
அருகு அணை உழை யோரைக் குறித்தனன் அழல் கண்ணான். 2864

மன்னவர் நினைவாற்றான் மந்திரர் பெருமானைத்
துன்னினர் கொடு போய் அத் தோள் வலி மற மள்ளர்
உன்ன அரிது என அஞ்சாது ஒறுத்தனர் உரவோர் தம்
தென்னவர் தமை உள்கிச் சேவடி துதி செய்வார். 2865

பூவார் முளரிப் புத்தேள் அறியா நெறி தந்தாய்
பாவார் தென் சொல் பனுவல் மாலைப் பணி கொண்டாய்
தேவா தேவர்க்கு அரசே சிறியேன் உறு துன்பம்
ஆவா என்னாய் அஞ்சேல் என்னாய் அறனேயோ. 2866

நெஞ்சே உரையே செயலே எல்லா நின வென்றாய்
வஞ்சே போலும் அஃதேல் இன்று வாராயோ
பஞ்சேர் அடியாள் பாகா கூடல் பரமேட்டீ
அஞ்சேல் என்னாய் இது வோ அருளுக்கு அழகு ஐயா. 2867

காவி நேரும் கண்டா நாயில் கடையான
பாவி ஏனைப் பொருளாக் கொண்டு என் பணி கொண்டாய்
ஆவி யோடு இவ் உடலும் நினதே அன்றோ இன்று
ஓவி வாளாது இருந்தால் யார் என் உடையானே. 2868

என்று இரந்து இரங்கும் அன்பர் இரு செவி ஊடே ஏங்கும்
கன்று இளம் செவியின் நல் ஆன் கனை குரல் ஒசை போல
ஒன்றிய சின்னம் காளம் காகளம் ஒலிக்கும் ஓசை
வென்றி கொள் புரவிச் செந்தூள் திசை எலாம் விழுங்கக் கண்டார். 2869

வழுதியும் அரிந்து வாதவூரரை விளித்து வந்த
தொழுகுல அமைச்சர் தம் பாற்று கடவி அன்பு கூர்ந்து எம்
பழுதறு கருமம் நும் போல் பரிக்குநர் யாரை என்னா
எழுதரு மகிழ்ச்சி மேல் கொண்டு அளவளாய் இருக்கும் எல்லை. 2870

பாய் இருள் படலம் கீறிப் பல் கதிர் பரப்பித் தோன்றும்
சேய் இளம் பரிதி வானோன் அனையராய்ச் சிறந்த காட்சி
மேயின பகரோடும் விலாழியால் பரவை செய்யும்
வாயின ஆகி வந்த மாய வாம் பரிகள் எல்லாம். 2871

வண்டு உழு தாரினான் தன் மரபின் மன்னவரும் முன் நாள்
கண்டு அறியாத காட்சிக் கவனவாம் பரியை நோக்கி
அண்டர் நாயகன் போல் நாமும் ஆயிரம் கண் பெற்றாலும்
உண்டமை அரவென்று உள்ளக் குறிப் பொடும் உவகை பூத்தான். 2872

தான் என மகிழ்ச்சி என்னத் தலை தடுமாறி வேந்தன்
மான வெம் பரிமேல் வந்த வயவரை வியந்து மிக்கார்
ஆனவர் இவருள் யார் என்று அமைச்சரை வினவ ஐயா
யான் அது அறியேன் என்றார் யாவையும் அறிய வல்லார். 2873

அண்டம் எலாம் ஆதாரம் ஆகத் தாங்கும் ஆனந்தத்
தனிச் சோதி அண்டம் தாங்கும்

சண்ட மறைப் பரிதனக்கு ஆதாரம் ஆகித் தரிக்க ஒரு
காலத்து அசைவு இலாத
புண்ட ரிகத் தாள் அசையப் பாசம் நீக்கும் புனை கரத்தால்
பரி பூண்ட பாசம் பற்றிக்
கொண்டு அரசன் எதிர் போந்து மன்னா எங்கள் குதிரை
ஏற்றம் சிறிது காண்டி என்றார். 2874

இசைத்த ஐம் கதி ஐம் சாரி ஒன்பதில் இரட்டி ஆன
விசித்திர விகற்பும் தோன்ற வேந்தனும் அவையும் அன்றித்
திசைப் புலத்தவரும் மேலைத் தேவரும் மருள மேற்கொண்டு
அசைத்தனர் அசைவு அற்று எல்லா உலகமும் அசைக்கவல்லார். 2875

ஆண் தகை அவர் போல் நின்ற அடு கணத்தவரும் தம் தம்
காண் தகு புரவி எல்லா நடத்தினர் காட்டாக் கண்டு
பாண்டியன் அவரை நோக்கி நுங்களில் பதி ஆம் தன்மை
பூண்டவர் யாவர் என்றான் இவர் என்றார் புரவி வீரர். 2876

சுட்டுதற்கு அரிய சோதி சுருதி வாம் புரவியோடு
மட்டு அவிழ் தாரினான் முன் வருதலும் கருணை நாட்டம்
பட்டுள மயங்கித் தன்னை மறந்து எழீஇப் பாண்டி வேந்தன்
தட்டு அவிழ் கமலச் செங்கை தலை மிசைக் கூப்பி நின்றான். 2877

பின் அவன் ஆணையாலே மறைப்பு உண்ட பெரு நீர்க் கூடல்
மன்னவன் அறிவு தோன்ற இன்று ஒரு வயமா வீரன்
தன்னை நாம் கண்டு எழுந்து தடம் கரம் கூப்பி நின்ற
என் எனத் தவிசின் மீள இருந்திட நாணி நின்றான். 2878

நிற்கின்றான் முகத்தை நோக்கி நேர் நின்ற மறை மா வீரர்
பொன் குன்று ஆம் புயத்தாய் உன் தன் பொருள் எலாம்கொண்டு பேந்து உன்
சொல் குன்ற அமைச்சன் தானே நமக்கு நம் சூழல் நீங்கா
மற்குன்ற நமர்க்கும் ஆர வழங்கினான் வழங்கலாலே. 2879

வானவர் தமக்கே அன்றி மனிதருக்கு இசையத் தக்க
வானவன் அறிஞர் இட்ட விலை வரம்பு அகன்ற நூலின்
மானம் உள்ளவனாய் நல்ல வாசிகன் உனக்கு வந்த
ஊனம் இல் பரிமா விற்கும் வாணிகம் உரைப்பக் கேட்டி. 2880

இன்ன ஆம் பரிகள் என்பால் இன்று நீ கயிறு மாறி
நின்னவாக் கொள்ளும் நீரான் இன்ன ஆம் பரியே நாளை

என்னவாய் இருந்த வேனும் எனக்கும் உன் தனக்கும் கொண்டு
மன்னவா கருமம் இல்லை பரிவிலை வழக்கு ஈது என்றார். 2881

அப்பொழுது அரசன் தானும் அகம் மகிழ்ந்து அதற்கு நேர்ந்து எம்
மெய்ப் புகழ் அமைச்சர் தம்மின் மேம்படு வாத வூரர்
ஒப்புரும் திறத்தர் ஆகியும் இடை நட்பான் மிக்க
துப்புர உடையர் ஆனார் என நனி சொல்லினானே. 2882

உரகத வாரந் தோற்றாது உயர் மறைப் பரிமேல் வந்தார்
மரகத நிறத்து நிம்ப மாலை தாழ் மார்பினார்க்குக்
குரகதம் கயிறு மாறிக் கொடுப்பவர் பொதுமை ஆய
துரகத இலக்கணங்கள் சொல்லுவான் தொடங்கினாரே. 2883

காயும் வேல் மன்ன ஒரிக் கடும் பரி அமையம் வந்தான்
ஞாயிலும் தாண்டிச் செல்லும் நாட்டமும் நுழையாச் சால
வாயிலும் நுழையும் கண்ட வெளி எலாம் வழியாச் செல்லும்
தீய வெம் பசி வந்து உற்றால் தின்னாத எனினும் தின்னும். 2884

பொருவில் சீர் இலக்கணப் புரவி ஒன்று தான்
ஒருவனது இடை வதிந்து உறையின் ஒல் என
மருவுறும் திருமகன் மல்லல் செல்வமும்
பெருகுறும் கீர்த்திகள் பல்கும் பெற்றியால். 2885

நெய்த்திடு மாந்தளிர் நிறத்த நாவின
வைத்திடு குளம்புகள் உயர்ந்த வார்ந்து நேர்
ஒத்திடு எயிற்றின உரமும் கண்டமும்
பைத்திடு அராப் படம் போன்ற பாடலம். 2886

அகலிய நுதலின வாய்ந்த குஞ்சி போல்
நிகர் அறு கொய்யுளை நிறம் ஒன்று ஆயின
புகரறு கோண மூன்றாகிப் பொற்புறு
முகம் உடையன வயமொய் கொள் கோடகம். 2887

முட்டிய சமர் இடை முகத்தில் வாளினால்
வெட்டினும் எதிர்ப்பதாய்க் குரங்கு வேங்கை தோல்
பட்டிமை நரி அரி சரபம் பாய் முயல்
எட்டிய கதியின இவுளி என்பவே. 2888

உன்னத நீளம் உண்டாகிச் சங்கு வெண்
கன்னலின் வாலிய விலாழி கால்வதாய்ப்
பின்னம் ஆகிய தனி வன்னம் பெற்றுமை
வன்னமும் உடையது வன்னி ஆவதே. 2889

திணி தரு கழுத்தினில் சிறந்த தெய்வதம்
அணி உளது ஆகி எண் மங்கலத்து ஆய்
அணி தரு பஞ்சகல்யாணம் உள்ளதாய்க்
குனிதரு நீரது குதிரை ஆவதே. 2890

குங்குமம் கருப்புரம் கொழும் திண் கார் அகில்
பங்க மான் மதம் எனக் கமழும் பாலதாய்ச்
சங்கமும் மேகமும் சரபமும் கொடும்
சிங்கமும் போல் ஒலி செய்வதாம் பரி. 2891

நாலு கால்களும் கடைந்து எடுத்து நாட்டினால்
போல் வதாய்க் கொட்புறும் போது சுற்று தீக்
கோலை ஒப்பாகி மேற்கொண்ட சேவகன்
காலினுள் அடங்குவது ஆகும் கந்துகம். 2892

அரணமும் துருக்கமும் ஆரும் தாண்டிடும்
முரண் அது ஆகி இம் முற்றிலக்கணப்
புரணம் எல்லாம் நிறை புரவி போந்தன
இரண வேலாய் வயது எட்டுச் சென்ற ஆல். 2893

பகைத் திறம் உருக்கும் இப் பரிகள் மன்ன நீ
உகைத் திடத் தக்க என்று ஓதி வேத நூல்
சிகைத் தனிச் சேவகர் திரும்பித் தம்மனோர்
முகத்தினை நோக்கினார் மொய்த்த வீரரும். 2894

வாம்பரி மறைக்கு எலாம் வரம்பு காட்டுவது
ஆம் படி கண்டவர் அறிவும் பிற்படப்
போம் படி முடுக்கினார் புரவி யாவையும்
வேம் பணி தோளினான் வியப்பும் எய்தியே. 2895

ஆத்தராய் மருங்கு உறை அமைச்சர் யாரையும்
பார்த்து அசையா முடி அசைத்துப் பைப்பயப்
பூத்த வாள் நகையொடு மகிழ்ச்சி பொங்கினான்

தீர்த்தனு நடத்தினான் தெய்வ மாவினை. 2896

இருவகைச் சாரியும் எதிர்ந்து வட்டமாய்
வருவழி ஞெகிழிபோல் மறுகு எலாம் ஒரு
துரகதமே நிலை நின்ற தோற்றம் ஒத்து
ஒருவற நடத்தினான் ஒரு கணத்தினே. 2897

இந்நிலை அலமரும் இவுளி மேல் ஒரு
மின்னிலை வேலினான் வினவத் தம் கையின்
மன்னிய கங்கணம் விடுத்து மா நகர்
தன் நிலை காட்டிய தன்மை ஒத்ததே. 2898

பல் நிறம் உடையவாம் பரியும் வீதியுள்
பின்னிவா எனப் பின்னி வட்டமாய்த்
தன் நிகர் மதுரை ஆம் தையல் கை அணி
துன்னிய பல் மணித் தொடியும் போன்றவே. 2899

இந்திய நுதலினார் இடித்த பொன் சுணம்
சிந்திய மருகிடை நடக்கும் திண் பரிப்
பந்தியின் எழும் துள் சுவணப் பாரின் மா
உந்திய எழுந்த பொன் பூழி ஒத்ததே. 2900

தேவரும் மனிதரும் திருந்து கூடலார்
யாவரும் உவப்பு உற இவுளி விட்டு மண்
காவலன் முன் குறீஇக் கருணை மாக் கடல்
மா வரும் திறன் எல்லாம் வகுத்துத் தோற்றும் ஆல். 2901

வளம் கொள் காம் போசம் இப்பரி இம்மா மந்தரம்
இந்தவாம் புரவி
விளங்கு காந்தாரம் இக் குரங்கு உளை வான்மீக மிக்
கந்துகம் சிந்து
துளங்கு இல் பாஞ்சலம் இக் கன வட்டம் துளுவம்
இக் குதிரை இத்துரகம்
களங்கம் இல் இமயம் பருப்பதம் இந்த கற்கி இம்
மண்டிலம் கலிங்கம். 2902

ஆரியம் இந்தப் பாடலம் இந்த அச்சுவம் கூர்ச்சரம் இந்தச்
சீரிய துரங்கள் கேகயம் இந்த திறல் உறு கொய் உளை யவனம்
வேரி அம் பணை சூழ் மக்கம் இக் கொக்கு விரி பொழில் வனாயுசம் இந்தப்

போர் இயல் இவுளி பல்லவம் இந்தப் பொலம் புனை தார் நெடும் பாய் மா. 2903

கற்றவர் புகழ் சவ்வீரம் இக் கோரம் கன்னி மாராட்டம்
இவ் வன்னி
கொற்றவர் பயில் வாசந்திகம் இந்தக் கோடகம் காடகம்
கன்னல்
உற்ற கான்மீரம் இவ் வயம் வயந்தம் இந்த உத்தம
கோணம் மாளவம் இவ்
வெற்றி சேர் குந்தம் கந்தரம் இந்த விறல் புனை அரி சவு
ராட்டம். 2904

விரி பொழில் சாலி வேய் மிகு கிள்ளை வேறு தீவந்தரம்
இந்தக்
துரகதம் இந்தக் குரகதம் கொண்டல் சூழ் குருக்
கேத்திரம் இன்ன
பரவு பல் வேறு தேயமும் உள்ள பரி எலாம் இவன் தரு
பொருளின்
விரவிய நசையால் கொணர்ந்து இவர் வந்தார் வேந்த
கேள் இந்த வாம் பரியுள். 2905

வெண்ணிறம் சிவப்பு பொன் நிறம் கறுப்பு வேறு அற
விரவிய நான்கு
வண்ணம் உள்ளனவும் வேறு வேறு ஆய மரபு மை
வண்ணமும் வந்த
எண்ணிய இவற்றின் சிறப்பு இலக்கணத்தை இயம்புதும்
கேள் என இகல் காய்
அண்ணல் அம் களிற்றார் அரு மறை பரிமேல் அழகியார்
அடைவு உற விரிப்பார். 2906

வெள்ளி நித்திலம் பால் சந்திரன் சங்கு வெண் பனி
போல்வது வெள்ளைத்
துள்ளிய புரவி மாதுளம் போது சுகிர்ந்த செம் பஞ்சியின்
குழம்பில்
தெள்ளிய நிறுத்த செம் பரி மாமை சிறைக் குயில் வண்டு
கார் முகில் போல்
ஒள்ளிய கரிய பரி எரி அழலான் உரோசனை நிறத்த
பொன் பரியே. 2907

தெரிதர வகுத்த இந் நிறம் நான்கும் செறிந்தது மிச்சிரம்
எனப் பேர்

உரை செய்வர் முகமார் புச்சிவால் கால் என்று உரைத்த
எட்டு உறுப்பினும் வெண்மை
விரவியது அட்ட மங்கலம் தலை வால் வியன் உரம் என்ற
இம் மூன்றும்
ஒருவிய உறுப்பு ஓர் ஐந்தினும் வெள்ளை உள்ளது பஞ்ச
கல்யாணி. 2908

அணி கிளர் கழுத்தில் வலம் சுழித்து இருந்தால் அறிந்தவர்
அதனையே தெய்வ
மணி என இசைப்பர் முகம் தலை நாசி மார்பம் இந்
நான்கும் இவ் இரண்டு
பணி தரு சுழியும் நுதல் நடுப் பின்னைப் பக்கமும்
ஒவ்வொரு சுழியும்
துணி தர இருப்பது இலக்கணம் உளது இச் சுழி இலது
இலக்கண வழுவே. 2909

பிரிஉற உரத்தில் ஐஞ்சுழி உளது பேர் சிரீ
வற் சமா நுதலில்
இரு சுழி ஆதல் முச்சுழி ஆதல் இருக்கினும்
நன்று அது அன்றேல்
ஒருவற நான்கு சுழி வலம்புரியா
உள்ளது நல்லது அன்றி
இருசுழி முன்னம் கால்களின் மூலத்து இருக்கினும்
நல்லது என்று இசைப்பார். 2910

கள நடு இரட்டைச் சுழி உடைப் பரிதன் கருத்தினுக்கு
அற இடி காட்டும்
அளவறு துன்ப மரணம் உண்டாக்கும் அவை
கணைக்காலில் உள ஆகில்
உள பயம் துன்பம் நிகள பந்தனம் மேல் உதடு முன்
காலடி கபோலம்
வளர் முழந்தாள் இந் நான்கினும் சுழிகள் மன்னினும்
தலைவனை வதைக்கும். 2911

இச் சுழி உடைய புரவி பந்தியில் யாத்து இருக்கினும்
பழுது இவை கிடக்க
அச்சம் இல் பரிக்குப் பிராயம் நால் எட்டாம் அவத்தை
பத்தாகும் ஒவ் வொன்றில்
வைச்சது மூன்று வருடமும் இரண்டு மதியமும் பன்னிரு
நாளும்
நிச்சயித்து அளந்தார் இன்னமும் ஒரு சார் நிகழ்த்திடும்

இலக்கணம் அதுகேள். 2912

எவ்வண்ண பேதம் மிகுந்து இருந்தாலும் வெள்ளை
கலந்து இருந்தது ஆனால்
அவ்வண்ணப் பரி நன்று கரும்புரவிக்கு அக டேனும்
அகன் மார்பேனும்
செவ்வண்ணம் இருக்கின் அது சயம் உளது அப்படி
வெண்மை சேர்ந்தால் அந்த
மைவ் வண்ணப் பரியின் பேர் வாருணம் ஆம் சயம்
கொடுக்கும் மாற்றார் போரில். 2913

மகவு அளிக்கும் பிடர் வெளுப்பு மகிழ்வு அளிக்கும் உரம்
வெளுப்பு மணி தார்க் கண்டத்து
அக வெளுப்புப் பொருள் கொடுக்கும் முக வெளுப்புச்
சயம் கொடுக்கும் அதன் பின் பக்கத்து
அக வெளுப்புச் சுகம் பயக்கும் இட வெளுப்புச் சந்தானம்
தழைக்கும் செல்வம்
மிக வளர்க்கும் தனம் பலதானியம் நல்கும் வலப் புறத்து
வெள்ளை மாதோ. 2914

நல் புறம் வான் முக மூன்றும் வெளுத்த பரி வென்றி
தரும் நாபி தொட்டு
முன் புறம் எலாம் பரிதி எனச் சிவந்து மதி எனப் பின்
முழுதும் வெள்கும்
பொற்புடைய வயப் பரிக்குப் பகல் விசய மதி என முற்
புறம்பு வெள்கிப்
பின் புறம் எல்லாம் கதிர் போல் சிவந்த பரிக்கு இரா
விசயம் பெருகும் அன்றே. 2915

வந்தனவால் இவ்விரண்டு வகைப் பரியும் புரவி
அடிவைத்தால் ஒத்த
பந்து எனவும் நின்றாலோ மலை எனவும் ஒலித்தாலோ
பகடு சீறும்
வெம் தறுகண் அரி எனவும் வேகத்தால் காற்று எனவும்
மிதிக்கும் கூத்தால்
சந்த நடமகன் எனவும் நடக்கில் அரி களிறு எனவும்
தகையது ஆகி. 2916

குல மகள் போல் கவிழ் முகமும் கரு நெய்தல் எனக்
கண்ணும் கொண்டு கார் போல்

நிலவி சீர் வண்ணமும் கார் நெய்தல் எனக் கடிமணமும்
நிறைந்து நாற்ற
மலர் அகில் சந்தெரி மணிப் பூண் அலங்கரிக்கில் ஆனாத
மகிழ்ச்சி எய்தி
இலகுவதுத் தமவாசி என்று உரைப்பர் பரிவேதம் எல்லை
கண்டோர். 2917

நூறு விரல் உத்தமம் ஆம் பரிக்கு உயர் ஈர் எட்டு வில்
நூறு நீக்கிக்
கூறு விரல் மத்திமம் ஆம் பரிக்கு அறுபத்து ஒன்று தமக்
குதிரைக்கு என்ப
ஈறு இல் புகழாய் பொரு நரிப் பரியைப் பூசனம் செய்து
இறைஞ்சிப் பாசம்
மாறுவார் என மணித்தார் சதங்கை சிலம்பு அணிவித்து
மதிக்கோ மாறன். 2918

கொத்து அவிழ் தார் நறும் சாந்தம் கொண்டு செழும் புகை
தீபம் கொடுத்துப் பூசை
பத்திமையால் செய்து இறைஞ்சி எதிர் நிற்ப ஆலவாய்ப்
பரனை நோக்கிக்
கைத்தலம் தன் சிரம் முகிழ்த்து வாழி எனப் பரி
கொடுத்தான் கயிறு மாறி
முத் தொழிலின் மூவராய் மூவர்க்கும் தெரியாத முக்
கண் மூர்த்தி. 2919

உவநிடக் கலணை வாசி ஒன்று அலால் நின்ற மாயக்
கனவாம் புரவி எல்லாம் கொடுத்திடக் கவர்ந்து வீறு
தவனன் இல் விளங்கும் தென்னன் தன் பெரும் கோயில் உய்ப்பப்
பவனமும் கடலும் போலக் கொண்டு போய்ப் பந்தி சேர்த்தார். 2920

வாசி வாணிகர்க்குத் தென்னன் வெண் துகில் வரிசையாக
வீசினான் பாணற்கு ஏவல் செய்தவர் வெள்கு வாரோ
கூசிலா நேசர்க் காப்பான் குதிரையின் இழிந்து ஏற்றம் தத்
தூசினை இரண்டாம் கங்கை என முடி சூடி நின்றார். 2921

இனைய தூசு இவன் பால் ஊர்தி இழிந்து நின்று ஏற்றுச் சென்னி
புனைவது என் இவர் கை யோடும் புனைந்த திக்கு உடையும் பூண்ட
கனல் அராப் பூணு மன்னன் கவருமோ என்று தம்மின்
வினவினர் வெகுண்டு சொன்னார் கணத் தனி வீரர் எல்லாம். 2922

அறம் தரு கோலான் வெவ்வேறு அடுபரி வயவர் யார்க்கும்
நிறம் தரு கலிங்கம் ஈந்தான் நேர்ந்து அவை வாங்கி அன்பில்
சிறந்து அருள் வடிவாய் வந்தார் செழு மறைப் புரவி யோடு
மறைந்தனர் மறைந்தார் ஒக்க மாய வாம் பரிமேல் வந்தார். 2923

இருமைக்கும் துணையாய் நின்ற இரு பிறப்பாளர்க்கு ஏற்ப
அருமை தாம் சிறப்பு நல்கி அவர் இடத்து அவரை உய்த்துப்
பருமத்த யானை வேந்தன் பகல் கதிர் வானத்து உச்சி
வரும் அப்போது எழுந்து செம் பொன் மாட நீள் கோயில் புக்கான். 2924

ஏனை மந்திரரும் தம் தம் இல் புகப் புரவி பார்த்த
மா நகராரும் தம்தம் மனை புகப் பரியின் பாகர்
ஆனவர் தாமும் கோயில் அடைந்து தம் விளையாட்டு எல்லாம்
மீன் நெடும் கண்ணி னாட்கு விளம்பினர் இருந்தார் அன்றே. 2925

நரி பரியாக்கிய படலம் சுபம்

--------------------

## 60. பரி நரியாக்கி வைகை அழைத்த படலம் ( 2926-2991 )

ஞான நாயகன் அணையா நரி பரி வெள்ளம்
ஆன வாரு உரை செய்து மீண்டு அப் பரி நரியாய்ப்
போன வாறு கண்டு அமைச்சரைப் புரவலன் கறுப்ப
வான ஆறு போல் வைகை நீர் வந்தவாறு உரைப்பாம். 2926

நெருங்கு தூரிய முழக்கமும் தானையும் நிமிர
மருங்கு இலாதவர் வந்து எதிர் மங்கலம் ஏந்த
அரம் கொல் வேலினான் அருளிய வரிசை யோடு அணைந்து
புரம் கொல் வேதியர்க்கு அன்பர் தம் திரு மனை புகுந்தார். 2927

உடுத்த சுற்றமும் கழகமும் ஒட்டிய நட்பும்
அடுத்த கேண்மையால் வினவுவார் அவர் அவர்க்கு இசைய
எடுத்த வாய்மையான் முகமனும் மகிழ்ச்சியும் ஈந்து
விடுத்த வாதவூர் ஆளிகள் வேறு இடத்து இருந்து. 2928

கரந்தை சூடிய ஆலவாய்க் கண் நுதல் ஆம் அன்று
இரந்த வண்ணமே யாம் கொடு போகிய எல்லாம்

பரந்த அன்பரும் தானும் கொண்டு எம்மையும் பணி கொண்டு
அரந்தை தீர்த்தனன் அன்றியும் அரசனுக்கு இசைய. 2929

நல்ல வாம்பரி செலுத்தினன் நமக்கு இனிக் கவலை
இல்ல வாம்படி ஆக்கினன் இன்னம் ஒன்று உலகை
வெல்ல வாம் படி தன் அருள் விளைக்கும் ஆனந்தம்
புல்லவாம் பதி எமைத் தவம் பூட்டுவான் வேண்டும். 2930

என்ற ஆதரம் தலைக் கொள இக பரத்து ஆசை
ஒன்றும் இன்றியே உணர் வினுக்கு உள் உணர்வாகத்
துன்று பூரணம் ஆகிய சுந்தரச் சோதி
மன்றுள் ஆடிய சேவடி மனம் புதைத்து இருந்தார். 2931

நாளையும் திரு ஆலவாய் நாயகன் தமரை
ஆள மண் சுமந்து அருளும் என்று அதனையும் காண்பான்
ஊளை வெம்பரிப் பூழிப் போர்ப்பு உண்ட மெய் கழுவி
மீள வேண்டுவான் போல் கடல் குளித்தனன் வெய்யோன். 2932

ஈசன் ஆடல் வெம் பரிக் குழாத்து எழுந்த செம் தூளான்
மாசு மூழ்கிய அண்டத்தை வான் நிலா என்னும்
தூசினால் அறத் துடைப் பவன் என மணித் தொகுதி
வீசும் ஆழியுள் முளைத்தனன் வெண் மதிக் கடவுள். 2933

சேய தாரகை வருணம் ஆம் தீட்டிய வானம்
ஆய வேட்டினை இருள் எனும் அஞ்சனம் தடவித்
தூய வாணிலா என்னும் வெண் தூசினால் துடைப்பான்
பாய வேலையின் முளைத்தனன் பனி மதிக் கடவுள். 2934

கள் ஒழுக்கு தார் மீனவன் கடி மனை புகுந்த
புள்ளுவ அப் பரி நள் இருள் போது வந்து எய்தப்
பிள்ளை ஆகிய மதி முடிப் பிரான் விளை யாட்டால்
உள்ளவாறு தம் வடிவு எடுத்து ஒன்றொடு ஒன்று சாவும். 2935

சங்கின் ஓசையும் பிணப் பறை ஓசையும் சரிந்த
மங்குல் ஓதிய அழுகுரல் ஒசையும் வடம் தாழ்
கொங்கை சேப்புறக் கை எறி ஓசையும் குளிர
எங்கு நாஞ்செவி பருகுவ இன் அமுது என்ன. 2936

வாம் பரித்திரள் ஆகி நாம் மனித்தரைச் சுமந்து
தாம்பு சங்கிலி தொடக்கு உண்டு மத்திகை தாக்க
ஏம்பல் உற்றனம் பகல் எலாம் இப்பொழுது ஈண்டு
நாம் படைத்தன நம் உரு நம் விதி வலத்தால். 2937

கானகம் தனில் ஒழுகு நாள் முதல் இந்தக் கவலை
ஆன துன்பம் நாம் அறிந்தில இன்னமும் ஆர்த்த
மான வன் தொடர் வடுக்களும் மத்திகைத் தழும்பும்
போன அன்றின் இப் புலருமுன் போவதே கருமம். 2938

உள்ளம் ஆர நாம் தின் பதற்கு கூன் சரிந்து ஒழுகும்
நொள்ளை நாகில நந்தில நுழைந்தளை ஒதுங்கும்
கள்ள நீள் சுவைக் கான ஞெண்டும் இலவினில் கடலை
கொள்ளின் ஓடும் பைம் பயறு புல் கொள்வதை அடாதால். 2939

நாடிக் காவலன் தமர் உளார் நகர் உளார் கண்டால்
சாடிக் காய்வரே புலரும் முன் சங்கிலித் தொடர் நீத்து
ஓடிப் போவதே சூழ்ச்சி என்று ஊக்கம் உற்று ஒருங்கே
கூடிப் பேசின ஊளை வாய்க் குறு நரிக் குழாங்கள். 2940

வெறுத்த காணமும் கடலையும் விரும்பின கோழ் ஊன்
துறுத்த நாகு நம் தலைவனைச் சங்கிலித் தொடரை
முறித்த கால்களில் கட்டிய கயிற்றொடு முளையைப்
பறித்த ஊளை இட்டு எழுந்தன போம் வழி பார்ப்ப. 2941

நின்ற நீள் நிலை பந்தியுள் நெருங்கு மா நிரையைச்
சென்று தாவி வாள் எயிறு உறச் சிதை படக் கடித்து
மென்று சோரியைக் குடிப்பன வீக்கிய முளையோடு
ஒன்ற ஓடவே அண்டத்தில் ஊறு செய்வன ஆல். 2942

ஊளை ஓசை கேட்டு இம் என உறக்கம் நீத்து எழுந்து
காளை வீரராம் மந்துரை காப்பவர் நெரு நல்
ஆளி போல் வரு பரி எலாம் நரிகளாய் மற்றை
ஒளி மா நிரை குடர் பறித்து உண்பன கண்டார். 2943

காண்டலும் சில வலியுள் கடிய உள் அரணம்
தாண்டி ஓடின சில நரி சாளர முழையைத்
தூண்டி ஓடின சில நரி சுருங்கையின் வழியால்

ஈண்டி ஓடின நூழில் புக்கு ஏகின சிலவே. 2944

முடங்கு கால் உடைச் சம்புவும் மூப்பு அடைந்து ஆற்றல்
அடங்கும் ஓரியும் கண் குருடாகிய நரியும்
ஒடுங்கி நோய் உழந்து அலமரும் இகலனும் ஓடும்
இடங்கள் கண்டில பந்தியில் கிடந்தன ஏங்கி. 2945

கிட்டி ஓடினர் வெருட்டு வோர் கீழ் விழக் கடித்துத்
தட்டி ஓடுவ சில எதிர் தடுப்பவர் அடிக் கீழ்
ஒட்டி ஓடுவ சில கிடந்து ஊளை இட்டு இரங்கும்
குட்டியோடு அணைத்து எயில் இறக் குதிப்பன சிலவே. 2946

மறம் புனைந்த வேல் மீனவன் மாளிகை தள்ளிப்
புறம்பு அடைந்த இந் நரி எலாம் பொய்கையும்யானம்
அறம் பயின்ற நீள் மனை மறு கால் அங் கவலைத்
திறம் படர்ந்த பல் மாட நீள் நகர் எல்லாம் செறிந்த. 2947

மன்றும் சித்திர கூடமும் மாடமும் மணி செய்
குன்றும் தெற்றியும் முற்றமும் நாளோடு கோள்வந்து
என்றும் சுற்றிய பொங்கரும் எங்கணும் நிரம்பி
ஒன்றும் சுற்றமோடு ஊளை இட்டு உழல்வன நரிகள். 2948

கரியின் ஓசையும் பல்லிய ஓசையும் கடும் தேர்ப்
பரியின் ஓசையும் இன் தமிழ் ஓசையும் பாணர்
வரியின் ஓசையும் நிரம்பிய மணி நகர் எங்கும்
நரியின் ஓசையாய்க் கிடந்தது விழித்தது நகரம். 2949

விழித்த ஞாளிகள் விழித்தன கேகயம் வெருவி
விழித்த கோழிகள் விழித்தன மதுகரம் வெருண்டு
விழித்த ஓதிமம் விழித்தன குருகினம் விரைய
விழித்த வாரணம் விழித்தன கரும் கொடி வெள்ளம். 2950

அட்டில் புக்கன நிணத்தினை அழல் பசி உருக்கப்
பட்டு அடுக்கிய கரும் கலம் உருட்டுவ பாகு
சுட்ட சோறு பல் உணவு வாய் மடுப்பன சூழ்ந்த
குட்டி உண்ணவும் கொடுப்பன கூவிளி கொள்வ. 2951

புறவு பூவை பைங் கிள்ளைகள் பூத் தலைச் சேவல்

பிறவும் ஆருவ உறங்கிய பிள்ளையைக் கொடுபோய்
நறவு நாறிய குமுதவாய் நகை எழ நக்கி
உறவு போல் விளையாடுவ ஊறு செய்யாவால். 2952

பறிப்ப வேரொடு முன்றில் வாய்ப் படர் பசும் கொடியைக்
கறிப்ப நாகு இளம் காய் எலாம் கரும்பு தேன் கவிழ
முறிப்ப வாய் இட்டுக் குதட்டுவ வண்டு வாய் மொய்ப்பத்
தெறிப்ப ஊளை இட்டு ஆடுவ திரிவன பலவே. 2953

ஆயிரம் பொரி திரி மருப் படல் கெழு மேடம்
ஆயிரம் கரும் தாது நேர் ஆக்கையை ஏனம்
ஆயிரம் கவிர் அனைய சூட்டவிர் தலைக் கோழி
ஆயிரம் குறும் பார்ப் பொடும் ஆருயிர் செகுப்ப. 2954

பின் தொடர்ந்து நாய் குரைப் பொடு துரந்திடப் பெயர்ந்து
முன் தொடர்ந்து உயிர் செகுப்பன வெம் சினம் ஊட்டி
வன் தடம் புய மள்ளர் போய் வலி செயப் பொறாது
கன்றி வந்து செம் புனல் உகக் கடிப்பன அனந்தம். 2955

பன்றி வாய் விடும் இரக்கமும் பல் பொறி முள்வாய்
வென்றி வாரணச் சும்மையும் ஏழகத்து ஒலியும்
அன்றி நாய் குரைப்பு ஓசையும் ஆடவர் ஆர்ப்பும்
ஒன்றி ஊளை வாய் நரிக்குரற்கு ஒப்பது உண்டு ஒருசார். 2956

கங்குல் எல்லை காணிய நகர் கண் விழித்து ஆங்கு
மங்குல் தோய் பெரு வாயில்கள் திறந்தலும் மாறா
தெங்கும் ஈண்டிய நரி எலாம் இம் என ஓடிப்
பொங்கு கார் இருள் துணி எனப் போயின கானம். 2957

ஈறு இலாச் சிவ பரம் சுடர் இரவி வந்து எறிப்பத்
தேறு வார் இடைத் தோன்றிய சிறு தெய்வம் போல
மறு இலாத பல் செம் கதிர் மலர்ந்து வாள் எறிப்ப
வீறு போய் ஒளி மழுங்கின மீன் கணம் எல்லாம். 2958

அண்டருக்கு அரிதாகிய மறைப் பொருள் அழுகைத்
தொண்டருக்கு எளிதாகிய மண் சுமந்து அருள வருத்தம்
கண்டு அருட்கழல் வருடுவான் கைகள் ஆயிரமும்
கொண்டு அருக்க வெம் கடவுளும் குண கடல் உதித்தான். 2959

கவன வெம்பரி செலுத்தி மேல் கவலை தீர்ந்து உள்ளே
சிவம் உணர்ந்தவர் சிந்தை போல் மலர்ந்த செம் கமலம்
உவமையில் பரம் பொருள் உணர்ந்து உரை இறந்து இருந்தோர்
மவுன வாய் என அடங்கின மலர்ந்த பைம் குமுதம். 2960

பந்தியாளர்கள் யாது எனப் பகர்தும் என்று அச்சம்
சிந்தியா எழும் தொல்லை போய்த் திரள் மதம் கவிழ்க்கும்
தந்தியான் அரசு இறை கொளும் இருக்கையைச் சார்ந்து
வந்தியா உடல் பனிப்பு உற வந்தது மொழிவார். 2961

காற்றினும் கடும் கதிய வாய்க் கண்களுக்கு இனிதாய்
நேற்று வந்த வாம் பரி எலாம் நின்றவாம் பரிக்குக்
கூற்று எனும் படி நரிகளாய் நகர் எலாம் குழுமி
ஊற்றம் செய்து போய் காட்டகத்து ஓடிய என்றார். 2962

கருத்துறாத இச் சொல் எனும் கடிய கால் செவியாம்
துருத்தி ஊடு போய்க் கோபம் ஆம் சுடுதழல் மூட்டி
எரித்த தீப் பொறி சிதறிடக் கண் சிவந்து இறைவன்
உருத்த வாறு கண்டு அமைச்சரும் வெருவினார் ஒதுங்கி. 2963

அமுதம் உண்டவன் நஞ்சம் உண்டால் என முதல் நாள்
சமர வெம்பரி மகிழ்ச்சியுள் ஆழ்ந்தவன் அவையே
திமிர வெம் குறு நரிகளாய்ச் சென்றவே என்னா
அமரர் அஞ்சிய ஆணையான் ஆர் அஞர் ஆழ்ந்தான். 2964

அருகு இருக்கும் தொல் அமைச்சர் தமை நோக்கி
வாதவூர் ஆளி என்னும்
கருகு இருட்டு மனக்கள்வன் நம் முடைய பொருள்
முழுதும் கவர்ந்து காட்டில்
குருதி நிணக் குடர் பிடுங்கித் தின்று திரி நரிகன் எல்லம்
குதிரை ஆக்கி
வரவிடுத்தான் இவன் செய்த மாயம் இது கண்டீரோ மதி
நூல் வல்லீர். 2965

இம் மாயம் செய்தானை என் செய்வது என உலகில்
எமருக்கு எல்லாம்
வெம் மாசு படு பாவம் பழி இரண்டும் பட இழுக்கு
விளைத்துத் தீய

கைம் மாறு கொன்றான் தன் பொருட்டு இனியாம் ஏது
 உரைக்கக் கடவேம் என்று
சும்மாது சிரம் தூக்கி எதிர் ஆடாது இருந்தார் அச் சூழ்
 வல்லோர்கள். 2966

அவ் வேலை மனக்கு இனிய பரி செலுத்தி அரச காரியம்
 நன்று ஆக்கி
வெவ் வேலை மனக் கவலை விடுத்தனம் என்று அக
 மகிழ்ச்சி விளைவு கூர
மைவ் வேலை விடம் உண்ட வானவனை நினைந்து அறிவு
 மயமாம் இன்ப
மெய் வேலை இடை வீழ்ந்தார் விளைந்தது அறியார்
 வந்தார் வேந்தன் மாடே. 2967

வந்தவரைச் சிவந்த விழிப் பொறி சிதறக் கடுகடுத்து
 மறவோன் நோக்கி
அந்தம் இலாப் பொருள் கொடுபோய் நல்ல வயப் பரி
 கொடு வந்த அழகு இதாகத்
தந்தனை அன்றோ அரச கருமம் முடித்து இசை நிறுத்த
 தக்கோர் நின்போல்
எந்த உலகு உளரேயோ என வெகுண்டான் அது
 கேட்ட ஈசன் தொண்டர். 2968

குற்றம் ஏது அப் புரவிக்கு எனக் கேட்டார் கோமகனும்
 குற்ற மேதும்
அற்றத்தால் அரை இரவில் நரியாகி அயல் நின்ற புரவி
 எல்லாம்
செற்றுவார் குருதி உக நிணம் சிதறக் குடர் பிடுங்கித்தின்று
 நேர்வந்து
உற்ற பேர்க்கு ஊற்றம் இழைத்து ஊர் கலங்க காட்டகத்தில்
 ஓடிற்று அன்றே. 2969

கண்ணும் இடும் கவசமும் போல் காரியம் செய்து
 ஒழுகியதும் காலம் பார்த்து எம்
எண்ணரிய நிதி ஈட்டம் கவர்வதற்கோ நின் அமைச்சின்
 இயற்கை நன்று ஆல்
புண்ணிய வேதியர் மரபில் பிறந்தன என்று ஒரு பெருமை
 பூண்டாயே நீ
பண்ணிய காரியம் பழுது பிறரால் தண்டிக்கப் படுவர்
 என்றான். 2970

தண்ட லாளர்கள் இவனைக் கொடுபோய் நம் பொருள்
முழுதும் தடுத்தும் ஈர்த்தும்
மிண்டினால் வலி செய்தும் வாங்கும் என வெகுண்டு
அரசன் விளம்பக் கூற்றும்
அண்டுமேன் மறம் செய்யும் வலி உடையார் கதிரை
இருள் அடுத்துப் பற்றிக்
கொண்டு போனால் என்னக் கொடு புறம் போய்
அறவோரைக் கொடுமை செய்வார். 2971

கதிர் நோக்கிக் கனல் மூட்டும் கடும் பகல் உச்சியில்
இரவிக் கடவுள் நேர் நின்று
எதிர் நோக்க நிலை நிறுத்திக் கரங்களினும் நுதலினும்
கல் ஏற்றிச் செம் தீப்
பிதிர் நோக்கத்து அவர் ஒறுப்ப ஆற்றார் ஆய் வீழ்ந்து
இருளைப் பிளப்போன் செந்தீ
மதி நோக்கத் தனிச் சுடரை அழைத்து அழுது துதி
செய்வார் வாதவூரர். 2972

நாதவோ நாத முடிவு இறந்த நாடகம் செய்
பாதவோ பாதகனாம் என்னைப் பணி கொண்ட
வேதவோ வேதமுடிவின் விளைந்த தனிப்
போதவோ போத நெறி கடந்த பூரணவோ. 2973

ஐயவோ என்னுடைய அன்பவோ அன்பர்க்கு
மெய்யவோ மெய்யில் வினையேன் தலை வைத்த
கையவோ செய்ய கழல் காலவோ காலனைக் காய்
செய்யவோ வேதப் பரியேறும் சேவகவோ. 2974

அத்தவோ கல்லாக் கடையேனை ஆட் கொண்ட
பித்தவோ பொய் உலகை மெய்யாகப் பேதிக்கும்
சித்தவோ சித்தம் தௌ¤வித்து எனைத் தந்த
முத்தவோ மோன மயம் ஆன மூர்த்தியவோ. 2975

என்று ஏறிய புகழ் வேதியர் இரங்கும் துதி செவியில்
சென்று ஏறலும் விடை ஏறு சுந்தரன் மற்று இவர் செயலை
மன்று ஏறவும் முடிமேல் நதி மண் ஏறவும் முதியாள்
அன்று ஏறிய தேரோடும் விண் அடைந்து ஏறவும் நினைந்தான். 2976

கங்கைப் புனல் வடிவாகிய கவ்வைத் திரை வைகைச்
சங்கச்சரி அறல் ஆம் மலர்த் தார் ஓதியை நோக்கா
வங்கக் கடல் பேர் ஊழியில் வருமாறு என எவரும்
இங்கு அற்புதம் அடையப் பெருக என்றான் அருள் குன்றான். 2977

தும்பைச் சடை முடியான் ஒரு சொல்லாடவும் முன்னாள்
வம்பைப் பெரு முலையால் வரி வளையால் வடு அழுத்தும்
கொம்பைத் தவம் குலைப்பான் கடும் கோபம் கொடு நடக்கும்
கம்பை பெரு நதியில் கடும் கதியால் வரும் வைகை. 2978

பத்திக் குளிர் கமுகின் குலை பரியக் கரை முரியக்
குத்திப் பழம் சிதறச் சேறி கோட்டங்களை வீட்டி
முத்திக் கொடு கதலிப் புதன் முது சாலிகள் அரித்துக்
தத்திப் பல தருவேரொடும் தள்ளிக் கடுகியதே. 2979

பல்லாயிரம் செந்தாமரை பரப்பிக் கொடு வரலால்
நல் ஆயிரம் கண்ணான் எழில் நயக்கும் குளிர் நளினம்
கல் ஆரமும் கடி முல்லையும் கரும்பும் கொடு வரலால்
வில் ஆயிரம் கொடு போர் செயும் வேள் வீரனும் மானும். 2980

மணிமாலையும் மலர் மாலையும் சிதறா இறு மருங்கே
அணி காஞ்சியும் ஒளிர் சங்கமும் மலறப் புடை எறியாக்
கணியால் எழில் முகத்தாமரை கண்ணீரொடும் கவிழாத்
தணியா முனிவுடன் ஊடிய தடம் கண்ணியர் போலும். 2981

வரை உந்திய மது முல்லையின் எய்பாற அயிர் மருதத்
தரை உந்திய கரும்பின் குறை சாறு ஓடு உவர் ஆறோடு
இரையும் தெழு தூர் நிர் வைகை இந் நகர் வைகும்
திரையும் தெழு கடல் தம்மிடம் சென்றால் அவை போலும். 2982

கல் என்று அதிர் சும்மைப் புனல் கடி மா மதில் புறம் போய்
இல்லங்களும் சிறு துச்சிலும் மறித்திட்டு இரும் கடல் வாய்ச்
செல்லும் கல நாவாய் பல திமில் போல் சுமந்து ஏகிப்
புல்லும் புரிசையும் தள்ளி உள் புகுகின்றதை அன்றே. 2983

மறுகும் பல பொருள் ஆவண மணிவீதியும் மன்றும்
சிறுகும் கண மதமா நிரை சேரும் தெருவும் போய்
முறுகும் சினமொடு தெண் திரை மூரிப் புனல் தாவிக்

குறுகும் படி கண்டு அஞ்சினர் கொடி மா நகர் உள்ளார். 2984

சிலர் மைந்தரை எடுப்பார்களும் சிலர் மைந்தரைக் காணாது
அலமந்து அழுவாரும் சிலர் அம் கைத் தளிர் பற்றிக்
குல மங்கையர் தமைக் கொண்டுயப் போவார்களும் குறுகும்
தலம் எங்கு எனத் திகைப்பார் களும் தடுமாறு கின்றாரும். 2985

பொன் உள்ளன பணி உள்ளன பொருள் பேணல் செய்வாரும்
மன்னும் சில பொருள் கைக்கொள மறப்பார்களும் மாடம்
மின்னும் கொடி நெடு மாளிகை மேல் ஏறுகின்றாரும்
இந் நன்னகர் துயர் மூழ்குதற்கு ஏது ஏது என்பாரும். 2986

நேற்றும் பரி நரியாயின நெடு மாநகர் எங்கும்
ஊற்றம் செய்த என்பார்களும் ஒரு காலமும் இந்த
ஆற்றின் பெருக்கு இலை என்று அயர்வாரும் கடல் அரசன்
சீற்றம் கொடு முன்போல்வாரும் செயலே கொல் என் பாரும். 2987

நம் கோமகன் செம் கோல் பிழைத் தனனோ என
நவில்வார்
அம் கோல் வளை பங்கன் விளையாட்டோ என
அறைவார்
இங்கு ஆர் இது தணிப்பார் என இசைப்பார் இது
தணிப்பான்
பொங்கு ஆலம் உண்டு அருள் சுந்தரன் அலது யார்
எனப் புகல்வார். 2988

அடுத்து ஆயிரம் குண்டோதரர் எதிர் ஏற்று இருந்துஅகல் வாய்
மடுத்தாலும் அடங்காது என மதிப்பார் இது தனையும்
எடுத்து ஆயிரம் முக கங்கையின் இறைவன் சடை ஏறக்
கொடுத்தால் அலது அடங்காது இதன் கொடும் கோபமது என்பார். 2989

வான் ஆறு இழி நதி ஆயிர முகத்தால் வருவது போல்
ஆனாது எழு நீத்தம் தணியாவாறு கண்டு அன்பு
தான் ஆகிய சிவன் அன்பரை ஒறுக்கும் தறு கண்ணர்
போனார் தமது அகத்தே உள பொருள் பேணுதல் கருதா. 2990

வழுதி தன் தமர் விட்டு ஏக மதுரை நாயகன் பால் ஏகி
அழுது இசை பாடும் தொண்டில் அகப்படும் பாதம் போற்றித்
தொழுது கொண்டு அறிவாய் ஊறும் சுகப் பெரும் கடலின் மூழ்கி

எழுது சித்திரம் போல் மன்னி இருந்தனர் வாத ஊரர். 2991

பரி நரியாக்கி வைகை அழைத்த படலம் சுபம்

------------------------

## 61. மண் சுமந்த படலம் (2992-3105 )

பண் சுமந்த மறை நாடரும் பொருள் பதம் சுமந்த
முடியார் மனம்
புண் சுமந்த துயர் தீர வந்த பரி நரிகளாய் அடவி
போன பின்
விண் சுமந்த சுர நதி எனப் பெருகு வித்த வைகை இது
விடையவன்
மண் சுமந்து திரு மேனிமேல் அடி வடுச் சுமந்த கதை
ஓதுவாம். 2992

கரும் கடல் திரை இடைக் கிடந்து சுழல் கலம் எனக் கன
முகடளாய்
வரும் புனல் பரவை உட் கிடந்து நகர் மறுகி உள் கமற
வேலினான்
ஒருங்கு அமைச்சரை விளித்து நீர் கரை சுமந்து ஒருங்கி
வரும் ஓத நீர்ப்
பொருங் கதத்தினை அடக்குவீர் என அமைச்சரும்
தொழுது போயினார். 2993

வெறித் தடக்கை மத யானை மந்திரிகள் வேறு வேறு
பல குடிகளும்
குறித்து எடுத்து எழுதி எல்லை இட்டு அளவு கோல்
கிடத்தி வரை கீறியே
அறுத்து விட்டு நகர் எங்கணும் பறை அறைந்து அழைத்து
விடும் ஆள் எலாம்
செறித்து விட்டு அவர்க்கு அளந்த படி செய்மின் என்று
வருவித்தனர். 2994

மண் தொடும் கருவி கூடை யாளரும் மரம் சுமந்து
வருவார் களும்
விண் தொடும் படி நிமிர்ந்து வண் படு விரி பசும் தழையல்
ஆலமும்
கொண்டு அதிர்ந்து வருவாரும் வேறு பல கோடி கூடிய

குழாமும் நீர்
மொண்டு அருந்த வரும் ஏக காலம் என வருபுனல்
கரையின் மொய்த்தனர். 2995

கிட்டுவார் பரி நிறுத்துவார் அரவு உருட்டுவார் அடி
கிடத்துவார்
இட்டுவார் தழை நிரப்பு வார் விளி எழுப்புவார் பறை
இரட்டுவார்
வெட்டுவார் மணல் எடுத்துவார் செல வெருட்டுவார் கடிது
துடும் எனக்
கொட்டுவார் கரை பரப்புவார் உவகை கூருவார் குரவை
குழறுவார். 2996

கட்டுவார் கரை உடைப்பு நீர் கடுகல் கண்டு நெஞ்சது
கலங்குவார்
மட்டிலாத முனிவு என்னை அன்னை இனி ஆறுக என்று
எதிர் வணங்குவார்
கொட்டுவார் மணல் உடைப்பு அடங்க மகிழ் கொள்ளுவார்
குரவை துள்ளுவார்
எட்டு மாதிரமும் எட்ட வாய் ஒலி எழுப்புவார் பறை
இரட்டுவார். 2997

இந் நிலை ஊரில் உள்ளார் யாவர்க்கும் கூலி யாளர்
துன்னி முன் அளந்த எல்லைத் தொழில் முறை மூண்டு செய்வார்
அந்நிலை நகரின் தென் கீழ்த் திசை உளாள் அளவில் ஆண்டு
மன்னிய நரை மூதாட்டி ஒருத்தி பேர் வந்தி என்பாள். 2998

செவி உணவு ஆன வேதசிரப் பொருள் உணர்ந்து செந்தீ
அவி உணவு ஊட்டும் ஈசன் அன்பரின் ஆற்ற நோற்ற
தவ நிறை பேறு துய்ப்பாள் தாய் இலார்க்கு அன்னை ஒப்பாள்
சுவை உறு பிட்டு விற்று உண் தொழிலினாள் தமியள் ஆவாள். 2999

வைகலும் அவித்த செவ்விப் பிட்டினை மருங்கு நான்கு
கைகளாய் முளைத்த முக்கண் கரும்பினை அரும்பு மூரல்
செய்கதிர் முகத்தான் அந்தத் தேறலை ஆலவாய் எம்
ஐயனை அகத்தான் நோக்கி அன்பினால் அருத்தி விற்பாள். 3000

வளைந்த மெய் உடைய அந்த மாதவ நரை மூதாட்டிக்கு
அளந்த பங்கு அடைப்பான் கூலி ஆள் கிடையாமல் ஆற்றத்

தளர்ந்து இனி என்னே மன்னன் தண்டிக்கின் என் செய்கேன் என்று
உளம் தடுமாறிக் கூடல் உடைய நாயகனை உன்னா. 3001

பிட்டு விற்று உண்டு வாழும் பேதையேன் இடும்பை என்பது
எள் துணை யேனும் இன்றி இரவி எங்கு எழுகென்று இந் நாள்
மட்டு நின் அருளால் இங்கு வைகினேற்கு இன்று வந்து
விட்டது ஓர் இடையூறு ஐய மீனவன் ஆணை யாலே. 3002

துணை இன்றி மக்கள் இன்றித் தமர் இன்றி சுற்றம் ஆகும்
பணை இன்றி ஏன்று கொள்வார் பிறர் இன்றிப் பற்றுக்கோடாம்
புணை இன்றித் துன்பத்து ஆழ்ந்து புலம்பு உறு பாவியேற்கு இன்று
இணை இன்றித் இந்தத் துன்பம் எய்துவது அறனோ எந்தாய். 3003

தேவர்க்கும் அரியன் ஆகும் தேவனே அன்பர் ஆவார்
யாவர்க்கும் எளியன் ஆகும் ஈசனே வேந்தன் ஆணைக்
காவல் செங்கோலார் சீற்றம் கடுகுமுன் கூலி ஆளாய்
ஏவல் செய்வாரைக் காணேன் ஏழையேன் இனி என் செய்கேன். 3004

கூலியாள் வருவது உண்டோ என்று தன் கொங்கை முற்றத்
தாலி போல் கண்ணீர் சோர்வாள் குறித்து முன்பு அருத்தும் பிட்டை
வேலை நீர் ஞாலம் காண மிசைந்தவள் இடும்பை தீர்ப்பான்
பாலின் நேர் மொழியாள் பாக மறைத்து அருள் படிவம் கொள்வார். 3005

குறட்கு நீர் அருத்தி வைகைக் குடிஞையாய் ஒழுகும் கங்கை
அறம் குழல் பிரிவின் ஆற்றாது அன்பினால் அவளைக் காண்பான்
மறக் கயல் நெடும் கணாளை வஞ்சித்து வடிவம் மாறிப்
புறப்படு வாரைப் போலப் போதுவார் போத மூர்த்தி. 3006

அழுக்கு அடைந்த பழந்துணி ஒன்று அரைக்கு அசைத்து விழுத்தொண்டர்
குழுக் கடந்த இண்டை நிகர் சுமை அடை மேல் கூடை கவிழ்த்து
எழுக் கடாந்து திசை கடந்திட்டு இணை கடந்த திருத்தோள் மேல்
மழுக்கடைந்து விளங்கிய வாய் மண் தொடு திண் படை ஏந்தி. 3007

திடம் காதல் கொண்ட அறவோர் திரு வேள்வி தரும் அமுதும்
இடம் காவல் கொண்டு உறைவாள் அருத்த அமுதும் இனிது உண்டும்
அடங்காத பசியினர் போல் அன்னை முலைப் பால் அருந்த
அடங்காத பெரு வேட்கை மகவு போல் புறப்பட்டார். 3008

ஆலு மறைச் சிரமுடியார் அடிக்கமலம் நிலம் சூடக்
கூலி கொடுத்து எனை வேலை கொள்வார் உண்டோ என்று என்று
ஓல மறைத் திருமொழி போல் உரை பரப்பிக் கலுழ் கண்ணீர்
வேலை இடைப் படிந்து அயர்வாள் வீதி இடத்து அணைகின்றார். 3009

தந்தை தாய் பிறர் இன்றி வருகின்ற தனிக் கூலி
மைந்தனார் வாய் மலரும் குரல் கேட்டு வந்தி உந்தன்
சிந்தை ஆகுலம் இழந்து நல் கூர்ந்தார் செல்ல மகத்
தந்தபோது எழு மகிழ்ச்சி தலைக் கொள்ளப் புறம் போந்தாள். 3010

அன்னை எனத் தன் பாலின் அருள் சுரந்து வருகாளை
தன்னை அழைத்து எனக்கு அளந்த கரை அடைத்துத் தருவாயோ
என்ன இசைத்தனள் ஆக அடைக்கின்றேன் எனக்கு அன்னை
பின்னை அதற்கு இடும் கூலி யாது என்றார் பெரு முதியாள். 3011

பிட்டு இடுவேன் உனக்கு என்றான் அதற்கு இசைந்து பெரும் பசியால்
சுட்டிட நான் மிக மெலிந்தேன் சுவைப் பிட்டில் உதிர்ந்த எலாம்
இட்டிடுவாய் அது முந்தத் தின்று நான் இளைப்பாறிக்
கட்டிடு வேன் நின்னுடைய கரை என்றார் கரை இல்லார். 3012

தெள்ளி அடு சிற்றுண்டி சிக்கடைந்த பொதி நீக்கி
அள்ளி எடுத்து அருந்தப்பா என்று இட்டாள் அரைக்கு அசைத்த
புள்ளி உடைத் துகில் நீத்தார் புறத்தானை விரித்து ஏந்தி
ஒள்ளியது என்று அவன் அன்பும் உடன் கூட்டி அழுது செய்வார். 3013

அன்னை முலைத் தீம் பாலின் அரிய சுவைத்து இஃது அந்தத்
தென்னவனாய் உலகு ஆண்ட திரு ஆல வாய் உடைய
மன்னர் பிரான் தனக்கே ஆம் என்று என்று வாய்ப் பெய்து
சென்னி அசைத்து அழுது செய்தார் தீவாய் நஞ்சு அமுத செய்தார். 3014

தந்தை யொடு தாய் இன்றித் தனிக் கூலி ஆளாக
வந்த எனக்கு ஒரு தாயாய் அருள் சுரந்து மாறாத
இந்த இளைப்பு ஒழித்தனையே இனி வேலைத் தலைச் சென்று உன்
சிந்தை களிப்பு எழவேலை செய்வேன் என்று இசைத்து எழுந்தார். 3015

தந்தி வாய் மருப் பிடறி வரும் குடிஞைத் தடம் கரையில்
வந்தியான் வந்தியாள் என்று ஏட்டில் வரை வித்துப்
புந்தியால் உரையான் நூல் பொருளினான் அளப்பு அரிய

அந்தி வான் மதிச் சடையார் கரை அடைப்பார் ஆயினார். 3016

வெட்டுவார் மண்ணை முடி மேல் வைப்பார் பாரம் எனக்
கொட்டுவார் குறைத்து எடுத்துக் கொடு போவார் சுமடு விழத்
தட்டுவார் சுமை இறக்கி எடுத்து அதனைத் தலை படியக்
கட்டுவார் உடன் சுமந்து கொடு போவார் கரை சொரிவார். 3017

இவ் வண்ணம் இவர் ஒருகால் இருகால் மண் சுமந்து இளைத்துக்
கை வண்ண மலர் கன்றக் கதிர் முடிமேல் வடு அழுந்த
மை வண்ணன் அறியாத மலர் அடி செம் புனல் சுரந்து
செவ் வண்ணம் படைப்ப ஒரு செழும் தருவின் மருங்குஅணைந்தார். 3018

தரு மேவும் மலை மகளும் சலமகளும் அறியாமல்
திரு மேனி முழுது நிலமகள் தீண்டித் திளைப்பு எய்தக்
குரு மேவு மதி முடியைக் கூடை அணை மேல் கிடத்தி
வரும் மேரு அனையார் தம் வடிவு உணர்ந்து துயில் கின்றார். 3019

அத்தருவே ஆல நெடும் தருவாக அலை புரட்டித்
தத்தி வரும் புனல் அடைப்பார் சனகாதி முழுது உணர்ந்த
மெய்த் தவராய்க் கண் களிப்ப மெய் உணர்ச்சி மோன மயச்
சுத்த உருத் தெள¤விப்பார் எனத்துயிலும் துயில் உணர்ந்தார். 3020

ஆடுவார் சாமம் எனத் தித்திக்கும் அமுத இசை
பாடுவார் நகை செய்வார் தொழில் செய்வார் பராக்கு அடையக்
கோடுவார் மணல் குவிப்பார் குதிப்பார் தூள் எழ அடிபாய்ந்து
ஓடுவார் உடன் மீள்வாள் உன் மத்தர் என இருப்பார். 3021

வேலையினால் அற வருந்தி இளைத்தார் போல் மெய் வேர்வை
காலமிசை மூச்சு எறிந்து வாய் ஒலியால் காற்று அழைத்துச்
சால நெடும் பசியினார் போல் தளர்ந்து அடியாள் இடும் பிட்டின்
மேல் அடைந்த விருப்பினர் ஆய் மீண்டும் அவள் பால் அணைவார். 3022

இடும்பை நோய் வெள்ளம் நீந்தி இன்ப நீர் வெள்ளத்து ஆழ்ந்த
கொடும் புற முதியாள் முன் போய்க் கூறுவார் கோலுக்கு ஏற
இடம் படு கரைகள் எல்லாம் அடை படு கின்ற இன்னம்
கடும்பசி உடையேன் அன்னே பிட்டு இடு கடிதின் என்றார். 3023

ஆங்கு அவள் அப்போது அட்ட சிற்றுணவு அளித்தாள் ஐயர்

வாங்கி அங்கு கையும் நாவும் கனல் எழ வாயில் பெய்து
பாங்கு இரு கொடிறும் ஒற்றிப் பதம் உறப் பருகிக் கொண்டு
நீங்கி முன் போல போந்து நெடும் கரை அடைக்கல் உற்றார். 3024

பிட்டு வாய் மிதப்ப உண்பார் பெருவலி உடையார் போல
வெட்டுவார் எடுத்த மண்ணைக் கொண்டு போய் வேற்றுப் பங்கில்
கொட்டுவார் உடைப்பு மாரும் கொள்கை கண்டு ஆர்த்துத் திண் தோள்
தட்டுவார் அயல் நின்றாரைத் தழுவார் களிப்புத் தாங்கி. 3025

எடுத்த மண் கூடையோடு இடறி வீழ்வார் போல் ஆற்றில்
மடுத்திட வீழ்வார் நீந்தி வல்லை போய்க் கூடை தள்ளி
எடுத்து அகன் கரை மேல் ஏறி அடித்து அடித்து ஈரம் போக்கித்
தொடுத்த கட்டு அவிழ்ப் பார் மீளத் துன்னுவார் தொடுவார் மண்ணை. 3026

கொட்டு மண் சுமந்து செல்வர் கூடையை உடைப்பில் வீழத்
தட்டுவார் எடுப்பார் போலத் தாவி வீழ்ந்து அலையில் ஓட
விட்டு ஒரு மரத்தைப் பற்றி மிதப்பார் திண் கரையில் ஏற
முட்டுவார் சுழியில் ஆழ்வார் சேண் சென்று முளைப்பார் மீள்வர். 3027

கொட்டினைக் கழலப் பார்ப்பார் கோப்பர் கோல் இடை
ஆப்பு இட்டுத்
தட்டுவார் உயிர்ப்பு வீங்கித் தள்ள நின்று இளைப்பார்
கச்சில்
பிட்டினை நுகர்வார் வேலை வினை கெடப் பிறர்க்கும்
அள்ளி
இட்டு மாறு ஓச்ச நோக்கி நகைப்பர் கை இரண்டும்
தாக்கி. 3028

வானத்தின் மண்ணில் பெண்ணின் மைந்தரில் பொருளில் ஆசை
தான் அற்றுத் தமையும் நீத்துத் தத்துவம் உணர்ந்த யோகர்
ஞானக் கண் கொண்டே அன்றி நாடரும் சோதி மண்ணோர்
ஊனக் கண் கொண்டும் காண உடன் விளையாடல் செய்வார். 3029

அருளினால் உலகம் எல்லாம் ஆக்கியும் அளித்தும் நீத்தும்
பெரு விளையாடல் செய்யும் பிறை முடிப் பெருமான் இங்ஙன்
ஒரு விளையாடல் செய்ய ஓச்சு கோல் கையர் ஆகி
அருகு நின்று ஏவல் கொள்வார் அடை கரை நோக்கப் புக்கார். 3030

நெட்டு அலை ஒதுங்கி ஓட நிவப்பு உற வரை போல் இட்டுக்

கட்டிய கரைகள் எல்லாம் கண்டு கண்டு ஒப்பு நோக்கி
அட்டமே செல்வார் திங்கள் ஆயிரம் தொழுதாள் பேரால்
விட்ட பங்கு அடை படாமை கண்டனர் வெகுளி மூண்டார். 3031

வந்திக்குக் கூலி யாளய் வந்தவன் யார் என்று ஓடிக்
கந்தர்ப்பன் என நேர் நின்ற காளையை நோக்கி ஏடா
அந்தப் பங்கு உள்ள எல்லாம் அடை பட்டது எவன் நீ இன்னம்
இந்தப் பங்கு அடையாய் வாளாது இருத்தியால் அம்பீ என்றார். 3032

வேறு உரையாது தம்மை உணர்ந்தவர் வீறு தோன்ற
ஈறு இலான் இறுமாப்பு எய்தி இருந்தனன் ஆக மேல் இட்டு
ஆறு வந்து அடுத்த பங்கில் அடை கரை கல்லிச் செல்ல
மாறு கொண்டு ஓச்ச அஞ்சி மயங்கினார் வலிய கோலார். 3033

பித்தனோ இவன் தான் என்பார் அல்லது பேய் கோட்பட்ட
மத்தனோ இவன் தான் என்பார் வந்தியை அலைப்பான் வந்த
எத்தனோ இவன் தான் என்பார் இந்திர சாலம் காட்டும்
சித்தனோ இவன் தான் என்பார் ஆர் என்றும் தௌ¤யோம் என்பார். 3034

பாடல் விஞ்சையனோ என்பார் பண்ணினால் பாணிக்கு ஏற
ஆடல் விஞ்சையனோ என்பார் அரும் பெறல் செல்வத்து ஆழ்ந்து
வாடிய மகனோ என்பார் இசை பட வாழ்ந்து கெட்ட
ஏடு அவிழ் தாரினாருள் யார் மகன் இவன் கொல் என்பார். 3035

கரும்பனும் விரும்ப நின்ற கட்டழகு உடையான் என்பார்
அரும் பெறல் இவன் தான் கூலிக்கு ஆள் செய்தது
எவனோ என்பார்
இரும் பெரும் குரவர் அற்ற தமியனோ என்பார் வேலை
புரிந்தவன் அல்லன் என்பார் அது மேனி புகலும் என்பார். 3036

கூலியும் கொண்டான் தானே கணக்கிலும் குறிக்கச்
சொன்னான்
வேலையும் செய்யான் இன் சொல் விளம்பினும் கேளான்
கல்லின்
பால் அறை முளையே ஆகிப் பராமுகம் பண்ணி
நின்றான்
ஏல நாம் இதனை வேந்தற்கு உணர்த்துதும் என்று
போனார். 3037

தலைமகன் திருமுன் தாழ்ந்து சாற்றுவார் அடிகேள் இந்த
அலை புனல் நகரார் தம் தம் பங்கு எலாம் அளந்த ஆற்றான்
மலையினும் வலியவாகச் சுமந்தனர் வளைந்த சிற்றூண்
விலை நரை யாட்டி தன் பங்கு அடைத்திலன் வென்றி வேலோய். 3038

வேளையும் வனப்பினாலே வென்றவன் ஒருவன் வந்தி
ஆள் என ஆங்கே வந்து பதிந்தனன் அரசர் செல்வக்
காளைபோல் களிப்பன் பாடும் ஆடுவான் காலம் போக்கி
நீளுவான் வேலை ஒன்று நெஞ்சினும் நினைதல் செய்யான். 3039

ஆண் தகை வனப்பை நோக்கி அடிக்கவும் இல்லேம் அஞ்சி
ஈண்டினேம் என்று கூற இம் என அமைச்ச ரோடும்
பாண்டியன் எழுந்து நாம் போய்ப் பங்கு அடை பட்ட எல்லாம்
காண்டும் என்று எறிநீர் வைகைக் குடிஞை அம் கரையைச் சார்ந்தான். 3040

எடுத்த திண் கரைகள் எல்லாம் இறை மகன் உள்ளத்து ஓகை
மடுத்தனன் நோக்கிச் செல்வான் வந்தி பங்கு அடைப்பார் இன்றி
அடுத்த நோன் கரையும் கல்லி அழித்து எழு வெள்ளம் நோக்கி
கடுத்து நின்று எங் குற்றான் இக் கரை சுமந்து அடைப்பான் என்றான். 3041

வள்ளல் தன் கோபம் கண்ட மாறு கோல் கையர் அஞ்சித்
தள்ளரும் சினத்தர் ஆகித் தடக்கை தொட்டு ஈர்த்துப் பற்றி
உள்ளடு புறம் கீழ் மேலாய் உயிர் தொடும் ஒளித்து நின்ற
கள் வனை இவன் தான் வந்தி ஆள் எனக் காட்டி நின்றார். 3042

கண்டனன் கனன்று வேந்தன் கையில் பொன் பிரம்பு வாங்கி
அண்டமும் அளவு இலாத உயிர்களும் ஆகம் ஆகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடையோடு
மண் தனை உடைப்பில் கொட்டி மறைந்தனன் நிறைந்த சோதி. 3043

பாண்டியன் முதுகில் பட்டது செழியன் பன்னியர்
உடம்பினில் பட்டது
ஆண் தகை அமைச்சர் மேனி மெல் பட்டது அரசு இளம்
குமரர் மேல் பட்டது
ஈண்டிய கழல் கால் வீரர் மேல் பட்டது இவுளி மேல்
பட்டது பருமம்
பூண்ட வெம் கரிமேல் பட்டது எவ் உயிர்க்கும் போதன்
மேல் பட்ட அத் தழும்பு. 3044

பரிதியும் மதியும் பாம்பும் ஐங் கோளும் பல் நிறம்
படைத்த நாள் மீனும்
இரு நிலம் புனல் கால் எரி கடும் கனல் வான் எனும்
ஐம் பூதமும் காரும்
சுருதியும் ஆறு சமய வானவரும் சுரர்களும் முனிவரும்
தொண்டின்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட மதுரை நாயகன்
அடித் தழும்பு. 3045

வானவர் மனிதர் நரகர் புள் விலங்கு மாசுணம் சிதல்
எறும்பு ஆதி
ஆன பல் சரமும் மலை மரம் கொடி புல் ஆதி ஆம்
அசரமும் பட்ட
ஊன் அடை கருவும் பட்டன தழும்போடு உதித்தன உயிர்
இல் ஒவியமும்
தான் அடி பட்ட சரா சர சடங்கள் தமக்கு உயிர்
ஆயினோன் தழும்பு. 3046

துண் என மாயோன் விழித்தனன் கமலச் சோதியும் யாது
என வியந்தான்
விண்ணவர் பெருமான் வெருவினான் வானோர் வேறு
உளார் மெய் பனிப்பு அடைந்தார்
வண்ண யாழ் இயக்கர் சித்தர் சாரணர் தம் வடுப் படா
உடம்பினில் பட்ட
புண்ணை யாது என்று தத்தமில் காட்டி மயங்கினார்
புகுந்த வாறு அறியார். 3047

ஏக நாயகன் எவ் உயிர்களும் தானே என்பதும்
அன்பினுக்கு எளியன்
ஆகிய திறனும் காட்டுவான் அடி பட்டு அங்கு ஒரு கூடை
மண் கொட்டி
வேக நீர் சுருங்கக் கரையினை உயர்த்தி மிகுத்து உடன்
வேலை நீத்து ஒளித்துப்
போகிய வாறு கண்டு கோல் கையர் போய்
நரையாட்டியைத் தொடர்ந்தார். 3048

வன்பு தாழ் மனத்தோர் வலி செய இன்ன மன்னான்
மறுக்கம் உண்டேயோ
முன்பு போகிய ஆள் என் செய்தான் என்னாய் முடியுமோ
இனி எனத் திரங்கி
என்பு போல் வெளுத்த குழலினாள் கூடல் இறைவனை

நோக்கி நின்று இரங்க
அன்பு தேன் ஆக வருத்திய சிற்றூண் அமுது செய்து
அருளினார் அருளால். 3049

கண் நுதல் நந்தி கண்த்தவர் விசும்பில்
கதிர் விடு திப்பிய விமானம்
மண் இடை இழிச்சி அன்னை வா என்று வல்லை
வைத்து அமரர் பூ மழையும்
பண் நிறை கீத ஒதையும் வேதப் பனுவலும்
துந்துபி ஐந்தும்
விண் இடை நிமிரச் சிவன் அருள் அடைந்தோர்
மேவிய சிவபுரத்து உய்த்தார். 3050

மன்று உடையான் ஒர் கூடை மண் கொட்டி மறைந்ததும்
அடை கரை நீண்ட
குன்று என உயர்ந்த தன்மையும் தம் மேல் கோல் அடி
பட்டது நோக்கி
என்றன் மேல் பட்டது என்றன் மேல் பட்டது இது என
அது என அமைச்சர்
நின்றவர் உணர்ந்து நிகழ்ச்சியும் பிறர் பால் நிகழ்ச்சியும்
நோக்கி அந் நிருபன். 3051

உள்ளத்தால் சங்கை பூண்டான் ஆக மண் உடைப்பில் கொட்டிக்
கள்ளத்தார் ஆகிப் போனார் ககனத்தார் ஆகிச் சேனை
வெள்ளத்தார் பிறரும் கேட்ப மீனவற்கு உவகை வெள்ளம்
கொள்ளத் தாம் அழைத்து ஆகாய வாணியால் கூறல் உற்றார். 3052

மறத்து ஆறு கடந்த செம் கோல் வழுதி நின் பொருள்கள் எல்லாம்
அறத்து ஆற்றின் ஈட்டப் பட்ட அனையவை புனிதமான
திறத்தாலே நமக்கு நம்மைச் சேர்ந்தவர் தமக்கு ஆர்வம்
உறத்தாவில் வாதவூரன் உதவினான் ஆதலாலே. 3053

அனையனை மறுக்கம் செய்தாய் அரும் பிணப் புலவுத் தீவாய்
வன நரித் திரளை ஈட்டி வாம்பரி ஆக்கித் தந்தேம்
கனை இருள் கங்குல் போதில் கழிந்தன பின்னும் தண்ட
வினையர் பால் விடுத்துத் துன்பம் விளைத்தனை அது பொறாதேம். 3054

வருபுனல் பெருகப் பார்த்தேம் வந்திகைப் பிட்டு வாங்கிப்
பருகிவந்து ஆளாய் மாறு பட்டன மண் போகட்டுப்

பொருகரை உயரச் செய்து போகிய அவ் அன்னை போல்வாள்
பெருகிய இடும்பை தீர்த்து எம் பேர் உலகு அடையச் செய்தோம். 3055

இத்தனை எல்லாம் செய்தது இவன் பொருட்டு இந்த வேத
வித்தகன் தன்மை ஒன்றும் அறிந்திலை வேட்கை எம்பால்
வைத்துனக்கு இம்மை யோடு மறுமையும் தேடித் தந்த
உத்தமன் தொடை சந்து ஆதிப் புறப்பற்றும் ஒழிந்த நீரான். 3056

நிறை உடை இவனை இச்சை வழியினால் நிறுத்தி ஆன்ற
மறை வழி நின்று நீதி மன்னவர்க்கு அளந்த வாழ் நாள்
குறை படாது ஆனச் செல்வ வாரியுள் குளித்து வாழ்க என்று
நிறையவன் மொழிந்த மாற்றம் இரு செவி நிரப்பத் தென்னன். 3057

அச்சம் உற்று உவகை ஈர்ப்ப அதிசய வெள்ளத்து ஆழ்ந்து
பொச்சம் இல் அன்பர் எங்கு உற்றார் எனப் புகுந்து தேடி
நச்சு அரவு அசைத்த கூடல் நாயகன் கோயில் நண்ணி
இச்சையில் இருக்கின்றாரைக் கண்டு போய் இறைஞ்சி வீழ்ந்தான். 3058

தொல்லை நீர் உலகம் ஆண்டு சுடு துயர் நரகத்து ஆழ
வல்ல என் அறிவுக்கு ஏற்ற வண்ணமே செய்தேன் நீர் என்
எல்லை தீர் தவப் பேறாய் வந்து இக பர ஏது ஆகி
அல்லல் வெம் பிறவி நோய்க்கு அருமருந்து ஆனிர் ஐயா. 3059

செறுத்து நான் உம்மை எண்ணாது இழைத்த இத் தீங்கு தன்னைப்
பொறுத்து நீர் முன் போல் உங்கள் புவி எலாம் காவல் பூண்டு
மறுத் துடைத்து ஆள்வதாக என்று இரந்தனன் மண்ணில் ஆசை
வெறுத்தவர் நகை உள் தோன்ற வேந்தனை நோக்கிச் சொல்வார். 3060

பாய்திரை புரளும் முந்நீர்ப் படுகடல் உலகுக்கு எல்லாம்
ஆயிரம் செம் கணான் போல் அரசு வீற்று இருப்பீர் உங்கள்
நாயகன் அருளிச் செய்த வண்ணமே நயந்து செய்வீர்
தூயவர் அன்றோ நுங்கள் சூழல் சேர்ந்து ஒழுக வல்லார். 3061

உம்மை நான் அடுத்த நீரால் உலகு இயல் வேத நீதி
செம்மையால் இரண்டு நன்றாத் தௌ¤ந்தது தௌ¤ந்த நீரான்
மெய்மை யான் சித்த சுத்தி விளைந்தது விளைந்த நீரால்
பொய்ம்மை வானவரின் நீந்திப் போந்தது சிவன் பால் பத்தி. 3062

வந்த இப் பத்தியாலே மாயையின் விருத்தி ஆன
பந்தம் ஆம் பஞ்சவ வாழ்க்கை விளைவினுள் பட்ட துன்பம்
வெந்தது கருணை ஆகி மெய் உணர்வு இன்பம் தன்னைத்
தந்தது பாதம் சூட்டித் தன் மயம் ஆக்கிற்று அன்றே. 3063

சச்சிதானந்தம் ஆம் அத் தனிப் பர சிவனே தன்னது
இச்சையால் அகிலம் எல்லாம் படைத்து அளித்து ஈறு செய்யும்
விச்சை வானவரைத் தந்த மேலவன் பிறவித் துன்பத்து
அச்சம் உற்று அடைந்த்தோர்க்கு ஆனா இன்பவீடு அளிக்கும் அன்னோன். 3064

மந்தரம் கயிலை மேருப் பருப்பதம் வாரணாசி
இந்த நல் இடங்கள் தோறும் இக பர போகம் யார்க்கும்
தந்து அருள் செய்து எம் போல்வார் தம் மனம் புறம் போகாமல்
சிந்தனை திருத்தி ஞானத் திருஉரு ஆகி மன்னும். 3065

ஒப்பவர் மிக்கோர் வேறு அற்று ஒருவனாய் எங்கும் தங்கும்
அப் பரம் சுடரே இந்த ஆலவாய் உறையும் சோதி
கைப் படு கனிபோல் மேல் நாள் கண்ணுவன் ஆதி யோர்க்கு
மெய்ப் பொருள் விளங்கித் தோன்றா வேதத்தை விருத்தி செய்தான். 3066

தன் அருளால் ஞானத் தபனியம் ஆகும் தில்லைப்
பொன் நகர் இடத்தில் என்னைப் போகெனப் பணித்தான் நீரும்
அன்னதற்கு இசைதிர் ஆக என்று ஆலவாய் அடிகள் தம்மைப்
பன்னரும் துதியால் ஏத்தி விடை கொடு பணிந்து போவார். 3067

தன் தொடக்கு அறுத்த நாதன் தாள் தொடக்குண்டு போவார்
பின் தொடர்ந்து அரசன் செல்லப் பெருந்தவர் நின்மின் நின்மின்
என்றனர் செலவும் கூப்பி எல்லை சென்று அணியன் ஆகிச்
சென்று அடி பணிந்து தென்னன் விடை கொடு திரும்பினானே. 3068

துறந்தவர் போக மீண்டு தொல் நகர் அடைந்து தென்னன்
அறம் தரு பங்கினாரை அடைந்து தான் பிரம்பு நீட்டப்
புறம் தரு கருணை வெள்ளம் பூரிப்பத் தாழ்ந்து நெஞ்சம்
நிறைந்தது வாய் கொள்ளாமல் நின்று எதிர் துதிப்பது ஆனான். 3069

அடையாளம் பட ஒருவன் அடித்த கொடும் சிலைத் தழும்பும்
தொடையாக ஒரு தொண்டன் தொடுத்து எறிந்த கல்லும் போல்
கடையானேன் வெகுண்டு அடித்த கைப் பிரம்பு உலகம் எல்லாம்

உடையானே பொறுத்ததோ உன் அருமைத் திருமேனி. 3070

கடியேறு மலர் மகன் மால் முதல் ஆய கடவுளரும்
படி ஏழும் அளவு இறந்த பல் உயிரும் நீயேயோ
முடி ஏற மண் சுமந்தாய் முதுகில் அடி வடுப்பட்டது
அடியேனும் பட்டென் நின் திருமேனி ஆனேனோ. 3071

கைக்கும் மருந்து இன் சுவையின் காட்டுமாறு என வினைக்கும்
பொய்க்கும் அரும் கலன் ஆகி மண் ஆண்டு புலை நரகம்
துய்க்கும் அரும் துயர் களைவான் மாறாய் நின் துணை அடிக்கே
ய்க்கும் மருந்து அவர் என்று அறியாமை ஒறுத்தேனே. 3072

பாதி உமை உருவான பரமேட்டீ எனக்கு இம்மை
ஊதியமும் பரகதியும் உறுதி பெற விளைவிக்கும்
நீதியினான் மந்திரியாய் நின் அருளே அவதரித்த
வேதியரை அறியாதே வெறுத்து நான் ஒறுத்தேனே. 3073

மாயா விருத்தியில் நான் மாழாந்து மாதவரை
ஆயாது ஒறுத்தேன் அரு நரகத்து ஆழ்ந்து நான்
வீயமல் இன்று அனையார் மெய்ம்மை எலாம் தேற்றிய வெண்
தாயானாய் தண்ணளிக் என் தமியேன் செய் கைம்மாறே. 3074

நின்னை உணர்ந்தவர் வேத நெறி வேள்வி செய்து
ஊட்டும்
இன் அமுதில் கழி சுவைத்தோ இவள் இடும் பிட்டு எவ்
உயிர்க்கும்
மன்னவனே செம் துவர் வாய் மல்ர்ந்து அமுது செய்தனை
ஆல்
அன்னை இலா உனக்கு இவள் ஓர் அன்னையாய்
வந்தாளோ. 3075

அன்று சிறுத் தொண்டர் இடும் பிள்ளைக் கறி அமுதும்
மென்று சுவை தெரிந்த வேடன் இட்ட ஊனும் போல்
நன்று நரையாட்டி இடு பிட்டு நயந்து அருந்தி
என்றும் அடியார்க்கு எளிவந்தாய் எம் தாயே. 3076

நரி யாவும் பரி ஆக்கி நடத்தியும் அம்பரம் அன்றித்
தரியா யான் தரு துகிலைத் திரு முடிமேல் தரித்து மறைக்கு
அரியாய் நீ என் பாசம் அறுக்க வரும் திரு மேனி

தெரியாதே பரி ஆசை திளைத்து இறுமாந்து இருந்தேனே. 3077

விண் சுமக்கும் புள்ளாய் விலங்காய்ச் சுழன்று மனம்
புண் சுமக்கும் சூழ்ச்சி வலி உடைய புத்தேளிர்
மண் சுமக்கும் மள்ளராய் வந்திலரே வந்தக் கால்
பண் சுமக்கும் சொல்லின் பங்கன் பாத முடி காண்பாரே. 3078

என்று பல முறையாலே துதித்து அடைந்தோர்க்கு அன்பர்
இவர் இவரைத் தேறின்
நன்று மிக பரபோகம் வீடு பெறல் எளிது என்று நகைத்தார்
வேந்தன்
அன்று திருப்பணி பூசை பிறவும் நனி வளம் பெருக்கி
அழகார் வெள்ளி
மன்றுடையான் அடிக்கு அன்பும் உயிர்க்கு அன்பும் சுரந்து
ஒழுகி வாழும் நாளில். 3079

முன்பு பெரும் துறையார்க்கும் அடியார்க்கும் அறம்
தெரிந்த முறையால் ஈட்டும்
தன் பொருள் போய் உடன் பலவாய்த் தழைத்து
வருபயனே போல் தலை உவாவின்
நன் பனி கான் மதி கண்ட உவரி எனப் பல செல்வம்
நாளும் ஓங்க
இன் புறுவான் சக நாதன் எனும் மகப் பெற்று இன்பத்துள்
இன்பத்து ஆழ்ந்தான். 3080

அம் மகனை முடி சூட்டி அரசாக்கி வாதவூர் அமைச்சர்
சார்பன்
மெய்ம்மை நெறி விளக்கி இரு வினை ஒப்பில் அரன்
கருணை விளைந்த நோக்கான்
மும்மை மலத் தொடர் நீந்திச் சிவானந்தக் கடல் படிந்து
முக்கண் மூர்த்தி
செம் மலர்த்தாள் நிழல் அடைந்தான் திறல் அரிமர்த்தனன்
எனும் தென்பார் வேந்தன். 3081

வழுதியால் விடுக்கப் பட்ட வாதவூர் முனிகள் தம்மைப்
பழுது இலாப் பாடல் கொள்வார் பதி பல பணிந்து போந்து
முழுது உணர் மறையோர் வேள்விப் புகை அண்ட முடி கீண்டு ஊழி
எழு வட வரை போல் தோன்றும் எழில் தில்லை மூதூர் சேர்ந்தார். 3082

வீதி தொறும் வீழ்ந்து வீழ்ந்து இறைஞ்சி ஆலயத்து
எய்தி மெய்மை ஆன
கோதி அறிவு ஆனந்தச் சுடர் உரு ஆம் சிவகங்கை
தோய்ந்து மேனி
பாதி பகிர்ந்தவள் காணப் பரானந்த தனிக் கூத்து
பயிலா நிற்கும்
ஆதி அருள் ஆகிய அம்பலம் கண்டு காந்தம் நேர்
அயம் போல் சார்ந்தார். 3083

அன்று குருந்து அடியில் வைத்து ஆண்ட கோலமே
அருள் ஆனந்த
மன்று இடத்து எதிர் தோன்றி வா என்பார் என மூரல்
மணிவாய் தோற்றி
நின்ற தனிப் பெரும் கூத்தர் நிலை கண்டார் அஞ்சலித்தார்
நிலமேல் வீழ்ந்தார்
ஒன்று அரிய புலன் கரண வழி நீந்தி மெய் அன்பின்
உருவம் ஆனார். 3084

வண்டு போல் புண்டரிக மலரில் விளை சிவ அனந்த
மதுவை வாரி
உண்டு வாசகம் பாடி ஆடி அழல் வெண்ணெய் என
உருகும் தொண்டர்
விண் துழாவிய குடுமி மன்று உடையான் திருவாக்கான்
மிகுந்த நேயம்
கொண்டு போய்க் குணதிசையில் அரும் தவர் வாழ்
தபோவனத்தைக் குறுகி அம் கண். 3085

குறி குணங்கள் கடந்த தனிக் கூத்தன் உரு எழுத்து
ஐந்தின் கொடுவாள் ஓச்சிப்
பொறி கரணக் காடு எறிந்து வீசி மனப் புலம் திருத்திப்
புனிதம் செய்து
நிறை சிவமாம் விதை விதைத்துப் பசு போதம் களைந்து
அருணன் நீர் கால் பாய
அறி உருவாய் விளைந்த தனிப் பார் ஆனந்த அமுது
அருந்தாது அருந்தி நின்றார். 3086

மான் நிரையும் குயவரியும் வந்து ஒருங்கு நின்று ரிஞ்சா
மயங்கு கானத்து
ஆன் நிரைக கன்று என இரங்கி மோந்து நக்க ஆனந்த
அருள் கண்ணீரைக்
கான் நிறை புள்ளினம் பருகக் கருணை நெடும் கடல்

இருக்கும் காட்சி போலப்
பால் நிற வெண் நீற்று அன்பர் அசை வின்றிச் சிவயோகம்
பயிலும் நாளில். 3087

புத்தர் சிலர் இலங்கையினும் போந்து மூவாயிர மெய்ப்
போத வேத
வித்தக ரோடு ஏழு நாள் வரை யறுத்துச் சூள் ஒட்டி
விவாதம் செய்வார்
இத் தகைய நாள் ஏழில் யாம் இவரை வேறும் எனும்
எண்ணம் பூண்ட
சித்தம் உடையவர் ஆக அவர் கனவில் எழுந்து அருளித்
தேவ தேவர். 3088

வாதவூரனை விடுத்து வாது செய்வீர் என விழித்து
மறையோர் அந்தப்
போத வேதியரை வனம் புகுந்து அழைத்தார் அப்போது
பொதுவில் ஆடும்
வேத நாயகன் பணித்த வழி நின்றார் எதிர் மறுப்ப மீண்டு
போந்து
காதார குல மூழ்கி இருந்தார் தழல் நிமிர்த்துக் கலியைக்
காய்வார். 3089

பின்னும் அவர் கனவின் கண் மன்றுள் நடம் பிரியாத
பெருமான் வந்து
முன்னவனைப் பெருந்துறையில் குருந்தடியில் ஆட்
கொண்ட முறையினாலும்
இன் இசை வண் தமிழ் மணி போல் பாடும் காரணத்தாலும்
யாம் அன்று இட்ட
மன்னிய பேர் மாணிக்க வாசகன் என்று அழை மின்கள்
வருவான் என்றார். 3090

உறக்கம் ஒழிந்த அறவோர் சென்றவர் நாமம் மொழிந்து
அழைப்ப உணர்ந்து நாதன்
அறக் கருணை இதுவோ என்று அவரோடும் எழுந்து நகர்
அடைந்து மண்ணும்
துறக்கமும் நீத்து அருவத்தார் மன்று ஆடும் துணைக்
கமலம் தொழுது மீண்டோர்
நிறக் கனக மண்டபத்தில் புக்கு இருந்தார் அறிஞர் சூழா
நெருங்கிச் சூழ. 3091

தத்து நீர்க் கலத்தில் போந்த சீவரப் போர்வை தாங்கும்
புத்தரை வேறு வைத்துப் புகன்மின் நும் இறையும் நூலும்
அத்தலை நின்றோர் எய்தும் கதியும் என்று ஆய்ந்த கேள்வி
மெய்த்தவ நெறி மாணிக்க வாசகர் வினவினாரே. 3092

கனவினும் நீறு காணாக் கைதவர் காட்சி யானும்
மன அனுமானத் தானும் வாசகப் பெருமான் தம்மை
வினவிய மூன்று முத்தே சாதியின் விரித்தார் வேதம்
அனையவர் கேட்ட அம் மூன்று மனு வாதம் செய்து உட்கொள்ளா. 3093

இன்று இவர்க்கு அனுமான் ஆதி எடுப்பது என் என்று காட்சி
ஒன்று கொண்டு அவர்கள் தாமே உடம்படல் மறுத்தார் காட்சி
அன்றி ஏது இன்மையாலே அனுமான அளவை யாலும்
நின்றவன் நும் கோன் ஆதி நிறுத்திய மூன்றும் என்றார். 3094

பொன்று தன் முத்தி என்பார் பூசுரர் பிரானை நோக்கி
இன்று எமைக் காட்சி ஒன்றால் வென்றனம் என்றீர் ஆனால்
நன்று நும் கடவுள் தன்னை அளவையான் ஆட்சி எம்மை
வென்றிடும் என்றார் ஐந்தும் வென்றவர் முறுவல் செய்யா. 3095

பிறவி அந்தகர்க்கு வெய்யோன் பேரொளி காட்டலாமோ
மறைகளால் அளவை தன்னால் தேவரான் மனத்தால் வாக்கால்
அறிவரும் சோதி எங்கோன் அவன் திரு நீற்றுத் தொண்டின்
குறிவழி அன்றிக் காணும் கொள்கையான் அல்லன் என்றார். 3096

தோற்றம் இல்லாதவர் உங்கள் சிவனுக்கும் திரு நீற்றுக்கும்
தோற்றம் எப்படித் திட்டாந்தம் சொல்லுமின் என்றார் தூயோர்
வேற்றுமை அற நாம் இன்னே விளக்குதும் அதனை நீங்கள்
தோற்ற பின் நுமக்குத் தண்டம் யாது கொல் சொல்மின் என்றார். 3097

செக்கு உரலிடை இட்டு எம்மைத் திரிப்பது தண்டம் என்னா
எக்கர் ஆம் தாமே இசைந்தனர் எரிவாய் நாகம்
கொக்கு இறகு அணிந்தார் அன்பர் உலர்ந்த கோ மயத்தை வாங்கிச்
செக்கரம் தழல் வாய்ப் பெய்து சிவந்திட வெதுப்பி வாங்கி. 3098

இவ்வண்ணம் இருக்கும் எங்கள் இறை வண்ண வடிவு அந்தச்
செவ் வண்ண மேனி பூத்த திரு வெண்ணீறு அதுவும் என்னா
மெய் வண்ணம் உணர்ந்த வேத வித்தகர் அவை முன் காட்டா

உய்வ் வண்ணம் அறியா மூடர் உள்ளமும் உயிரும் தோற்றார். 3099

இங்கு இவர் தோற்ற வண்ணம் கேட்டவர் இறப்ப இன்பம்
தங்கு வீடு என்று தேற்றும் சமயத்தில் ஆழ்ந்த ஆத்திக்
கொங்கு இவர் தாரான் மூங்கைக் குயில் பெடை எனத்தான் ஈன்ற
மங்கையைக் கொண்டு தில்லை மல்லன் மா நகரில் வந்தான். 3100

யாவரே ஆக இன்று இங்கு என் மகன் மூங்கை தீர்த்தோர்
ஆவரே வென்றோர் என்றன் ஆற்றவும் மானம் பூண்டு
சாவதே முத்தி என்பார் மணி முதன் மூன்றும் தங்கள்
தேவரே என்று என்று உள்கிச் செய்யவும் தீராதாக. 3101

அந்தணர் பெருமான் முன் போய் அரசன் மகளைப் போகட்டி
இந்த நோய் நீரே தீர்க்க வேண்டும் என்று இரந்தான் ஐயன்
சுந்தர நாதன் மன்றுள் துணைத்தாள் தன்னைத்
சிந்தை செய்து அருட் கண் நோக்கால் திருந்து இழை அவளை நோக்கா. 3102

வேறு வேறு இறைவன் கீர்த்தி வினா உரையாகப் பாடி
ஈறு இலா அன்பர் கேட்ப இறை மொழி கொடுத்து மூங்கை
மாறினாள் வளவன் கன்னி மடவரல் வளவன் கண்டு
தேறினான் சிவனே எல்லாத் தேவர்க்கும் தேவன் என்னா. 3103

பின்பு அரவு ஆரம் பூண்ட பிரான் அருள் விளையப் பாடும்
அன்பரை முனிவர் மூவாயிரவரை அடியில் தாழ்ந்து
முன்பு அவர் சொன்னவாறே மூர்க்கரைத் தடிந்து மன்றுள்
இன்பரை நடம் கண்டு ஏத்தி இறைமகன் சைவன் ஆனான். 3104

மாசு அறு மணிபோல் பல் நாள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பல் நாள் புண்ணிய மன்றுள் ஆடும்
ஈசனை அடிக் கீழ் எய்தி ஈறு இலா அறிவு ஆனந்தத்
தேசொடு கலந்து நின்றார் சிவன் அருள் விளக்க வந்தார். 3105

மண் சுமந்த படலம் சுபம்

---------------------

## 62. பாண்டியன் சுரம் தீர்த்த படலம் (3106 -3173)

வான அமுத மதி முடிமேல் மதுரைப் பெருமான் மண் சுமந்து

தேன் அமுத வாசகரைக் கதியில் விடுத்த திறன் இது மேல்
பால் நன் மணிவாய்க் கவுணியனை விதுத்துச் சமணர் படிற்றெழுகும்
கூனல் வழுதி சுரம் தணித்து ஆட் கொண்ட கொள்கை கூறுவாம். 3106

வாகு வலத்தான் சகநாத வழுதி வேந்தன் மகன் விர
வாகு அவன் சேய் விக்கிரம வாகு அவன் சேய் பராக்கிரம
வாகு அனையான் மகன் சுரபி மாறன் அனையான் திருமைந்தன்
வாகு வலத்தான் மறம் கடிந்து மண் ஆளும் குங்குமத் தென்னன். 3107

அன்னான் குமரன் கருப்புர பாண்டியன் ஆம் அவன்
சேய் காருணிய
மன்னாம் அவன் தன் மகன் புருடோத்தமனாம் அவன்
தன் மகன் ஆகும்
மின்னார் மௌலிச் சத்துரு சாதன பாண்டியன் ஆம்
விறல் வேந்தன்
இன்னான் மகன் கூன் பாண்டியன் ஆம் இவன் தோள்
வலியால் இசைமிக் கான். 3108

திண் தோள் வலியால் குட நாடர் செம் அறனையும்
மார் அலங்கல்
வண் தோல் இடு தார் இரவி குல மருமான் தனையும்
மலைந்து புறம்
கண்டு ஓர் குடைக் கீழ் நிலம் முன்றும் காவல் புரிந்து
கோல் ஓச்சிப்
புண் தோய் குருதி மறக் கன்னிப் புகழ் வேல் வழுதி
நிகழ் நாளில். 3109

துண் துழாவும் கைம்மாவும் வெறுக்கைக் குவையும் மணிக் குவையும்
வண்டு வீழும் தார் அளக வல்லி ஆய மொடு நல்கிக்
கண்டு கூடல் கோமகனைக் காலில் வீழ்ந்து தன்னாடு
பண்டு போலக் கைக் கொண்டு போனான் தேன் ஆர் பனம் தாரான். 3110

சென்னிக் கோனும் தான் ஈன்ற திலகப் பிடியை உலகம் எலாம்
மின்னிக் கோது இல் புகழ் ஒளியால் விளக்கும் சைவ மணி விளக்கை
கன்னிக் கோல மங்கையருக்கு அரசி தன்னைக் கௌரியற்கு
வன்னிக் கோமுன் மணம் புணர்த்தி வாங்கினான் தன் வள நாடு. 3111

வளவர் கோன் செழியன் கற்பின் மங்கையர்க்கு அரசியார்க்கு
அளவு அறு நிதியும் செம் பொன் கலிங்கமும் மணியும் போகம்

விளை நிலம் அனைய ஆய வெள்ளமும் பிறவும் தென்னன்
உளம் மகிழ் சிறப்ப வேந்தர் வரிசையால் உதவிப் பின்னர். 3112

கோது அறு குணத்தின் மிக்க குலச்சிறை என்பான் அங்கு ஓர்
மேதகு கேள்வியானை விடுத்தனன் ஈண்டு தென்னன்
காதலியோடு காவல் கடவுள் செம் பதுமக் கோயில்
மாதரை மணந்து செல்வான் போல் வந்து மதுரை சேர்ந்தான். 3113

மலர் மகள் மார்பன் பொன்னி மன்னவன் பயந்த தெய்வக்
குல மகள் உடனே வந்த குலச் சிறை குணனும் கேள்வித்
தலைமையும் மதியின் மிக்க தன்மையும் தூக்கி நோக்கி
நலம் மலி அமைச்சன் ஆக்கி நால் நிலம் புரக்கும் நாளில். 3114

வல்வினை வலியான் மெய்யில் வலிய கூன் அடைந்தன் போலக்
கொல் வினை இலராய் வஞ்சம் கொண்டு உழன்று உடுத்த பாசம்
வெல் வினை அறியா நக்க வேடர் சொல் வலையில் பட்டு
நல் வினை உதவாத் தென்ன நால் மறை ஒழுக்கம் நீத்தான். 3115

போது அவிழ் தாரான் அக்கர் புன் நெறி ஒழுக்கம் பூண்டோன்
ஆதலில் கன்னி நாடும் அமண் இருள் மூழ்கிப் பூதி
சாதன நெறி ஆம் சைவ சமயமும் முத்திச் செல்வ
மாதவ நெறியும் குன்ற மறைந்தது வேத நீதி. 3116

பறி படு தலையும் பாயின் உடுக்கையும் பாசிப் பல்லும்
உறி பொதி கலனும் அத்தி நாத்தி என்று உரைக்கும் நாவும்
அறி வழி உளம் போல் நாண் அற்று அழிந்த வெற்றரையும் கொண்டு
குறிகெடு அணங்கு சூழ்ந்து ஆங்கு அமண் இறை கொண்டது எங்கும். 3117

அரும் தமிழ்ப் பாண்டி வேந்தற்கு உறுதி ஆக்கம் செய்யும்
மருந்தினில் சிறந்த கற்பின் மங்கையர்க்கு அரசி யாரும்
பெருந்தகை அமைச்சு நீரில் குழைத்து அன்றி பிறங்கப் பேறு
தரும் திரு நீறு இடாராய் சிவ அடிச் சார்பில் நின்றார். 3118

பொய் உரை பிதற்றும் இந்தப் புன் சமண் களைகட்டு ஈண்டு
மெய் உரை வேத நீதி வியன் பயிர் தலைச் செய்து ஓங்கச்
செய்யுநர் எவரோ என்று சிந்தையில் கவலை பூண்டு
நையுநர் ஆகிக் கூடல் நாதனை வணங்கப் போனார். 3119

பேது உற்ற முனிவர்க்கு அன்று பெரு மறை விளக்கம் செய்த
வேதத்தின் பொருளே இந்த வெம் சமண் வலையில் பட்டு
போதத்தை இழந்த வேந்தன் புந்தியை மீட்டு இப்போது உன்
பாதத்தில் அடிமை கொள்வாய் என்று அடி பணியும் எல்லை. 3120

வேதியன் ஒருவன் கண்டி வேடமும் பூண்டோன் மெய்யில்
பூதியன் புண்டரிக புரத்தினும் போந்தோன் கூடல்
ஆதியைப் பணிவான் வந்தான் மங்கையர்க்கு அரசியாரும்
நீதிய அமைச்சர் ஏறு நேர்பட அவனை நோக்கா. 3121

எங்கு இருந்து அந்தணாளீர் வந்தனிர் என்றார் ஆய்ந்த
புங்கவன் சென்னி பொன்னி நாட்டினும் போந்தேன் என்றான்
அங்கு அவர் அங்கு உண்டான புதுமை யாது அறைதிர் என்றார்
சங்கரற்கு அன்பு பூண்டோன் உண்டு என்று சாற்று கின்றான். 3122

ஏழ் இசை மறை வல்லாளர் சிவபாத இதயர் என்னக்
காழியில் ஒருவர் உள்ளார் கார் அமண் கங்குல சீப்ப
ஆழியில் இரவி என்ன ஒரு மகவு அளித்தி என்னா
ஊழியில் ஒருவன் தாளை உள்கி நோற்று ஒழுகி நின்றார். 3123

ஆய மாதவர் பால் ஈசர் அருளினால் உலகம் உய்யச்
சேய் இளம் கதிர் போல் வந்தான் செல்வனுக்கு இரண்டு ஆண்டு எல்லை
போய பின் மூன்றாம் ஆண்டில் பொரு கடல் மிதந்த தோணி
நாயகன் பிராட்டியோடும் விடையின் மேல் நடந்து நங்கை. 3124

திருமுலைப் பாலினோடு ஞானமும் திரட்டிச் செம் பொன்
குரு மணி வள்ளத்து ஏந்திக் கொடுப்ப அப் பாலன் வாங்கிப்
பருகி எண் இறந்த வேத ஆகமம் இவை பற்றிச் சார்வாய்
விரிகலை பிறவும் ஓதாது உணர்ந்தனன் விளைந்த ஞானம். 3125

நம் பந்தம் அறுப்போன் ஞான நாயகன் ஞானத் தோடு
சம்பந்தம் செய்து ஞான சம்பந்தன் ஆகி நாவில்
வம் பந்த முலை மெய்ஞ்ஞான வாணியும் காணி கொள்ள
அம் பந்த மறைகள் எல்லாம் அரும் தமிழாகக் கூறும். 3126

கரும் பினில் கோது நீத்துச் சாறு அடு கட்டியே போல்
வரம்பு இலா மறையின் மாண்ட பொருள் எலாம் மாணத் தெள்ளிச்
சுரும்பு இவர் கொன்றை வேணிப் பிரான் இடம் தோறும் போகி

விரும்பிய தென் சொல் மாலை சிவ மணம் விளையச் சாத்தி. 3127

பருமுத்த முலையாள் பங்கன் அருளினால் பசும் பொன் தாளம்
திரு முத்தின் சிவிகை காளம் தெள் முத்தின் பந்தர் இன்ன
நிருமித்த வகைபோல் பெற்றுப் பாலையை நெய்தல் ஆக்கி
பொரு முத்த நதி சூழ் வீழிப் பொன் படிக்காசு பெற்று. 3128

அருமறை வணங்கும் கோயில் கதவினை அடைக்கப் பாடிப்
பரன் உறை பதிகள் எங்கும் தொழுதனர் பாடிப் பாடி
வரும் அவர் நுங்கள் நாட்டு வணங்கவும் வருவார் என்னத்
தரும நூல் அணிந்த தெய்வத் தாபதன் சாற்றலோடும். 3129

கற்பு அலர் கொடி அன்னாரும் தென்னவன் கண் போல்வாரும்
அற்புரை அமண் பேய் ஓட்டி அன்று தம் கோமான் மெய்யில்
பொற்பு உறு நீறு கண்டு பூதி சாதனத்தால் எய்தும்
சிறபர வீடு கண்ட மகிழ்சியுள் திளைத்தோர் ஆனார். 3130

தங்கள் பேர் தீட்டி ஓலை விண்ணப்பம் சண்பை நாடர்
புங்கவர்க்கு உணர்த்த அந்தப் பூசுரன் கையில் போக்கி
மங்கையர்க்கு அரசியாரும் அரசர்க்கு மருந்து அன்னானும்
அம் கயல் கண்ணி கோனைப் பணிந்து தம் அகத்தில் புக்கார். 3131

பண் படு வேதச் செல்வன் வல்லை போய்ப் பழன வேலிச்
சண்பையர் பிரானைக் கண்டு பறியுண்டு தலைகள் எல்லாம்
புண் படத் திரியும் கையர் பொய் இருள் கடந்தார் தந்த
எண் படும் ஓலை காட்டிப் பாசுரம் எடுத்துச் சொன்னான். 3132

வெம் குரு வேந்தர் அடி பணிந்து அடியேன் குலச் சிறை
விளம்பும் விண்ணப்பம்
இங்கு எழுந்து அருளிச் சமண் இருள் ஒதுக்கி எம் இறை
மகற்கு நீறு அளித்துப்
பொங்கி வரும் பணை சூழ் தென் தமிழ் நாட்டைப் பூதி
சாதன வழி நிறுத்தி
எங்களைக் காக்க என்ற பாசுரம் கேட்டு எழுந்தனர்
கவுணியர்க்கு இறைவர். 3133

ஆதகாது இது என்று ஓதுவார் நாவுக் கரையர் நீர்
சிறியர் அவரோ
பாதகம் அஞ்சார் தம் மொடும் பல் நாள் பழகிய எனை

அவர் செய்த
வேதனை அளந்து கூறுவது என்னை விடுகதில் அம்மவோ
உமக்கு இப்
போது நாள் கோள்கள் வலி இல என்னப் புகலியர்
வேந்தரும் புகல்வார். 3134

எந்தை எம் பெருமான் அருள் இலார் போல இன்னணம்
இசைப்ப தென்னவர் செய்
வெந்த வேதனையின் உய்த்த நீர் நாள் கோள் விளங்கு
புள் அவுணர் பேய் பூதம்
அந்தம் இல் பலவும் அம்மையோடு அப்பன் ஆணையால்
நடப்பன அவர் நம்
சிந்தையே கோயில் கொண்டு வீற்று இருப்பத் தீங்கு
இழையா என எழுந்தார். 3135

மா முரசு ஒலிப்பச் சங்கம் காகளம் வாய்விட்டு ஏங்கச்
சாமரை பனிப்ப முத்தின் பந்தரில் தரளத் தெய்வக்
காமரு சிவிகை மேல் கொண்டு அமண் இருள் கழுவும் சோதி
யாம் என நெறிக் கொண்டு ஈசன் இடம் தொறும் அடைந்து பாடி. 3136

செம்பியன் நாடு நீந்தித் தென்னவன் நாடு நண்ணி
வெம்பிய சுரமும் முல்லைப் புறவமும் மேக வில்லைத்
தும்பிகை நீட்டி வாங்கும் மலைகளும் துறந்து பாகத்
தம்பி கையுடையான் கூடல் நகர்ப் புறம் அனுகச் செல்வார். 3137

புண்ணிய நீற்றுத் தொண்டர் குழாத்தினுள் புகலி வேந்தர்
நண்ணிய சிவிகை மீது நகைவிடு தரளப் பந்தர்
கண்ணிய தோற்றம் தீம் பால் கடல் வயிறு உதித்து தீர்ந்து
விண் இயல் முழு வெண் திங்கள் விளக்கமே ஒத்தது அன்றே. 3138

தேம் படு குமுதச் செவ்வாய் சிர புரச் செல்வர் முன்னம்
போம் பரி கனத்தார் தம்மில் பொன் நெடும் சின்னம் ஆர்ப்போர்
தாம் பர சமய சிங்கம் சமண் இருள் கிழியப் பானு
ஆம் படி வந்தான் என்று என்று ஆர்த்து எழும் ஒசை கேளா. 3139

நின்று உண்டு திரியும் கையர் எதிர் வந்து நீவிர் நுங்கள்
கொன்று அறம் சொன்ன தேவைக் கும்பிட வந்தால் இந்த
வென்றி கொள் சின்னம் என் கொல் வீறு என் கொல் யாரை வென்றீர்
என்றனர் தடுத்தார் என்று ஈறு இலா அடியார் தம்மை. 3140

மா மதம் ஒழுகச் செல்லும் திண் திறல் மத்த வேழம்
தாமரை நூலால் கட்டத் தடைபட அற்றோ கொற்றக்
காமனை முனிந்தார் மைந்தர் கயவர் தம் தடையை நீத்துக்
கோமணி மாட மூதூர் அடைந்து அரன் கோயில் புக்கார். 3141

கைம் மலைச் சாபம் தீர்த்த கருணை அம் கடலைத் தாழ்ந்து
மும்முறை வளைந்து ஞான முகிழ் முலைப் பாலினோடு
செம் மணி வள்ளத்து ஈந்த திரு வொடும் தொழுதான் அந்த
மெய்ம் மய வெள்ளத்து ஆழ்ந்து நின்றனர் வேதச் செல்வர். 3142

மறை வழி நின்று நின்னை வந்தி செய்து உய்ய மாட்டா
நிறை வழி வஞ்ச நெஞ்சச் சமணரை நெறிகள் எல்லாம்
சிறை பட வாது செய்யத் திருவுளம் செய்தி கூற்றைக்
குறைபட உதைத் தோய் என்று குறித்து உரை பதிகம் படி. 3143

வேண்டு கொண்டு அருளைப் பெற்று மீளும் அப்போது கண்டு
மூண்ட ஐம் பொறியும் வென்று வாகீச முனிகள் என்ன
ஆண்டு ஊளார் ஒருவர் வேண்ட அவர் திரு மடத்தில் அன்பு
பூண்டு எழு காத லோடும் போயினார் புகலி வேந்தர். 3144

அங்கு எழுந்து அருளி எல்லின் அமுது செய்து இருப்பவற்றைக்
கங்குல் வாய் அமணர் செய்யும் கருது அரும் செயலும் தங்கள்
மங்கல மரபில் வந்தாள் வருத்தமும் காண அஞ்சிச்
செங் கதிரவன் போல் மேலைச் செழும் கடல் வெள்ளத்து ஆழ்ந்தான். 3145

மாறு கொள் அமணர் செய்யும் வஞ்சனைக்கு இடனாய் ஒத்து
வேறு அற நட்புச் செய்வான் வந்து என விரிந்த கங்குல்
ஈறு அற முளைத்த வான் மீன் இனம் அவர் பறித்த சென்னி
ஊறு பட்டு எழுந்த மொக்குள் ஒத்த அக் கங்குல் எல்லை. 3146

வைதிகத்து தனி இளம் சிறு மடங்கலேறு அடைந்த
செய்தியைத் தெரிந்து அயன் மலை இடங்களில் திரண்ட
கை தவத்த எண்ணாயிரம் கயவரும் ஒருங்கே
எய்தி முத்தமிழ் விரகர் மேல் பழித்தல் இழைத்தார். 3147

மெய்யில் சிந்தையார் அத் தழல் கடவுளை விளத்து ஆங்கு
எய்தி எம் பகை ஆயினோர் இருக்கையை அமுது

செய்து வா எனப் பணித்தனர் சிறு விதி மகத்துக்
கை இழந்தவன் செல்லுமோ அஞ்சினான் கலங்கி. 3148

ஈனர் தாம் சடத் தீயினை எடுத்தனர் ஏகி
ஞான போனகர் மடத்தினில் செருகினர் நந்தாது
ஆன தீப் புகை எழுவதை அடியவர் கண்டு
வான நாயகன் மைந்தருக்கு உணர்த்தினார் வல்லை. 3149

சிட்டர் நோக்கி அத் தீயினை தென் தமிழ்க் கூடல்
அட்ட மூர்த்தியை அங்கு இருந்து அரு மறைப் பதிகம்
துட்டர் பொய் உரை மேற் கொண்டு தொல் முறை துறந்து
விட்ட வேந்தனைப் பற்று எனப் பாடினார் விடுத்தார். 3150

அடுத்தது அக்கணத்து அரசனை வெப்பு நோய் ஆகித்
தொடுத்ததிட்ட பல் கலன்களும் துகள் எழப் பனி நீர்
மடுத்த சாந்தமும் கலவையும் மாலையும் கருகப்
படுத்த பாயலும் சருகு எழப் புரவலன் பதைத்தான். 3151

வளவர் கோன் திரு மடந்தையும் மந்திரர் ஏறும்
தளர்வு அடைந்து நல் மருத்து நூல் விஞ்சையர் தமைக் கூஉய்ப்
பளகில் பல் மருந்து அருத்தவும் பார்வையினாலும்
விளைவதே அன்றி வெம் சுரம் தணிவது காணார். 3152

சவலை நோன்பு உழந்து இம்மையும் மறுமையும் சாரா
அவல மாசரை விடுத்தனர் அனைவரும் பார்த்துத்
தவ வலத்தினும் மருந்தினும் தணிந்திலது ஆகத்
கவலை எய்தினார் இருந்தனர் விடிந்தது கங்குல். 3153

வட்ட ஆழி ஒன்று உடைய தேர் பரிதி தன் மருமான்
பெட்ட காதல் கூர் மருகனைப் பற்றிய பிணி கேட்டு
இட்ட கார் இருள் எழினியை எடுத்து எடுத்து அம் கை
தொட்டு நோக்குவான் வந்து எனத் தொடு கடல் முளைத்தான். 3154

வாலிது ஆகிய சைவ வான் பயிரினை வளர்ப்பான்
வேலி ஆகி ஓர் இருவரும் வேந்தனை நோக்கி
கால பாசமும் சுடும் இந் நோய் அரு மறைக் காழிப்
பாலர் அன்றித் தீர்த்திடப் படாது எனப் பகர்ந்தார். 3155

பொய்யர் சார்பினை விடாதவன் ஈங்கு நீர் புகன்ற
சைவர் நீறு இட்டுப் பார்ப்பது தகுவதோ என்ன
ஐய நீ எனைத் திறத்தினால் ஆயினும் நோய் தீர்ந்து
உய்ய வேண்டுமே இதின் இல்யாது உறுதி என்று உரைத்தார். 3156

அழைமின் ஈண்டு என அரசனும் இசைந்தனன் ஆர்வம்
தழையும் மந்திரத் தலை மகன் தனி நகர் எங்கும்
விழவு தூங்க நல் மங்கல வினைகளால் விளக்கி
மழலை இன் தமிழ் விரகர் தம் மடாத்தில் வந்து எய்தா. 3157

அன்று கேள்வியால் அருந்திய ஞானவார் அமுதை
இன்று கண்களால் உண்டு கண் பெற்ற பேறு எய்திச்
சென்று இறைஞ்சினான் எழுந்திரும் தீ அமண் சூழ்ச்சி
வென்ற சிந்தையீர் என்றனர் பூந்தராய் வேந்தர். 3158

நன்று இருந்தனிரே என நகை மலர்த் தடம் தார்
வென்றி மீனவன் கற்பினார் தம்மையும் வினவ
என்று நும் அருள் உடையவர்க்கு வென் குறை என்னா
ஒன்று கேண்மை கூர் அன்பினார் இதனையும் உரைப்பார். 3159

கையர் மாளவும் நீற்றினால் கவுரியன் தேயம்
உய்வது ஆகவும் இன்று நும் அருளினால் ஒலி நீர்
வைகை நாடன் மேல் வெப்பு நோய் வந்ததால் அதனை
ஐய தீர்த்திடல் வேண்டும் என்று அடியில் வீழ்ந்து இரந்தார். 3160

இரந்த அன்பருக்கு அன்னது ஆக என்று அருள் சுரந்து
பரந்த நித்தில யானமேல் பனிக் கதிர் மருமான்
சுரம் தணிப்பல் என்று ஏகுவன் ஒத்து மெய்ச் சுருதி
புரந்து அளிப்பவர் பாண்டியன் கோயிலில் புகுவார். 3161

வாயில் எங்கணும் தூபமும் மங்கல விளக்கும்
தோய கும்பமும் கொடிகளும் சுண்ணமும் துவன்றச்
சேய காகள ஒலி மன்னன் செவிப் புலன் சுவைப்பக்
கோயில் எய்தினார் அமணர் தம் கோளரி அனையார். 3162

காவலன் மருங்கு இட்ட ஓர் கதிர் மணித் தவிசின்
மேவினார் அவர் நோக்கினான் மீனவன் தெள¤ந்து
வாவி தாழ் செழும் தாமரை என முகம் மலர்ந்து

பாவியேன் பிணி தணித்து எனைப் பணி கொள் மின் என்றான். 3163

புலைத் தொழிற்கு வித்து ஆயினோர் கேட்டு உளம் புழுங்கிக்
கலைத் தடம் கடல் நீந்திய காவலோய் உன் தன்
வலப் புறத்து நோய் இவரையும் மற்றை நோய் எமையும்
தொலைத்திடப் பணி என்றனர் கைதவன் சொல்வான். 3164

அனைய செய்திர் என்று இசையுமுன் சமணரும் அசோகன்
தனை நினைந்து கைப் பீலியால் தடவியும் கரத்துக்
கனை கொளாலி நீர் சிதறியும் நெய் சொரி கனல் போல்
சினவி மேல் இடக் கண்டனர் தீர்ந்திடக் காணார். 3165

தீயர் மானம் மிக்கு உடையராய்க் செருக்கு அழிந்து இருப்பப்
பாய கேள்வியோர் புண்ணியப் பையுள் நீறு அள்ளிக்
காயும் நோய் அது தணித்திடக் கருதினார் அதனை
மாய நீறு என விலக்கினார் மாயை செய்து அழிவார். 3166

அண்ட நாயகன் திரு மடைப் பள்ளி நீறு அள்ளிக்
கொண்டு வாரும் என்று அருமறைக் கவுணியர் கூறக்
கண்டு காவலன் ஏவலர் கைக் கொடு வந்தார்
வண்டு உலாவு தார் வழுதி நோய் தணிப்பவர் வாங்கி. 3167

மருந்து மந்திரம் யாவையும் மறை உரைப்பதுவும்
பொருந்து இன்ப வீடு அளிப்பதும் போகமும் பொருளும்
திருந்து ஆலவாயான் திரு நீறு எனச் சிறப்பித்து
அருந்து இன் அமுது அனைய சொல் பதிகம் பாடி அறைந்து. 3168

மெய்யில் இட்டனர் வருடலும் வெம் சுரம் துறந்த
மை இல் சிந்தையோர் வெகுளியில் தணிந்தது வாசம்
செய்த தண் பனி நீர் விரைச் சந்தனம் திமிர்ந்தால்
எய்து தண்மையது ஆயினது இறை வலப் பாகம். 3169

பொழிந்த தண் மதுத் தார் புனை பூழியர் கோனுக்
கிழிந்த செய்கையர் கைதொட வெரி இடு சுரத்தால்
கழிந்த துன்பமும் கவுணியர் கை தொடச் சுரம் தீர்ந்து
ஒழிந்த இன்பமும் இருவினை ஒத்தபோல் ஒத்த. 3170

ஐய இச்சுரம் ஆற்றரிது ஆற்றரிது என்னா

வைகை நாடவன் வல் அமண் மாசு தீர்ந்து அடியேன்
உய்ய வேண்டுமேல் அதனையும் அடிகளே ஒழித்தல்
செய்ய வேண்டும் என்று இரந்தனன் சிரபுரக் கோனை. 3171

பிள்ளையார் இடப் பாகமும் பண்டு போல் பெருமான்
வெள்ளை நீறு தொட்டு அம்கையால் நீவும் முன் மேல் நாள்
உள்ள கூனோடு வெப்பு நோய் ஒழிந்து மீன் உயர்த்த
வள்ளல் மாசு அறக் கடைந்த விண் மணி எனப் பொலிந்தான். 3172

அன்னது ஒரு காரணத்தால் சவுந்தரிய பாண்டியன் என்று
ஆகி அன்ன
தென்னவர் கோன் கவுணியர் கோன் திரு நோக்கால்
பரிசத்தால் தெருட்டும் வாக்கால்
பொன் அடி தாழ்ந்து ஐந்து எழுத்து உபதேசப் பேறு
அடைந்த பொலிவால் வஞ்சம்
துன் அமணர் நெறி இகழ்ந்து தொல் வேத நெறி அடைந்து
துயன் ஆனான். 3173

பாண்டியன் சுரம் தீர்த்த படலம் சுபம்

-----------------

## 63. சமணரைக் கழுவேற்றிய படலம் (3174 -3255)

பஞ்சவன் அடைந்த நோயைப் பால் அறா வாயர் தீர்த்து
நஞ்சு அணி கண்டன் நீறு நல்கிய வண்ணம் சொன்னேம்
அஞ்சலர் ஆகிப் பின்னும் வாது செய்து அடங்கத் தோற்ற
வஞ்சரைக் கழு வேறிட்ட வண்ணமும் சிறிது சொல்வாம். 3174

தென்னவன் தேவியாரும் அமைச்சருள் சிறந்த சிங்கம்
அன்னவன் தானும் காழி அந்தணர் அடியில் வீழ்ந்து எம்
மன்னவன் வெப்பும் கூனும் பாசமும் மாற்றி நீரே
இன்னமும் அடியேம் வேண்டும் குறை செயத் தக்கது என்றார். 3175

கன்னி நாடு எங்கும் இந்தக் கார் அமண் காடு மூடித்
துன்னின இதனை இன்னே துணித்திடல் வேண்டும் என்றார்
அன்னவர் ஆலவாயர் திரு உள்ளம் அறிவேன் என்னா
உன்னிய மனத்தர் ஆகி ஒய் எனக் கோயில் புக்கார். 3176

அவ் இருவோரும் கூட அடைந்து பொன் கமலம் பூத்த
திவ்விய தீர்த்தம் தோய்ந்து சேல் நெடும் கண்ணி பாக
நவ்வி அம் கமலச் செம்கை நாதனைத் தாழ்ந்து வேந்தன்
வெவ்விய வெப்பு நீத்தார் தொழுது இது வினவு கின்றார். 3177

காயமே ஒறுத்து நாளும் கைதவம் பெருக நோற்கும்
போயரை இம்மை யோடு மறுமையும் பேறு அற்றாரை
நீ உரை செய்த வேத வேள்வியை நிந்தை செய்யும்
தீயரை ஒறுத்தல் செய்யத் திருஉளம் செய்தி என்றார். 3178

வெம் மத வேழம் காய்ந்த விடையவர் விசும்பில் சொல்வார்
எம்மனோர் அவிர் நுங்கட்கு இசைந்ததே எமக்கும் வேண்டும்
சம்மதம் ஆனால் வெல்லத் தக்கவர் ஆக நீரே
அம் மதம் உடையார் தேற்கத் தக்கவர் ஆக என்றே. 3179

எம் மொழி தேறினீர் போய் இறை மகன் அவையத்து எய்திச்
செம்மை இலாரை வாது செய்திர் நீர் அனையார் தோற்று
வெம் முனைக் கழுவில் ஏறி விளகுவர் என்னக் கேட்டு
மைம் மலி களத்தான் மைந்தர் தொழுது தம் மடத்தில் போனார். 3180

இருவரும் மீண்டு தத்தம் இருக்கையில் போகி அற்றைப்
பருவம் அங்கு அகலப் பின் நாள் பாண்டிமா தேவியாரும்
பெரு மதி அமைச்சர் ஏரும் பிள்ளையார் மடத்தில் போகி
அருகரை வெல்லும் சூழ்ச்சி யாது என அளந்து தேர்வார். 3181

பேர் அருள் நிறைந்த காழிப் பெருந்தகை உடன் போய்த் தம்கோன்
சீர் அவை குறுகி ஈது செப்புவார் செய்ய கோலாய்
கார் அமண் காடே எங்கும் கழியவும் இடைந்த இன்ன
வேரோடும் களைந்தார் சைவ விளைபயிர் ஓங்கும் என்றார். 3182

அவ்வண்ணம் செய்வதே என்று அரசனும் அனுச்சை செய்யச்
செவ் வண்ண வெண் நீற்று அண்ணல் அனுச்சையும் தெரிந்த தேயம்
உய் வண்ணம் இது என்று அங்கண் உள் மகிழ்ந்து இருந்தார் நீண்ட
பை வண்ண ஆரம் பூண்டார் புகழ் எங்கும் பரப்ப வல்லார். 3183

அந்த வேலை அருகந்தக் கையரைக்
குந்த வேல் கண் குல மட மாதரும்
மைந்தர் ஆகிய மக்களும் கண் அழல்

சிந்த நோக்கி இகழ்ந்து இவை செப்புவார். 3184

செழியர் கோமகன் மூழ்கிய தீப் பிணி
கழிய மாற்றும் வலியின்றிக் கற்றிலா
மழலை வாய் ஒரு மைந்தற்குத் தோற்று வெம்
பழி விளைத் தீர் பகவன் தமர்க்கு எலாம். 3185

சாம்பர் ஆடும் சமயம் புகுந்து வெம்
பாம்பு அணிந்தவனே பகவான் என
வேம்பன் உங்கள் விரத நெறி எலாம்
சோம்பல் எய்தத் துறந்தான் இகழ்ந்து அரோ. 3186

ஏது உமக்கு நிலை இனி என்ற அப்
போது மற்றவர் தம்மைப் புறகிட
வாது செய்தற்கு எழுந்தனர் வஞ்சகர்
போதும் என்னத் தடுத்தனர் பூவை மார். 3187

செல்லன் மின் கண் உமக்கு இது செவ்வி அன்று
அல்லல் கூர வரும் துன்பத்து ஆழ நாம்
எல்லி கண்ட கனவு உண்டு அதனை யாம்
சொல்லு கேம் இன்று கேண்ம் எனச் சொல்லுவார். 3188

இடையறாது நம் பாழியும் பள்ளியும் எங்கும்
சடையர் முஞ்சியர் சாம்பலர் தாங்கிய சூலப்
படையர் தீவிழிப் புலவு வாய்ப் பாய் பெரும் புலித்தோல்
உடையராய்ச் சிலர் வந்து வந்து உலவுதல் கண்டேம். 3189

கன்னியில் துறவு அன்னங்கள் கணவனின் துறவின்
மன்னும் ஆரியாங் கனைகள் நுல் வாங்கும் அக் குசைகள்
என்ன மூவகைப் பெண் தவப் பள்ளிகள் எல்லாம்
சின்ன வெண் பிறைக் கோட்டுமா சிதைக்கவும் கண்டேம். 3190

முண்டிதம் செய்த தலையராய் முறுக்கு உறி தூங்கும்
குண்டிகை கைத் தடம் கையராய்க் கோவணம் பிணித்த
தண்டு தாங்கிய சுவலராய்ச் சடையன் பேர் நாவில்
கொண்டு அசைத்தனராய் எங்கும் குலாவவும் கண்டேம். 3191

காந்து வெங்கதம் உடையது ஓர் கயம் தலை வந்து

சூழ்ந்து கொண்டு நம் அடிகள் மார் கணம் எலாம் துரத்தி
ஏந்து பூம் சினை அலைந்திட இரங்கி வண்டு இரியப்
பாய்ந்து பிண்டியை வேரொடும் பறிக்கவும் கண்டேம். 3192

அந்த மூவிலை வேலினும் மயில் முனைக் கழுவின்
பந்தி மீது நீர் ஏறவும் கண்டு உளம் பனிப்பச்
சந்த மார்பகம் சேப்ப அம் தளிர்க்கரம் புடைத்துக்
கந்த வார் குழல் சோரவும் கலுழவும் கண்டேம். 3193

தள் அரும் திறல் இந்திர சாலமோ காதி
உள்ள விஞ்சை இவ் எல்லை வந்து உதவிலா ஒன்றும்
கள்ளரால் பறி பட்டவோ கனவில் வெந்தனவோ
வெள்ளம் கொண்டவோ சேமத்தில் கிடப்பவோ விளம்பீர். 3194

தாவு தீ வளர்த்து எழு கரி தன்னை ஆடு அரவை
ஆவையேவி முன் நம்மனோர் பட்டது மறந்தீர்
காவலன் பிணி தணித் திலீர் இனிச் செய்யும் கருமம்
யாவது ஆகுமோ அதனையும் எண்ணுமின் என்றார். 3195

இற்றை வைகலுக்கு ஏகன் மின் என்றனர் அறத்தைச்
செற்ற வஞ்சகர் செல்லுவார் திரும்பவும் கையைப்
பற்றி ஈர்த்தனர் பெண்டிர் சொல் கேட்பது பழுது என்று
உற்ற தீவினை வழிச் செல்வார் ஒளித்தனர் செல்வார். 3196

கொங்கலர்க் குழல் சரிந்திடக் குரத்தியர் பின்னும்
எங்கள் சொல் கொளது ஏகுவிர் பரிபவம் எய்தி
உங்களுக்கு இடையூறு வந்து உறுக எனச் சபித்தார்
அங்கு அதற்கும் அஞ்சார் செல்வார் அழியும் நாள் அடுத்தார். 3197

புட்களும் பல விரிச்சியும் போகல் என்று எதிரே
தட்கவும் கடந்து ஏகுவார் தடம் கயல் உகைப்பக்
கட் கவிழ்ந்து அலர் கிடங்கர் சூழ் கடி நகர்ப் புறம் போய்
உட்கு நெஞ்சராய் யாவரும் ஓர் இடத்து ஈண்டி. 3198

யாது சூழ்ச்சி என்று எண்ணுவார் இறைவனைக் கண்டு
ஈது ஓதி நாம் அவன் அனுமதி உறுதி கொண்டு அனைய
ஏதிலாளனை வாதினால் வென்றும் இசைந்து
போதுவார் நகர் புகுந்து வேத்து அவைக் களம் புகுவார். 3199

ஆய போது இளம் காலையில் கவுணியர் ஆல
வாயர் சேவடி பணிந்து தம் மடத்தினில் செல்லக்
காயும் மாதவச் செல்வனைக் கங்குல் சூழ்ந்தாங்கு
மாய வஞ்சகர் வந்து இடை வழித் தலை மறித்தார். 3200

மறித்த கையர் பின் செல்ல முன் மன் அவைக் குறுகிக்
குறித்த வாளரித் தவிசின் மேல் கொச்சையர் பெருமான்
எறிந்த சேய் இளம் பரிதியின் ஏறி வீற்று இருந்தார்
பறித்த சீத்தலை புலையர்கள் பொறாது இவை பகர்வார். 3201

மழலை இன்னமும் தௌ¤கிலா மைந்த கண் மணி ஒன்று
உழல் கருங்கொடி இருந்திடக் கனி உதிர்ந்தாங்கு உன்
கழல் கொள் விஞ்சையின் அன்மையான் மன்னனைத் தொடுத்த
அழல இத்தனம் என்று நீ தருக்குறத் தகுமோ. 3202

நந்து நாகு நீர் வண்டு செல் நடை வழி எழுந்தாய்
வந்து வீழினும் வீழும் அவ் வழக்கு நின் கையற்று
சிந்து சாம்பரும் சிறு சொலும் மருந்து மந்திரம் போல்
சந்து சூழ் மலையான் சுரம் தணிந்தன கண்டாய். 3203

உங்கள் மந்திரம் ஏடு ஒன்றில் தீட்டுக ஓர் ஏட்டு
எங்கள் மந்திரம் தன்னையும் தீட்டுக இரண்டும்
அங்கி வாய் இடின் வெந்தது தோற்றது அவ் அங்கி
நுங்கிடாது வென்றது என்று ஒட்டியே நுவலா. 3204

செக்கர் அம் சடையான் உறை பதிகளில் செய்யத்
தக்க தன் தவநிலை பிழைத்தும் நும் சார்வாய்
விக்க எம் மனோர்க்கு இயற்றுவான் வேறு ஒரு தலத்தில்
புக்கு அமர்ந்து தவம் செயப் போதுகம் என்னா. 3205

வென்றி மா முரசு உறங்கிட வியன் நகர்ப் புறம் போய்
மன்றல் வேம்பன் முன் கதழ் எரி மடுத்திடில் பிழைப்ப
தொன்று வேவது ஒன்று ஈது கொண்டு உமர்களும் எமரும்
இன்று வெல்வதும் தோற் பதும் காண்டும் என்று எழுந்தார். 3206

ஈட்டு வஞ்ச நெஞ்சரே எழீ நகர்ப் புறம்பு போய்க்
கீழ் திசைக்கண் ஓர் அழல் கிடங்கு தொட்டு எழுந்து வான்

நீட்டு கோடு அரம் குறைத்து நிறைய விட்டு நெட்டு எரி
மூட்டினார் மாதரார் வயிற்றும் இட்டு மூட்டினார். 3207

ஞானம் உண்ட முனிவர் தம்மை எள்ளி எள்ளி நாயினும்
ஈனர் அங்கியை அடுத்து இருப்ப எண்ணாராயிரர்
ஆன தொண்டர் உடன் எழுந்து சண்பை வேந்தும் அரசனும்
மானன் ஆர் மந்திரக் கிழானும் வந்து வைகினார். 3208

உள் அவிழ்ந்த முலை சுரந்து ஒழுக்கு பால் அருந்தியே
துள்ளி ஓடும் கன்று பின் தொடர்ந்து செல்லும் ஆன் என
வெள்ளி அம்பலத்துள் ஆடும் வேதகீதர் காதல் கூர்
பிள்ளை போன வாறு தம் பிராட்டி யோடும் எய்தினார். 3209

ஆறினோடு இரண்டு அடுத்த ஆயிரம் சமணரும்
வேறு வேறு தாம் முயன்ற மந்திரங்கள் வேறு வேறு
நீர் சுந்தர ஒலையில் பொறித்து ஒருங்கு போய்ச்
சீறி வான் நிமிர்ந்து எழுந்த தீயின் வாய் நிரப்பினார். 3210

அக்கி வாய் மகுத்த ஏடு அனைத்தும் அக் கணத்தினே
இக்கு வாய் உலர்ந்த தோடு எனக் கரிந்து சாம்பராய்
உக்க வாறு கண்டு நீசர் உட்கிடந்து பொங்கவே
திக்கு உளார்கள் கண்டபேர் சிரித்து உளார்கள் ஆயினார். 3211

விரிந்த வேத நாவர் தாம் விரித்த வேத மெய்ப் பொருள்
வரைந்த புத்தகத்தை வண் கயிற்றினால் வகிர்ந்து தாம்
அருந்த ஞான அமுது அளித்த அம்மை போகப் படத்
தெரிந்த ஏடு எடுத்து அடுத்த தீயின் வாயில் இட்டனர். 3212

மறைப் புலப் படுத்த நூல் வரைந்த ஏடு அனந்த நாள்
அறை புனல் கிடந்ததாம் எனப் பசந்த அரசனும்
நிறை அமைச்சும் அரசியாரும் நின்றபேரும் அந்தணர்க்
இறைவரை புகழ்ந்து அளப்பு இல் இன்ப வெள்ளம் மூழ்கினார். 3213

வெந்த சிந்தை அமணர் வாது வெல்வதற்கு வேறு இடம்
புந்தி செய்து வந்த அப் பொதுத் தலம் பொதுக் கடிந்து
அந்தணாளர் வாது வென்ற அன்று தொட்டு ஞானசம்
பந்தன் என்ற நாமமே படைத்து உயர்ந்த இன்றுமே. 3214

அன்ன ஏடு முறையினோடு இறுக்கி அந்தணாளர் கோன்
மன்னை நோக்க வினையினோடு பாய் உடுத்த மாசர் தாம்
சொன்ன சூள் புலப்படத் துணிந்தும் வாய்மை நாண் ஓரி இக்
கன்னி நாடன் அவை சிரிக்க ஆற்றலாது கத்துவார். 3215

ஏட நாங்கள் எழுதி இட்ட பச்சை ஏடு எணாயிரம்
வீட வந்த நீ வரைந்து விட்ட ஓலை ஒன்றும் என்
வாடல் இன்றி நீரில் இட்ட வண்ணம் ஆனது ஆல் இது உன்
பாடவம் செய் விஞ்சை கொண்டு பாவ கல் பிணித்ததே. 3216

உங்களேடும் எங்கள் ஏடும் உம்பர் வானளாய் விரைஇப்
பொங்கி ஓடும் வைகை நீரில் இடுக இட்ட போது தான்
அங்கு நீர் எதிர்க்கும் ஓலை வெல்லும் ஓலை அன்றியே
துங்க வேலை செல்லும் ஓலை தோற்கும் ஓலை யாவதே. 3217

வென்று வீறு அடைந்தவர்க்கு வீறு அழிந்து தோற்றபேர்
என்றும் ஏவல் அடிமை ஆவது என்று இசைந்து கைதவக்
குன்று போலும் நின்ற குண்டர் கூறலோடும் ஈறு இலா
மன்று ஆடும் அடிகள் மைந்தர் வாய் மல்ர்ந்து பேசுவார். 3218

அடியார் பதினாறாயிரவர் உள்ளார் சிவனை அவமதித்த
கொடியார் நீவிர் உமக்கு ஏற்ற தண்டம் இதுவோ கொன்றை மதி
முடியார் அருளாள் உங்களை நாம் வென்றேம் ஆயின் மூ இலை வேல்
வடிவான் நிரைத்த கழு முனை இடுவேம் அதுவே வழக்கு என்றார். 3219

ஊழின் வலியால் அமணர் அதற்கு உடன் பட்டார்கள் அஃது அறிந்து
சூழி யானைக் குலைச் சிறையும் தச்சர் பலரைத் தொகுவித்துக்
காழின் நெடிய பழு மரத்தில் சூல வடிவாய்க் கழு நிறுவிப்
பாழி நெடிய தோள் வேந்தன் முன்னே கொடு போய் பரப்பினார். 3220

தேறலாதார் தமைக் காழிச் செம்மல் நோக்கி இனி வம்மின்
நீறு பூசிக் கண்டிகையும் பூண்டு நிருத்தர் எழுத்து ஐந்தும்
ஊற ஒதிப் பாசம் ஒழித்து உய்மின் என்னா அற நோக்கிக்
கூறினார் மற்று அது கேட்டுக் குண்டர் எரியில் கொதித்து உரைப்பார். 3221

முன்பு தீயில் வென்றனமே நீரில் யாதாய் முடியும் என
அன்பு பேசி எமை இணக்கி அகல நினைத்தாய் அல்லதை நீ
பின்பு வாது செயத் துணியும் பெற்றி உரைத்தாய் அல்லை புலால்

என்பு பூணி அடி அடைந்த ஏழாய் போதி என மறுத்தார். 3222

ஊகம் தவமும் பழு மரத்தை உதைத்துக் கரை மாறிட ஒதுக்கிப்
பூகம் தடவி வேர் கீண்டு பொருப்பைப் பறித்துப் புடை பரப்பி
மாகம் துழாவிக் கடுகிவரும் வைகைப் புனலை மந்திரத்தால்
வேகம் தணிவித்து ஏடு எழுதி விடுத்தார் முன் போல் வெள்காதார். 3223

சிறை ஏய் புனல் சூழ் வேணுபுரச் செல்வர் யாரும்
தௌ¤வு எய்த
மறையே வாய்மை உரையாய் இன் மறைக் கண் முழுதும்
துணி பொருள் தான்
பிறையேய் வேணிப் பிரான் ஆகில் பெரு நீர் எதிரே
செல்க என
முறையே பதிகம் எடுத்து எழுதி விட்டார் முழங்கி
வருபுனலில். 3224

தேசம் பரவும் கவுணியர் கோன் விடுத்த ஏடு செழுமதுரை
ஈசன் அருள் ஆம் கயிறு பிணித்து ஈர்ப்ப நதியில் எதிர் ஏற
நாசம் செய்யும் பொறிவழியே நடக்கும் உள்ளம் எனச் சென்று
நீசரே எண்ணாயிரம் நீத்த வழியே ஒழுகிய ஆல். 3225

சிங்கம் அனையார் எழுது முறை எதிர் ஆற்று ஏற தெரிந்தமரர்
அம் கண் நறும் பூமழை பொழிந்தார் அறவோர் துகில் விண் எறிது ஆர்த்தார்
கங்கை அணிந்தார் திருத்தொண்டர் கண்ணீர்க் கடலில் அமிழ்ந்தினார்
வெம் கண் அமணர் நடுங்கி உடல் வெயர்வைக் கடலில் அமிழ்ந்தினார். 3226

வேமே என்பது அறியாதே வெல்வேம் என்றெ சூள் ஒட்டி
நாமே இட்ட ஏடு எரியில் வேவக் கண்டு நதிக்கு எதிரே
போமே இன்னம் வெல்வேம் என்று இட்ட ஏடும் புணரி புகத்
தாமே தம்மைச் சுட நாணி நின்றார் அமணர் தலை தூக்கி. 3227

பொருப்பே சிலையாய் புரம் கடந்த புனிதனே எத்தேவர்க்கும்
விருப்பேய் போகம் வீடுதரும் மேலாம் கடவுள் என நான்கு
மருப்பேய் களிற்றான் முடி தகர்த்தான் மருமான் அறியக் குருமொழி போல்
நெருப்பே அன்றி வேகவதி நீரும் பின்னர்த் தேற்றியதால். 3228

பொய்யின் மறையின் புறத்து அமணர் புத்தர்க்கு அன்றி
வாய்மை உரை

செய்யும் மறை நூல் பல தெரிந்தும் சிவனே பரம் என்பது
அறியாதே
கையில் விளக்கினொடும் கிடங்கில் வீழ்வார்
கலங்கி மனம்
ஐயம் அடைந்த பேதையர்க்கும் அறிவித்தனவே அவை
அன்றோ. 3229

கண்டு கூடல் கோமகனும் கற்பும் நிறைந்த பொற்புடைய
வண்டு கூடும் தார் அளக வளவன் மகளும் மந்திரியும்
தொண்டு கூடி மடியாரும் காழிக்கு அரசைத் தொழுது துதி
விண்டு கூடற்கு அரிய மகிழ் வெள்ளத்து அழுந்தி வியந்தனர் ஆல். 3230

நன்றிதேறார் பின்பு உள்ள மானம் இழந்து நாண் அழிந்து
குன்று போலும் தோணி புரக் கோமான் எதிரே யாங்களும் உமக்கு
இன்று தோற்றேம் எமை ஈண்டு நீரே வென்றீர் என நேர்ந்து
நின்று கூறக் கவுணியர் கோன் அனையார் உய்யும் நெறி நோக்கா. 3231

இன்னம் அறத்தாறு இசைக்கின்றே நீர் ஏன் வாள இறக்கின்றீர்
அன்னை அனையான் எம் இறைவன் அவனுக்கு ஆளாய் உய்மின்கள்
என்ன ஏட சிறியாய் நீ எவ்வாறு எங்கட்கு அடாத மொழி
சொன்னது என்று மானம் உளார் கழுவில் ஏறத் தொடங்கினார். 3232

மதத்தினின் மான மிக்கார் தாங்களே வலிய ஏறிப்
பதைத்திட இருந்தார் ஏனைப் பறி தலை அவரைச் சைவ
விதத்தினால் ஒழுக்கம் பூண்ட வேடத்தார் பற்றிப் பற்றிச்
சிதைத்து இடர் செய்து ஏறிட்டார் திரி தலைக் கழுக்கோல் தன்னில். 3233

வழி வழி வரும் மாணக்கர் சாதற்கு வருந்தி நெஞ்சம்
அழிபவர் திரு நீறு இட்டார் அது கிட்டாது அயர் வார் ஆவின்
இழிவு இல் கோமயத்தை அள்ளிப் பூசினார் இதுவும் கிட்டாது
ஒழிபவர் ஆவின் கன்றைத் தோளில் இட்டு உயிரைப் பெற்றார். 3234

3235. கூறிட்ட மூன்றும் கிட்டாது அயர்பவர் குற்றம் தீர
நீறு இட்டார் நெற்றியோடு நிருமல கோமயத்தின்
சேறு இட்டார் நெற்றியோடு நெற்றியைச் செறியத் தாக்கி
மாறிட்ட பாசம் தன்னை மறித்திட்டுப் பிறப்பை வெல்வார். 3235

மற்று இவர் தம்மை ஊற்றம் செய்திலர் மடிந்தோர் யாரும்

சுற்றிய சேனம் காக நரிகள் நாய் தொடர்ந்து கௌவிப்
பற்றி நின்று ஈர்த்துத் தின்னக் கிடந்தனர் பரும யானை
வெற்றி கொள் வேந்தன் காழி வேந்தரைத் தொழுது நோக்கா. 3236

இன்று நீர் இட்ட ஏடு இங்கு யாவரும் காண நேரே
சென்றதே எங்கே என்றான் அதனை யாம் செம்பொன் கூடல்
மன்றவர் அருளால் இன்னே வருவிப்பம் என்று வாது
வென்றவர் நதியின் மாடே மேல் திசை நோக்கிச் செல்வார். 3237

செல்லு நர் காண ஓலை காவதம் செல்வது அப்பால்
ஒல்லை அங்கு ஒளித்தலோடும் வியந்து அவண் ஒருங்கு கூடிக்
கொல்லையான் மேய்த்து நின்றார் சிலர் தமைக் குறித்து நீர் இவ்
எல்லையுள் விசேடம் உண்டோ இவண் கண்டதிசை மினென்றார். 3238

அவ் இடைச் சிறார்கள் யாங்கள் ஒன்றையும் அறியேம் என்ன
இவ்விடை விசேடம் காணல் வேண்டும் எத்திறத்தும் என்னாத்
தெவ்விடை வாது செய்யத் திரு உளக் கருணை செய்த
வெவ்விடைக் கொடியினாரைப் பாடினார் வேத நாவார். 3239

பாட்டின் மேல் கருணை வைத்தார் சயம்பு வாய்ப் பராரை வில்லக்
காட்டினுள் இருப்ப நேரே கண்டு தாழ்ந்து எழுந்து சண்பை
நாட்டினர் வலம் கொண்டு ஏத்தி எதிர் நின்றார் நகைத்தார் நிம்பத்
தோட்டினான் அது கேட்டு அங்கே தோன்றினான் தானை யோடும். 3240

அந்த மா இலிங்கத்து ஈசன் ஆயிரம் மதியம் கண்ட
முந்தை வேதியராய்த் தோன்றி முத் தமிழுக்கு அரசை நீ என்
மைந்தன் ஆம் இளையோன் ஒப்பாய் வருக என நீறு சாத்திச்
சிந்தை நீள் ஆர்வம் கூரத் திரு அருள் சுரந்து நின்றார். 3241

நின்ற அந்தணரை அன்று நிருமல ஞானம் ஈந்தார்
என்று கண்டு இறைஞ்சி ஐய நீரில் யான் இட்ட ஏடு
சென்றது இங்கு எடுத்தீர் நீரே அஃது நும் செல்வர்க்கு ஏற்ற
அன்று அதைத் தருதி என்றார் அறுமுகச் செம்மல் அன்னார். 3242

இன்னமும் பல் நாள் எம்மை இடம் தொறும் பாடி எஞ்சும்
புன் நெறி ஒழுகுவாரை வென்று நம் புனித வீடு
பின்னர் நீ பெறுதி என்னா ஏடு தந்து ஆசி பேசி
மின் என மறைந்து நின்றார் வேதியர் ஆய வேடர். 3243

தாதையார் கவர்ந்து மீளத் தந்த ஏடு அதனை வாங்கிப்
போதையார் ஞானம் உண்டார் புரிசடைப் பிரானார் வெளவி
ஈதை யாம் இரந்து வேண்டத் தந்தனர் என்று கூறிக்
கோதை ஆர் வேலினார்க்குக் காட்ட அக் கொற்கை வேந்தன். 3244

கச்சு ஆன அரவம் ஆர்த்த கருணை அம் கடலில் தோன்றும்
விச்சான ஞானம் உண்டீர் ஆற்றலின் விளைவு தேறாது
அச்சான வலியான் உம்மை அளந்தனன் அடியேன் இந்தத்
துச்சான பிழைதீர்த்து ஆள்க என்று இறைஞ்சினான்
துணர்த்தார் வேம்பன். 3245

அந் நெடு மேரு ஆகும் ஆடகச் சிலையினார்க்குப்
பொன் நெடும் சிகரக் கோயின் மண்டபம் புயலைக் கீண்டு
மின் நெடும் மதியம் சூடும் கோபுர மேகம் தாவும்
கல் நெடும் புரிசை வீதி யாவையும் களிப்பக் கண்டான். 3246

அற்றை நாள் ஆதி ஆக வேடகம் என்னும் நாமம்
பெற்றதால் ஏடகத்தின் மேவிய பிரானைப் பாண்டிக்
கொற்றவன் சமண ரோடும் கூடிய பாவம் எல்லாம்
பற்று அறப் பூசை செய்து பாசமும் கழியப் பெற்றான். 3247

நறை கெழு துழாயினானும் கலுழனும் நாகர் வேந்தும்
முறையினால் உகங்கள் மூன்றும் பூசித்து முடியா இன்ப
நிறை அருள் பெற்றார் அன்ன நிரா மய இலிங்கம் தன்னை
இறுதியா முகத்தில் பாண்டி இறை மகன் பூசை செய்தான். 3248

அம் கண் மா நகர் கண்டு ஆங்கு ஓர் ஆண்டு இறை கொண்டு காழிப்
புங்கவ ரோடும் பின் நாள் பூழியர் பெருமான் மீண்டு
மங்கல மதுரை சேர்ந்து வைகும் நாள் நீற்றுச் செல்வம்
எங்கணும் விளங்கச் சின்னாள் இருந்து பின் ஞானச் செல்வர். 3249

வட புலது உள்ள ஈசன் பதிகளும் வணங்கிப் பாடக்
கடவம் என்று எழுந்து கூடல் கண் நுதல் பெருமான் தன்னை
இடன் உறை கயல் கண்ணாளை இறைஞ்சிப் பல்வரனும் பெற்று
விடை கொடு தமிழ் நாடு எங்கும் பணிந்தனர் மீண்டு போவார். 3250

தன் பெரும் கற்பினாளும் அமைச்சனும் தமிழ் நர் கோனும்

பின்பு முனம் தண் காழிப் பிரான் அடி பிரிவு ஆற்றார் ஆய்
அன்பு தந்தவர் பால் நட்ட அன்று தொட்டு ஆனாக் கேண்மை
இன்பமும் துன்பம் ஆகி விளைந்து முன் ஈர்ப்பப் போனார். 3251

சண்பையர் தலைவர் தாமும் அனையராய்த் தம்பின் செல்லும்
நன்புடையவரை நோக்கி நம் இடத்து அன்பு நீங்காப்
பண்பினர் ஆகி நீறு பாதுகாத்து ஈசன் கீர்த்தி
மண் பட வாழ்மின் இது மறுக்கன் மின் நின்மின் என்றார். 3252

ஆள்உடைப் புகலி வேந்தர் அருண்மொழி மறுக்க
அஞ்சித்
தாள் உடைப் பதுமச் செந்தாள் தலை உறப் பணிந்து
மீண்டு
வாள் உடைத் தானைத் தென்னன் மதுரையில் வந்தான்
கஞ்சத்
தோள் உடைச் சிங்கம் அன்னார் சோழர் கோன் நாடு
புக்கார். 3253

ஞானமா மதநீர் சோர ஞான சம்பந்தர் என்னும்
மானமா யானை வந்து கடம்பமா வனத்தில் துன்னும்
ஊனம் ஆம் சமணர் என்னும் தருக்களை ஒடித்து வெண்ணீறு
ஆன மாப் பூழி அள்ளித் தூற்றியது அவனி எங்கும். 3254

ஆதி ஆலயத்து அடலை கொண்டு ஆழி சூழ் காழிச்
சோதி வேதியர் பாண்டியன் சுரம் தணித்து உடலில்
பேதியாத கூன் நிமிர்த்தலால் பிறங்கு கற்பாதிப்
பூதி யாவினும் சிறந்தது அவ் வட்டில் வாய்ப் பூதி. 3255

சமணரைக் கழுவேற்றிய படலம் சுபம்

-------------------------

## 64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் (3256 -3310)

சென்னி வெண் திங்கள் மிலைச்சிய சிவன் அருள்
அடைந்த சம்பந்தர்
துன் இரும் சமணனைக் கழுமுனை ஏற்றித் துணித்த வாறு
இசைத்தனம் வணிகக்
கன்னிதன் மன்றல் கரியினை மாற்றாள் காண அக் கண்
நுதல் அருளால்

வன்னியும் கிணறும் இலிங்கமும் ஆங்கு வந்தவாறு
அடுத்தினி உரைப்பாம். 3256

பொன் மலர்க் கைதை வேலி சூழ் வேலைப் புறத்து
ஒரு பட்டினத்து உள்ளான்
மின் மணிக் கொடும் பூண் ஒரு குல வணிகன் வேறு
வேறு ஆம் பல செல்வத்
தன்மையில் சிறந்தோன் மகவு இலன் ஆகித் தன்
மனக்கு இனியது ஓர் காட்சி
நன் மனைக் கொடியோடு அறம் பல புரிந்தோர் நகை
மதிக் கொம்பை ஈன்று எடுத்தான். 3257

அத்தன வணிகற்கு உரிய நன் மருகன் அவன் முதற்
கடிமணம் முடித்தோன்
முத்தமிழ் மதுரைப் பதி உளான் அவற்கே முறையினால்
நோற்று நான் பயந்த
வித்தக மயிலைக் கொடுப்பல் என்று அனைய இயற் குல
வணிகர் கோன் தன்னோடு
ஒத்த பல் கிளைஞர் யாவரும் அறிய உணர்த்தினான்
சில பகல் ஒழிய. 3258

ஊழ்வினை வலியால் ஆருயிர் இழந்தான் உயிர்க்கு உடம்பு
அனைய தன் கற்பின்
சூழ் கதிர் மணிப் பூண் மனைவியும் இறப்பத் துணிந்தனள்
அவர் இருவோர்க்கும்
ஆழ் கடல் கிளைஞர் செயத் தகு கடன்கள் ஆற்றியச்
செய்தியை மதுரை
வாழ்தரு மருகற்கு உணர்த்துவான் ஓலை விடுத்தனர்
மருமகன் வாங்கா. 3259

தன் அருள் மாமன் துஞ்சினான் கூடத் தாரமும் துஞ்சியது
இப்பால்
அன்னவற்கு அளவு இன்று ஆகிய தனம் உண்டு அவனனி
நாண் மகவு இன்றிப்
பின் ஒரு பெண்ணைப் பெற்றனன் அவளைத் தனக்கு எனப்
பேசினான் அனைய
கன்னியை மணந்து செல்க என முடங்கல் கழறிய பாசுரம்
தெரியா. 3260

வீழ்ந்தனன் தரை மேல் புரண்டனன் உயிர்ப்பு வீங்கினன்

விழிப்புனல் வெள்ளத்து
ஆழ்ந்தனன் விம்முற்று அம்மவோ என்று என்று
அரற்றினான் கிளைஞர் நட்பு அடைந்து
வாழ்ந்தவர் தழுவத் தழீஇத் தழீஇக் கரைந்தான் மற்றவர்
தேற்றிடத் தௌ¤ந்து
சூழ்ந்த வெம் துயர் நீத்து ஒரு தலை மாமன் தொல்
நகர்க்கு கேகுவான் துணிந்தான். 3261

அங்கு உள கிளைஞர் சிலரொடும் கூடி அரும் கடி மதுரை
நீத்து ஏகிப்
பொங்கிரும் காழி சூழ் பட்டினம் குறுகிப் புகுதுவான் வரவு
அறிந்து அங்குத்
தங்கு தம் கிளைஞர் வினவ நேர் வாரைத் தழீஇத் தழீஇச்
செலவிடுத்து ஏகிக்
கொங்கு இவர் தளவத் தாரினான் மாமன் கோயில் புக்கு
இருந்தனன் ஆக. 3262

நாள் சில கழிந்த பின்னர் நாய்கர் ஏறு அனையான் அன்ன
வாள் புரை கண்ணியானை மதுரையில் கொடுபோய் அங்கு என்
கேளிர் முன் வேட்பல் என்று கிளந்து தன் மாமன் ஈட்டு
நீள் பெரும் பொருள்கள் மற்றும் கைக் கொண்டு நெறியில் செல்வான். 3263

வழிவிட வருவார் தம்மை நிறுத்திப் பின் மதுரை மூதூர்க்கு
எழுதரு சுற்றத்தாரை முன் சென் மின் என்று போக்கித்
தொழு பரிசனமும் தானும் தோகையும் வைகல் ஒன்றில்
கழி வழி அரைமேல் பெய்த காவதம் ஆகப் போவான். 3264

வெம் கதிர் வேலை செல்லும் வேலை வந்து அணையும் முன்னம்
இங்கிருந்து ஒழிகம் என்னாப் புறம் பய மூதுர் எய்தி
அங்கு இறை கோயில் முன்னிக் கூவல் நீராடி அங்குத்
தங்கிய வன்னி மாடே போனகம் சமைத்து உண்டு எல் வாய். 3265

மலை வைத்த சிலையான் கோயில் மருங்கு ஒரு படியின் உம்பர்
தலை வைத்துத் துயிலும் எல்லை விதிவழிச் சார வந்தோர்
கொலை வைத்த விடவாய் நாகம் கடித்தது கொதித்து நீண்ட
விலை வைத்த கொடும் பூண்நாயகன் விடம் தலைக் கொண்டு மாய்ந்தான். 3266

அங்குள பரிசனங்கள் ஆவலித்து இரங்கிச் சூழக்
கொங்கைகள் புடைத்துச் சேடிக் குற்றிடை மகளிர் ஏங்கச்

சிங்க ஏறு அனையான் ஆகந் தீண்டிடாது ஒதுங்கிப் போந்த
பங்கய மலர்க் கொம்பு அன்னாள் பாவை போல் புறம்பு நின்றாள். 3267

ஆளி ஏறு அன்ன அரவின் வாய்ப் பட்டதும் அவிந்ததும்
மீள வேல் உண் கணார் கை குலைத்து அழுவதும்
விழுவதும்
கேளிர் சூழ்ந்து அயர்வதும் சோர்வதும் கண்டு இளம்
கிகினாள்
வாளியேறு உண்டதோர் மயிலின் வீழ்ந்து உயங்கினாள்
மயங்கினாள். 3268

வடிக்கண் உள் செருகின அருகின உயிர்ப்பு அழல்
வாய்ப் படும்
தொடுத்த பூம் கோதைபோல் சோர்ந்தது ஆக கரம்
சோர்ந்தன
அடித்தளிர் சோர்ந்தன கன்னி அன்னப் பெடை
அன்னவள்
இடிக்கு எதிர் பட்டு வீழ்ந்தாள் எனக் கிடந்தனள் என்
செய்வாள். 3269

சாயும் பூம் கொம்பரில் சூழ்ந்து இறந்தான் புறம் சார்ந்து
அழூஉம்
ஆய மென் மகளிர் மீண்டு அன்பனோடு எங்கை தன்
ஆவியும்
போயதே கொல் என மடியுறக் கொடும் கையால் புறம்
தழீஇத்
தூய தூ செறிந்து இளைப் பாற்றினார் சிறிது உயிர்
தோற்றவே. 3270

மெய் கழிந்து இன்னுயிர் மீண்டு தன் யாக்கையின் மெல்லவே
கை கலந்தாங்கு இரு காலி அங்கு உற்றன கண்களும்
பொய்கை நீலம் சிறிது அவிழ்ந்து என அலர்ந்தன பூவையை
மை கழி நாள் முதல் நான்கு நால் வேலியாய் வளைந்தவே. 3271

கை யெறியும் குழல் கற்றை சோரும் திரி காறுளி
நெய் எனக் கண் புனல் கொங்கை முற்றத்து உக நெஞ்சுகும்
பைய வாய் விடும் புறம் பார்க்கும் நாண் நெடும் தளைபடும் சிறு
தெய்வம் தொட்டாள் எனத் தேம்பி விம்மாந்து ஒளிதேயுமால். 3272

வணங்கில் செல்வம் தழீஇப் பிறந்த நாள் தொட்டு
தொகு வைகலும்
அணங்கு எனக் கனவிலும் கண்டிலாள் அன்பன் மேல்
அன்பு எனும்
இணங்கு தன் உருவமாய் நிறைவரம் பிற்றென இருந்த
ஒர் பெண்
அணங்கு வாய் விட்டு அழுதால் எனப் புலம்பல்
உற்றாள் அரோ. 3273

என் நாயகனேயோ என் இரு கண்மணி யே யோ
என்னை ஈன்றான்
தன் ஆவி அன்ன தனி மருகாவோ முருகாவோ தார்
ஆர் முல்லை
மன்னாவோ வணிகர் குல மணியே யோ விடி அரவின்
வாய்ப் பட்டாயோ
உன்னாக நிழலான என்னை விடுத்து எவ்வண்ணம்
ஒளிப்ப தேயோ. 3274

பொன்னாட்டின் மட வாரைப் புணர் வதற்கோ நம் அளகா
புரத்து வேந்தன்
நன் நாட்டின் மடவாரை மணப்பதற்கோ உனைக் கடித்த
நாகர் வேந்தன்
தன் நாட்டின் மடவாரைத் தழுவுதற்கோ என் ஆவித்
தலைவா என்னை
இந் நாட்டில் இருத்தி எனை வஞ்சித்துப் போயின வாறு
என்னே என்னே. 3275

தென் உலகில் புகுந்தனையோ பணிந்தனையோ
மாதுலனைத் தேவியோடும்
தன் இரு தோள் உற ஆரத் தழுவினனோ நானும் உடன்
சார்ந்தேன் ஆகில்
என்னுரிய குரவரையும் கண்ணாரக் காணேனோ எனை
ஈங்கு இட்டாய்
பின்னுரிய பரிசனமும் கைவிட்டாய் தனி போய் என்
பெற்றாய் ஐயா. 3276

வரிசை மருமகன் அரவால் விளிந்தது நான் அறை போய
மனத்தோடு இங்குப்
பரிவுறலும் எனைப் பயந்தார் நோற்ற பயன் நன்றாகப்
பலித்ததே யோ
பெரித வரிக் கண் கலக்கம் காணாமுன் இறந்து அன்றோ

பிழைத்தார் அந்தோ
அரியதிலும் அரிய பயன் இது அன்றோ எவர் பெற்றார்
அவர் போல் அம்மா. 3277

உன் காதல் மாமன் எனைப் பயந்த அன்றே உறவு
அறிய உனக்கே பேசிப்
பின் காதல் மனைவியொடும் உயிர் இழந்தான் யனும்
அந்தப் பெற்றியாலே
என் காதல் உயிர் போக வெற்று உடம்போ இருக்கும்
உடன் இறப்பேன் என்னாத்
தன் காதல் துணை இழந்த அன்றில் என விழுந்து
அழுதாள் தமியள் ஆனாள். 3278

நன் நகர் உறக்கம் நீங்கி நடுக்கம் உற்று அழுங்கக் காழித்
தென்னகர் ஞானச் செல்வர் சிவன் நகர் தொறும் போய்ப் பாடி
அந் நகர் அடைந்தார் ஆங்கு ஓர் அணி மடத்து இருந்தார் கேட்டு ஈது
என் என ஆள் விட்டு ஆய்ந்து கோயிலின் இடை வந்து எய்தி. 3279

கன்னி நீ யாரை உற்றது என் எனக் கன்னி தாழ்ந்து
தன் அரு மரபும் ஈன்றார் தம்மையும் மருகற்கு என்றே
உன்னினர் மன்றல் பேசியிறந்தது உயிர் அன்னானோடு
இந் நெறி அடைந்து ஈங்கு உற்ற நிகழ்ச்சியும் எடுத்துச் சொன்னாள். 3280

தந்தையும் தாயும் அன்னார் தமியளாய் இரங்கும் பேதைப்
பைந் தொடி ஆவி காப்பான் பாம்பு கோள் பட்டான் மாடே
வந்தவன் ஆகம் எல்லாம் மருந்து உருவாகும் வண்ணம்
சிந்தை செய்து அருட்கண் வைத்தார் குதித்தது தீவாய் நஞ்சம். 3281

எழுந்தனன் உறங்கினான் போல் இறந்தவன் யாரும் கண்டு
தொழும் தகை ஞான வேந்தைத் தொழுதனர் துதி செய்து ஆர்வத்து
அழுந்தினர் கன்னி அன்ன மனையவள் இன்பத் தீம்தேன்
பொழிந்து ஒரு புறத்தே கஞ்சம் பூத்த ஓர் கொம்பின் நின்றாள். 3282

தலைவனை இறந்த போதும் தனி உயிர் பெற்ற போதும்
சிலை நுதல் காதல் மாமன் செல்வியாய் இருந்தும் தீண்டா
நிலைமையும் அன்பும் கற்பின் நீர்மையும் வியந்து நோக்கி
மலைமகள் ஞானம் உண்டார் வணிகனை நோக்கிச் சொல்வார். 3283

வருதி நின் மரபுக்கு எல்லாம் மணிஅனாய் உன்றன் மாமன்

தரு திரு அனையாள் இன்பம் சாருநாள் துன்பம் வந்து
பெருகு நாள் அன்றி என்று உன் மெய் தொடப் பெருவள் ஈண்டே
திருமணம் முடித்துக் கொண்டு பேக எனச் செப்பலோடும். 3284

செம் கண் ஏரு அனையான் ஐயன் திரு மொழி தலைமேல் கொண்டு
பங்கயன் படைத்த சாதி நான்கையும் பாது காப்பீர்
எம் குல வணிகர் இன்றிக் கரிகளும் இன்றி ஈங்கே
மங்கலம் முடிக்கும் வண்ணம் யாது என வணங்கிச் சொன்னான். 3285

கன்னியை ஈன்ற ஞான்றே உனக்கு என்று உன் காதல் மாமன்
உன்னிய உறவின் உள்ளார் அறிவரே உனக்கு ஈது அன்றி
வன்னியும் கிணறும் இந்த இலிங்கமும் கரிகண் மைந்தா
இந் நிலை வதுவை செய்தி எம் உரை கடவாது என்றார். 3286

மாசு அறு மனத்தான் காழி வள்ளலைப் பணிந்து நீரே
தேசிகர் குரவர் நட்டோர் தெய்வமும் கிளையும் என்னாப்
பேசிய வாறே வேள்வி பெற்றியான் இறீ இத்தான் வேட்ட
பாசிழையோடு தாழ்ந்து விடை கொடு பரவிப் போனான். 3287

ஏவல் செய் ஆயத்தாரும் அடியரும் ஈண்ட ஈண்டிக்
காவல் செய் மதுரை மூதூர் குறுகித் தன் காதல் மாமன்
பூவையை மணந்த வண்ணம் கேட்டு அங்குப் புடைசூழ் சுற்றம்
யவரும் உவப்ப இன் புற்று இருந்தனன் இளங்கோ மன்னன். 3288

தன் பெரும் தனமும் மாமன் ஈட்டிய தனமும் ஈட்டி
மன் பெரு நிதிக் கோன் என்ன வாணிகம் பெருக்கி நாய்கன்
இன் புறு காதலார்கள் இருவரும் ஈன்றகாதல்
நன் பொருள் மகிழ்ச்சி செய்ய நலம் பெற வாழும் நாளில். 3289

மூத்தவள் சிறுவர் சால மூர்க்கராய் உள்ளார் ஏனை
மாத்தளிர் இயலினாட்கு ஓர் மைந்தன் உண்டு இவனும் அன்ன
தீத் தொழின் ஆக மன்ன சிறார்களும் அல்லல் செல்வம்
பூத்த நீள் நியமத்தூடு போய் விளையாடல் செய்வார். 3290

முந்திய மணாட்டி மைந்தர் முகிழ் முலை இளைய பாவை
மைந்தனை ஒரு நாள் சீறி அடித்தனர் வருந்தி ஈன்ற
சந்தணி முலையாள் மாற்றாள் தனையரை வைதாள் ஈன்ற
பைந்தொடி தானும் சீறி இளையளை பழித்து வைவாள். 3291

எந்தவூர் எந்தச் சாதி யார் மகள் யாவர் காணச்
செந்தழல் சான்றா எங்கோன் கடி மணம் செய்து வந்த
கொந்தவிழ் கோதை நீ என் கொழுநனுக்கு ஆசைப்பட்டு
வந்தவள் ஆன காமக்கிழத்திக்கு ஏன் வாயும் வீறும். 3292

உரியவன் தீ முன்னாக உன்னை வேட்டதற்கு வேறு
கரி உளதாகில் கூறிக் காட்டு எனக் கழற லோடும்
எரி சுட வாடிச் சாய்ந்த இணர் மலர் கொம்பில் சாம்பித்
தெரி இழை நாணம் சாய்ப்ப நின்று இது செப்புகின்றாள். 3293

அரவின் வாய்ப் பட்ட வைகல் ஆர் உயிர் அளித்த ஞானப்
புரவலர் அருளால் எம் கோன் புறம் பய நாதன் வன்னித்
தரு வொடு கிணறு காணச் செய்தனன் சாறு அம் மூன்று
கரிகளும் உள்ள என்றாள் கற்பினாள் ஒப்பிலாதாள். 3294

மாற்று அவள் நகைத்து நன்று நின் மன்றல் வேள்விக்
ஏற்றன கரியே சொன்னாய் இங்கு உமக்கு கரிகள் மூன்றும்
தோற்ற மேல் அதுவும் மெய்யே என்றன தோகை யோடும்
வேற்றுமை இலாத சாயல் இளையவள் விழுமம் கூரா. 3295

வெவ் உயிர்ப்பு எறிய இல் போய் மெல் விரல் நெரிக்கும் கையால்
அவ் வயிறதுக்கும் வீழும் கண்புனல் வெள்ளத்து ஆழும்
கொவ்வை வாய் துடிக்கு நாணம் தலைக் கொளும் கூசும் மன்னோ
தெய்வமே ஆவாய் என்னும் என் செய் கேன் சிறியேன் என்னும். 3296

தாதை தாய் இறந்த அன்றே தமியளாய் இங்குப் போந்த
பேதையேற்கு யார் உண்டு ஐய பேதுறும் வணிகற்கு அன்று
மாதுலன் ஆகி ஞாதி வழக்கு அறுத்து உரிமை ஈந்த
நாதனே ஏது இலாள் வாய் நகையினில் காத்தி என்னா. 3297

அன்று இரவு உண்டி இன்றித் துயில் இன்றி அழுங்கிப் பின் நாள்
பொன் திணி கமல வாவிப் புண்ணியப் புனல் தோய்ந்து அண்டர்
நின்று இழி விமானக் கோயில் நிரம் பிய அழகர் முன்னாச்
சென்று இரு தாளில் வீழ்ந்து தன் குறை செப்பி வேண்டும். 3298

அன்று எனைக் கணவன் வேட்ட இடத்தினில் அதற்குச் சான்றாய்
நின்ற பைந்தருவும் நீயும் கிணறும் அந்நிலையே இங்கும்

இன்று வந்து ஏது இலாள் வாய் நகை துடைத்து எனைக் காவாயேல்
பொன்றுவல் என்றாள் கற்பின் புகழினை நிறுத்த வந்தாள். 3299

அல்லல் உற்று அழுங்கி நின்றாள் பரிவு கண்டு அம் தண் கூடல்
எல்லை இல் கருணை மூர்த்தி அருளினால் எவரும் காணத்
தொல்லையின் படியே அன்னாள் சொல்லிய கரிகள் மூன்றும்
ஒல்லை வந்து இறுத்த கோயில் உத்தர குணபால் எல்லை. 3300

அன்ன போது இளையாள் மூத்தாள் கொண்டுபோய் ஆலவாய் எம்
முன்னவன் திருமுன் தாழ்ந்து காட்டுவாள் முகில் தோய் சென்னி
வன்னி ஈது இலிங்கம் ஈது கிணறு ஈது என்று மன்றல் சான்றாய்த்
துன்னிய என்றாள் கண்டாள் முடித்தலை தூக்கி நின்றாள். 3301

3302. அவ் இடைத் தருவும் நீரும் அன்றுபோல் இன்றும் சான்றாய்
இவ்விடைப் பட்ட என்ன அதிசயம் எவர்க்கும் தேறாத்
தெய்வமும் எளிவந்து அங்கைக் கனி இனித் திருவின் அன்னாள்
கைவ் வசப் பட்டது என்றால் கற்பினுக்கு அரிதே அம்மா. 3302

மங்கை தன் கற்பும் ஈசன் இடத்து அவள் வைத்த அன்பும்
அங்கணன் அவட்குச் செய்த அருளையும் வியந்து நோக்கி
மங்கல நகரார் எல்லாம் மகிழ்ச்சியுள் ஆழ்ந்தார் முல்லைத்
தொங்கலான் முது மணாட்டி ஒருத்தியும் துன்பத்து ஆழ்ந்தாள். 3303

மேதகு வணிகர் மூத்த வினைக் கொடியாளைப் பொல்லாப்
பாதகி இவளாம் என்று பழித்தனர் படிறு பேசிக்
கோது அறு குணத்தினாளைக் குடிப் பழுது உரைத்தாய் நீ என்
காதலி ஆகாய் என்று கணவனும் தள்ளி விட்டான். 3304

அந்நிலை இளையாள் கேள்வன் அடியில் வீழ்ந்து இரப்பாள் ஐய
என்னது கற்பை இன்று நிறுத்தினாள் இவண் மாற்றாளன்
அன்னை இலாதேற்கு அன்னை ஆயினாள் இவளும் யானும்
இன் உயிர் உடல் போல் வாழ்வோம் எனத் தழீத் தம்மின் நட்டார். 3305

உடம்பினால் இரண்டே அன்றி உயிர்ப் பொருள் இரண்டு அற்று உள்ளம்
மடம் படு அழுக்காறு அற்று மைந்தரும் அனையர் ஆக
விடம் படு மைவாய் நாகம் விழுங்கிரை ஒத்துத் தம்மில்
இடம் படு அன்புற்று இன்புற்று இருவரும் இருந்தார் மன்னோ. 3306

அருந்ததி அனையாள் கேள்வற்கு ஆயுளும் ஆனாச் செல்வம்
பெருந்தன நிறைவும் சீரும் ஒழுக்கமும் பீடும் பேறு
அரும்தவ நெறியும் குன்றத் தருமமும் புகழும் பல்க
இருந்தனள் கமலச் செல்வி என்ன வீற்று இருந்து மன்னோ. 3307

பொன் அவிர் கமலம் பூத்த பொய்கை சூழ் ஆலவாய் எம்
முன்னவன் விளையாட்டு எல்லை கண்டு யார் மொழிய வல்லார்
இன்னமும் அளவின்று என்ப எம் குரு நாத சாமி
சொன்னவாறு உங்கட்கு எண் எண் காதையும் சொன்னேன் அம்ம. 3308

என்று தென் மலை மேல் இருந்த மாதவத் தோன் இன்
அருள் குருபரன் தனையும்
அன்று அவன் திருவாய் மலர்ந்த வாசகமும் அருள்
கனிந்து ஒழுக உள்ளடக்கித்
தென்தமிழ் ஆலவாய்த் தனிப் பதியைச் சென்னிமேல்
பன்னிரண்டு உம்பர்
ஒன்ற வைத்து இமையா அம் கயல் கண்ணி உடன் உறை
ஒருவனை நினைந்தான். 3309

பரவசம் அடைந்து வழி கவர்ந்து உண்ணும் பழிப் புல
வேடர் போய் ஒளிப்ப
இருள் வெளி கடந்து திருவருள் வழிச் சென்று எண் இலாச்
சரா சரம் அனைத்தும்
புரை அற நிறைந்து காட்சி காண் பான் புதைபடத் தனித்த
பூரணமாய்
உரை உணர்வு இறந்த உண்மை ஆனந்த உணர்வினை
உணர்வற உணர்ந்தான். 3310

வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் சுபம்

------------------

## 65. அருச்சனைப் படலம் (3311-3363 )

கன்னிதன் வதுவைக் கரிகளாய் இலிங்கக் கடவுளும்
கவைக்கரும் கோட்டு
வன்னியும் படுநீர்க் கூவலும் வந்த வழி இது மதுரை
நாயகனைக்
சென்னியில் வைத்த முனிவனைச் பூசை செய்து மாதவரொடு
ஒருங்கு எய்திப்

பன்னிற மலர் தூஉய் ஆலவா யானைப் பரவிய பரிசு
அது பகர்வாம். 3311

போத ஆனந்தத் தனிக் கடல் பருகும் புயல் புரை
முனிவனை வசிட்ட
மாதவன் ஆதி முனிவரும் உலோபா முத்திரை தன்
னொடும் வரித்துப்
போதொடு சாந்த மான் மதம் தீபம் புகை முதல்
கருவிகைக் கொண்டு
மேதகு சிறப்பால் அருச்சனை செய்து பின்னும் ஓர்
வினாவுரை செய்வார். 3312

கோட்டம் சிலை குனித்த கூடல் பிரான் ஆடல்
கேட்ட அம் செவி படைத்த பேறு அடைந்தேம் கெட்ட படி
நாட்டம் களிப்ப நறுமலர் தூஉய்க் கண்டு இறைஞ்ச
வேட்டங்கள் யாங்கள் என ஓதினார் மெய்த் தவரே. 3313

என்ற அறவோர் எதிரே முகம் மலர்ந்து
குன்றம் அடக்கும் குறு முனிவன் கூறுவான்
நன்று முனிகாள் இதனை நான் உள்ளத்து எண்ணியாங்கு
ஒன்ற மொழிந்தீர் என்றான் பின்னும் வியந்து ஓதுவான். 3314

பண்ணான் மறை முடியும் தேறாப் பரசிவனை
எண்ணால் அளவு இறந்த எக் கலையால் கண்டு உளக்
கண்ணால் அறியாதார் வீட்டு இன்பம் காண்பரோ
மண் ஆதி ஆறு ஆறு நீத்த தனி மாதவரே. 3315

அம் செவியில் ஊறு படக் கேட்டபடி ஆலவாய்ப்
பஞ்ச முகச் சோதி பரனைப் போய் அர்ச்சித்து
நெஞ்சம் நெகக் கண்டு நினையா வழி நினைந்து
வஞ்ச வினை வேர் களைவான் வம்மின்கள் என்றானே. 3316

மங்கல ஓரை வருதினத்தில் வான் இழிந்த
கங்கை படிந்து உலக நாயகனைக் கை தொழுது
புங்கவர் முன் சங்கற்பம் செய்து அனுச்சை பூண்டு ஒழுகி
அங்கு அவர் வாய் ஆசி மொழி கேட்டு அகம் மகிழ்ந்தே. 3317

ஐம் புலனும் கூடல் பெருமான் அடி ஒதுக்கி
நம்பன் உரு ஐந்து எழுத்து நாவாடக் கை கூப்பித்

தம் புனித சைவ தவத் தெய்வத் தேர் மேல் கொண்டு
உம்பர் வழி நடக்கல் உற்றார்கள் நற்றவரே. 3318

செய்ய சடையர் திரு நீறு சண்ணித்த
மெய்யர் தவம் நோற்று இளைத்த மேனியின் அருட் புறம்பும்
துய்யர் அணி கண்டிகையர் தோலும் மருங்குடையர்
ஐயர் தவத்துக்கு அணிகலம் போல் போதுவார். 3319

புண்ணியம் தழைக்கும் தெய்வத் தலங்களும் புலன்கள் வென்றோர்
நண்ணிய வனமும் தீர்த்த நதிகளும் தவத்தோர் நோற்கும்
வண்ணமும் நோக்கி நோக்கி மலயமா முனிவன் காட்டக்
கண் இணை களிப்ப நோக்கிக் கை தொழுது இறைஞ்சிச் செல்வார். 3320

சீறு கொள் இலங்கை வேந்தைச் செகுத்திட இராமன் பூசித்து
ஆறு அணி விருபக் கண்ணருள் பெறுதலம் மீது உம்பர்
ஏறி வீழ்ந்து இறந்தோர் முன்னம் எண்ணிய எண்ணி ஆங்கே
மாறிய பிறப்பின் நல்கு மலை இது காண்மின் காண்மின். 3321

சுரபி நீள் செவியில் இலிங்கச் சுடர் உரு ஆயினான் தன்
இரவினில் திருத்தேர் மன்ற நடக்கும் ஊர் மேலை
உரவு நீர்க் கரைத் தேள் மாதத்து உயர்ந்த கார்த்திகையில் தேர் ஊர்ந்து
தரவு நீர்ச் சடையான் வேள்வி நடக்கும் ஊர் அவ்வூர் காண்மின். 3322

வில் பயில் தடக்கை வேடன் மென்ற ஊன் பாகம் பார்த்தோன்
பொற்பு உறு கிரி ஈது அண்டம் புழை பட விடத்தாள் நீட்டி
அற்புதன் காளி தோற்க ஆதியது இது மா நீழல்
கற்புடை ஒருத்தி நோற்கும் பிலம் இது காண்மின் காண்மின். 3323

திருமறு மார்பன் கவல் செயல் பெற அரனைப் பூசித்து
இருகரம் முகிழ்த்து நேர் நின்று ஏத்திட இதுவாம் ஓத்தின்
உரைவரம்பு அகன்ற முக்கண் உத்தமன் சந்தை கூட்டி
அருமறை அறவோர்க்கு ஓது வித்த இடம் அதனைக் காண்மின். 3324

அடி முடி விலங்கும் புள்ளும் அளந்திடாது அண்டம் கீண்டு
நெடுகிய நெருப்பு நின்ற நிலை இது முள்வாய்க் கங்க
வடிவு எடுத்து இருவர் நோற்கும் மலை இது பல்வேறு ஊழி
இடை உற முன்னும் பின்னும் இருக்கும் இக் குன்றைக் காண்மின். 3325

அவுணரில் கள்வனான அந்தகன் காய்ந்து மூன்று
புவனமும் கவலை தீர்த்த புண்ணியன் புரம் ஈது ஆகும்
தவலரும் புரங்கள் மூன்றும் தழல் நுதல் திருக் கண் சாத்திப்
பவம் அறு மூவர் அன்பில் பட்டவன் பதியைக் காண்மின். 3326

சத்திய ஞான ஆனந்த தத்துவம் அசைவற்று ஆடும்
நித்திய பரமானந்த நிறை அருள் மன்றம் ஈது
முத்தி அங்கு உதித்தோர் எய்தும் பதி அது முதல்நூல் நான்கும்
பத்தியில் பூசித்து ஏத்தும் பதி இதுவாகும் பார்மின். 3327

பிரமன் மால் முதல் ஆம் தேவர் பிரளயத்து இறவா வண்ணம்
பரமனார் தோணி யேற்றும் பன்னிருநாமம் பெற்ற
புரம் இது சடாயு சம்பாதிகள் பெரும் பூசை செய்ய
வரம் அளித்து இருள் நோய் தீர்க்கும் மருத்துறைபதி ஈது ஆகும். 3328

மதி நுதல் இமயச் செல்வி மஞ்சையாய் வழிபட்டு ஏத்தும்
இது துலாப் பொன்னித்தானம் எம்மனோர் மூன்று கோடி
மதி பெறு முனிவர் வந்து வழிபடு மூதூர் இது இப்
பதி அறக் கடவுள் பூசை பண்ணிய தானம் காண்மின். 3329

கோடு நான்கு உடைய வேழம் தானவன் குறைத்த கோட்டைப்
பாடு அற நோற்றுப் பெற்ற பதி இது மாலை சாத்தும்
தாடகை மானம் காப்பான் தாழ்ந்து பூம் கச்சு இட்டு ஈர்க்கும்
பீடு உறு கலயன் அன்பின் நிமிர்ந்த எம் பிரான் ஊர் ஈதல். 3330

கரி முகத்து அவுணற் காய்ந்து கரி முகத்து அண்ணல் பூசை
புரிசிவ நகரம் ஈது தாரகற் பொருது செவ்வேள்
அரனை அர்ச்சித்தார்க் கீழ் மணல் குறியான் பால் ஆட்டிப்
பரன் முடி மாலை சூடும் சேய் வளம் பதி ஈது ஆகும். 3331

கறுவி வீழ் காலன் மார்பில் சேவடிக் கமலம் சாத்திச்
சிறுவனுக்கு ஆயுள் ஈந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனல் பழன மூதூர் அது இது வானை தந்த
குறை உடல் போர்வை போர்த்த கொற்றவன் கோயில் காண்மின். 3332

பங்கயக் கடவுள் ஈந்த பரிகலம் வாங்கிக் கொண்ட
அம் கண் இடம் மீது ஆட அனங்கனை அமுது செய்த
செம் கணான் இருக்கை ஈது ஏழகச் சென்னி தன்னை

மங்கல மாமற்கு ஈந்த மருகனார் இருக்கை காண்மின். 3333

திண் திறல் அவுணன் தன்னைப் பெருவிரல் தீட்டு நேமி
உண்டிட விருந்தக் கொண்டோன் உறை அதாம் ஒருத்தி மன்றல்
கண்டிடு கரியாய்க் கூவல் கண்ணுதல் லிங்கம் வன்னி
எண் திசை அறியக் காட்ட நின்றிடம் இதனைக் காண்மின். 3334

சாம கண்டத்தன் தன்னைத் தான் அருச்சித்த தென்னர்
கோமகன் பிரம சாயை குறைத்தது இப் பதியாம் கங்கை
மா மகம் தோறும் வந்து வந்துதல் படிந்தோர் விட்டுப்
போ மகம் போக மூழ்கும் புனித நீர்ப் பதியைக் காண்மின். 3335

குருமொழி நந்தைக்கு ஈந்த எங் குரு உறை மலை ஈது எம் கோன்
கரு முகில் வண்ணத்து அண்ணல் கண்ணிடந்து அடியில் சாத்தப்
பொருவிறல் ஆழி ஈந்த புரம் இது நந்தி எந்தை
திருவுரு அடைய நோற்ற தலம் இது தெரிந்து காண்மின். 3336

முடங்கு கால் சிலந்தி யானை மலை மகள் முளரி நாட்டத்து
தடங்கடல் வண்ணன் நோற்ற தவ நகர் இது முச் சென்னி
மடங்கல் ஏறு அனையான் நாம வரை இது குடைந்தோர் பாவம்
அடங்கலும் பருகும் பொன்னி ஆறு இது காண்மின் காண்மின். 3337

இந் நதி வெண் முத்து ஆரம் எனக் கிடந்து இலங்கும் சென்னி
மன்னவன் நாடு ஈது என்ப தமிழ் அறி வைகைப் பேர்யாறு
அந்நதி துறக்க மண்மேல் வழுக்கி வீழ்ந்தாங்குத் தோற்றித்
தென்னவன் நாடு சேய்த்தாத் தெரிவதே காண்மின் என்றான். 3338

பொங்கர் மென் புதல்கள் என்னப் பொரு நதி சிறு கால் என்னக்
கொங்கு அலர் தடம் சிற்றுறல் குழி எனப் பழனம் சில்லி
தங்கு மென் பாத்தி என்னத் தாழை தாழ் சிறுபுல் என்னப்
பைம் குலைக் கதலி மஞ்சள் பாத்தி போல் தோற்றக் கண்டார். 3339

பல் நிற மாட மாலை உபரிகைப் பந்தி செய் குன்று
அன்னம் வெண் குருகு செம் போத்து அளகு பைம் கிள்ளை மஞ்சை
இன்ன புள் வேறு வேறாய் ஒழுங்கு பட்டு இருப்பது ஒப்ப
மின்னு பூம் கொடியப் புட்கள் சிறகு என விதிர்ப்பக் கண்டார். 3340

கண்டு நாட்டு நகர் வளங்கள் நடந்து நடந்து கண்கள் விருந்து

உண்டு மீள அகல் விசும்பு ஆறு ஒழுகி வலமா வருமுனிவர்
விண் துழாவும் கொடும் குன்றும் தளிப் புத்தூரும் விரிபொழில் வாய்
வண்டு பாட மயில் ஆடல் பயில் ஆடானை வள நகரும். 3341

சரத வேதம் பரவு புனவாயில் நகரும் தவ சித்தர்
இரத வாதம் செய்து சிவன் உருவம் கண்ட எழில் நகரும்
வரதன் ஆகி அரன் உறையும் கானப் பேரு மலை மகளை
வரத யோக நெறி நின்று மணந்தார் சுழியல் வியன் நகரும். 3342

மறவாள் இலங்கை இறை மகனை வதைத்த பழியான்
மருண்டு அரியன்
அறவாண் நேமி அளித்தவனை அர்ச்சித்து அகன்ற
அணிநகரும்
நிறவாள் முத்தும் வயிடூரிய நிறையும் பொன்னும் விளை
பொருநைத்
துறைவாய்ப் பிறவாக் கடவுள் வேய் வயிற்றில் பிறந்த
தொல் நகரும். 3343

துளபக் குன்றைக் கொன்றை முடிக் குன்றம் ஆக்கும்
தொல் நகரும்
அளகைப் பொரித்த கொடி இளையோன் மான் நேர்
நோக்கின் ஆனைமகள்
புளகக் குன்றை மணந்து முதல் இருந்த பொருப்பும்
போர்விசயன்
வளை வில் தாக்க வடுக்கிடந்த முடியோன் மேய வள
நகரும். 3344

கொண்டல் படியும் திருவாப்பனூரும் தொழுது குளிர்திரைக்கை
வண்டு படியும் கமலமுக வைகைப் பிராட்டி எதிர் வண்ங்கிக்
கண்டு பணிந்து திசை எட்டும் விழுங்கி அண்டம் கடந்து உலகம்
உண்ட நெடியோன் என உயர் கோபுரம் முன் இறைஞ்சி உள்புகுதா. 3345

மறுகு தோறும் பணிந்து எழுந்து வளைந்து வளந்து பொன் கோயில்
குறுகி விதியால் பொன் கமலம் குடைந்து செய்யும் குறை நிறுவி
உறுதி பெற ஐந்து எழுத்து எண்ணி ஊற்று மதத்து நால்தடம் தோள்
சிறுகு கண்ண ஐங்கரத்துச் சித்தியானை அடி வணங்கா. 3346

மும்மை உலகு நான் மறையும் முறையன் ஈன்ற அம்
கயல் கண்

அம்மை அடிகண் முடியுறத் தாழ்ந்து அன்பு கொடுத்து
இன் அருள் வாங்கி
வெம்மை ஒளிகான் மணிக் கனக விமானத்து
அமர்ந்ததனிச்சுடரின்
செம்மை அடித்தாமரை மரை வேணிச் சிரமேல் மலர்ப்
பணிந்து ஏத்தா. 3347

அன்று இரு போது உண்டி துறந்து இரா அறுக்கும் தீவாள்
என்று எழு முன்னீர் ஆடி நியதிகள் இயற்றி ஐந்தும்
வென்று உளத்து அன்பு பாய விளை முதலைப் பார்மேல்
மின் திரண்டு என்ன நின்ற விமானம் மீது இருப்பக் கண்டார். 3348

வாச மஞ்சனம் தேன் கன்னல் பைங்கனி மறு இல் ஆன் ஐந்து
ஆசறு அமுதம் ஐந்து தென் மலை ஆரம் வாசம்
வீசு தண் பனி நீர் வெள்ள மான் மதம் விரை மென் போது
துசணி மணிப்பூண் நல்ல சுவை அமுது இன்ன தாங்கா. 3349

சத உருத் திரத்தால் ஆட்டி மட்டித்துச் சாத்தி பூட்டிப்
பதம் உற மனுவால் அட்ட பால் அமுது அருத்திப் பஞ்ச
விதம் உறு வாசம் பாகு வெள்ளிலை அளித்துப் போகம்
உத உறு தூப தீபா ஆதிகள் பல உவப்ப நல்கா. 3350

ஐம் முகச் சைவச் செம் தீ அகத்தினும் துடுவை ஆர
நெய்ம் முகந்து அருத்திப் பூசை நிரப்பி நால் வேதம் சொன்ன
மெய்ம் மனு நூற்றுப் பத்தான் மூவிலை வில்ல நீலம்
கைம்மலர் ஏந்திச் சாத்திக் கடவுளை உவப்பச் செய்து. 3351

வாச மஞ்சன நீரோடு மந்திர மலர் கைக் கொண்டு
பூசையின் பயனை முக்கண் புண்ணியன் கையில் நல்கி
நேச நெஞ் சூறக் கண்கள் நிறைய நீர் ஊறிச் சோர
ஈசனை இறைஞ்சி யாரும் அஞ்சலித்து ஏத்தல் செய்வார். 3352

பழியொடு பாசம் மாறு கெட வாசவன் செய் பணி
கொண்ட வண்ட சரணம்
வழிபடு தொண்டர் கொண்ட நிலை கண்டு வெள்ளி மணி
மன்றுள் ஆடி சரணம்
செழியன் விளிந்திடாத படி மாறி ஆட தௌ¤வித்த
சோதி சரணம்
எழு கடல் கூவி மாமியுடன் மாமன் ஆட இசைவித்த

வாதி சரணம். 3353

வெம் கரி ஆவி சோர நரசிங்க வாளி விடு வேடர்
ஏறு சரணம்
புங்கவர் தேற ஆதி மறையுள் கிடந்த பொருள் ஓது
போத சரணம்
வங்கம் தேறி வேலை மகரம் பிடித்த வலையாள்
மணாள சரணம்
கங்கண நாகம் விசி நகர் எல்லை கண்ட கறை கொண்ட
கண்ட சரணம். 3354

மைந்தனி ஆழி மேரு மகவான் அகந்தை மடிவித்த
நித்த சரணம்
சுந்தர நாம வாளி பணி கொண்டு கிள்ளி தொகை வென்ற
வீர சரணம்
வெம் திறல் மாறன் முன் கல் உரு ஆனை கன்னல்
மிசைவித்த சித்த சரணம்
முந்திய கல்லின் மாதர் பெற அட்ட சித்த முயல் வித்த
யோகி சரணம். 3355

திரு மணி மைந்தன் மைந்தன் முடி சூட விற்ற திருமல்கு
செல்வ சரணம்
மருமகன் என்று மாமன் உருவாய் வழக்கு வலிபேசு
மைந்த சரணம்
குரு மொழி தந்து நாரை குருவிக்கு வீடு குடி தந்த
எந்தை சரணம்
வரு பழி அஞ்சி வேட மகனுக்கு இரங்கு மதுரா புரேச
சரணம். 3356

விருத்த குமார பால அருள் மேனி கொண்டு விளையாதும்
அண்ணல் சரணம்
குரத்தியை நச்சு பாவி உயிர் உண்டு சோரி குடை வாகை
வேல சரணம்
கருத்திசை பாணன் ஆளி இசை பாடி மாறு களை வேத
கீத சரணம்
நரித்திரள் மாவை மீள நகரம் கலங்க நரிசெய்த நம்ப
சரணம். 3357

முற்பகல் ஆறில் இரண்டு சிறு பன்றி உண்ண முலை
தந்த அன்னை சரணம்

பொற்புறு மாய ஆவை அடல் ஏறு கொண்டு பொருது
அட்ட சிட்ட சரணம்
பற்பல ஞாலம் எங்கும் அடையப் பிரம்பு படு அட்ட
மூர்த்தி சரணம்
கற்பின் ஒருத்தி மன்றல் அறிவிக்க மூன்று கரி தந்த
வள்ளல் சரணம். 3358

அளவை களாலும் வேத முதல் நூல் களாலும் அயன்
மாயனாலும் அளவாக்
களவை உனக்கு நாம குண சின்ன சாதி கதி செய்தி
இல்லை அவையும்
உள என யாம் அறிந்து துதி செய்யவே கொல் உலகம்
செயன் பின் எளிதாய்
விளை அருள் மேனி கொண்டு இவ் அறுபத்து நாலு
விளையாடல் செய்த படியே. 3359

எனத் துதித்த வசிட்டாதி இருடிகளைக் குரு முனியை
எறிதேன் நீப
வனத்து உறையும் சிவ பெருமான் இலிங்கத்தின்
மூர்த்தியாய் வந்து நோக்கிச்
சினத்தினை வென்று அகம் தெள¤ந்தீர் நீர் செய்த பூசை
துதி தெய்வத் தானம்
அனைத்தினுக்கும் எனைத்தும் உயிர்க்கும் நிறைந்து நமக்கு
ஆனந்தம் ஆயிற்று என்னா. 3360

சிறந்த அருள் சுரந்து குறு முனியை வருக கரம் சிரம்
மேல் வைத்து
புறம் தடவி எமை ஒப்பாய் நீயே நின் கற்பு உடைய
பொலம் கொம்பு அன்னாள்
அறம் தழையும் உமை ஒப்பாள் ஆதலினால் உமையும்
ஒப்பவர் அகிலத்து யாரே
நிறைந்ததவம் புரிந்தோனும் தவத்து உறுதி பெற்றோனும்
நீயே அன்றோ. 3361

உனக்கு அரிய வரம் இனி யாம் தருவது எவன் உனக்கு
அரிதாம் ஒன்றும் காணேம்
எனக் கருணை செய்து இலிங்கத்து இடை இச்சை
வடிவாய்ச் சென்று இருந்தான் ஆகத்
தனக்கு அரிய வரம் நல்கும் சிவலிங்கம் தன் பெயரால்
தாபித்தான் தன்

இனக்கருணை வசிட்டாதி முனிவர்களும் தம் பெயரால்
இலிங்கம் கண்டார். 3362

ஏத்தி அருச்சனை செய்து நினைவில் அரிதாய் அன்பின்
எளிய அட்ட
மூர்த்தியை அம் கயல் கண்ணி அன்பனை முப் போதும்
போய் முடி தாழ்ந்து இன்பம்
பூத்த மனத்தினர் ஆகிக் கருவித் தேன் பொதிந்த சிறு
புட் போல் அந்த
மாத் தலனில் வசிட்டாதி முனிவர் தபோ வனம் செய்து
வதிந்தார் மன்னோ. 3363

அருச்சனைப் படலம் சுபம்

திருவிளையாடல் புராணம் முற்றிற்று.